வெளியீடு 12-3-2003 Issued 12-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 2, 2002 – தொகுதி 26 – எண் 2

Thursday the 2nd May, 2002 – Volume 26– No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

2-5-2002

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 423-459 |
| 2. | தகவல் கோரல்— | |
| | (அ) கவன ஈர்ப்புகள், வினாக்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அனுப்ப அரசுத் துறைகளுக்கு அறிவுறுத்தல் | 459 |
| | (ஆ) வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை | 460 |
| | (இ) விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது | 461 |
| 3. | சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| | மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சித்ரா பௌர்ணமி விழாவின்போது ஏற்பட்ட மோதல் | 461-472 |
| | *பேராசிரியர் க. அன்பழகன் | 461-463 |
| | திரு. ஜி.கே. மணி | 464-466 |
| | திரு. சி. ஞானசேகரன் | 468-470 |
| | மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 470-472 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தேர்வு செய்யும் பணிகளுக்குக் கல்வித் தகுதி நிர்ணயித்தல் | 472-478 |
| | (ஆ) நீலகிரி மாவட்டத்தில் பெய்த பனிக்கட்டி மழையினால் தேயிலைச் செடிகள் பாதிப்பு | 478-481 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 481 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 481 |
| (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 481 |
| 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | 482-485 |
| (அ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 482 |
| (ஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 482-483 |
| (இ) தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 484-485 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 484 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 484 |
| திரு. ஜி.கே. மணி | 484 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 484 |
| 7. அறிவிப்புகள்— | |
| தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) | 483 |
| 8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. | 485-696 |





| | பக்கங்கள் |
|---|---|
| 8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (ஆ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால்வளம் | |
| மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் | 485-497<br>566-578 |
| மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் | 498, 507<br>559-566 |
| *திரு. துரை. கி. சரவணன் | 507-513 |
| *மாண்புமிகு திரு. அ. அருணாசலம் | 513-518 |
| திரு. எம்.ஏ. ஹக்கீம் | 518-532 |
| திரு. எம். சுப்பையா பாண்டியன் | 532-543 |
| திரு. ஜி.கே. மணி | 543-558 |
| (இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | |
| கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன் வளம் | |
| மாண்புமிகு திரு அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் | 589,<br>599-600<br>614-615,<br>616,<br>675-686 |
| *மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் | 600, 609,<br>612, 635 |
| *திரு. டி.பி.எம். ஷைதீன்கான் | 610-618 |
| திரு. செ. தாமோதரன் | 619-624 |
| *திரு. ஆ ராஜகோபால் | 624-628 |

பக்கங்கள்


5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு 481

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 481

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 481

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 482-485

(அ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 482

(ஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 482-483

(இ) தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 484-485

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 484

திரு. வை. சிவபுண்ணியம் 484

திரு. ஜி.கே. மணி 484

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 484

7. அறிவிப்புகள்—

தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 483

8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. 485-696




பக்கங்கள்


8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால்வளம்

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் 485-497, 566-578

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் 498, 507, 559-566

*திரு. துரை. கி. சரவணன் 507-513

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம் 513-518

திரு. எம்.ஏ. ஹக்கீம் 518-532

திரு. எம். சுப்பையா பாண்டியன் 532-543

திரு. ஜி.கே. மணி 543-558

(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு

கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன் வளம்

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 589, 599-600, 614-615, 616, 675-686

*மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் 600, 609, 612, 635

*திரு. டி.பி.எம். மைதீன்கான் 610-618

திரு. செ. தாமோதரன் 619-624

*திரு. ஆ ராஜகோபால் 624-628

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு. தி. வேல் முருகன் 629-638

*திரு. எச்.எம். ராஜு 639-645

*திரு. டி. மணி 646-656

*திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 656-661

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225163
சென்னை - 600 008


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 19, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2033**
**2002 மே 2, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 260, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**260—**

### மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***6347—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையாம்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2002 மே 2

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்தைச் சார்ந்த கொண்டையாம்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்வு செய்வதற்கான கருத்துரு இதுவரை பெறப்படவில்லை. கருத்துரு பெற்றவுடன், அதைப்பற்றி மேல்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட அன்னை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூ. 2 இலட்சம் பணம் கட்ட வேண்டும் என்பதைத் தளர்த்தி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையாம்பட்டியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக வருகிற ஆண்டிலாவது மாற்றித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பங்குத் தொகையாகிய 2 இலட்ச ரூபாயைக் கட்டுவதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நிதிநிலைமையைப் பார்க்கும்போது பலபேர் ரூ. 2 இலட்சம், 1 இலட்சம் கட்டியுள்ள பள்ளிகளுக்குக்கூட உயர்த்திக் கொடுப்பதற்கு ஒரு சில பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கல்வி நிலையத்தில், உயர்நிலைப் பள்ளியில் 10-ஆம் வகுப்பில் 100 பேர் இருக்க வேண்டும். ஆனால் 66 பேர்கள்தான் இருக்கின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க வேண்டுமென்றால் முதலில் 2 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையைக் கட்டியதற்குப் பிறகு அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப அதைப்பற்றி சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 261, திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 மே 2]

**261—**

## மகளிர் மேல்நிலைப் பள்ளி

***9185—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, ஜாரி கொண்டலாம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பனமரத்துப்பட்டி தொகுதி, ஜாரி கொண்டலாம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்காக இதுவரையில் கருத்துரு பெறப்படவில்லை. பெறப்பட்ட பிறகு, இது உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளியில் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் அதிக அளவில் படித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் மேற்கொண்டு படிக்க வெகுதூரம் செல்ல வேண்டியிருப்பதால், ஏற்கெனவே அரசுக்குச் செலுத்தப்படக்கூடிய 2 இலட்சம் ரூபாயும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் செலுத்தப்பட்டிருக்கின்றது; தேவையான மாணவிகள் அங்கு படிக்கிறார்கள்; அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குத் தேவையான நிலமும் அங்கே இருக்கின்றது; மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதுகுறித்துக் கனிவோடு பரிசீலித்து, இந்த ஆண்டே அந்தப் பள்ளியை மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 2

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அரசானது பொறுப்பேற்ற உடனேயே சென்ற ஆண்டு மட்டும், இதுவரை எந்த ஓர் அரசும் செய்யாத அளவிற்கு 125 உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை பிறப்பித்து இந்த ஆண்டும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். அதற்குரிய நிதியையும் மாண்புமிகு நிதியமைச்சரிடம் கேட்டு இருக்கின்றோம். அவர் அந்த நிதியைத் தந்த உடனேயே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும். காரணம், அவர் சொன்னதுபோல அது பெண்கள் பள்ளியாகும். பெண்களுக்கு நல்ல கல்வி தருவதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே இதுபற்றிச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 262, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**262—**

### சித்த மருத்துவர்கள்

***3980—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்களை விரைவில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவுகளில் சித்த உதவி மருத்துவர்களின் பணியிடங்கள் நிரப்பப்பட்டு தற்போது முழுமையாக பணிபுரிந்து வருகிறார்கள். காலியிடம் எதுவும் தற்போது இல்லை.



2002 மே 2]

முற்பகல் 10-05

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் வழங்கி, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் நலன் காத்துவரும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பாகவும், குளத்தூர் தொகுதி மக்கள் சார்பாகவும் என் பணிவான நன்றியினை அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன். சித்த மருத்துவர்களை நியமனம் செய்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து, குளத்தூர் தொகுதியில் உள்ள கீரனூர், இலுப்பூர் ஆகிய மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாக இருப்பதால், அவற்றில் சித்த மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டதைப்போல ஓமியோபதி மருத்துவர்களும் நியமனம் செய்யப்படுவார்களா எனவும் அறிய விரும்புகிறேன். மேலும், கீரனூர் பொது மருத்துவமனையில் காலியாக உள்ள 2 மருத்துவர்கள் பணியிடங்களுக்கு மருத்துவர்கள் விரைவில் நியமனம் செய்யப்படுவார்களா எனவும், கீரனூர் பொது மருத்துவமனையில் ஸ்கேன் வசதி இருந்தும் அதைச் செயல்படுத்துவதற்கு ஆள் இல்லாமல் அது பயனற்று உள்ளது; எனவே அதைச் செயல்படுத்துபவர், காலியாக உள்ள செவிலியர், துப்புரவாளர் ஆகிய பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படுமா என்பதையும் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே சித்த வைத்தியப் பிரிவு செயல்பட்டு வருகிறது. எனவே அங்கே ஓமியோபதி பிரிவு தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஒவ்வொரு பகுதி மக்களும் ஒவ்வொரு வகையான சிகிச்சை முறையை விரும்புகிறார்கள். அந்த அடிப்படையில்தான் கீரனூர் பகுதி மக்கள் மத்தியிலே சித்த மருத்துவ முறை சிகிச்சைக்கு வரவேற்பு இருந்த காரணத்தாலே, அங்கே சித்த வைத்தியப் பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கீரனூர் அரசினர் மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் மற்றும் செவிலியர் பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 263, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**263—**

**கூடுதல் கட்டட வசதி**

***8639—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில் ஏற்படுத்தப்பட்ட, வட்டம் சாரா அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி, அரசு வட்டம் சாரா மருத்துவமனையில் கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்தித் தரவும், மருத்துவ வசதியை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில், வட்டம் சாரா மருத்துவமனை கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அதற்குப் போதிய மருத்துவர்கள் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. அதேபோல போதிய பணியாளர்களும் நியமனம் செய்யப்படவில்லை. கூடுதல் சிகிச்சைப் பிரிவுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அவற்றைச் செய்வார்களா? அவை எந்த நிதி ஆதாரத்திலிருந்து ஏற்படுத்தப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாகவும், அரசு மருந்தகங்களை மருத்துவமனைகளாகவும் பெயர் மாற்றம் செய்தார்களே தவிர, அதற்கான எந்த விரிவாக்கத்தையும் அந்த ஆட்சிக் காலத்திலே அவர்கள் செய்யாததால்தான் குறிஞ்சிப்பாடி மருத்துவமனையிலே இப்போது வசதியற்ற நிலைமை இருந்து வருகிறது. இருந்தாலும், குறிஞ்சிப்பாடி தொகுதி மக்களுடைய மருத்துவ



வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில், NABARD வங்கியின் நிதியுதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில், ரூ.89.08 இலட்சம் செலவில் 20 படுக்கைகள், ஒரு X-Ray Block, ஒரு புறநோயாளிகள் கட்டடம், scan வசதி, Laboratory வசதி ஆகிய வசதிகளுடன் கூடிய விரிவாக்கத்தைச் செய்வதற்காக, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல ரூ.89.08 இலட்சம் அளவுக்கு முன்மொழிவுகளைத் தயார் செய்து, NABARD உதவி பெற நிதித் துறையினுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஒப்புதலைப் பெற்ற பிறகு இதுபோன்ற விரிவாக்கம் அங்கே செய்யப்படும்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால கலைஞர் அரசில், கடைசி ஆண்டு இறுதியில்தான் அந்த மருத்துவமனை விரிவாக்கம் செய்யப்பட்டது. அதுவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அது ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றத்தின் காரணமாக, எங்களால் அதை நிறைவேற்ற இயலவில்லை. மேலும், புதிதாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அதற்குப் பிறகும் எந்த அடிப்படை வசதிகளும் அதில் ஏற்படுத்தவில்லை என்ற கருத்திலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அதுபோல, கடந்த கால ஆட்சியில், கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய் அளவுக்கு World Bank மூலமாக அனைத்து அடிப்படை வசதிகளும்—மருத்துவமனைகளுக்கு அடிப்படை வசதிகள்—செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், அந்தத் திட்டத்திற்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டது. அதனுடைய முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது; அதற்கு அனுமதி கிடைத்துவிட்டதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அனுப்பிய அந்தக் கருத்துரு உலக வங்கியினாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சரியான முறையிலே அவர்கள் அதைத் தயாரித்து அனுப்பாத காரணத்தினாலே, அது திருப்பி

[2002 மே 2

அனுப்பப்பட்டுவிட்டது. திருப்பி அனுப்பப்பட்ட அந்த முன்மொழிவை நாங்கள் மறுபரிசீலனை செய்து, உலக வங்கி கேட்ட அந்த விதிமுறைகளின்படி புதிதாகத் தயாரித்து, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீண்டும் அந்தக் கருத்துருவை மத்திய அரசு மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உலக வங்கிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த 650 கோடி ரூபாய் நிதியை விரைவாகப் பெற்றுத்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பிரதம அமைச்சருக்கும் தனிப்பட்ட முறையிலே கடிதமும் எழுதியிருக்கிறார்கள். அதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அநேகமாக, இந்த நடப்பு ஆண்டிலேயே அதைப் பெறுவதற்கான முயற்சியை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 264, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**264—**

## குடிநீர் வசதி

***6695—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள கிள்ளை, பொன்னந்திட்டு, முடசல் ஓடை, எம்.ஜி.ஆர். திட்டு ஆகிய பகுதிகளில், குடிநீர் இல்லாததால், அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சிக்குட்பட்ட பொன்னந்திட்டு, முடசல் ஓடை பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாகவும், எம்.ஜி.ஆர். திட்டு, வடக்கு முடசல் ஓடை ஆகிய பகுதிகள்



2002 மே 2]

ஒவ்வொன்றுக்கும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 265, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**265—**

## கூடுதல் நிதி

***7143—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியைக் கொண்டு, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல், நிதிப் பற்றாக்குறையினால் ஊராட்சிமன்ற அமைப்புகள் திணறுவதால், கூடுதல் நிதியை ஒதுக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கித் தரும் திட்டம், தற்போது ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிற நிதியைக் கொண்டு, அடிப்படையான மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டு இருக்கிறது. கடந்த 1999-2000, 2000-2001 ஆகிய இரண்டாண்டுகளில், கடந்த கால ஆட்சியில், உள்ளாட்சிமன்ற அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி முழுவதுமாக ஒதுக்கப்படவில்லை. Stamp duty என்பதன் பெயரில் பேரூராட்சிகளுக்குத் தரவேண்டிய நிதியையும் அந்த இரண்டாண்டுகளில் தரவில்லை. கொஞ்ச நஞ்சம் இருப்பில் இருந்த நிதியை, சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ், கட்டாயமாக Deposit

Scheme—லே சேர்த்துவிட்டார்கள். 100 ரூபாய், 200 ரூபாய் என்ற அளவுக்குக்கூட அந்த அமைப்புகளில் பணம் இல்லாமல் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருந்த நிலையில், 2001-2002 ஆகிய ஆண்டுகளில், இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு, ஒரு quarter—அதாவது நான்கில் ஒரு பகுதி நிதியை ஒதுக்கியதாக அவர்கள் சொல்கிறார்கள். இப்போதைய நிதிநிலை அறிக்கையில்கூட, 8 சதவிகிதம் மாத்திரமே அந்த அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிதி அதிகமாகத் தராமல்— குறிப்பாக, ஊராட்சி அமைப்புகளுக்குப் பல திட்டங்கள் இருக்கின்றன; பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டு, மத்திய மாநில அரசாங்கங்களின் மூலமாக திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நகராட்சிகளுக்கும் வேறுவகையிலே வருமானம், வரி மூலம் கூடுதலாகக் கிடைக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஒரே வரியில் சொல்லிவிடுகிறேன். பேரூராட்சிகளுக்கு இந்த மாதிரியான எந்த வாய்ப்புகளும் இல்லாத காரணத்தினால், முழுக்க முழுக்க மாநில அரசாங்கத்தின் நிதியைக் கொண்டு மாத்திரம் நடத்த வேண்டிய நிலை இருப்பதனால், அந்த அமைப்புகளுக்குக் கூடுதல் நிதியைத் தருவதற்கு, அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, 2000-2001-ல், மாநில நிதிக் குழு—தி.மு.க. ஆட்சியின்போது மாநில நிதிக் குழு மானியம்—சுமார் 54 கோடி ரூபாய் நிலுவையில் வைத்திருந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, அந்த 54 கோடி ரூபாயையும் ஊராட்சிகளுக்கு விடுவித்துள்ளது. அதேபோல், 2001-2002-ல், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்பு, சுமார் 171 கோடி ரூபாய் வரை விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இனிமேல் இப்படி நிலுவை வைக்கக்கூடாது என்பதற்காக 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாதமும் விடுவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் விடுவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, பேரூராட்சிகளுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த





தி.மு.க. ஆட்சியிலே பேரூராட்சிகளுக்கு வருவாயைப் பெருக்குகின்ற வகையில் அங்கே பல்வேறு விதிமுறைகளை எல்லாம் மாற்றி, பேரூராட்சிகளுக்கு, வீட்டு வரிக்குப் பதிலாக அந்த வீட்டினுடைய சொத்து வரி மூலம் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று 1-10-1998 அன்று கடந்தகால அரசு ஒரு விதிமுறையை வகுத்துள்ளது. அதன் அடிப்படையில், பேரூராட்சிகள் தங்களது நிர்வாகத்திலே வருமானத்தைக் கூடுதலாக்கிக்கொள்வதற்கு வேண்டிய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாநில நிதிக் குழுவால் உள்ளாட்சிமன்ற அமைப்புகள் சம்பந்தமான நிதி ஒதுக்கீடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கை நம்முடைய பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, இது சம்பந்தமான அறிக்கையை இந்த மன்றத்தில் வைப்பதா அல்லது விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதா என்பது சம்பந்தமாக தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பேரூராட்சிகளில் மற்றும் ஊராட்சிகளில் புதிதாக மின் விளக்குகள் போடுவதற்குக்கூட நிதி வசதி இல்லை என்று சொல்லப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில் அரசே நிதியை ஒதுக்கீடு செய்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை வசதியான மின் விளக்கு வசதிகள் செய்து கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய தெரு விளக்குகளுக்கு மின்சாரக்

கட்டணம் கட்ட முடியாத சூழ்நிலைகூட பல ஊராட்சிகளில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஊராட்சிக்குத் தெரு விளக்குக் கூடுதலாக அமைக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ, அந்த ஊராட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளலாம். மேலும், கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்கின்றபோது மின்சாரக் கட்டணம் கட்டுவதற்கு வருவாய் இல்லாத காரணத்தால், தற்போதைக்கு அரசு மூலம் தெரு விளக்குகள் அமைக்கிற அந்தத் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொதுமக்களுடைய அடிப்படைத் தேவைகளை, அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்வது, உள்ளாட்சி அமைப்புகள். அந்த வகையிலே இன்று ஊராட்சிகள், பேரூராட்சிகள் எல்லாம் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, தெரு விளக்குகளுக்கு மின் கட்டணம் செலுத்த முடிவதில்லை. தேவையான இடங்களிலே மின் விளக்குகள் அமைக்க முடிவதில்லை. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துவிட்டால், அதைப் பழுதுபார்க்க முடியாமல் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும் நிலை; அவற்றுக்கு மின் கட்டணம் செலுத்த இயலாத நிலை இருக்கிறது. அதைப்போலவே, ஊராட்சி எழுத்தருக்குச் சம்பளம் கொடுக்க இயலாத நிலை; இன்னும் கைப்பம்பு கெட்டுவிட்டால், அதைப் பழுது பார்க்க முடியாத நிலை. இப்படிப் பல்வேறு குறைபாடுகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேதான் கேட்கிறோம்: மற்ற மாநிலங்களிலேகூட 34 சதவிகிதம், 28 சதவிகிதம் எல்லாம் ஊராட்சிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்கப்படுகிறது. ஆகவே நம்முடைய அரசு 8 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதைக் கூடுதலாக்கி, பொதுமக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதைக் கருத்திலேகொண்டு, கூடுதலாக நிதி ஒதுக்குமா என்று கேட்க விரும்புவதோடு, அதேநேரத்திலே, நிதி ஒதுக்கத்திலே கடந்தகால அரசு வழிவகுத்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த கால அரசு வழிவகுத்திருந்தாலும்கூட, எதை எதையோ மாற்றக்கூடிய நம்முடைய அரசு, இதையும் மாற்றியமைத்து இதற்கு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக அந்த 8 சதவீதத் தொகைதான் ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், கிராமப்புறங்களிலே இருக்கிற ஊராட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்பு, கிராம ஊராட்சிகளுக்கு, மாநில நிதியின் மூலம் 58 சதவிகிதமும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 42 சதவிகிதமும் என்று இந்த நிதியாண்டிலிருந்து பிரித்து அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புற ஊராட்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்ன குறைபாடுகளையெல்லாம் போக்குவதற்காகத்தான் ஒவ்வொரு மாதமும் இந்த நிதியை விடுவித்துக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. 8 சதவிகிதத் தொகை குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை இந்த அரசு ஆழ்ந்து சிந்திக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 60,000 ரூபாய், விளாச்சேரி ஊராட்சிக்கு, மின் விளக்குகள் எரியப்படவில்லை என்று ஒதுக்கிக் கொடுத்திருந்தேன். ஆனால் அந்த விளாச்சேரி ஊராட்சி நிதியிலே, ஏற்கெனவே கடந்த ஆண்டு அந்த ஊராட்சித் தலைவர் மின் வரி செலுத்தாத காரணத்தால், இந்த 60,000 ரூபாய்க்கு உள்ள மின் சம்பந்தப்பட்ட, தெருவிளக்கு சம்பந்தப்பட்ட அந்த நிதியினை எடுத்துக்கொள்ள முடியாது; பழைய பாக்கியைக் கட்டினால்தான் மின்சாரத் துறை செயல்படும்; அங்கே அமல்படுத்த முடியும் என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அருமை அண்ணன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே இதுசம்பந்தமாக முறையிட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, அவர்கள் தலையிட்டு, இந்த 60,000 ரூபாய்க்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மின் விளக்குகள் வசதியை ஊராட்சிகளுக்குச் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 மே 2

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எரிகின்ற தெரு விளக்குகளுக்கே மின் கட்டணம் கட்ட முடியாத அளவிற்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாய் பாக்கி வைத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் கூடுதலாகத் தெரு விளக்குகளை அமைப்பதற்கு அவரே நிதி ஒதுக்கீடு செய்து அந்த ஊராட்சியை மிகவும் நலிவுற்ற நிலைக்கு ஆளாக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே நான் அவருக்கு ஒரு அன்பு வேண்டுகோளை வைத்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைத் தொடர்புள்ள அதிகாரிகளிடம் என்ன என்று விசாரித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊராட்சிகளிலும், அதேபோல பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் மின்சாரக் கட்டணமே கட்ட முடியாத நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இன்றுகூட வேலூரிலிருந்து புறப்பட்டு சென்னைக்கு வரும்போது பார்த்தால் காலை 7.30 மணிக்குக்கூட பல இடங்களில், ராணிப்பேட்டை, வி.சி. மோட்டூர் போன்ற பகுதிகளிலே விளக்குகள் எரிந்த வண்ணமாகவே இருக்கின்றன. பணமே கட்ட முடியவில்லை என்று சொல்கிற இந்த உள்ளாட்சி அமைப்புகள் அந்த ஊழியர்களை வைத்து உரிய முறையில், பொழுது விடிந்ததுமே அந்த விளக்குகளை அணைத்து ஓரளவுக்கு—ஏனென்றால் மின்வெட்டு நிறைய வந்து உயிரை எடுத்துக்கொண்டிருக்கிறது—இந்த மின்சாரத்தையாவது சேகரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா? காலை 6 மணி, பொழுது விடிந்தவுடனே விளக்குகளை எல்லாம் அணைக்க ஏற்பாடு செய்வதற்கு இவர் ஊழியர்களுக்குக் கட்டளை இடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை, அவர் சொன்ன கருத்தை ஏற்று காலை 5.30, 6 மணிக்குள்ளாக



2002 மே 2]

தெரு விளக்குகளை அணைப்பதற்கு வேண்டிய உத்தரவு ஏற்கெனவே இருக்கிறது. அதை மீறுகின்ற ஒருசில பொறுப்பற்ற ஊழியர்களும் இன்னும் பணியிலே இருக்கிறார்கள். அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிமன்ற நிதியை நீண்டகாலமாக அனுப்பாமல் இருந்ததன் காரணமாக பல்வேறு ஊராட்சிகளிலே, பஞ்சாயத்து அலுவலகம், தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றுக்கு எல்லாம் இன்றைக்கு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த டெபாசிட் கட்டினால்தான் இணைப்பு கொடுக்கப்படும் என்று இன்றைக்குப் பல கிராமங்களிலே அவையெல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே இப்படிப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதிகளை உடனுக்குடன் வழங்க அரசு முன்வருமா? மின்சார வாரியம் மீண்டும் டெபாசிட் கேட்காமல் இருக்கக்கூடிய நிலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நல்ல கருத்துரைகளையெல்லாம் இந்த அரசு சிந்தித்துதான் ஒவ்வொரு மாதமும் ஒவ்வோர் ஊராட்சிக்கும் மாநில நிதியை விடுவிப்பதற்கு வேண்டிய நல்ல முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. எனவே வருங்காலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் இந்த அரசு நல்ல முயற்சியை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் எந்த ஊராட்சியில் மின் துண்டிப்பு செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது தொடர்பான ஊராட்சிக்கு, நிதி பற்றாக்குறையா அல்லது வேறு காரணமா என்பதைத் தெரிந்து தக்க அறிவுரை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 266, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

[2002 மே 2

**266—**

**புதிய கட்டடம்**

***6034—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவத்தேவன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

*முற்பகல் 10-25*

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் ஊராட்சியில் அரசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டு ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுகளும் அது வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அங்கே சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்று அதற்குரிய இடங்கள்கூட அந்தக் கிராமத்தால் வழங்கப்பட்டு இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்த நிதியாண்டிலேயே அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருவத்தேவன் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கிறது. அது லாபத்திலே இயங்குகிறபோது அதற்குப் புதிய கட்டடம் கட்டுவது



2002 மே 2]

பற்றிய புதிய முன்மொழிவுகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 267, திரு. ஜி.கே. மணி, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**267—**

**அரசு அச்சகம்**

***2662—திரு. ஜி.கே. மணி:**
**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு மைய அச்சகத்தில் போதுமான பணியாளர்கள் உள்ளனர்.

(ஆ) இவ்வினா தற்போது எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அரசாங்கத்தினுடைய மத்திய அச்சகத்திலே போதிய பணியாளர்கள் இல்லை. அது மாத்திரம் அல்ல. அங்கே இருக்கக்கூடிய அச்சு இயந்திரங்கள் எல்லாம் பழைய இயந்திரங்கள். அவை பழுதுபட்டும், சரிவர பழுதுபார்க்கப்படாத நிலையிலேயும் இருந்துகொண்டு இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய கணினிகூட பழைய கணினி. இப்போது நவீன முறையான கணினிகள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தினாலே, அவற்றை எல்லாம் பழுதுபார்க்க முடியாமல், நவீனமயமாக்க முடியாமல், பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே பணிகள் எல்லாம் தொய்வாக இருக்கின்றன.

[2002 மே 2

உதாரணத்திற்கு நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொள்கை விளக்கக் குறிப்பு, மற்ற ஆவணங்கள் எல்லாம் வழங்கக்கூடிய நேரத்திலே காலதாமதமாக வருகின்றன. நாங்கள்கூட பலமுறை இங்கே மாமன்றத்திலே வேண்டுகோள் வைத்தோம். அடுத்த நாள் மானியக் கோரிக்கைக்கு, முதல் நாள் இரவு 10.00 மணிக்கு, 11.00 மணிக்கு வருகிறது. படிப்பதற்குக்கூட வாய்ப்பு இல்லாத நிலை. ஆகவே இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் போக்குவதற்கு மைய அச்சகத்திலே பணியாளர்களைக் கூடுதலாக்க வேண்டுவதோடு, அங்கே நவீனமயமாக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள், கணினிகள் எல்லாம் புகுத்தப்படுமா, உடனடியாக நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-2002 முதல் இன்று வரை 168 காலி பணியிடங்கள், பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கருணை அடிப்படையில் 20 பதவிகளும், வேலைவாய்ப்பகத்தின் மூலமாக 6 பதவிகளும், தேர்வாணையத்தின் மூலமாக 5 பதவிகளும், பதவி உயர்வு மூலமாக 137 பதவிகளும் ஆக மொத்தம் 168 பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல் அல்லாமல் அரசு அச்சகத்திலே போதுமான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1993-ல் ஆட்சி செய்தபோது இதற்கு என்று, இந்த மைய அச்சகத்தை எல்லாம் modernisation—நவீன முறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி G.O.Ms.No.312, நாள் 8-12-1993 அன்று அந்த G.O.வைப் போட்டார்கள். உடனடியாக அங்கே இருந்த தொழிலாளிகள் Writ Petition No.1997/84 என்ற Writ Petition-ஐ உயர்நீதி மன்றத்திலே தாக்கல் செய்து எங்களைப் பணி மாற்றம் செய்யக்கூடாது, அதுமட்டுமல்லாமல் retrench செய்யக்கூடாது என்று பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். 1993-லே இதை நவீனப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் போட்ட அந்த G.O.வை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மீண்டும் அந்தத் தொழிலாளர்களிடம் பேசி அந்த G.O.வை withdraw பண்ணச் செய்து, நீதிமன்றத்திலிருந்து வழக்குகள் இப்போது வாபஸ் செய்யப்பட்டு இருக்கின்றன. மேலும் அந்தத் தொழிலாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகளும், இந்த அரசு மைய அச்சகங்களை நவீனமயமாக்குகிற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 மே 2]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த அச்சு இயந்திரங்கள் எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கப்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா? அப்படி இருந்தால் இன்றைய நவீன யுகத்திற்குத் தகுந்தாற்போல நல்ல கணினிமயமான அச்சு இயந்திரங்களை வாங்கி, அதிலே தொழில்நுட்பம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா? தற்போது 168 வேலைவாய்ப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாக வாங்கக்கூடிய, நவீனமயமாக்கப்பட்ட அச்சு இயந்திரத்திற்காவது, புதிய ஆளை சேர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மைய அச்சகத்தைப் பொறுத்தவரையிலே தொழில்நுட்பப் பணியாளர்கள் 1695 பேர்களும், சென்னையில் உள்ள கிளை அச்சகத்திலே 183 பேர்களும், மதுரையிலே 184 பேர்களும், சேலத்திலே 96 பேர்களும், திருச்சியிலே 114 பேர்களும், புதுக்கோட்டையிலே 130 பேர்களும், விருத்தாசலத்திலே 98 பேர்களும், ஆக மொத்தம் 2500 தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல், இங்கே கூறியதுபோல் 1831 ஆம் ஆண்டு இந்த அச்சகம் தொடங்கப்பட்டது. 1831 ஆம் ஆண்டு தொடங்கிய அச்சகத்தை நவீனப்படுத்த வேண்டும் என்ற முறையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த பட்ஜெட் தொடரிலும், இந்த பட்ஜெட் தொடரிலும், புதுக்கோட்டை, விருத்தாசலம் போன்ற இடங்களில் உள்ள அச்சகங்களை நவீனமயமாக்க வேண்டுமென்று சொல்லி இந்த ஆண்டு 1 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த அச்சகங்கள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்டு, சிறந்த முறையிலே பணியாற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இங்கே பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது; புதியதாக நியமனங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில்

இருக்கக்கூடிய அச்சகங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அந்தப் பதவி உயர்வுகளிலும், நியமனங்களிலும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படவில்லை என்ற ஒரு குறை நீண்ட நாட்களாக அங்கே சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே அங்கே இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட்டிருக்கிறதா? பின்பற்றப்படவில்லை என்று சொன்னால், அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் அரசு அச்சகங்கள். ஆகவே அரசு அச்சகங்களிலே இட ஒதுக்கீட்டு முறை கண்டிப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது குறைபாட்டை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 268, செல்வி சி. கனகதாரா. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**268—**

### முதியோர் இல்லம்

***7089—செல்வி சி. கனகதாரா:***

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு நகரில் முதியோர் இல்லம் கட்டும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 40 வருட காலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினைக்கு, எனது தொகுதியில் உள்ள பெரிய கும்பேஸ்வரம், சாத்தம்பாக்கம் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் அமைத்துத் தந்த புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், அவர்களின் வழிவந்த பொன்மனச் செம்மலின்



நன்மனத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது பாசமிகு தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே், ஒன்றே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இளமையில் வறுமை முதுமையாகும். எனது தொகுதியானது மிகவும் பெரிய தொகுதியாகும். பின்தங்கிய தொகுதியாகும். இங்கே இரண்டு இலட்சத்திற்கு மேலான மக்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து எனது தொகுதிக்கு முதியோர் இல்லம் அமைத்துத் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லம் கட்டுவது என்பது, மாநில அரசால் முதியோர் இல்லம் நடத்தப்படுவதில்லை. தொண்டு நிறுவனங்கள் மூலமாக மட்டுமே முதியோர் இல்லங்கள் நடத்திட அனுமதிப்பது மாநில அரசு வகுத்திருக்கின்ற திட்டங்களில் ஒன்று. இந்தத் திட்டங்களின் மூலமாக 40 முதியோர்களைக் கொண்ட முதியோர் இல்லத்திற்கு ஆண்டு ஒன்றுக்குச் செலவினமான 1,20,000 ரூபாயில், 1 இலட்சம் ரூபாயை மாநில அரசு மானியமாக வழங்குகிறது. ரூ. 20 ஆயிரத்தை தொண்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு விதிமுறை வகுத்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இந்தத் தொகை, பெருகிவரும் தேவைகள் காரணமாகவும், விலைவாசி ஏற்றத்தின் காரணமாகவும், 40 முதியோர்களைப் பராமரிப்பதில், அவர்களுக்குள்ள வசதிக் குறைவின் காரணமாகவும் கவனிக்க முடியவில்லை என்ற தொண்டு நிறுவனங்களின் கருத்துருக்கள் ஏற்கப்பட்டு, தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 250 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்த மானியத் தொகையை 500 ரூபாயாக உயர்த்தித் தருமாறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இதிலே 6 முதியோர் இல்லங்களுக்கு மட்டுமே, தமிழக அரசின் சார்பிலே இன்றைக்கு இந்தப் பராமரிப்பு மானியத் தொகை வழங்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், அந்தப் பகுதியிலே ஏதாவது தொண்டு நிறுவனங்கள், சிறப்போடு

செயல்படுகின்ற நிறுவனங்கள் இருக்குமேயானால், தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்து, இதைப்போல நடத்திக்கொண்டிருக்கிறோம், முதியோர் இல்லம் நடத்தப் போகிறோம் என்று கருத்துரு அனுப்பினால், அதை ஏற்றுக்கொண்டு, அரசு தீவிரமாக ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *269*, திரு. கே.என். இலட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-35*

**269—**

**புதிய பேருந்து வழித்தடங்கள்**

***12858—திரு. கே.என். இலட்சுமணன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மயிலாப்பூர் தொகுதி, காமராசர் சாலை, ஆர்.கே. நகர், இராஜா அண்ணாமலைபுரம், சீனிவாசா அவின்யூ, கோவிந்தசாமி நகர் மற்றும் நாராயணசாமி தோட்டம் வழியாக புதிய வழித்தடங்களில் பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**(ஆ) தற்போது இயங்கும் பேருந்துத் தடம் எண் 5-ன் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) காமராசர் சாலை, ஆர்.கே. நகர், சேமியர்ஸ் சாலை, காளியப்பா மருத்துவமனை வழியாக பொதுமக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடப் பேருந்துகளை இராஜா அண்ணாமலைபுரம், சீனிவாசா அவின்யூ, கோவிந்தசாமி நகர் போன்ற பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நாராயணசாமி தோட்டப் பகுதி மக்கள், இராமகிருஷ்ணா மடம் சாலை வழியாக இயங்கும் பேருந்துகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேற்கூறிய வழித்தடங்களில் பயணிகளின் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





*(ஆ) வழித்தடம் 5-ல் பயணிகள் பயன்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் இவ்வழித்தடத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க இயலவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. கே.என். இலட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் தொகுதி, மக்கள் நெரிசல் நிறைந்த பகுதி. அத்துணை அமைச்சர்களும் குடியிருக்கின்ற விடுதிகளுள்ள இடம். விடுதிகள், பங்களாக்கள் இருக்கின்ற இடம். பொதுமக்களெல்லாம். ஏழை மக்கள் எல்லாம் அமைச்சர்களைப் பார்க்க வேண்டுமென்றால், பேருந்துகளை மட்டுமே நம்பி வருகின்ற இடம். அதுமட்டுமல்ல. கோயில் குளங்கள் நிறைந்த பகுதி. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, பேருந்துகள் இருக்கின்றன. ஆனால் அது 10 சதவிகித நெரிசலைக்கூட சந்திக்க முடியாமல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே காமராசர் சாலை, ஆர்.கே. நகர் மற்றும் இராஜா அண்ணாமலைபுரம் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மயிலாப்பூர் தெப்பக்குளத்திற்கோ அல்லது தியாகராய நகருக்கோ, எழும்பூருக்கோ போவதற்கு உரிய, அதிக பேருந்துகளை விடவேண்டுமென்றும்—அந்தப் பகுதியிலே 5 ஆம் எண்ணுள்ள பேருந்து வசதி மிகவும் குறைவு—இத்தடத்தில் 5 ஆம் எண்ணுள்ள பேருந்துகளை இன்னும் அதிகமாக விட வேண்டும் என்றும், தரமணி—மயிலாப்பூர் 5-கே, அந்தத் தடத்தில் ஒரே ஒரு பேருந்துதான் சென்றுகொண்டிருக்கிறது. அது மக்களுக்கு அறவே போதாது. ஆகவே அதிலும் அதிகப் பேருந்துகளை விட வேண்டும்.*

*மேலும் பேருந்து எண் 4-இ, அந்தத் தடத்தில் சென்றுகொண்டிருந்தது. என்ன காரணத்தாலோ அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு பேருந்துகூட அந்தத் தடத்திலே இப்போது இல்லை. அதை மீண்டும் நீங்கள் விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும்,* 23-B *பேருந்து அந்தத் தடத்திலே காலையில் ஒரு நடையும், மாலையில் ஒரு நடையும்தான் சென்றுகொண்டிருக்கிறது. அதைச் சரிசெய்ய வேண்டுமெனவும்,*

அடையாறிலிருந்து மேலே சொன்ன காமராசர் சாலை, ஆர்.கே. நகர், இராஜா அண்ணாமலைபுரம் வழியாக 29-சி அல்லது 5-B பேருந்து, மயிலாப்பூர் தெப்பக்குளத்திற்கு வந்தடையுமாறு நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துத் துறை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழித்தடம் 5-ல் போதுமான அளவிற்கு பேருந்துகள் இயக்கப்படுவதில்லை, பயண நடைகளைக்கூட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் காமராசர் சாலை, ஆர்.கே. நகர் வழியாக வழித்தடம் 5-ல் ஆறு பேருந்துகள் 96 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த 96 நடைகளே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமான அளவில் இருக்கிறது என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மேலும் அந்த வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்துகளை இயக்கினால் இன்னும் அந்தப் பகுதி மக்கள் பயனடைவதற்கு ஏதுவாக இருக்குமென்று கேட்டார். அந்தப் பகுதி மக்களுடைய தேவைக்கு அதிகமாகவே இப்போது இயக்கப்படுவதாக ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே மேலும் கூடுதலாக அந்தப் பகுதியில் இயக்கத் தேவையில்லை என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 4-E, 1-G ஆகிய வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் 4-சி வழித்தடத்திலும் மற்றும் 5-கே-யில் ஒரே ஒரு பேருந்துதான் ஓடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு பேருந்துதான் அதில் ஓடினாலும்கூட, பன்னிரண்டு நடைகள் அதில் இயக்கப்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு அது போதுமானதாகக் கருதப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே இன்னும் ஒரு கூடுதல் பேருந்து இயக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதை அரசு பரிவோடு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 270, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**270—**

## தொழிற்சாலைகள்

***851—திரு. சி. ஞானசேகரன்:**
**திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையிலும், தருமபுரி மாவட்டம், ஓசூரிலும் உள்ள சிப்காட் வளாகத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கான காரணங்கள் யாவை?

(ஆ) அவற்றை மீண்டும் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிப்காட் தொழில் வளாகம், இராணிப்பேட்டையில் அதிகமாக தோல் பதனிடும் தொழில் நிறுவனங்கள் இருப்பதால் உச்சநீதிமன்ற ஆணைக்கேற்ப மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் இத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன. மேலும் இரண்டு வளாகங்களிலும் உள்ள தொழிற்சாலைகள் தொழில் முனைவோர்களுடைய நிர்வாகக் கோளாறுகள், சந்தைவாய்ப்பு சரிவு, தொழில் துறையின் சரிவு மற்றும் நிதி நெருக்கடி போன்ற காரணங்களினாலே மூடப்பட்டுள்ளன.

(ஆ) பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளில், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவ முன்வந்தால் மாவட்ட தொழில் மையம் தகுந்த ஆலோசனை வழங்குவதோடு தக்க நடவடிக்கை எடுக்கும். மேலும் சுத்திகரிப்பு ஆலை நிறுவ ஆகும் செலவில் 10 சதவிகிதம், அதிகபட்சம் ரூபாய் இரண்டு இலட்சம் மானியமாக அரசு வழங்கும். ஓசூரில் மூடப்பட்டுள்ள சிறு தொழில்கள் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து ஆராய்ந்து தீர்வு காண மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு ஊரகத்

தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறு தொழில் வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையிலும், அதேபோல தருமபுரி மாவட்டம் ஒசூரிலும் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய சிப்காட் வளாகத்தில் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் தொழிற்சாலைகள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. 40 சதவிகிதம் தொழிற்சாலைகள்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே பல்வேறு காரணங்களை நாம் சொன்னாலும்கூட, நிதி நெருக்கடி அல்லது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய சில விதிகள் என்றெல்லாம் இருந்தாலும்கூட, இன்று பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிற காரணத்தாலே, ஒன்று தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு ஏற்பட்டிருக்கிறது; இரண்டு, அந்தப் பகுதியிலே தொழில் வளர்ச்சி என்று வருகிறபோது, நாமும் ஏன் இப்படி தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்பதற்கான காரணங்களை ஆராய்ந்து, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சில நேரங்களிலே வங்கிகள் உரிய நேரத்தில் கடன் தொகையை வழங்காத காரணத்தினால் அல்லது அவர்கள் பணத்தைக் கொடுக்க மறுக்கிற காரணத்தால் சில மூடப்படுகின்றன. சில பேர் Subsidy கொடுத்தால் போதும்; அதைமட்டும் எப்படியாவது வாங்கி சாப்பிட்டுவிட்டு தொழிற்சாலையை வேறு மாநிலத்திற்குக் கொண்டுபோய் வைத்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை எல்லாம் இருப்பதைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு ஆவன செய்வாரா? அல்லது மூடப்பட்டிருப்பதற்கான காரணத்தை ஆராய்வதற்கு ஏதாவது ஒரு குழு நியமித்துகூட-தமிழ்நாடு முழுக்க மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் எத்தனை, ஏன் மூடப்பட்டிருக்கிறது என்பதற்காக ஒரு குழுவை நியமித்தாவது அதன் உண்மைகளைக் கண்டறிந்து, அவற்றையெல்லாம் திறப்பதற்கும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ஊரகத் தொழில் துறை அமைச்சரினுடைய தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூரிலுள்ள சிப்காட் வளாகத்தில் பல தொழிற்சாலைகள், உதாரணத்திற்கு Kothari, Elcot, Orient Vision, Uma Maheswari, Lal, Tamil Nadu Alloy போன்ற பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதோடு மட்டுமல்லாமல், இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் தயாரிக்கும் சிறு தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இத்தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையில், தொழிலாளர் நலன் காக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, நலிந்த தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கு ஏதாவது செயல் திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூரில் மூடப்பட்டுள்ள சிறு தொழிற்சாலைகள் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, ஆராய்ந்து தீர்வு காண, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே சிறு தொழில் வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத், தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய அந்த நெறிமுறைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் எத்தனை? என்னென்ன conditions போடப்பட்டுள்ளதோ அவற்றை நிறைவு செய்து fulfil செய்து, மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு, நிர்வாகத்தை நம்முடைய அரசு அழைத்துப் பேசி, நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடவும்.

[2002 மே 2

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு question கேட்கவில்லை. This is a question pertaining to the subject. Relevant question has been put up by me. Minister can't say like this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைப்பற்றி தனியாகக் கேளுங்கள்.

வினா எண் 271. திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**271—**

**ஓசோனில் இடைவெளி**

***11833—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானவெளியில் ஓசோனில் இடைவெளித் துளை ஏற்பட்டுள்ளதால் தமிழகத்தில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை அவைக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்வெளியிலிருந்து பூமிக்கு வருகின்ற கதிர்வீச்சும், சூரியனின் Infra-red கதிர்வீச்சும் பூமிக்குள் ஊடுருவுவதை ஆக்ஸிஜன் வாயு ஓசோன் மண்டலம் தடை செய்கிறது. இதனால் பூமியின் உஷ்ண நிலை ஒரேசீராக இதுவரை இருந்து வந்தது. ஆனால்



2002 மே 2]

கடந்த ஆண்டுகளில் ஓசோன் மண்டலத்தில் துளை ஏற்பட்டுள்ளது. ஓசோன் மண்டலத்தில் துளை ஏற்பட்டுள்ளதால் Ultra- violet radiation நுரையீரல்களிலும், இருதயத்திலும் உயிர்க்கொல்லி நோய்கள் ஏற்படுவதையும், தாவரங்களும், மிருகங்களும்கூட பாதிக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு காற்று மாசுபடுவதைத் தடுப்பதன் மூலம் ஓசோன் பகுதி பாதிக்கப்படாத பகுதியாக, அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும், தேசிய அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முயற்சிகள் ஏதாவது மேற்கொண்டுள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக ஓசோன் அடுக்கின் அடர்த்தி குறைந்துவருவது அறியப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டில் இப்பிரச்சினை முழுமையாகத் தெளிவுபட முடிந்தது. தமிழ்நாட்டில் ஓசோன் குறைந்து ஓட்டை விழுவதாக இதுவரை தகவல் இல்லை. ஓசோன் மண்டலம் ப்ளோரோ க்ளோரோ கார்பன் என்ற வாயுவினால் பாதிக்கப்படுகிறது. இத்தகைய தொழிற்சாலைகள் இந்திய நாட்டில் 55 உள்ளன. தமிழ்நாட்டில் இத்தகைய தொழிற்சாலை மேட்டூரில் ஒன்று மட்டும்தான் உள்ளது. அதுவும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் கவனமாக, வாரியத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இத்தொழிற்சாலையின் உற்பத்தியைக் குறைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ப்ளோரோ க்ளோரோ கார்பன் பொருட்களை 2010 ஆம் ஆண்டிற்குள் ஒரு பகுதியையும் 2020-க்குள் முழுமையாகவும் குறைக்க வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் நாள் மான்ட்ரியல் என்னுமிடத்தில் நடைபெற்ற 110 உலக நாடுகள் கூட்டத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவில் 10% குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து, இந்த ப்ளோரோ க்ளோரோ கார்பனுக்கு மாற்றுப் பொருள் உற்பத்தி செய்ய மத்திய அரசின் மானியத்துடன் தொழிற்சாலைகளை அமைக்க வாரியம் தக்க நடவடிக்கையை எடுத்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

[2002 மே 2

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற மாநகரங்களின் வாகனங்கள் அதிக அளவு கார்பன் மோனாக்ஸைடு, தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் நைட்ரஜன் ஆக்ஸைடு மற்றும் அனல் மின் நிலையங்களிலிருந்து வெளிவரும் நச்சுத் தன்மை உள்ள புகை ஆகியவற்றால் ஆஸ்துமா மற்றும் நுரையீரல்கள் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்படுகின்றன. இதனாலும் இந்த ஓசோனில் அந்தத் துளை ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா? இதனைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் தொழிற்சாலைகள் அமைக்கும்போது அவற்றிற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்பு சில நிபந்தனைகளோடு கொடுப்பதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலை ஏற்படாது இருப்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்கூட்டியே நம்முடைய வாரியத்திடம் கடுமையான உத்தரவிட்டு இத்தகைய தொழிற்சாலைகள் அமைப்பதற்குச் சரியான கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீடுகளில் நாம் பயன்படுத்தும் ரெஃப்ரிஜிரேட்டர்களில் இந்த ப்ளோரோ க்ளோரோ கார்பன் பயன்படுத்தப்படுகிறது. அது கசிந்துதான் இந்த ஓசோன் மண்டலத்தைத் துளைக்கிறது என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். எனவே இந்த Flouro Chloro Carbon-க்குப் பதிலாக refrigerator-களில் வேறு சாதனம் பயன்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப சிக்கலில் விட்டுவிடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் தொழிற்சாலைகளுக்கு நம்முடைய வாரியம் அறிவுறுத்தியும், மத்திய அரசினுடைய மானியம் தர வேண்டுமென்று



2002 மே 2]

சிபாரிசு செய்தும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 272, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**272—**

### துணை நகரங்கள்

***8394—திரு. வெ. ஏழுமலை :**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மக்கள்தொகை பெருக்கத்தைக் குறைக்க துணை நகரங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சோழிங்கநல்லூர் திட்டப்பகுதி 3-ல் உள்ள 165 ஏக்கர் நிலப்பரப்பில் திட்டம் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திருவள்ளூர் போன்ற பகுதிகளில் விரிவாக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர போக்குவரத்து நெரிசல் காரணமாக பொதுமக்கள் அவதிப்படுவதும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதும் நாம் அறிந்ததே. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கிராமங்களில்கூட இண்டர்நெட் வசதி இன்றையதினம் கிடைக்கிறது.

சென்னை நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, டெல்லி, மும்பை மற்றும் மேலை நாடுகளைப் போன்று சென்னை நகரின் அருகிலுள்ள பகுதிகளுக்கு Satellite City அமைத்துத் தரப்படுமா என்பதோடு, வளர்ந்து வருகின்ற கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் போன்ற நகரங்களிலும் Satellite City அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மூலம் அம்பத்தூர், ஆவடி, தாம்பரம், எண்ணூர், மணலி, மீஞ்சூர் ஆகிய புறநகர் பகுதிகளை விரிவாக்கி ஒவ்வொன்றிலும் *2.3* இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்குவது என்ற திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள மக்கள்தொகை பெருக்கத்தைக் குறைப்பதற்காக குடும்பக் கட்டுப்பாடுதான் அவசியமான தேவையாக இருக்கும். ஆனால் துணை நகரம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற கருத்து வருகிறபோது அந்தக் குடும்ப நலத் துறை பற்றிய அக்கறை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே குடும்ப நலத்தை வெகுவாக பேணிப் பாதுகாத்து, இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலம் என்ற பெயரையும் புகழையும் பெற்றிருக்கிற மாநிலம் நம் தமிழ்நாடு. அப்படி அதனாலும் பாதிப்பு வந்திருக்கின்ற காரணத்தால் இப்படி விரிவுபடுத்தி துணை நகரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதற்கு வீட்டு வசதித் துறை அமைச்சரிடம் பதில் இல்லை.

வினா எண் *273,* திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2002 மே 2]

**273—**

**விட்டு வசதி**

***12900—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி எல்லையிலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி எல்லையிலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கம்.

சேலம் மாவட்டத்தில், குறிப்பாக சேலம் மாநகராட்சிப் பகுதியில் கோட்டை, லைன்மேடு, திப்புசுல்தான் மார்க்கெட் பகுதி, கார்பெட் பகுதிகளில் எல்லாம் சிறுபான்மையின முஸ்லீம் ஏழை மக்கள் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் சிறு சிறு வாடகை வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக இருந்து வருகின்ற நிலையில், பீடித் தொழிலைச் செய்து வரும் பீடித் தொழிலாளர்களுக்கு, ஏழ்மையில் வாழ்கின்ற பீடித் தொழிலாளர்களின் நலனைக் காக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, பீடித் தொழிலாளர்களுடைய நலன் கருதி, வேலூரில் 679 வீடுகளும், திருச்சியில் 286 வீடுகளும், ஈரோடில் 89 வீடுகளும், நாமக்கல்லில் 55 வீடுகளும், கோயம்புத்தூரில் 48 வீடுகளும் திருவள்ளூரில் 128 வீடுகளும், மொத்தம் 1285 வீடுகள் கட்டுவதற்கு எங்கள் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, சேலம் நகர்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு யோசிக்கப்படும் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

*முறபகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 274, திரு. கி. பாரிமோகன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**274—**

### ஒகேனக்கல் நீர்விழ்ச்சி

***633—திரு. கி. பாரிமோகன்:**
**திரு. ஜி.கே. மணி:**
**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கும் திட்டமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் சுற்றுலா மையம் என்பது ஒரு பிரசித்தி பெற்ற மையம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்த பகுதி, பார்த்த பகுதி அது. எல்லோரும்—நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றும், கடந்த காலங்களில்கூட இவ்வளவு மக்கள்தொகை சுற்றுலாப் பயணிகளாக வரக்கூடிய இந்தப் பகுதியிலே அடிப்படை வசதிகளே இல்லையென்று சொல்லி நிறைய குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தச் சுற்றுலா மையம் என்பது ஒரு ஊராட்சியினாலே நிருவகிக்கக்கூடிய ஒரு பகுதி. அந்த ஊராட்சியிலே வருமானம் அதிகமாக இல்லை. இப்படி சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தினாலே அங்கே சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. அதைப் பராமரிக்க, சுகாதாரக் கேட்டை சீர்செய்வதற்குக்கூட நிதி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் அந்த நீர்வீழ்ச்சியிலே குளித்துவிட்டு, சிலபேர் நீர்ச் சுழலில் சிக்கிக்கொண்டு இறக்கவும் நேரிடுகிறது. விபத்துக்கு உள்ளாகிறார்கள். அவர்களை எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் வசதி, மருத்துவமனை வசதிகூட இல்லாமல் இருக்கிறது. கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாட்டினுடைய பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய இந்தச் சுற்றுலா மையத்தை கடந்த காலத்திலே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஓரளவு சீர் செய்தோம். ஆகவே இப்படி மக்கள் அதிகம் வரக்கூடிய இந்தப் பகுதியிலே, சுற்றுலாப் பூங்கா அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட வேறுவிதமான பொழுதுபோக்குகள் எல்லாம் ஏற்படுத்துவதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக கூடுதலான நிதியொதுக்கி, நடப்பாண்டிலே இந்தச் சுற்றுலா மையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையை ஏற்று ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் காவிரி ஆற்றின்

குறுக்கே தொங்கு பாலம் கட்டுவதற்கான பணி 1996 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவடைந்துவிட்டது. தொங்கு பாலம் மூலம் ஆற்றின் தீவுப் பகுதிக்குச் சென்று நீர்வீழ்ச்சியின் அழகை கண்டுகளிக்கலாம். இங்கே வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மறு கரைக்குச் செல்ல நவம்பர் 1998 முதல் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஒகேனக்கல் அருகில் உடை மாற்றும் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்க ரூ.3,38,840 அனுமதிக்கப்பட்டது. இப்பணி தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளது.

ஆண்கள் உடை மாற்றும் அறை கட்டப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் நவீன கழிப்பிடங்கள் செய்து கொடுப்பதற்காக, மத்திய அரசு ரூ.12 இலட்சம் மாநில அரசு ரூ.4 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.16 இலட்சம் திட்டச் செலவினம் ஆகும். மத்திய மாநில அரசுகளின் முதல் தவணை முறையே ரூ. 3.60 இலட்சமும், ரூ. 1.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 4.80 இலட்சமும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் நவீன கழிப்பிட வசதிகள் ரூ.75,600 செலவில் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல் சுற்றுலா சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்கு மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1995-96 ஆம் ஆண்டு ரூ.10.50 லட்சம் வழங்கப்பட்டு ஒகேனக்கல் பகுதியில் பார்வை மாடம், அணுகு பாதை மற்றும் சிறுவர் பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டு இவை வனத் துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில், அதாவது பெண்ணாகரம் தொகுதியிலே அமைந்துள்ள இந்த ஒகேனக்கல், கிட்டத்தட்ட 2, 3 மாநில மக்கள், குறிப்பாக கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய பல பகுதிகளிலிருந்து தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அங்கே வனத் துறையால் பராமரிக்கப்படக்கூடிய அந்தப் பூங்காவிலே புல்கூட இல்லை. 15, 20 மான்களைப் போட்டு அடைத்து அவை மிகவும் நோய்வாய்ப்பட்டு, நலிந்து சித்திரவதைப்பட்டு, சீரழிந்து இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் பார்த்தாரா அல்லது அதிகாரிகள் பார்த்தார்களா?



முற்பகல் 11--00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்வியை நீட்டிக்காமல் கொஞ்சம் முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அதேபோல் முதலைப் பண்ணை என்று ஒன்று வைத்து, நூற்றுக்கணக்கிலே இருந்த முதலைகள் இப்போது பலமடங்கு பெருகி, முதலைகளுக்கு உணவே அளிக்காமல், 10 நாட்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை உணவு அளித்து, அந்த மிருகங்களையும் சித்திரவதை செய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு பரிசீலனை செய்து அந்த மிருகங்களுக்குச் சரிவர உணவை அளித்து. அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய வகையிலே நல்ல பூங்காவாக உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தைப் பரிசீலித்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதிகாரிகளை வரவழைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 மே 2

## 2. தகவல் கோரல்

### (அ) கவன ஈர்ப்புகள், வினாக்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அனுப்ப அரசுத் துறைகளுக்கு அறிவுறுத்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Point of Order. மைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55-ன்படி பல கவன ஈர்ப்புகளை உறுப்பினர்கள் தங்களிடம் கொடுத்து, அவை அனுமதிக்கப்பட்டு துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல் பல்வேறு உறுப்பினர்கள் இப்போது விதி 45-ன்படி கேள்விகளை எல்லாம் கொடுத்து அவையும் துறைக்குச் சென்றிருக்கின்றன. கேள்விகளுக்கெல்லாம் 45 நாட்களிலே பதில் வர வேண்டும் என்பது விதி 45; 7 நாட்களுக்குள் துறையிலேயிருந்து பதில் வர வேண்டும் என்பது விதி 55-ல் இருக்கிறது. இந்த விதி 45, அதேபோல் விதி 55-ஐ நம்முடைய துறையினர் ஏனோ புறக்கணித்துவிட்டு, நிறைய பதில்கள் 55-ன்கீழ் வராமலேயே இருந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளைக்கும் இரண்டு கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். அதிகபட்சம் எவ்வளவு எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ளலாம்.

### (ஆ) வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லிவிட்டார். திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நான்கு நாட்களாக வால்பாறை தோட்டத்திலே தொழிலாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக பல கோரிக்கைகள் எல்லாம் கொடுத்திருக்கிறார். அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துகிறார் 4 ஆம் தேதி பேச்சுவார்த்தை இருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள்.



2002 மே 2]

### (இ) விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்வில் இருக்கிறது. முடிவு சொல்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சித்ரா பௌர்ணமி விழாவின்போது ஏற்பட்ட மோதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 26-4-2002 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற சித்ரா பௌர்ணமி விழாவில் கலந்துகொள்ள வந்தவர்கள்மீது நடந்த தாக்குதல் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி, திரு. கே. ஆறுமுகம், திரு. ஐ. கணேசன், திரு. ப. ரங்கநாதன், திரு. கோ. இரவிராஜ், டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. தி.வேல் முருகன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்து தகவல் தெரிவித்துள்ளார்கள். ஆக, மாண்புமிகு தலைவர்கள் இதைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அமைதியான சூழ்நிலை கெடத்தக்க அளவிற்கு செய்தித் தாள்களிலே பார்க்கிற செய்திகளைக் கொண்டேகூட ஒரு பதற்ற நிலை உருவாகிவிடும் என்று கருதத்தக்கூடிய அளவிற்கு, கடந்த 26-4-2002 அன்றையதினம் மகாபலிபுரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த இளைஞர் அணி சார்பில் சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடுவதற்காக, அவர்கள் நடத்திய அந்த விழாவிற்கு தெற்குப் பகுதியிலேயிருந்து, புதுச்சேரி வழியாக,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 மே 2

கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக, பாட்டாளி மக்கள் கட்சியைச்
சார்ந்த இளைஞர்கள் பல்வேறு கார்களிலேயும் பஸ்களிலேயும்,
வாகனங்களிலேயும் வந்தவர்கள், அவர்கள் எதிர்பார்க்க முடியாத
நிலையில், ஏதோ சில காரணங்களால், எப்படியோ ஏற்பட்ட ஒரு
வன்முறைத் தாக்குதல் காரணமாக, பாட்டாளி மக்கள் கட்சியைச்
சார்ந்த கண்ணன் என்ற தோழர் தலையிலே வெட்டு விழுந்து,
அதன் காரணமாக அவர் உயிர் இழக்க நேரிட்டிருக்கிறது. ஏறத்தாழ
25 பேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். அதிலே 10 பேர் புதுச்சேரி
மருத்துவமனையிலேயும், 13 பேர் திண்டிவனம் மருத்துவமனையிலேயும்
சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இறந்துபோனவருடைய உடல் செங்கை
மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு பரிசோதிக்கப்பட்டிருக்கிறது.
கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஏராளமான வண்டி, வாகனங்கள்,
அந்த விழாவிற்காக கடந்த காலத்திலேயும் வந்திருக்கின்றன. அப்படி
இந்த ஆண்டு வருகிறபோது, ஏதேனும் ஒரு அரசியல் நோக்கம்
இருக்குமோ என்று சந்தேகப்படுகிற அளவுக்கும், யாருடைய
தூண்டுதலோ காரணமாக இருக்கும் என்று எண்ணக்கூடிய அளவுக்கும்
அந்தக் கலவரம் அங்கே உருவாகி, அதன் காரணமாக அந்த நிகழ்ச்சி
உருவான இடத்திலே, அந்தக் கிராமப் பகுதியிலே உள்ள
மக்களும்கூடப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, இந்தப் பாதிப்பு
வேறுவிதமான எண்ணங்களை மக்களிடையே உருவாக்கிவிடுமானால்,
உருவாக்கும் வாய்ப்பு இருக்குமானால், அதனுடைய விளைவாக
சமுதாயப் போராட்டம் நாட்டிலே உருவாகக்கூடாது; சமுதாயங்களுக்கு
இடையில் மாறுபாடு வளரக்கூடாது. ஆனால் வளர்த்துவிடுவதற்கு
இது ஏதுவாகிவிடுமோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு தனி
அடையாளம் காட்டக்கூடிய இரண்டு சமூகங்களுக்கு இடையில்
மாறுபாடு வளர்கிற அளவுக்கு அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

முற்பகல் 11-05

இந்த நிகழ்ச்சி அங்கே நடைபெறாமல் இருந்திருக்க வேண்டுமானால்
காவல் துறை முறையாக, ஒரு பெரிய விழாவுக்கு வருகிறவர்கள்,
எந்தவிதமான, அசம்பாவிதத்திற்கும் ஆளாகாத வகையில் மிக
முக்கியமான இடங்களில், ஏதேனும் ஒரு வகையில் முரண்பாடு,
மாறுபாடு ஏற்படக்கூடிய இடம் என்று காவல் துறை
அறிந்திருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் போதுமான பாதுகாப்பு
தந்திருக்குமானால், காவல் துறை பொறுப்போடு முன்கூட்டி
திட்டமிட்டிருக்குமானால், இந்த நிகழ்ச்சி தவிர்க்கப்பட்டிருக்க முடியும்
என்பது என்னுடைய எண்ணம்.



2002 மே 2] [பேராசிரியர் க. அன்பழகன்]

வந்திருக்கின்றன.
புதுச்சேரி வழியாக அந்த வண்டிகள், வாகனங்கள் வந்திருக்கின்றன.
புதுச்சேரி மாநிலத்தில் அப்படி எதுவும் நடைபெறவில்லை. அப்படி
நடைபெறாததற்கு மிக முக்கியமான காரணம், இந்த ஊர்வலத்தைப்
பற்றி, அங்கே உள்ள மக்கள் இந்தப் பேரணியைப் பற்றி ஒரு
மாறுபட்ட கண்ணோட்டத்தோடு பார்க்கிற வாய்ப்பு இருந்திருக்காது.
ஆனால் இப்படி நடைபெற்ற இந்த நிகழ்ச்சி போன்று இதற்கு
முன்னாலும் மகாபலிபுரத்தில், இப்படிப்பட்ட சித்ரா பௌர்ணமி
விழா நடைபெற்றபோதும் வேறு சில வகைகளில் அவர்கள்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
ஜனநாயகத்திலே இப்படிப்பட்ட விழா நடைபெறுவது—நான்
பகுத்தறிவுவாதி என்ற முறையில் சில விழாக்களை வேண்டாம்
என்றுகூடப் பேசியிருக்கிறேன் என்றாலும்— மக்கள் விரும்பி
இப்படிப்பட்ட ஒரு விழா நடைபெறுகிற நேரத்தில், இப்படிப்பட்ட
அசம்பாவிதங்கள், வன்முறைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலை இந்த
நாட்டிலே ஏற்படுமானால் அது ஒரு தொடர்கதையாக ஆகிவிடும்
என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே
வாழ்கின்ற எந்தச் சமூகமாக இருந்தாலும், அவரவருடைய உரிமையை
முறையாக அவர்கள் நுகர்வதற்கான வாய்ப்பைத் தடுப்பதற்கென்று
வன்முறைகள் வளர்வதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட நாம்
இடம் தரக்கூடாது. இதிலே காவல் துறை ஆற்றிய பணி, அவர்கள்
கடமை முழு அளவில் அமையவில்லை என்று நான் நிச்சயமாக
அறிவேன்.

இன்னும் சொல்லப்போனால், காவல் துறையிலே உள்ள ஒரு சிறு
குழுவோ அல்லது ஒரு சாராரோ, அசம்பாவிதங்கள் வளர்வதைக்கூட
விரும்புகிறார்கள் என்று நான் சந்தேகப்படுகிறேன், எனக்கு ஏற்பட்ட
அனுபவம் காரணமாக. எனவே இப்படிப்பட்ட ஒரு நிலையில் பல
வண்டிகள் எரிக்கப்பட்டு, கார்கள் கொளுத்தப்பட்டு, பல்வேறு விதமான
இழப்புகள் ஏற்பட்டதனால் ஒரு பதட்ட நிலை ஏற்படுவதற்கான ஒரு
சூழல் அங்கே ஏற்பட்டதன் காரணமாக அதைக் குறித்து
விவாதிப்பதற்கு இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள
அரசு முன்வராவிட்டாலும்கூட கவன ஈர்ப்பும் என்ற முறையில்
கருதியேனும் தகுந்த முறையில் உரிய பரிகாரம் காண்பதற்கு வழிகாண
வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

முற்பகல் 11-10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்னியர் சங்கத்தின் சார்பிலே ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி அன்று இளைஞர் திருவிழா நடத்துவது வழக்கம். அந்த வகையிலே இந்த ஆண்டு கடந்த 26-4-2002 அன்று வெள்ளிக்கிழமை வன்னியர் சங்கத்தினுடைய இளைஞர் திருவிழா மாநாடு மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு விழா தொடங்கிய நேரம். அந்த நேரத்தில் தமிழ்நாட்டினுடைய அரியலூர், பெரம்பலூர், கடலூர், திருச்சி, நாகை, திருவாரூர், தஞ்சை மற்றும் பாண்டிச்சேரி போன்ற பல்வேறு மாவட்டப் பகுதிகளிலேயிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக மாமல்லபுரத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். சுமார் மாலை 6.00 மணி நேரத்திற்கு மரக்காணம் பகுதிக்கு வந்த உடனே, அருகிலே இருக்கக்கூடிய ஒரு பெட்ரோல் பங்க்கிலே உள்ள ஒரு யூகலிப்டஸ் மரம். நீலகிரி தைல மரம் வெட்டி ரோட்டின் குறுக்கே சாய்க்கப்படுகிறது. அப்படி ரோட்டின் குறுக்கே சாய்க்கப்பட்ட உடனே முன்னாலே வந்த வண்டிகள் எல்லாம் நிறுத்தப்படுகின்றன. நிறுத்திய உடனே அருகிலே இருக்கக்கூடிய பெட்ரோல் பங்க்கிலே இருந்து பெட்ரோலை எடுத்துவந்து சில கும்பல், விஷமிகள், வன்முறை கும்பல்கள் அந்த வண்டி, வாகனங்களில், முன்னாலே இருந்த அம்பாசிடர் கார், சுமோ போன்ற வாகனங்களில் பெட்ரோலை ஊற்ற முயற்சிக்கிறார்கள். பெட்ரோல் ஊற்ற முயற்சித்தவுடனே வண்டியிலே இருக்கக்கூடியவர்களெல்லாம் இறங்கி ஓடுகிறார்கள். ஓடுகின்றபொழுது அந்தக் கும்பல் வெட்டுகிறது. சிலரைத் தடுத்து நிறுத்தி, அந்த வெட்டுக்குப் பயந்து- அது திடீரென்று ஏற்பட்ட காரணத்தினாலே ஓடுகிறார்கள். ஓடுகின்றபொழுது, கொண்டுவந்த பெட்ரோலை அந்த வாகனங்களிலே ஊற்றி தீ வைக்கிறார்கள். ஆகவே இப்படி தீ வைக்கக்கூடிய சம்பவத்தைப் பார்த்த உடனே—இது ஒருபக்கம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு சின்ன கீற்றுக் கொட்டகை மாதிரி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சிலர் சீட்டுக்கட்டு விளையாடுவதற்காக, ஒரு சின்ன நிழல் தரும் கொட்டகையைப்போல— கொட்டகை என்றுகூடச் சொல்ல முடியாது— அது போடப்பட்டிருக்கிறது. அதற்கு தீ வைத்துவிடுகிறார்கள். தீ வைத்துவிட்டு ஐயய்யோ மாநாட்டுக்குப் போகக்கூடியவர்கள் கொட்டகைக்கு தீ வைத்துவிட்டார்கள் என்று சத்தம் போட்டவுடனே அக்கம் பக்கத்திலே இருக்கக்கூடிய, அந்தக் கிராமப் பகுதியிலேயிருந்து எல்லோரும்—பெண்கள், இளைஞர்கள்





எல்லாம் ஓடி வருகிறார்கள். வந்த உடனே, அங்கே ஒரு செய்தி பரப்பப்படுகிறது; இங்கே கொட்டகைக்கு தீ வைத்துவிட்டார்கள், இங்கே இளநீர் விற்றுக்கொண்டிருந்த ஒரு பெண்ணின்மீது, போகக்கூடிய வண்டியிலே இருந்தவர்கள் பீர் பாட்டிலைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்; அது மேலே பட்டுவிட்டது என்று இட்டுக்கட்டி ஒரு கதையைக் கட்டுகிறார்கள். அதனாலே ஆத்திரம் அடைந்த அந்தப் பகுதி மக்கள் வேகமாக, நூற்றுக்கணக்கில், 200, 500 என்று ஆயிரக்கணக்கில் வந்தவர்கள் வேகமாக வந்த வாகனங்களை எல்லாம் தடுத்து நிறுத்தி வெட்டுகிறார்கள்; துரத்தியடிக்கிறார்கள். இப்படியொரு சம்பவம் நடந்துகொண்டிருக்கிறது. அருகிலே இருக்கக்கூடிய காவல் நிலையத்தில் தஞ்சம் புகுவதற்காக ஓடுகிறார்கள். அங்கே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் உடனடியாக அந்தப் பகுதிக்கு வந்திருக்க வேண்டும். வந்திருப்பார்கள் என்று சொன்னால் இவ்வளவு பெரிய கலவரம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். இப்படி காவல் துறையும் கண்டுகொள்ளவில்லை. இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் யார் என்று சொன்னால், நான் வெளிப்படையாகவே சொல்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. மணி, அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. பேராசிரியர் அவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக வார்த்தைகளைப் போட்டுச் சொன்னார்கள். சமூகத்திற்கிடையிலே பிரச்சினை வந்துவிடக்கூடாது. நீங்கள் அந்தச் சம்பவத்தை விவரியுங்கள். ஆனால் குறிப்பிட்டு யாரையும் சொல்ல வேண்டாம். என்ன விளக்கம் என்று அரசிடமிருந்து பெற வேண்டுமே தவிர, நீங்களே விளக்கம் சொல்லக்கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்த வகையிலே சிலர் உள்நோக்கத்தோடு திட்டமிட்டு அங்கே சிலரை அழைத்து வைத்து சதித் திட்டம் தீட்டி, இப்படி திட்டமிட்டுத் தாக்கியதன் காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது. அதிலே திருவிடைமருதூர் வட்டத்தைச் சேர்ந்த புளியம்பேட்டை என்ற கிராமத்தைச் சேர்ந்த கண்ணன் என்பவர் வெட்டுப்பட்டு அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறார்கள். சென்றவுடனேயே அவர் பரிதாபமாக இறக்கின்றார். இப்போதுகூட 3

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரி மருத்துவமனையிலே, திண்டிவனம் மருத்துவமனையிலே சேர்த்தும் பலன் இல்லாமல் இங்கே அப்போலோ மருத்துவமனைக்குக் கொண்டு வந்திருப்பதாக காலையிலே தகவல், நானும் தொலைபேசியிலே கேட்டேன். அங்கே அவர் உயிர் பிழைப்பது கடினம்; இன்னும் ஆபத்தான கட்டத்தைத் தாண்டவில்லை. ஆபத்தான கட்டத்திலே இருக்கிறார். பிழைக்க முடியாது என்ற தகவல் காலையிலே வந்தது. அவர் ஒருவர் இறக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார். இன்னும் இரண்டு பேர் குற்றுயிரும் கொலையுயிருமாக உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். 25-க்கும் மேற்பட்டவர்கள் அடிபட்டு வெட்டுக் காயத்தோடு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள். 6 வாகனங்கள் எரிக்கப்பட்டு முழுவதும் சாம்பலாக்கப்பட்டுவிட்டன. 10 வாகனங்கள் முழுவதுமாக காவல் நிலையத்திலே நிறுத்தி வைக்கப்பட்டு முழுவதும் damaged. அதிலேயுள்ள பொருள்களையெல்லாம் கழற்றிவிட்டார்கள். நூற்றுக்கணக்கான வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டன. அதே நேரத்திலே ஆயிரக்கணக்கான வாகனங்களிலே வந்தவர்களை—ஏறக்குறைய அப்போது அங்கேயிருந்த காவல்துறையினர், நூற்றுக்கு மேல் எண்ணிக்கையிலே இருக்கும் என்று சொல்கிறார்கள்— அவ்வளவு பேர் வந்தும்கூட வாகனங்களைத் திருப்பி மாநாட்டுக்குப் போகக்கூடாது; போனால் மிகப் பெரிய கலவரம் ஏற்படும். ஆகவே திரும்பிச் செல்லுங்கள் என்று சொல்லி திருப்புகிறார்கள். அவர்கள் திண்டிவனம் வழியாகச் சுற்றி மாநாட்டுக்கு வருவதற்கு முயன்றாலும் அங்கும் நீங்கள் மாநாட்டுக்குப் போகக்கூடாது, திரும்பிச் செல்லுங்கள்; மிகப் பெரிய கலவரம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லி காவல் துறை அதிகாரிகளே அந்த வண்டிகளைத் திருப்பியனுப்புகிறார்கள். ஆகவே இப்படியொரு சமுதாய விழாவாகக் கொண்டாடக்கூடிய இந்த விழாவிலே உள்நோக்கோடு திட்டமிட்டுச் செய்த காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

இதிலேகூட, ஆதாரத்தோடு ஒரு செய்தி, வாகனங்களைக் கொளுத்தியதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. நீங்கள் சம்பவத்தைச் சொல்லுங்கள். அரசிடமிருந்து விளக்கத்தைப் பெறுங்கள்.





**திரு. ஜி.கே. மணி:** திட்டமிட்டு வாகனத்தை கவிழ்த்து தீ வைத்திருக்கிறார்கள். பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். ஆகவே இப்படி திட்டமிட்டு அந்த விழா சிறப்பாக நடக்கக்கூடாது; அதை எப்படியாவது, அந்தச் சமுதாய விழாவைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அதைச் செய்திருக்கிறார்கள்.

அதே நேரத்திலே நானும், உடனடியாக அங்கு சென்று மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கேயுள்ள சட்டம்-ஒழுங்கு I.G., D.I.G., போன்றவர்களிடத்திலேயெல்லாம் பேசினேன். சொல்லுகின்ற நேரத்திலேகூட, இது ஒரு சமுதாயப் பிரச்சினையாக வந்துவிடக்கூடாது, கைது என்ற நடவடிக்கையின் பெயரிலே அப்பாவி மக்களை, அங்கே இருக்கக்கூடிய தலித் மக்களை, பெண்களை எல்லாம் நீங்கள் கைது செய்துவிடக்கூடாது. உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும். அப்படி ஒரு பிரச்சினை வந்து விடக்கூடாது என்று நாங்களும் எடுத்துச் சொன்னோம். அதிகாரிகளுக்குத் தெரியும். இப்படி நாங்கள் இவ்வளவு அடக்கமாக, அமைதியாக, அதிகாரிகளிடத்திலே அணுகியிருந்தாலும்கூட எங்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை. இந்த நடவடிக்கைக்குப் பிறகும் அதிகாரிகளுடைய நடவடிக்கை சரியில்லை. ஆகவே இந்தத் திட்டமிட்ட செயல் அரசுக்குத் தெரியவில்லை என்று சொல்லி, நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னீர்கள். நாங்கள் எல்லாம் மிகுந்த வேதனைப்பட்டோம். நான்காவது நாள்கூட அரசுக்குத் தகவல் வரவில்லை என்று சொன்னால், அரசு வேண்டுமென்றே ஏதாவது திட்டமிட்டு புறக்கணிக்கிறதா அல்லது தெரியாமல் இருக்கிறதா..

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அரசு மீது குற்றம் சொல்லாதீர்கள். நீங்கள் வற்புறுத்தியதனால்தான் இன்றைக்கு எடுத்துக்கொண்டார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன். முதலமைச்சர் அவர்கள்கூட தயாராக இருந்தார். வேறு பிரச்சினையின் காரணமாகத்தான் அன்றைக்கு தள்ளி வைக்கப்பட்டதே தவிர இது காரணம் அல்ல. (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மணி அவர்கள் அந்த நிகழ்வினை

பேரவைத் தலைவருக்கு 9 1/2 மணி வாக்கிலே சொன்னார்கள். ஒரு மணி நேரத்திற்குள் அரசிடமிருந்து, அதிகாரிகளிடமிருந்து தகவலைப் பெற்று அவைக்குத் தருவது எப்படி முடியும் என்றுதான் பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவம் நடந்தவுடனே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு, உள் துறைச் செயலாளருக்கு, டி.ஜி.பி., மற்ற அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் எல்லாம் நாங்கள் தகவல் கொடுத்துவிட்டோம். ஃபேக்ஸ் மூலமே தகவல் கொடுத்தோம், நேரிலே சென்று சொன்னோம். இவ்வளவு அசம்பாவிதம் நடந்திருக்கிறது. இது சாதாரண பிரச்சினை அல்ல, உயிர் அங்கே பறிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் குற்றுயிரும், குலை உயிருமாக உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இப்பொழுது அவையில் நடவடிக்கையைப் பற்றிச் சொல்லாதீர்கள். சம்பவத்தைச் சொல்லி...

**திரு. ஜி.கே. மணி:** இவ்வளவு பெரிய சம்பவம் நடந்தது திட்டமிட்ட செயல் என்ற குற்றச்சாட்டை நான் வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறேன். ஆகவே இதற்கு அரசு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே உயிரிழந்த குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும். வாகனங்கள் எரிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கும் நிவாரணம் வழங்க வேண்டும். இவற்றையெல்லாம் நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரிய கவனத்தில் எடுத்துக்கொண்டு நிவாரண நிதி வழங்கி இதற்குரிய பரிகாரம் காணவேண்டும். யார் உண்மைக் குற்றவாளிகளோ அந்த உண்மைக் குற்றவாளிகள், திட்டமிட்டு செய்தவர்கள்மீது கட்டாயம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழா என்பது, நம்முடைய மனித சமுதாயம் விழாமல் மேலும் மேலும் வளர்ச்சிப் பெற வேண்டும் என்பதற்காக எடுக்கப்படுவதுதான் விழா. ஆண்டுதோறும் எடுக்கப்படுகிற இந்த சித்ரா பௌர்ணமி விழாவிற்கு ஏராளமான மக்கள் கூட்டம் வரும். ஒரு குறிப்பிட்ட



பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நண்பர்கள் நிறைய பேர் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிந்திருந்தும், இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நிச்சயமாக காவல் துறை செய்திருக்க வேண்டும். எதிர்பாராத ஒரு சம்பவமாக இது ஏற்பட்டிருந்தாலும்கூட, இப்படிப்பட்ட சம்பவங்கள், திருவிழா போன்ற நிகழ்வுகளிலே வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை கால் துறை உணர்ந்து அவர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால், இந்த அளவிற்கு, ஒரு பெருத்த அளவிலே சேதம் வந்திருக்க வாய்ப்பில்லை. ஒரு மரணம், கண்ணன் என்பவர் அந்த இடத்திலே இறந்து போனார். 25 பேர் காயமடைந்திருக்கிறார்கள். 5 வாகனங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 50 வாகனங்களுக்கு மேலே அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இரண்டு சமூகங்களுக்கிடையே ஒரு பிரச்சினை உருவாகக்கூடிய அளவிற்குச் செல்வது என்பது வேதனையாக இருக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகாலம் ஆன பின்னாலும்கூட இன்னும் சமூக உணர்வு தலைதூக்கி நிற்கிறதோ என்கிற ஓர் அச்சம் நம்மிடையே இருந்துகொண்டிருக்கிறது. காவல் துறை இவற்றையெல்லாம் உளவுத் துறை மூலமாகக்கூட ஏற்கெனவே கண்டறிந்து, எந்தெந்த spot ரொம்ப dangerous spot என்பதை அவர்கள் முன்கூட்டியே தகவல் தெரிந்துகூட, உரிய நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால், இப்படிப்பட்ட ஒரு நாசத்தையோ அல்லது கலவரத்தையோ தடுத்திருக்க முடியும். ஆனால் இந்த நிகழ்வு என்பது நம்முடைய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாக மேன்மேலும் வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் வலியுறுத்துவதெல்லாம், இனி வரக்கூடிய காலத்திலாவது அரசு எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆனால் இப்படி ஒரு விழா நடக்கிறபோது, இவையெல்லாம் வரும் என்பதை ஏற்கெனவே திட்டமிட்டு அதற்குரிய பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். இறந்தவர்களுடைய குடும்பத்திற்கும் அதேபோல காயமடைந்தவர்களுக்கும் ஒரு நிவாரணத்தைக் கொடுத்து, அரசு இவர்களுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். காரணம், இதை நாம் எப்படித்தான் பேசினாலும், பேசாவிட்டாலும்கூட, இந்தக் கலவரம் என்பது இரண்டு வகுப்பினரிடையே வந்திருக்கக்கூடிய ஒன்று என்பது பட்டவர்த்தமாக தெரியக்கூடிய ஒன்று. ஆகவே இனி வரக்கூடிய காலங்களில்

ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இதுவரை இந்தக் குற்றம் இழைத்தவர்கள் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்னியர் சங்கம் சார்பில் 26-4-2002 அன்று மகாபலிபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வன்னிய இளைஞர் சித்திரைத் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக, வன்னியர் சங்கம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் பல்வேறு வாகனங்களில் மகாபலிபுரத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களுடைய வாகனங்கள், மரக்காணம் வழியாக, கிழக்குக் கடற்கரைச் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது வன்னியர் சங்கத்தைச் சேர்ந்த சில தொண்டர்கள், காலி மதுபான பாட்டில்களை, மரக்காணம் அருகில் உள்ள மரக்காணம் காலனியைச் சேர்ந்தவர்கள்மீது வீசியுள்ளனர் என்று கூறப்படுகிறது. அந்தச் சம்பவத்தில், தனபால் என்பவரின் மகன் கோதண்டபாணி காயம் அடைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து, காயம் அடைந்த கோதண்டபாணி, சுமார் 300 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களைத் திரட்டிச் சென்று, வன்னியர் சங்கத்தினருடைய வாகனங்களை மரக்காணத்தில் மறித்து உள்ளதாகச் சொல்லப்படுகிறது. மேலும், TAO-3030 மற்றும் TN-31B 1177 என்ற பதிவு எண்கள் கொண்ட, இரண்டு அம்பாசிடர் கார்கள் மற்றும் TN31A-3526 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா வேன் ஆகிய வாகனங்களுக்கு தீ வைத்து உள்ளனர். மேலும், TN07 D-8244 என்ற பதிவு எண் கொண்ட டாடா சுமோ மற்றும் TN46- 2397 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா வேன் ஆகியவை கழிகுப்பத்தில் வன்முறையாளர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன.

மேலும், வன்முறையாளர்கள் கற்களை வீசியதால், ஒரு கார், இரண்டு டாடா சுமோக்கள் மற்றும் இரண்டு Matador வேன்கள் ஆகியவற்றின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.





வன்முறையாளர்களின் தாக்குதலால், தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், புளியம்பட்டி, உமாமகேஸ்வரத்தைச் சேர்ந்த ராமமூர்த்தியின் மகன் கண்ணன் என்பவர் காயமடைந்து, செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில், பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

மேலும், சித்திரைத் திருவிழாவிற்குச் சென்ற 12 பேர், திண்டிவனம் அரசு மருத்துவமனையிலும் மற்றும் 6 பேர் பாண்டிச்சேரி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயம் அடைந்த இரண்டு பேரைத் தவிர, காயம் அடைந்த மற்றவர்கள் அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டார்கள்.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக, சித்திரைத் திருவிழாவிற்குச் சென்று திரும்பிய வன்னியர் சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள், ஆரோவில் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள பொம்மையாகுப்பம் என்ற இடத்திலும், கடலூர் மாவட்டம் வடலூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள பெத்தண்ணன்குப்பம் என்ற இடத்திலும், இரண்டு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மீது கற்களை வீசி சேதப்படுத்தி உள்ளனர். மேலும், மரக்காணம் காலனியில் ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான ஒரு குடிசைக்கு தீ வைத்துள்ளனர். விழுப்புரம் சரக, காவல் துறை துணைத் தலைவர் —Villupuram Range D.I.G. of Police மற்றும் விழுப்புரம் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர், சம்பவ இடத்திற்கு காவல் படையுடன் விரைந்து சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தீவிர ரோந்துப் பணியும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதுவரை, இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மரக்காணம் காவல் நிலையத்தில் ஐந்து வழக்குகளும், கோட்டக்குப்பம் காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விசாரணைக்குப் பிறகு, மரக்காணம் காவல் நிலைய வழக்குகளில், மரக்காணத்தைச் சேர்ந்த 27 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கோட்டக்குப்பம் காவல் நிலைய வழக்குகளில் 6 ஆதிதிராவிடர்கள் மற்றும் 6 வன்னியர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் பிறகு 27-4-2002 அன்று இரவிலிருந்து வன்முறைச் சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை. சட்டம்-ஒழுங்கு காவல் துறைத்

தலைவர் Inspector General of Police (Law & Order) சம்பவ இடத்தில் முகாமிட்டு பாதுகாப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு வருகிறார்.

அரசு நடுநிலையுடன் செயல்படுகிறது. தவறு இழைத்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*முற்பகல் 11-25*

## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தேர்வு செய்யும் பணிகளுக்குக் கல்வித் தகுதி நிர்ணயித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அறிவியலில் இளங்கலைப் பட்டம்பெற்று, தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டமும், பி.எட்., பட்டமும் பெற்றவர்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் முதுநிலை ஆசிரியர் பணிக்கு தெரிவு செய்யும்பொழுது, இக்கல்வியை தகுதி நீக்கம் செய்துள்ளதனால் ஏற்பட்டுள்ள நிலை," குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து விவர அறிக்கையினை அவைக்கு சமர்ப்பித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

அரசாணை (நிலை) எண் 720, கல்வி, நாள் 28-4-1981-ல் வெளியான தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி சிறப்பு விதிகளின்படி முதுகலை பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலம் (Direct Recruitment) நியமனம் பெற தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களின் மூலம் தேர்வு செய்யப்படவிருக்கும் பாடத்தில் முதுகலைப் பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று இருந்தது.





2. திறந்தவெளி பல்கலைக்கழகங்களின் மூலமாக எந்தவிதமான மூல பட்டப்படிப்புமின்றி நேரடியாக முதுகலைப் பட்டப்படிப்பு பெற்று முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு வரும் வாய்ப்புகள் அதிகம் ஏற்பட்டதால் முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கு தேர்வு செய்யப்பட மூல பட்டப்படிப்பும் முதுகலைப் பட்டப்படிப்பும் ஒரே பாடத்தில் பெற்றிருக்க வேண்டும் என பணி விதிகளுக்கு உரிய திருத்தம் மேற்கொள்வது குறித்து அரசு ஆய்வு செய்தது. தீவிர பரிசீலனைக்குப் பின் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணியினைச் சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் ஆசிரியர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவு செய்யும்பொழுது எந்தப் பாடத்திற்கென தேர்வு செய்யப்படுகிறாரோ அந்தப் பாடத்தில் பட்டப்படிப்பிலும், முதுகலைப் பட்டப்படிப்பிலும் ஒரே பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களையே தெரிவு செய்ய வேண்டும் என்றும், அதற்கிணங்க தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி சிறப்பு விதிகளுக்கு உரிய திருத்தங்கள் செய்தும் அரசாணை (நிலை) எண் 361, பள்ளிக் கல்வித் துறை, நாள் 31-12-1999-ல் ஆணை வெளியிடப்பட்டது. இவ்வரசாணை, ஆணை வெளியிடப்பட்ட நாள் முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வரசாணையில் முதுகலை ஆசிரியர்கள் மொழி அல்லாத பிற பாடங்களுக்கு (P.G. Assistants in Academic subjects) மட்டுமே விதித் திருத்தம் வெளியிடப்பட்டது. முதுகலை ஆசிரியர் (தமிழ்மொழி) மற்றும் முதுகலை ஆசிரியர் (தமிழ் மொழி அல்லாத பிற மொழி ஆசிரியர்) குறித்து மேற்குறித்த அரசாணையில் விடுபட்டுப் போனதால் இவர்கள் சார்பாகவும் திருத்தம் வெளியிடுவது பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அதற்கிணங்க முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (தமிழ் மொழி) மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர் (தமிழ் மொழி அல்லாத பிற மொழிகள்) பணியிடத்திற்கு நேரிடை நியமனம் பெற இளங்கலை மற்றும் முதுகலையில் ஒரே மொழியில் (Same Language) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி சிறப்பு விதிகளுக்கு உரிய திருத்தம் அரசாணை (நிலை) எண் 62, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2-4-2001-ல் வெளியிடப்பட்டது. ஏற்கெனவே வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 361, பள்ளிக் கல்வித் துறை, நாள் 31-12-199-ல் மொழி ஆசிரியர்கள் சார்பில் விடுபட்டுப் போனதால் மேற்குறித்த அரசாணை (நிலை) எண் 62, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2-4-2001-ல் வெளியான ஆணையும் 31-12-1999 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

3. திறந்தவெளி பல்கலைக்கழகங்களின் மூலமாக எந்தவிதமான மூல பட்டப்படிப்பின்றி நேரடியாக முதுகலைப் பட்டப்படிப்பு பெற்று முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு வரும் வாய்ப்புகள் அதிகம் ஏற்பட்ட நிலையிலேயே அதனை அறவே தவிர்க்கும் விதத்திலும் மேலும் பட்டப்படிப்பிலும் முதுகலைப் பட்டப்படிப்பிலும் ஒரே பாடத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களின் மூலம் மாணவர்களுக்கு கற்பிக்கும் திறன் நல்ல முறையில் இருக்கும் என்ற நோக்குடனேயே மாணவர்களின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு பட்டப்படிப்பிலும் முதுகலைப் பட்டப்படிப்பிலும் ஒரே பாடம் படித்தவர்கள் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

4. இந்நிலையில் தமிழ் அல்லாத பாடங்களில் இளங்கலை பட்டம் பெற்று முதுகலையில் மட்டும் தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் முதுகலை தமிழாசிரியராக நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யபட விதிகளின் படி வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையினைப் படித்தேன். அநேகமாக திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே பட்டம் பெற்றிருக்கிற முதுநிலை, இளநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பிற்கு தகுதியற்றவர் என்று இன்றையதினத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது போன்று இதிலே படித்தவர்களில், வேலைவாய்ப்பிலே ஒரு பகுதியினருக்கு தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே படித்து பட்டம் பெற்றிருக்கிற, பி.எட். பட்டம் பெற்றிருக்கிற ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலையை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளதா? ஏற்கெனவே பட்டமளிக்கப்படுகிறது ஒரே நிலையிலேதான். அரசு பல்கலைக்கழகங்களிலே ஒரே மாதிரியான பட்டங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையிலே ஒரு பிரிவினருக்கு மட்டும் வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறபோது, வேலைக்காகக் காத்துக்கொண்டிருந்தவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பை இன்றையதினத்திலே இழக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அரசாங்கம் மேலும் அதைப் பரிசீலனை செய்து





இனிமேல் படிக்கக்கூடியவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு, படித்து பட்டம் வேலைவாய்ப்பு இல்லையென்று சொன்னாலும், பெற்றவர்களுக்கு ஓர் உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் அரசு இதைப் பரிசீலிக்குமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு சில விதிமுறைகளை அரசானது பிறப்பித்திருக்கிறது. ஆசிரியர் பணிக்கு நேரடியாக தேர்வு மூலம் நியமனம் செய்யும்பொழுது, சில வரைமுறைகள், கல்வித் தகுதிகள் இருக்க வேண்டுமென்ற கட்டத்திலே இளங்கலையிலும், முதுகலையிலும் அதே பாடத்தைப் படித்திருந்தால் அவர்கள் பள்ளியிலே மாணவர்களுக்கு சரியான பாடத்தைச் சொல்லிக் கொடுக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் அந்த மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. சிலர் இரசாயனம் -Chemistry- போன்று படித்துவிட்டு, பிறகு அவர்கள் அதைப் படிக்காமல், அதற்கு மேல் படிப்பு முதுகலையிலே படிக்கும்பொழுது, தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளுக்காக படிக்கிறார்கள். இவ்வாறு படிக்கும்பொழுது, அவர்கள் அந்த முதுகலைப் பட்டங்களை வைத்துக்கொண்டு தனக்கு அந்தப் பதவி வேண்டுமென்று கேட்கும்பொழுது சில மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது, காரணம், ஒரே பாடத்தில் அந்த ஆசிரியர்கள் இளங்கலையிலும், முதுகலையிலும் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் சரியான முறையில் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க முடியும் என்ற கருத்தின் காரணமாகத்தான் இத்தகைய மாறுதல் செய்யப்பட்டுள்ளதேயொழிய அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடாது என்பது கிடையாது. பலர் திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே நன்றாகப் படித்திருப்பார்கள். இருந்தாலும் ஒரு கட்டத்திலே, ஒரு வரைமுறையிலே இத்தகைய நிலை இருந்தால்தான் அவர்களை ஆசிரியராக எடுக்க வேண்டுமென்ற நியதி செய்யப்பட்டிருக்கிறது. இதுகுறித்துகூட சிலர் வழக்குமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள். வழக்கு மன்றத்திலும் அரசு பிறப்பித்த இந்த ஆணையை ஏற்று இது சரியானதுதான் என்று அவர்களுக்கு தீர்ப்பும் தரப்பட்டிருக்கிறது. அதன்படி,

The Honourable Tamil Nadu Administrative Tribunal has in O.A No.6183/2001 delivered the following judgement:

[டாக்டர் மு. தம்பிதுரை] [2002 மே 2

"The rules in G.O. Ms. No. 361, School Education, dated 31-12-1999 and G.O.Ms. No.62, School Education (HS) Department, dated 2-4-2001 are in force. The object of selection process is to select best candidates for teaching. Even in the view of a common man, if a person possesses both degrees, i.e. in basic as well as post-graduate degree in the same subject, he will be better equipped. It is clear from this amendment rules operate prospectively." என்று அரசு என்ன ஆணை பிறப்பித்துள்ளதோ, அது சரியானதுதான் என்ற தீர்ப்பானது சொல்லியிருக்கிறது. ஆகவே இதில் எந்தப் பதட்டமும் ஏற்படவில்லை. கல்வியினுடைய தரத்தை முன்னேற்றுவதற்காகத்தான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு காலத்திலும், அம்மா அவர்களின் அரசு காலத்திலும் சிறு மாறுதல்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்த direct recruitment என்ற Board 1981-ல் ஏற்படுத்தப்பட்டு, அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே ஆசிரியர் நியமனத்தில் நல்ல தகுதி வாய்ந்தவர்களுக்கு உதாரணத்திற்கு, பி.எஸ்.சி. (கெமிஸ்டிரி) படித்தவர், எம்.ஏ. (தமிழ்) படித்து, மீண்டும் நான் எம்.ஏ. (தமிழ்) படித்துவிட்டேன் என்று கேட்பதைக் காட்டிலும், தமிழே படித்துவிட்டு, இளங்கலையிலும் தமிழைப் படித்துவிட்டு, முதுகலையிலும் தமிழைப் படித்திருப்பவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பது மிக நன்றாக இருக்கும். ஆகவேதான் இந்த மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். பி.எஸ்.சி. படித்தவர்கள் வேறு தொழிலுக்குக்கூட போகலாம். ஆனால் எம்.ஏ./பி.ஏ., (தமிழ்) படித்தவர்கள், தமிழை வளர்க்க வேண்டும், அந்த உணர்வை வளர்க்க வேண்டும் என்று வரும் அத்தகையவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தருவதற்கு இத்தகைய ஓர் அரசாணையானது தகுதியுள்ளதாக இருக்கிறது. இதனால் கல்வித் தரம் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்தவர்களைத் தவிர வேறு யாரும் கேட்கக் கூடாது. ஏதாவது இருந்தால், பழனிசாமி அவர்களிடம் சொல்லி கேட்கச் சொல்லுங்கள். பழனிசாமி, கேளுங்கள்.



2002 மே 2]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பதற்றமே இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் 'இதுபோன்ற திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே படித்திருக்கிற மாணவர்களுக்கு இந்தப் பாடத் திட்டத்தை ஏன் அரசாங்கம் அனுமதித்தது, ஏன் அரசு அவர்களுக்குப் பல்கலைக்கழகங்களிலே பட்டம் அளித்திருக்கிறது? அப்படிப் பட்டம் அளிக்கின்றபோது, இப்படிப்பட்ட விதிகள் ஏதாவது, அரசுத் தரப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறதா? எந்த ஓர் அறிவிப்பும் இல்லாமல், இதேபோன்று படித்தவர்களை, தேர்வு செய்கின்றபோது, தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்கின்றபோது, ஒரு சாராருக்கு வேலைவாய்ப்பை அளித்து, இன்னொரு சாராருக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படும்போது— அவர்கள் எவ்வளவு எதிர்பார்ப்போடு இருந்தார்கள்— எந்த அளவிற்கு பாதிப்பு வந்திருக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இனிமேல் வேண்டுமானால், அப்படிப்பட்ட ஒரு தரமான கல்வியை அரசு அளிக்க வேண்டுமென்பதற்காக, திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே படிப்பதற்கான பாடத் திட்டத்தை வேண்டுமானால் எடுத்துவிடலாம். அது தேவையில்லை. தேவையில்லாத ஒரு பாடத் திட்டத்தை ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்? ஆகவே ஒரு பட்டம் வேண்டும் என்பதற்காக, அவர்கள் பட்டம் படித்து விட்டு, பட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் வேண்டுமானால் படித்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட சட்ட விதிகளைக்கூட கொண்டுவரலாம். ஆக, படித்திருக்கக்கூடியவர்கள் வரையிலும், அந்தத் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்வதற்கு அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடைபெற்ற ஆசிரியர் தேர்வு முறையிலேகூட பார்த்தீர்கள் என்றால், அதிகமாக இந்த written test-லே எழுதி தேர்வு பெற்றவர்கள் எல்லாம், கல்லூரிகளில், இளங்கலையிலும், முதுகலையிலும் தொடர்ந்து படித்தவர்கள்தான், நேரடியாகப் படித்தவர்கள்தான் அதிகமாக வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பும் கிடைக்கப் பெற்றிருக்கிறது. மற்ற திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே படித்தவர்கள் குறைந்த அளவிலேதான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே இதிலேயிருந்து பார்க்கும்போது, ஒரு முறையாகப் படிக்கின்ற மாணவர்கள் நல்ல கல்வித் தகுதியைப் பெறுகின்றார்கள். திறந்தவெளி

பல்கலைக்கழகங்களிலே படிப்பவர்களுக்கும் கல்வித் திறமை இருக்கிறது. நான் மறுக்கவில்லை. அவர்களும் எதிர்பார்ப்புடன் சிலவற்றைப் படிக்கின்றார்கள். ஆனால் சில நேரங்களிலே என்ன ஆகிறது என்றால், அவர்கள் படித்தது இளங்கலையிலே வேறு, முதுகலையிலே வேறாக இருக்கிறது. அது ஒரு குறைபாடாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், திறந்தவெளி பல்கலைக்கழகங்களிலே பார்த்தால், வயது வரம்பு ஒன்றுதான் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நேரடியாக எம்.ஏ எழுதலாம், எம்.எஸ்சி எழுதுவதற்கு எல்லாம் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அப்படி எழுதுவதன் மூலமாக தேர்வில் வெற்றி பெற்றுவிடலாமேயொழிய, அவர்கள் பாடத்தைக் கற்பிப்பதற்கு அடிப்படையான, இளங்கலை போன்ற பாடங்களைப் படிக்காததன் காரணமாக சில பிரச்சினைகள் பள்ளிகளிலே இருக்கின்றன. அதற்காகத்தான் இந்த வரைமுறையை நாங்கள் தந்திருக்கிறோமேயொழிய, வேறல்ல. ஒரு பட்டம் பெறுவதற்கு நாட்டிலே யாரும் படிக்கலாம். கல்வியறிவைப் பெற்றுக்கொண்டு, தங்கள் திறமையை வளர்த்து, பட்டங்கள் பெறுவதெல்லாம் வரவேற்க வேண்டிய ஒன்றுதான். ஆனால் அந்தப் பட்டங்களைப் பெற்று விட்டதனாலேயே அவர்களுக்கு இந்த வேலையைத் தர வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே நடைமுறையிலே இருக்கிற சிக்கலை வைத்துத்தான் இத்தகைய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே ஏதாவது சிக்கல் இருந்தால், இதைப்பற்றி, அரசு என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) நீலகிரி மாவட்டத்தில் பெய்த பனிக்கட்டி மழையினால் தேயிலைச் செடிகள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, உதகமண்டலம் பகுதிகளில் அண்மையில் பெய்த பனிக்கட்டி மழையினால் ரூ.25 இலட்சம் மதிப்புள்ள தேயிலைச் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

நீலகிரி மாவட்டத்தில் 4-4-2002 அன்று பிற்பகல் எதிர்பாராதவிதமாகப் பெய்த ஆலங்கட்டி (பனிக்கட்டி) மழையினால் உதகை வட்டம் தும்மனட்டி கிராமத்தைச் சேர்ந்த மைனலை, பேரர் கரடிக்கட்டு மற்றும் புதுத்தோட்டம் ஆகிய பகுதிகளில் தேயிலை, உருளைக்கிழங்கு, பட்டாணி, கேரட், வெள்ளைப் பூண்டு, பீன்ஸ் போன்ற பயிர்கள் சேதமடைந்துள்ளன எனவும், இதனால் 370 விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர் எனவும், பயிர்கள் சேதம் ரூ.10.65 இலட்சம் எனவும், உதகை தோட்டக்கலை இணை இயக்குநர் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். கீழ்க்கண்டவாறு நிலப்பரப்புகளில் பயிர்ச் சேதம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது:

| வ.எண் | பயிர் | பாதிப்படைந்த பரப்பு ஹெக்டேரில் |
|---|---|---|
| 1. | தேயிலை | 121.84.0 |
| 2. | உருளைக்கிழங்கு | 3.97.0 |
| 3. | வெள்ளைப் பூண்டு | 0.76.0 |
| 4. | பீன்ஸ் | 1.82.0 |
| 5. | பட்டாணி | 3.90.0 |
| 6. | கேரட் | 3.34.0 |
| | மொத்தம் | **135.63.0** |

இப்பயிர்ச் சேதம் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர், குன்னூர் கோட்டாட்சியர், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை வளர்ச்சி இயக்குநர் ஆகியோரும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

2. எதிர்பாராதவிதமாகப் பெய்த ஆலங்கட்டி மழையினால் தேயிலைச் செடிகள் பொறுத்தமட்டில் ஒரு முறை பறிக்கப்படும் கொழுந்துகள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளன என்றும், மற்றும தேயிலைச் செடிகள் நல்ல நிலையில் உள்ளன என்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அளித்துள்ளார். இதுபோன்ற

ஆலங்கட்டி மழை, இப்பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்புதான் பெய்ததாக இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நீலகிரி மார்வட்டத்தில் கோடை மழையின்போது ஏதாவது ஒரு பகுதியில் சிறிய அளவில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது என்றும் ஆனால் பயிர்ச் சேதங்கள் ஏற்படும் அளவிற்கு ஆலங்கட்டி மழை கடந்த 30 ஆண்டுகளில் பெய்ததில்லை என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேலும் 4-4-2002 அன்று தும்மனட்டி கிராமத்திலும் உதகை வட்டத்தில் தீட்டுக்கல் மற்றும் நகரப் பகுதிகளிலும், கோத்தகிரி வட்டத்தில் ஜெகதளா, அருவங்காடு ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. ஆனால் அப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க பயிர்ச் சேதங்கள் ஏதுமில்லை. மேலும், தும்மனட்டி கிராமத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தக்க நிவாரணத் தொகை வழங்க கருத்துரு ஒன்று அனுப்பப்படும் என்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாக இணை ஆணையர் (நில வருவாய்) கூறியுள்ளார்.

3. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்படும் செயற்குறிப்பினை ஆராய்ந்து அரசு தக்க முடிவெடுக்கும்.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். தும்மனட்டி கிராமத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணத் தொகை அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே தேயிலை விலை வீழ்ச்சியடைந்து, தேயிலை விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் சென்ற மாதம் கோடை மழை பனிக்கட்டியோடு பெய்து, பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தேயிலைச் செடிகளும், பிற பயிர்களும் சேதமைடந்துவிட்டன. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பனிக்கட்டி மழை பெய்திருக்கிறது. மீண்டும் இந்தப் பனிக்கட்டி மழை ஊட்டியிலே பெய்திருக்கிறது என்று அறிக்கை வந்துகொண்டிருக்கிறது. 4-4-2002 அன்று பெய்த பனிக்கட்டி மழையின் காரணமாக 370 விவசாயிகளுக்கு



சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், கிட்டத்தட்ட 134 ஹெக்டேர் நிலங்கள் சேதம் அடைந்ததாகவும் மாவட்ட ஆட்சியர் மூலமாக அறிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. ஆகவே இந்த அறிக்கைகளின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஆறாவது முதல் எழுபத்து ஒன்பதாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்றாவது முதல் இருபத்து ஆறாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்று முதல் ஆறு வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2002 மே 2

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



2002 மே 2]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002. (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[2002 மே 2

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எதிர்க்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில் இந்தச் சட்டமுன்வடிவிற்கு நான் ஆட்சேபனை தெரிவிக்கிறேன்.



2002 மே 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-40

## 8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்போட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 9-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,35,41,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *6347*, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தயம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் விடுதி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *696*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிட ஏழை மாணவிகளுக்கு +1, +2 படிப்போருக்கு இலவச சைக்கிள் வழங்குவதுபோல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை பிரிவு மாணவிகளுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4818*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



*ரூ.1,23,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4410*, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3786*, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3912*, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4103*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1335*, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7982*, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு அனைத்து அரசு துறைகளிலும் வேலைவாய்ப்பு போன்றவற்றில் இட ஒதுக்கீடு முறை முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தனிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4277*, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1943*, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4951*, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7236*, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5828, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5376, திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 820, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1894, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6993, திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் நகரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6678, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் அரசு சிறுபான்மையினர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1003, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6964, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7025, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5944, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெறும் விவசாயக் கூலிகளாகவே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துவரும் கொங்கு வேளாளர் கவுண்டர் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உடனடியாகச் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1498, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் வாழும் நாடார், யாதவர், கிறிஸ்தவர், பரவர், இனத்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர் பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7809, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1271, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குறும்பர் இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனப் பட்டியலில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5548*, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *4759*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5722*, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் மக்கள்தொகை அடிப்படையில் சாதிவாரியாக கணக்கெடுத்து இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5987*, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை, நீலகிரி மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள குருமன் இன மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக்



கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *399*, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவ-மாணவிகளின் உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6385*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் மக்கள்தொகை அடிப்படையில் சாதிவாரியாக கணக்கெடுத்து இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய *9* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.123,33,90,000/-* மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.1,35,41,000/-ல் ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4472*, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடுகள் உரிய முறையில் நிரப்பப்படாதது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [2002 மே 2

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4625, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் பேகம்பூர், சவரியார்பாளையம் சிறுபான்மை மக்களுக்கு மத நல்லிணக்க சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7932, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7716, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 மே 2] [திரு. பி.எஸ். உலகரட்சகன்]

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5232, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதி நாகுடியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் அல்லது மாணவியர் விடுதி தொடங்குவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,33,90,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,35,41,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 701 முதல் 722 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2002 மே 2

**(ஆ) கோரிக்கை எண் 8 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக்கோரிக்கை எண் . 8 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை பால் வளம். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 8-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,87,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6349, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கததின் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவையில் உள்ள பணத்தை முழுவதும் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 699, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் உள்ள கூட்டுறவு பால்பண்ணையில் பால் பவுடர் தயாரிக்கும் யூனிட்டைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4808, திரு. ஜி.கே. மணி.



2002 மே 2]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7738, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4415, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7952, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3788, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை சிங்காநல்லூர் தொகுதியில் சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் பால் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3911, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4570, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் நெய் போன்ற உபபொருட்களை அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யுமளவு தரத்துடன் தயார் செய்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1336, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7976, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4225, திரு. கே. ஆறுமுகம்.

•**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1942, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4948, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பகுதியில் அரசு [illegible] ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் கு[illegible] நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொ[illegible]கிறேன்:



225/63
சென்னை-600 008

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5778, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5366, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 819, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1895, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1002, திரு. ப. ரங்கநாதன்.





**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6963, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7026, டாக்டர். தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1500, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7806, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6071, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2731, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4606, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

***திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4769, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2443, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6278, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் உற்பத்தியாகும் பாலைச் சேமித்து வைப்பதற்கு குளிரூட்டப்பட்ட பால் சேமிப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7193, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் வழங்கும் விவசாயிகளுக்கு நிலுவையில்லாமல் பணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 400, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்தில் தரமான பால் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6428, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தனியார் பால் விற்பனை அதிகரித்துள்ளதால் அதற்கு இணையாக ஆவின் பாலின் தரத்தையும் விற்பனையையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5139, திரு. டி.பி.எம். மைதீன்கான்.



**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாளையங்கோட்டை நடுவக்குறிச்சியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,87,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியக் கோரிக்கைகளையும் இணைத்துப் பேசலாம். மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. துரை. கி. சரவணன்.

***திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலன் மற்றும் பால் வளம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேச என்னை அழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாபெரும் ஆன்றோர்களும், சான்றோர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்த

@ 723 முதல் 742 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்த அவையிலே என்னையும் உறுப்பினராக இடம்பெற வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் எங்கள் கழகத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எனது அரசியல் வழிகாட்டி வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும் மற்றும் என்னை இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சிதம்பரம் நகர வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்த கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் எனது பணிவான நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, எனது கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11-50

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்கள் நலனைப் பாதுகாக்கும் காவலராகத் தொடர்ந்து பணியாற்றிய எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலேதான் 1971 ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீட்டிலே சதவிகிதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது.

அதேபோல 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக இயக்குநரகம் ஒன்று அமைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு தனியாக ஓர் அமைச்சரை நியமித்து அதறகான ஒரு மானியக் கோரிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது எங்கள் தலைவர் கலைஞர் அரசில்தான். 1989 ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக உருவாக்கப்படும் திட்டங்களைச் செயலாக்குவதில் தனிக் கவனம் கொண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காகத் தனி இயக்குநரகம் கழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. அதேபோல் 1989 ஆம் ஆண்டுதான் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்காக 20 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பணியிடங்களிலும் பங்கீட்டை ஆராய உயர்நிலைக் குழு ஒன்று 1998 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அரசில்தான் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைப்படி 11-5-2002 அன்று சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்



சீர்மரபினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் என்று தெரிவிக்கப்பட்ட 5263 பணியிடங்கள் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு அதற்கான நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அரசுப் பணிகளில் நியமனம் செய்யப்படும்போது முதல் 10 இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 13-8-1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஓர் இடம் என்பது இரண்டு இடங்களாக மாற்றியமைக்கப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு பத்து இடங்களுக்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்று உறுதி செய்யப் பட்டது கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான். அதோடு மட்டுமல்லாமல் சீர்மரபினர் நலனுக்காக 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. அதேபோல 1989ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில்தான் சிறுபான்மையினர் நல ஆணையம் தொடங்கப்பட்டது. மேலும் வக்ஃப் வாரியத்திற்கு மானியம் வழங்கியது 1998-99ஆம் ஆண்டில்தான்.

அதேபோல அந்த வக்ஃப் வாரிய அலுவலகக் கட்டடத்திற்கு இடம் அளித்தது தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான். மேலும் கடந்தகால கழக ஆட்சியிலே 2000-2001 ஆம் ஆண்டிலே ரூ.175 கோடி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், சீர்மரபினர் நலனுக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த நிதியாண்டில் அது ரூ.152 கோடியாகக் குறைக்கப்பட்டது. அது மேலும் இந்த நிதியாண்டில் ரூ.125 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது பிற்படுத்தப்பட்ட மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள சில திட்டங்களுக்கு அதிக அளவிலே நிதி குறைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகளுக்கு கொடுக்கப்படும் ஊக்கத்தொகை கடந்த ஆண்டு ரூ. 600 இலட்சம் என்று இருந்தது இந்த ஆண்டு ரூ. 300 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பை ஒப்பிட்டுப் பார்த்தால் கடந்த ஆண்டு மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவர்களுக்கு

ஆண்டுக்கு ரூ.500 ஊக்கத் தொகையும், ஆறாம் வகுப்பு பயிலும் 30,000 மாணவியர்களுக்கு ரூ.100 வீதம் 10 மாதத்திற்கு ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டுக்கு ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டு இதையே ஒப்பிட்டுப் பார்த்தால் இதே திட்டத்திற்கு ரூ.600 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே இந்த 300 இலட்சம் ரூபாயை எவ்வாறு ஈடுசெய்யப் போகிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி அளிக்கும் திட்டத்தில், கடந்த ஆண்டிலே, ரூ.1588.3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டிலே, அது ரூ.425.57 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, பயிற்சிக் காலங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் எவ்வளவு நபர்கள் இதிலே பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை. கடந்த ஆண்டு உள்ள குறிப்பிலே, எவ்வளவு நபர்கள் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கொண்டுவந்த கணினிப் பயிற்சிபற்றி, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

அதேபோல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு, அதற்கு ரூ.360.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எங்களுடைய தலைவர் ஆட்சியிலே, 2000-2001 ஆம் ஆண்டு அதற்கு ரூ.22 கோடி ஒதுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பிற்படுத்தப்பட்டோருக்கான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களிலே அடிப்படை வசதிகளை மேம்படுத்திட கடந்த ஆண்டு ரூ.1025 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு வெறும் ரூ.360.5 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அது கைவிடப்பட்டு விடுமோ என்ற அச்சம் பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆகவே அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன் பதிலுரையில் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், மாணவர் இல்லங்கள்—114 மாணவர் இல்லங்கள்—கட்டப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அதிக மாணவர் விடுதிகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்குப் படிப்பதற்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 1999-2000 ஆண்டு வெள்ளை அறிக்கையிலே, இந்தச் சபையிலே, BC, MBC, SC, பின்னடைவுப் பணியிடங்களைப் பற்றிய வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதிலே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் பணியிடங்களில் ஏற்பட்ட பின்னடைவை, சுமார் 5,263 நபர்களுக்கு, அவர்களை அந்தப் பணியிடங்களில் அமர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முயற்சி, மேற்கொள்ளப்பட்டது. அதை தலைவர் கலைஞர் அவர்கள் கூறினார்கள். அதை இந்த ஆட்சி எந்த நிலையில், அதாவது அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கடந்தகால தி.மு.க. ஆட்சியிலே, பால் உற்பத்தியாளர்களுக்கு, கொள்முதல் விலை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.50 உயர்த்தி வழங்கப்பட்டது. இதனால் பால் கொள்முதல் 11 இலட்சம் லிட்டரிலிருந்து 18 இலட்சமாக உயர்ந்தது. விவசாயப் பெருமக்களாகிய பால் உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்தி செய்யப்படும் பால் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், கழக ஆட்சியிலே, விற்பனை விலை, கொள்முதல் விலை, என்ற அளவில் உயர்த்தாமல், நுகர்வோர் நலன் கருதி, லிட்டருக்கு ரூபாய் ஒன்று மட்டுமே உயர்த்தப்பட்டது. ஆனால் இந்த அரசு விற்பனை விலையை ரூ.2 ஆக உயர்த்தியுள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலை 50 காசு மட்டுமே உயர்த்தியுள்ளது. இதனால் விவசாயிகள் மத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பால் கொள்முதல் விலை அவசியம் உயர்த்தப்பட வேண்டும். தி.மு.க. ஆட்சியிலே பால் பட்டுவாடா பணம் நிலுவையைக் குறைக்க ரூ.50 கோடியே 70 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இப்போது பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.94 கோடி அளவில் பால் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

[திரு. துரை. கி. சரவணன்] [2002 மே 2

கடந்த தி.மு.க. ஆட்சியிலே இதற்கு மானியம் வழங்கியதைப் போல இந்த ஆண்டிலும் இதற்கு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

மேலும் எனது சிதம்பரம் தொகுதி குறித்து சில கோரிக்கைகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிதம்பரம் நகரில் வக்காரமாரி ஏரியில் குடிநீர் சுத்தம் செய்யும் filter பழுதடைந்துள்ளதால், நகர மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் மிகவும் அசுத்தமாக உள்ளது. அந்த filter-ஐச் சீர்படுத்த அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரத்திலிருந்து அண்ணாமலை நகர் செல்லும் சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியைத் துரிதப்படுத்தி தொடங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலை நகரில் பெரிய மருத்துவமனை உள்ளதால், அவசரத் தேவையின்போது அந்த இரயில்வே கேட் மூடப்பட்டிருந்தால் நோயாளிகள் அங்கு செல்வதற்கு சிரமம் ஏற்படுகிறது. சில சமயங்களில் அந்த நோயாளிகளின் உயிருக்கே பாதகம் ஏற்பட்டுவிடுகிறது. அதனால் உடனடியாக அந்த இரயில்வே மேம்பாலத்தை கட்டிக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகராட்சியில் 150 துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரப் பணியில் உள்ளார்கள். அதில் 50 தொழிலாளர்களுக்கு நகராட்சியின் மூலம் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மீதியுள்ள 100 தொழிலாளர்கள் புறம்போக்கு இடங்களிலும் சாலை ஓரங்களிலும் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதித் துறை மூலம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரைச் சுற்றி அதிகமான புதிய நகர்கள் ஏற்பட்டுள்ளதால், ஏற்கெனவே உள்ள நகர மக்களால் பயன்படுத்தப்படும் கழிவுநீர் புதை வடிகாலில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தெருக்களில் ஓடும் நிலை உள்ளது. ஆகவே புதை வடிகால் திட்டத்தை விரிவுபடுத்தி அனைத்து நகர்களிலும் புதிய புதை வடிகால் ஏற்படுத்திக் கொடுத்து கழிவுநீரை வெளியேற்றுவதற்கு வடிகால் அமைத்துத் தர நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 2] [திரு. துரை. கி. சரவணன்]

மேலும், சிதம்பரம் தொகுதியைச் சார்ந்த திருமுட்டம் பேரூராட்சியை மையமாகக் கொண்டு தனித் தாலுகா அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருமுட்டம் ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்றும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதால், இந்த அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களின் நலனை எவ்வாறு பாதுகாக்கும் என்ற கேள்விக்குறி எழுகிறது. ஆகவே வரும் நிதி ஆண்டிலாவது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அவர்கள் நலனைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தருக்கு அன்னமிட்ட தாய், பால்வடியும் முகத்தைப் பெற்றிருக்கிற எங்கள் தாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி,

'சத்தியம் நீயே! தர்மத் தாயே!
குழந்தை வடிவே, தெய்வமகளே!

என்று இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பசுமாட்டைப் பற்றி பக்குவமான நல்ல பல கருத்துகளை தன்னுடைய திரைப்படத்திலே எடுத்துச் சொன்னார்கள். அப்படி சிறப்பு வாய்ந்த பால்வள மானியக் கோரிக்கையில் இரண்டொரு கருத்துகளை மட்டும் சொல்லி நான் விடைபெற நினைக்கிறேன்.

ஒரு பொதுவான கருத்தைச் சொல்வார்கள். தமிழகத்திலே, கிராமத்திலே பஞ்சம் வருகிற நேரத்தில் ஒரு குடும்பத்துக்கு ஒரு பசுமாடும் ஒரு முருங்கை மரமும் இருந்தால் அங்கே பஞ்சமே தீர்ந்துவிடும் என்று சொல்வார்கள். பஞ்சத்தைப் போக்கி காப்பாற்றுகிற பக்குவம் பால் கறக்கிற பசுமாட்டுக்குத்தான் உண்டு என்பதை

[திரு. அ. அருணாசலம்] [2002 மே 2

பழமொழியாகச் சொல்வார்கள். அப்படி தான் பெற்ற குழந்தைக்கு தன்னிடம் பால் இல்லாவிட்டாலும், அந்தக் குழந்தைக்கு புட்டிப் பாலாவது கொடுத்து காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் பால் தேவைப்படுகிறது. ஆகவே குழந்தைக்கு தாய்ப்பால் இல்லாவிட்டாலும், குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும்; அதற்கும் ஒரு பால் தேவைப்படுகிறது; புட்டிப் பால் தேவைப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பாலின் சத்தைப் பொறுத்தவரையில், அது பெரிய ஊட்டச்சத்தாக இருக்கிறது. குழந்தைகள் வளர்வதற்கும் எல்லாவற்றிற்கும் ஊட்டச்சத்து. பால் குடிக்காத குழந்தைகள் சோடையாகிப்போகின்றன; சோம்பிப் போகின்றன, மூளை வளருவது இல்லை. ஆகவே பால் என்பது எல்லா வளர்ச்சியையும் கொடுக்கிற ஓர் ஊட்டமாக இருப்பதை நாம் பல வரலாறுகளிலே பார்த்திருக்கிறோம். அதனை விஞ்ஞான பூர்வமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தாய்க்கு பெண் குழந்தை பிறந்தால் மிகவும் வருத்தப்படுவான் கணவன். ஒன்று பிறந்து, இரண்டு பிறந்தால் மிகவும் வருத்தப்படுவான். ஆனால் ஒரு மாட்டுக்கு கெடேரிக் கன்று பிறந்தால் . சந்தோஷப்படுவான். ஏனென்று சொன்னால், கெடேரிக் கன்று பிறந்தாலே, அது திரும்ப வந்து, அது சினையாகி, அதுவும் திரும்ப பால் கறக்கும். அதனாலே பணம் கிடைக்கும் என்கிற சூழ்நிலையில் அந்த மாட்டுக்கு சந்தோஷப்படுகிற மனிதன்கூட மகள் பிறந்தால் சந்தோஷப்படுவது இல்லை. இதுதான் நம்முடைய வரலாறாக இருந்துகொண்டிருக்கிறது. இப்படி மாட்டுக்கு பல பெருமைகள் உண்டு.

பிற்பகல் 12-05

அடுத்து, என்னுடைய கிராமத்திலே சிறுவயதிலே நான் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒரு தாயைப் பார்த்து நான் திட்டிவிட்டேன். அந்தத் தாய் திடீரென்று என்னிடம் சொன்னார்கள், என் பாலைக் குடித்து வளர்ந்தவன் நீ என்றார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஓடினேன் என் தாயிடம். அம்மா, என்ன அந்த அம்மா இந்தமாதிரி சொல்கிறார்களே என்று என் தாயிடம் கேட்டபோது, என் தாய் சொன்னார்கள். ' அப்பா நீ, கடைக்குட்டி, நீ 5-வது மகனாகப் பிறந்தவன். ஆகவே என்னிடம் பால் இல்லை.—புட்டிப் பாலும் அப்போது கிடையாது—வருகிறவர், போகிறவரிடம் பால் குடி, அந்தத் தாய்மாரும் ஒன்றுதான் என்று சொன்னார்கள். அந்தத் தாய்க்குப்



2002 மே 2] [திரு. அ. அருணாசலம்]

பிறக்கிற குழந்தைகளுக்கு பால் இல்லாவிட்டாலும்கூட அந்தத் தாய்மார்கள் மற்ற குழந்தைகளுக்கு, அழுகிற நேரத்தில் பால் கொடுக்கிற பக்குவம், புட்டிப் பால் இல்லாத நேரங்களில் இருந்திருக்கிறது; அதை நாம் மறக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் 'கோமாதா, எங்கள் குலமாதா' என்று நாம் மாட்டை வணங்குகிறோம். அந்த கோமாதா பால் கொடுக்கிறது.

நம்முடைய கூட்டுறவுத் துறை மூலமாக தமிழகத்திலே பால் சொசைட்டியை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்றுதான் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே 8,803 பால் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி செயலாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு தாய்க்கு பால் இல்லாததால் புட்டிப் பால் கொடுக்கிறதே அந்த மாடு, அந்த மாட்டுப் பாலை குடிக்கிற நேரத்தில், அந்த மாடுகூட குழந்தைக்கு ஒரு செவிலித் தாயாகத்தான் நம்முடைய கண்ணுக்கு எல்லாம் காட்சி அளிக்கிறது. ஆகவே தமிழகத்திலே யாரும் செயல்படுத்தாத ஒரு திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையிலே 10 ஆயிரம் மகளிர் பயன்பெறுகிற வகையிலே மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 145-ஐ 6.50 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும ஒலி) அடுத்து சத்துணவைச் சாப்பிடுகிற குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு 100 மில்லி என்று பால் கொடுத்தால், சாப்பிடும் குழந்தைகளுக்கு பால் வழங்கினால், தாய்மார்களுடைய அந்த உள்ளங்களிலே பால் வார்த்ததைப் போல, ஏழை விவசாயிகளுக்கெல்லாம் சிறப்பானதாக அந்தத் திட்டம் பயன்பெறும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாள் ஒன்றுக்கு 21.36 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலே 17.49 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழகத்தில் பால் வளம் வளருவதற்கு, ஏழையெளிய மக்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கு பால் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த ஒரு வருமானத்தை ஈட்டித் தந்திருக்கின்றன. ஆகவே கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்திற்காக எந்த ஆட்சியும் செய்யாத, கடந்த ஆட்சியிலே செய்யாத ஒரு புரட்சியை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு கோடி ரூபாயினை ஒதுக்கி அந்தத் திட்டத்தை சிறப்பாகச் செயலாக்கி வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

ஆதிதிராவிட மக்கள் நலன் காக்கும் நல்ல தலைவியாக, நம் புரட்சித் தலைவி இருக்கிறார்கள். தாட்கோ நிறுவனம் மூலமாக, ஆதிதிராவிடர், நலிந்தோருக்கு, அந்தச் சங்கங்களுக்கு, ரூ.4,000 தாட்கோவிலிருந்தும் வங்கியிலிருந்து ரூ.8000-மும், ஆக மொத்தம் ரூ.12,000என்று ஒரு மாட்டிற்கு கடனாக, 2 மாட்டிற்குக் கொடுக்கிற பெருமையை இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Mineral Water குடிக்காதவர் யாருமே கிடையாது. தான் ஊருக்குப் போகிறபோது, பெட்டியை மறந்தாலும் மறப்பார்கள், கையிலே இருக்கிற அந்த Mineral Water பாட்டிலை மறக்க மாட்டார்கள். ஏனென்றால் கையிலேயே எடுத்துக்கொண்டு போவார்கள். இப்படி Mineral Water இப்போது 12 ரூபாய்க்கு விற்கிறது. பாலின் விலை கிராமத்திலே ரூ.9.50-க்கு கொள்முதல் செய்கிறார்கள். இந்தச் சூழ்நிலையைப் பார்க்கிறபோது தமிழ்நாட்டிலே 71,650 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அந்தச் சத்துணவு மையங்களிலே படிக்கிற குழந்தைகள் உட்பட மொத்தமாக 81,56,080 பேர். குழந்தைகள், மாணவர்கள், மகளிர், சத்துணவு சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு குழந்தைக்கு 100 மில்லி என்று பாலைக் கொடுத்தால் 8.5 இலட்சம் லிட்டர்தான் அதற்குத் தேவைப்படுகிறது மொத்தமாக. பாலைக் கொடுக்கிற நேரத்தில் இதை நம்பி இருக்கிற விவசாய குடிமக்கள், மகளிர், வேலை இல்லாதவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இதனால் பயன் பெறுவார்கள். தற்போது ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு 17.46 இலட்சம் லிட்டர் ஆகும். ஆனால் மொத்தம் உற்பத்தி செய்கிற பாலினுடைய அளவு 21.36 இலட்சம் லிட்டர் ஆகும். ஆகவே இந்தப் பாலினுடைய கணக்கைச் சேர்த்து நாம் பார்ப்போமேயானால்—. முதலில் நாம் எல்லாம் அமெரிக்காவிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும், கோதுமையையும், பால் பவுடரையும் பெற்றுக் கொண்டு இருந்தோம். ஆனால் நம்மிடம் இப்போது அதிகமான, அளவுக்கு மீறிய பால் இருக்கிறது. உற்பத்தி ஆகிற அந்தப் பாலை இங்கே நாம் சத்துணவு மையங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றால்—பால் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமத்திலே இருக்கின்றன. கிராமத்திலே இருக்கிற ஒவ்வொரு பால் கூட்டுறவுச் சங்கமும் அங்கு இருக்கிற மையத்தில் கொடுத்தாலே இந்தப் பால் உற்பத்தி நம்முடைய தமிழகத்திலே எல்லா இடங்களுக்கும்



இன்னும் பெருகும். மாடு வாங்கியவர்கள் நலம் பெறுவார்கள். இதனால் கிராமத்தில் இருக்கிற மக்களுக்கும் நல்ல ஒரு வாய்ப்பு கிடைக்கும். நமக்கு ஞாபகம் இருக்கும். நாம் எல்லாம் சிறு குழந்தையாக இருக்கிறபோது நம்முடைய தாய்மார்கள் பால் கறப்பதற்கு விடியற்காலை 5-00 மணிக்கே எழுந்துகொண்டு அந்தச் சொம்பை இரண்டு கால்களில் வைத்துக்கொண்டு சர், சர் என்று இழுப்பார்கள். அது ஓர் ஓசையாகவே வரும். ஆனால் இப்போது அந்த மாட்டிலே இவர் இழுக்கிற (குறுக்கீடு)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இதிலே சம்பந்தப்பட்டவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** சர், சர் என்கிறாரே, அதை எப்படி எழுதுவார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தாய்க்குப் பால் இருந்து இருக்கலாம். மாட்டினுடைய பால் கறக்கிற நேரத்திலே அந்தச் சத்தத்தைக் கேட்டு நான் முழித்து இருக்கிறேன். எனக்குப் பால் கொடுப்பதற்கு மாடு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவருடைய கருத்து, இதை எப்படி எழுத முடியும், சர், சர் என்று சொன்னதைச் சொல்கிறார். சர், சர் என்றே எழுதிவிடலாம். அதிலே ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** அந்த ஓசையோடு எழுதினால் போதுமானது. இப்படி மாடு நமக்கு பாலைக் கொடுக்கிறது. ஆனால் நம்முடைய அந்த மாடு அந்த வைக்கோலை தின்றுவிட்டு நாம் கழுவி ஊற்றுகிற அந்தக் கழிவுத் தண்ணீரை எல்லாம் சாப்பிட்டுவிட்டு, நாம் போடுகிற வாழைப் பழத் தோலையும் சாப்பிட்டுவிட்டு, வெள்ளை மாடாக இருந்தாலும், கருப்பு எருமையாக இருந்தாலும், சிகப்பு மாடாக இருந்தாலும் எல்லா மாடும் கொடுப்பது வெள்ளைப் பாலைத்தான். ஆகவே அந்த நல்ல பால் உற்பத்தி தமிழகத்திலே பெருக வேண்டுமென்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்முடைய தலைவரின் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் பணிவோடு இந்தக் கருத்துகளை ஏற்று.

நம்முடைய சத்துணவு மையத்திற்கெல்லாம் பால் வழங்குகிற நேரத்தில், விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் போதுமா? (குறுக்கீடு) சரி. அடுத்து, திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் எடுத்துரைத்தால், எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்' என்ற அடிச்சுவட்டில் என்றென்றும் உறுதியாக நின்று விலகாது உரைத்து வந்த கருத்துகளை இங்கே எடுத்து வைப்பதற்குண்டான வாய்ப்பினைத் தந்தமைக்காக தங்களுக்கு என்னுடைய மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய வக்ஃபு வாரியத்தினுடைய உறுப்பினராக, இஸ்லாமிய சமுதாயம் அங்கீகரிக்கத்தக்கதொரு மரியாதைக்குரிய வாய்ப்பாக எனக்குத் தந்த தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு சிறுபான்மையினர் நலம் என்ற தலைப்பிலே மாத்திரம் சில கருத்துகளைச் சொல்வதற்கு, அபிலாஷைகளைத் தெரிவிப்பதற்கு விருப்பப்பட்டவனாக நிற்கிறேன். ஏனென்றால், இந்த தேசத்தில் பதற்றமான சூழ்நிலையில், பரவலாக இன்றைக்கு இஸ்லாமிய சமுதாய மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், தமிழகத்திலே அப்படிப்பட்ட காட்சிகளுக்கெல்லாம் இடமில்லை. தமிழகத்திலே அது நடக்காது. தேசம் முழுவதும் பதற்றம் இருந்தாலும்கூட, தமிழகத்திலே சிறுபான்மை மக்களுக்குச் சரியான பாதுகாப்பைத் தந்துகொண்டிருக்கிற எனது அரசு, அதை உறுதியாக நிலைப்படுத்திக் காட்டித் தீரும் என்ற நம்பிக்கையைக் காட்டக்கூடிய



தமிழகத்து முதலமைச்சருக்கு எங்கள் சமுதாயத்தின் சார்பிலே நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சாதியைச் சொல்லி, மதத்தைச் சொல்லி, இனத்தைச் சொல்லி, வர்க்க பேதத்தை வைத்துக்கொண்டு அரசியல் வாதம் நடத்துவதற்கு ஒருகாலத்திலும் நான் இணங்கியதில்லை. அதற்கு உடன்பட்டவனும் அல்ல. இன்னும் சொல்லப்போனால், அரசியல் தொடக்கத்திலே பெருந்தலைவர் காமராசரின் விரலைப் பிடித்துக்கொண்டு, இந்த தேசத்து அரசியலில், தேசிய உணர்வில், தியாகத்தையும், சுதந்திரத்தையும், நாட்டு மக்கள் நல்வாழ்வும், ஒரு தேசத்தின் எதிர்கால நிர்மாணம் எப்படி இருக்க வேண்டும் என்ற சிந்தனையில் முழுமையாக எங்களை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் என்ற காரணத்தாலே, அவருடைய தலைமைக்குப் பின்னால் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய தலைமையில், இந்திரா காந்தியினுடைய தலைமைக்குப் பின்னால் எங்கள் கண்ணியத்திற்குரிய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய தலைமையில் ஓர் அரசியல் கண்ணியத்தையும், மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு, மனித சமுதாயத்திற்கு உழைக்க வேண்டுமென்ற ஒழுக்கத்தையும், முறையாகக் கற்றுக்கொண்டு வாழ்ந்தவர்கள் என்ற காரணத்தாலே, அந்த எல்லைக்குள் எப்போதும் நாங்கள் போவதற்கு விரும்புவது இல்லை. பல இடங்களில் நாங்கள் தெளிவாகச் சொன்ன அந்த கருத்துகளைத்தான் இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

நபிகள் நாயகம் சல்லல்லாஹு்விலே சொல்லியதைப்போல இஸ்லாம் மதத்திலே பிறந்தவர்கள், மார்க்கத்திலே வாழ்கிறார்கள். அந்த மார்க்கத்தின் வழியிலே நடக்கிறவர்கள் சாதியால், மதத்தால், நிறத்தால், இனத்தால், மொழியால், வர்க்க பேதத்தை உருவாக்கிவிடக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று சொன்னால், அவர்களை நான் என் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று நபிகள் நாயகம் சொன்னதைத்தான் இந்த நேரத்திலே மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையால் சமுதாயத்தில் அமைதி என்பது எப்படி சாகடிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நினைத்துப் பார்க்கின்ற நேரத்திலே, வேதனையோடு இந்த விஷயங்களை எல்லாம் இன்றைக்குச் சொல்ல வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா எங்கள் தாய்நாடு. இஸ்லாம் எங்கள் வழிபாடு. தமிழ்
எங்கள் தாய்மொழி. பிறருக்காக வாழ்வதுதான் எங்கள் விழிகள் என
வைத்திருக்கின்ற கருத்துகள். ஆனால் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட
சமுதாய மார்க்கம் என்ற பிடிமானத்திற்குள்ளே முழுமையாகச் சென்று,
அதன் பாதுகாப்பு கருதித்தான், அதனுடைய நலத்தை, வளத்தைக்
கருதித்தான், வாதங்கள் நடத்தப்படுகின்றன என்ற அடிப்படையில்
என்னை நான் அதில் ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லை. நான்
அதைத்தான் ஆரம்பத்திலும் சொன்னேன். இப்போதும் சொல்ல
விரும்புகிறேன். இதோ வலப் பக்கத்திலே அமர்ந்திருக்கிறார் மாண்புமிகு
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. அன்பில்
பெரியசாமி. பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறார் சிவகாசி சட்டமன்ற
உறுப்பினர் எனது மரியாதைக்குரிய திரு. ராஜகோபால் அவர்கள்.
அவர் எங்களை மாமா என்றுதான் கூப்பிடுவார். நான் எங்களுடைய
மரியாதைக்குரிய மாண்புமிகு சிவகாசி சட்டமன்ற உறுப்பினரை மாமா
என்றுதான் கூப்பிடுவேன். அவர் நாடிசைவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்.
இவர் தேவர் இனத்தைச் சேர்ந்தவர். நாங்கள் அண்ணன் தம்பிகள்
என்றுகூட சொல்வதில்லை. மாப்பிள்ளை முறையை வைத்துக்கூட
பேசுவதில்லை . . .

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், தேவர் இனத்தைச்
சார்ந்தவர்களை 'சீயான்' என்றுதான் கூப்பிடுவார்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அது கரெக்ட். நான் இப்போது மறவர்குல
மாணிக்கமாக அமர்ந்திருக்கிற பேரவைத் தலைவர் அவர்களை
'அண்ணன்' என்றுதான் கூப்பிடுகிறேன். (சிரிப்பு) 'சீயான்' என்று
சொல்வதென்றால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்
இருக்கிறார்கள். அவர் எங்களுக்கு 'சீயான்'தான். (சிரிப்பு) ஆனால்
திருச்சியிலே தேவர்கள் கொஞ்சம் மாறுபட்டிருக்கிறார்கள். மாப்பிள்ளை
என்பார்கள். நான் என்னுடைய மாமா என்று சொன்னேன்.
அதேபோல, எங்களுடைய அன்புக்குரிய சகோதர, சகோதரிகள்
இருக்கிறார்கள். இதே பக்கத்திலே அமர்ந்திருக்கிறார் சகோதரி சிவகாமி
அவர்கள். எங்களுக்குச் சாதி இல்லை, மதம் இல்லை. இனத்தை
பேதப்படுத்தி நாங்கள் பிரித்துப் பார்க்கவில்லை. இங்கே
சமூகமாகத்தான் வாழ்கிறோம். அமைதியாகத்தான் வாழ விரும்புகிறோம்.



இணைந்தே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஏன் எங்களைப்
பிரிக்கிறீர்கள்? பேதப்படுத்திப் பார்க்கிறீர்கள் என்கிற கேள்வியை இந்த
நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவங்களால் இன்றைக்குக்
கேட்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. தேசத்தின் சுதந்திரப்
போராட்டத்தில் கலந்துகொண்ட காலத்திலேயிருந்து இன்றைக்கு இந்த
தேசத்தை நிர்மாணிக்கின்ற காலம் வரை, இஸ்லாமிய சமுதாயத்தைச்
சார்ந்த பெரியவர்கள், தலைவர்கள், தியாக சீலர்கள் இந்த நாட்டிலே
சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டை உருவாக்குகின்ற இடத்திலே
இருந்தவர்கள் இன்றைக்கும் அமைதிக்காக, நியாயத்திற்காக மக்களின்
நல்வாழ்விற்காகப் போராடுகின்ற தலைவர்கள், எங்கேயும் யாரும்
குறை சொல்ல முடியாத அளவில் நிறைவாக தங்கள் கடமையை
ஆற்றிக் கொண்டிருக்கிற தியாகப் பெருமக்கள் மத்தியிலே, எப்படியாவது
பலஹீனமான உணர்வுகளைத் தட்டிவிட்டு அரசியல் நடத்த முடியாதா
என்று நினைத்துப் பார்க்கின்ற கொடுமைகளை இந்த நாடு
இன்றைக்குப் பார்க்கிறது. கிறித்துவ சமுதாயத்தைச் சார்ந்த
கன்னிகாஸ்திரீகள் தேசத்திலே கற்பழிக்கப்படுகிறார்கள். சர்ச்சுகள்
இடித்து வீழ்த்தப்படுகின்றன. இன்றைக்கு பைபிள் எரிக்கப்படுகிறது,
இந்த நாட்டிலே. அதை நியாயம் என்று பேசுகிறவர்களும்,
வாதாடுபவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அமைதி இருக்கக்
கூடாது. மக்கள் இணைந்து வாழ்ந்துவிடக்கூடாது, அவர்களுக்குள்
பேதங்கள் இருக்க வேண்டும், அங்கேதான் தங்களுடைய அரசியல்,
அங்கேதான் தங்களுடைய வாழ்வு வளம் பெறும், பதவிகளைப்
பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று நினைக்கின்ற பெரியவர்கள்
இருக்கிறார்கள். இதனாலே ஏற்படுகின்ற விபத்துக்கள், ஆபத்துக்கள்
தேசத்திலே எப்படி இன்றைக்கு மலர்ந்து வருகிறது, எவ்வளவு பெரிய
விபரீதத்தை உருவாக்குகிறது என்று சொன்னால்—அந்நிய நாட்டிலே
இருக்கிறவன் இந்த தேசத்திற்கு உதவுவானா? வெளிநாட்டு உதவிகள்
கிடைக்குமா? நிதியாதாரம் வருமா? இந்தத் தேசத்தின் எதிர்பார்ப்பு
தாகத்திற்குத் தக்கவாறு உதவிகள் கிடைக்குமா என்றால், சர்ச்சைக்குரிய
பிரச்சினையாக வந்திருக்கிற அடையாளங்களை இன்றைக்கு 'ஹிந்து'
பத்திரிகை எழுதத் தொடங்கியிருக்கிறது. European Union countries,
பிரிட்டன், ஜெர்மன், ஹாலந்து. குறிப்பிட்ட இந்த மூன்று நாடுகள்
இன்றைக்கு அரசியல் விமர்சனங்களில் வரவில்லை. தேசத்தைப் பற்றிய
வரைபடத்தில் நடக்கின்ற சம்பவங்களைப்பற்றி குறிப்பிட்டுச்
சொல்லியிருக்கிறது.

குஜராத் சம்பவத்தின் விளைவு, வெளிநாட்டு உதவிகள் இந்தியாவிற்குள் வருவதை கடுமையாக மறுபரிசீலனை ஆக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. குஜராத் சம்பவத்தின் விளைவு, நாளை இந்த தேசத்தில் பெட்ரோல் விலை உயரும், டீசல் விலை உயரும், மண்ணெண்ணெய் விலை உயரும். அடிப்படைத் தேவைகள் பாதிக்கும். இந்த நாட்டினுடைய தொழில்கள் பாதிக்கும். எதிர்காலத்திலே இந்த தேசத்திற்கு இவையெல்லாம் அடிப்படை என்று சொல்லி, எல்லை சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று எதையெல்லாம் பேசுகிறோமோ அவை தேசத்தின் எதிர்காலத்தை பாதிக்க வைக்கும் என்பதை ஒரு கட்சியின் சார்பாக அல்ல, இந்த நாட்டின் நன்மையைக் கருதி பேசக்கூடிய இலட்சோப இலட்சம், கோடிக்கணக்கான தோழர்கள் சார்பாக இன்றைக்கு அதை வேதனையோடு எடுத்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு பெரிய அதிசயமாக இப்பொழுது பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். இந்த மைக்கில் நான் மணிக்கணக்கில் பேசுகிறபோது, சோடா குடிக்கமாட்டேன். ஆனால் சட்டசபை மைக்கில் பேசுகிறபோது என்னவோ தெரியவில்லை, ஏதோ ஒரு கோளாறு பண்ணிக்கொண்டே இருக்கிறது. (சிரிப்பு) அதைப் பேரவைத் தலைவர் பார்த்து சரி செய்ய வேண்டும். இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. நான் இடம் மாறிப் பேசினால் மைக் சரியாக வேலை செய்கிறது. என் இடத்தில் பேசினால் கோளாறாக இருக்கிறது. இதில் பெரிய ஆச்சரியத்தைச் சொல்ல விரும்புகிறேன். எப்படி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மைக்கில் 4¾ மணி நேரம் பேசினார். (சிரிப்பு) 'அடேயப்பா', பெரிய **marathon speech**. காஷ்மீர் பிரச்சினை குறித்து ஐ.நா. சபையில் வி.கே. கிருஷ்ண மேனன் பேசியதைவிட ரொம்ப கூடுதலாக அற்புதமாக இந்த மைக்கில் பேசியதைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே சொல்கிறேன், கடவுள் அருள் அவருக்கு நிறைவாகவே இருக்கிறது.

*பிற்பகல் 12-25*

அதேபோல இன்றைக்கு நான் குஜராத் சம்பவத்தைச் சொல்லிக் காட்டுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், ஓர் இரயில் சம்பவத்தில் 51 பேர்-59 பேர் எரிக்கப்பட்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.



அவன் எந்த ஜாதி, மதம், இனமாக இருந்தாலும் அதைப்பற்றி யாரும் இங்கே கவலைப்படுவதற்கு இல்லை. அது மனிதாபிமானமற்ற செயல். எந்த ஒரு நாகரீக மனித உலகமும் அதை ஏற்றுக்கொள்ளாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்குப் பதிலாக, இது இந்த இனம், இந்த மதம், இந்த வர்க்கம்தான் செய்திருக்க வேண்டுமென்று சொல்லி, தேடிப்பிடித்து முஸ்லீம்களை இரண்டாயிரம் பேருக்கு மேலாக கழுத்தைச் சீவி எறிந்திருக்கிறார்கள், கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தியை 'இந்து' பத்திரிகை எந்த நாட்டுச் செய்தியாகத் தருகிறது? ஜெர்மன், ஹாலந்து, பிரிட்டன், 15 ஐரோப்பிய ஐக்கியக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய நாடுகளிலே இந்தச் செய்திகள் கொடுக்கப்பட்டிருப்பதாக 'இந்து' பத்திரிகை இன்றைக்குச் செய்திகளைத் தந்துகொண்டிருக்கிறது. நான் எண்ணிக்கையைச் சொல்லி பயமுறுத்துவதற்காக அல்ல. எப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனம் இங்கே வளர்த்துவிடப்படுகிறது, எப்படிப்பட்ட மனிதவிரோதச் செயல் இங்கே வளர்த்துவிடப்படுகிறது என்கின்ற கொடுமையைப்பற்றிச் சொல்வதற்காகச் சொல்கிறேன். நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குள்ள சூழ்நிலையில் இந்த அரசாங்கம், தமிழகத்திலே இருக்கிற சர்க்கார், இங்கே அந்தக் கலவரங்கள், அப்படிப்பட்ட ஜாதி, மத, இன வேறுபாடுகள், மோதல்கள் வந்துவிடக் கூடாது என்பதில் காட்டி வருகிற இந்தக் கவனம் தொடர்ந்து காலமெல்லாம் கடைப்பிடிக்கப்படுவதற்கு நீங்கள் எந்தவிதமான தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் சமூக நல்லிணக்கம், சமூக நல்லிணக்கம் என்று மாமல்லபுரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள். சமுதாய மோதல் வந்துவிடக்கூடாது. ஒரு குறிப்பிட்ட ஜாதியின்மீது, இனத்தின்மீது அந்தப் பகை வந்துவிடக் கூடாது என்று சொன்னீர்கள் அல்லவா? அதையே நினைவு படுத்தித்தான் இன்று பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு கிறிஸ்துவப் பாதிரியார், ஜீப்பிலே உயிரோடு எரிக்கப்படுகிறார். இந்தக் கொடூரத்தைச் செய்து விட்டார்களே இந்த நாட்டில், ஒரிசாவில் என்று கேட்டபோது, இது கடவுள் இட்ட ஆணை, அப்படிச் செய்வதுதான் எங்கள் கடமை என்று பதில் சொன்னவர்கள்தான் தேசத்தின் முக்கியமான கேந்திரங்களில் இருக்கிறார்கள் என்பதனால்

இந்த நாட்டுமக்கள்—100 கோடி மக்களுக்கு ஆபத்து; அமைதிக்கு ஆபத்து; வளமான வாழ்விற்கு ஆபத்து; நிம்மதிக்கு ஆபத்து என்பதற்காகத்தான் அதை நினைவுபடுத்தி இன்றைக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. 1,40,000 முஸ்லீம் மக்கள் அகதிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள், இந்தத் தேசத்திற்கு உள்ளேயே. இது ஒரு மிகப் பெரிய கொடுமை. ஆனால் அதே நேரத்தில், இந்த நாட்டிலே இங்கே நம்மிடத்திலே வாழ்கின்றவர்கள், ராஜீவ் காந்தியின் சாவுக்குக் காரணமாக இருந்தவர்கள், நாட்டின் அமைதியைக் கெடுத்தவர்கள், அந்த நாட்டிலே நடக்கின்ற அரசியல் விவகாரங்களில் அங்கே இருக்கிறவர்களுடைய பேச்சுவார்த்தைக்கும், சமூகத்திற்கும், வேறு எந்தக் கட்டுப்பாட்டுக்குமே வர மறுக்கிறவர்கள், இங்கே பதற்றத்தை உருவாக்குகிறவர்கள், துப்பாக்கிகளைக் கொண்டுவந்து-கடத்திவந்து இங்கே அமைதியைக் கெடுக்கிறவர்கள் இங்கே பயங்கரவாதத்தை உருவாக்குகிறவர்கள், தீவிரவாதக் கூட்டத்திற்குத் துணையாக இங்கே இருக்கிறவர்களுக்குப் பணமும் ஆயுதமும் கொடுக்க விரும்புகிறவர்கள், இங்கே சில கட்சிகளாலே பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; சில கட்சிகளுக்குத் தோழர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறபோது அவற்றையெல்லாம் மீறி, அடக்கி, கட்டுப்படுத்தி, தமிழகத்தை 'ஸ்திரமாக வைத்து பத்திரப்படுத்தி காக்கக்கூடிய சக்தியாக என் தலைமை இருக்கிறது' என்று சொல்கிற புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் அரசாங்கத்தை நாங்கள் மனதாரப் பாராட்டுவதற்குக் காரணமே இந்த குஜராத், ஒரிசா விவகாரங்கள்தான்.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட அளவிலே தீர்மானத்தின்மீது அற்புதமாகவே பேசிமுடித்து, தைரியமாக அந்தத் தீர்மானத்தை வெற்றிகரமாக செயல்படுத்திக் கொடுத்ததற்கு முதலமைச்சரை நாங்கள் மனதாரப் பாராட்டுவதற்குக் காரணம்— (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வீரத்தையும் அந்த தைரியத்தையும் அந்தத் துணிச்சலையும் பாராட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனாலேதான் இந்தக் காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 12-30*

சிறுபான்மை மக்களுடைய பாதுகாப்பு என்று சொல்கிறபோது நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மொத்தம் *36* பக்கம்.



மன்னிக்கவேண்டும். *32, 33* பக்கம். இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை என்று அச்சடிக்கப்பட்டு கொள்கை விளக்கக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆறே ஆறு பக்கங்கள்தான் சிறுபான்மையினர் என்ற தலைப்பிலே வருகிறது. அதிலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட-மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்— சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக மாண்புமிகு பிரதமரின் *15* அம்சத் திட்டம் பல்வேறு துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற ஒரு வரி வருகிறது. அமைச்சர் பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன். *27* ஆம் பக்கம் மாண்புமிகு பிரதமரின் *15* அம்சத் திட்டம் என்று இருக்கிறது. அது தப்பு என்று நினைக்கிறேன். இல்லைங்களா? *15* அம்சத் திட்டம் என்பது முதலமைச்சர் அவர்களுடைய திட்டம். பிரதமர் தனியே எதுவும் கொடுத்திருக்கிறாரோ என்றால் பிரதமர் எந்தத் திட்டமும் கொடுத்ததாக நான் எங்கேயும் படிக்கவில்லை. அதாவது நம்முடைய அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டவில்லை. அச்சடிக்கின்ற இடத்திலேகூட தப்பு நடந்திருக்கலாம், தப்பு. ஆனால் அதிகாரிகள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஏனென்றால் ஒரு நல்ல திட்டத்தை, புரட்சித் தலைவி அறிமுகப்படுத்தும்போது அதைப் பிரதமர் பெயராலே போட்டு எங்களை பயமுறுத்துகிறீர்களே என்பதற்காகச் சொன்னேன். அதிலே காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்கு தனிச் சலுகை அளித்தல், வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல், சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை தங்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல், மொழி வழி சிறுபான்மையினருக்கு தமிழ்நாடு பாடநூல் கழகம் பாடநூல் வழங்குதல்; இது எப்படி இருக்கிறது என்று கேட்டீர்கள் என்றால் vague மொட்டை, மொட்டையாக இருக்கிறது. அதற்காகச் சொன்னேன். அது எத்தனை இலட்சம் பேருக்கு, எத்தனை ஆயிரம் பேருக்கு? எத்தனை சதமானம்? எவ்வளவு நிதியுதவி அடிப்படையில், எவ்வளவு திட்டம், அதெல்லாம் கொஞ்சம் விரிவாக, விளக்கமாக இருந்தால் பார்ப்பதற்கு, படிப்பதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள். இன்னும் *7* பேர் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** நீங்கள் சொல்வதற்கு முன்னாலேயே மைக் off ஆகிவிட்டது. மொழி வழி சிறுபான்மையினர் என, அதாவது இது எல்லாம் பொதுப்படையாகவே இருக்கின்றது. அதிலே நன்மைகள் எப்படி என்று வருகின்றபோது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சிறுபான்மையினர் என்று வருகின்றபோது முஸ்லீம்கள், கிறித்துவர்கள், சீக்கியர், பஞ்சாபி ஆகியோர் வருகிறார்கள். ஆனால் இதில் தெலுங்கு, மலையாளம் அவை எல்லாம் சேர்ந்து உள்ளே வந்துவிடுகின்றது. சிறுபான்மையினர் என்று சொல்லப்படுகின்றபோது அநேகமாக முஸ்லீம் சமுதாயம், கிறித்துவ சமுதாயம்தான் சிறுபான்மையினரில் பெரும்பான்மையினராக இருக்கக்கூடியவர்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், தமிழகத்திலே எத்தனை இலட்சம் முஸ்லீம்கள் வாழ்கிறார்கள்? அது எத்தனை சதவிகிதம், மொத்த ஜனத்தொகையில் வருகிறது என்ற அடிப்படையில் இந்த ஒதுக்கப்பட்ட தொகைகள், நியாயமாக, சரியாக வருமா என்பதை நான் பணிவோடு கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி விகிதாச்சார அடிப்படையில் அவை பகிர்ந்து அளிக்கப்பட்டால்தான் நியாயங்கள் கிடைக்கும். சில நேரங்களில் தெரியாமல் தவறான நியாயங்கள்-மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். நன்றி. கொஞ்சம் நேரம் துணைத் தலைவர் அமைதியாக எனக்கு வழி கொடுப்பார் என்று பரிபூரணமாக நம்புகின்றேன். ஆகவே அந்த விஷயத்தில் கொஞ்சம் விரிவாக, அது விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டால் விவாதத்திற்கும் சரியாக வரும். சமுதாயத்தில் நியாயங்கள் காயப்படுத்தப்படவில்லை என்பதைப் பற்றிய விளக்கத்தைத் தருவதற்கு வாய்ப்பு இருக்கும்.

அடுத்தபடியாக இந்த அரசாங்கத்திற்கு, புரட்சித் தலைவியினுடைய அரசிற்கு என்னுடைய பணிவான வேண்டுகோள். இதிலே தீர்மானங்களாக இயற்றிச் செல்வதிலே தவறு இல்லை. நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த தோழர்களுக்கு சதவிகித அடிப்படையிலே ஒதுக்கீடு செய்கின்ற மாதிரி சட்டமன்றத் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பிரதிநிதிகள், அவர்களுடைய ஜனத்தொகைக்குத் தக்கவாறு



அவர்களுடைய விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தை தமிழக அரசு, இந்தச் சட்டமன்றம் ஏற்றுக்கொண்டு அதைத் தீர்மானமாக நிறைவேற்றி டெல்லி அரசாங்கத்திற்கு, மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால் தொகுதிகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மீறி, மீறிப் போனால் நான்கோ, ஐந்தோ. ஆனால் ஏறக்குறைய 65 இலட்சம் மக்கள் இருக்கின்ற இடத்தில் அதன் விகிதாச்சார பிரதிநிதித்துவம் மிக மிகக் குறைவு. நான் எல்லாம் மத்திய தொகுதியிலே தப்பித்ததே பெரும்பாடு. ஏனென்றால் பிரச்சாரமே எப்படிப் பண்ணுகிறார்கள் என்று சொன்னால், Temple City—கோவில் நகரம், அன்னை மீனாட்சி கோவில், பெருமாள் கோவில், அனுமார் கோவில், ஆஞ்சநேயர் கோவில், பெரிய, பெரிய கோவில்கள் இருக்கின்ற இடத்தில் முஸ்லீம்களுக்கு என்ன வேலை? தூண்டிவிட்டு விட்டார்கள். ஆனால் நம்முடைய மதச்சார்பற்றக் கூட்டணி, புரட்சித் தலைவியின் தலைமை, நம்முடைய மரியாதைக்குரிய எங்கள் மறைந்த தலைவர் மூப்பனார், இந்த மதச்சார்ப்பற்றக் கூட்டணியின் மகத்துவம், இந்த எழுச்சி, இந்தப் பிரச்சாரங்களை அடித்து நொறுக்கி என்னைப் போன்றவர்களை வெற்றிபெற வைத்து இந்தச் சபைக்குக் கொண்டுவந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால் காலமெல்லாம் பிரச்சினையாகவே இதைப் பேசிக்கொண்டு இருக்க முடியாது என்கிற காரணத்தால்தான். தயவுசெய்து அப்படிப்பட்ட ஒரு விகிதாச்சாரத் தன்மையை இஸ்லாமிய சமுதாயம் மற்றும் கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்படுத்தித் தருவதில் நம்முடைய அவை கவனமாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் காட்டுகிற விதத்தில் நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரத்தில் மிகவும் பணிவான வேண்டுகோள். எம்.எல்.ஏ.-க்கள் நிதியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்—1 கோடி நாங்கள் கேட்கவில்லை. 99 இலட்சமாகத் தாருங்கள், அது நல்லது என்பதற்காகக் கேட்கின்றேன். 1 கோடி கேட்டால் பயப்படுகிறீர்கள். பேட்டா கம்பெனி செருப்புக்கு ரேட் போட்ட மாதிரி 299.99 காசுதான், 300 ரூபாய் என்று சொன்னால் பயம், ஒரு பைசாவைக் குறைத்துக்கொள்ளுங்கள். அந்த மாதிரி, ஒரு இலட்சத்தைக் குறைத்துக்கொண்டு 99 இலட்சம் ரூபாய் கொடுங்கள். ஏனென்று கேட்டால் அதை நானோ இங்கே இருக்கின்ற மாண்புமிகு

உறுப்பினர்களோ வீட்டிற்கா கொண்டுபோக முடியும்? தொகுதிக்கு, மக்களுக்கு, தெருவுக்கு, சாலைக்கு, வீதிகளுக்கு, அங்கே வாழ்கின்ற மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்கு பணம் போதவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே, பணம் போதவில்லை. இது போதாது என்று சில சட்ட விதிமுறைகளை வேறு போட்டு அனுப்பியிருக்கிறீர்கள். அது அதைவிட சிக்கல். அந்தச் சிக்கலை காரணமாகக் காட்டியே அதிகாரிகள் வாய்தா போடுவதில் அபாரமாக தங்கள் சாதனைகளைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கழிப்பறை காசு வரவில்லை. அமைச்சரே, கட்டணக் கழிப்பறை என்று சொன்னீர்கள். ஒதுக்கப்படவும் இல்லை, மீண்டும் தரப்படவும் இல்லை. கட்டடம் கட்டுவதற்கு-நான் ஏற்கெனவே சொன்னேன். என்னுடைய மத்திய தொகுதிக்கு வழியே கிடையாது. நான் சொன்ன மாதிரி மேல மாசி வீதி, வடக்கு மாசி வீதி, தெற்கு மாசி வீதி, ஆவணி வீதி, சித்திரை வீதி, ஆடி வீதி, வெள்ளி வீதி, வெளி வீதி, மாசி வீதி என்றெல்லாம், சித்திரை வாசல், வடக்கு வாசல், தெற்கு வாசல், கோபுர வாசல், கீழ வாசல், எல்லாமே நகர்ப்புறம். எங்கே கொண்டுபோய் ஹாஸ்டல் கட்டுவது, கட்டணக் கழிப்பறை கட்டுவது? கட்டுகிறேன் என்று தெருவுக்குள் வந்தாலே இங்கே வராதே, இங்கே கட்டித் தர வராதே, நாற்றம் பொறுக்காது என்கிறான் நம்ம ஆளு. ஆனால் பாதுகாப்பாக இருப்பதற்குரிய இடங்கள் எங்கேயாவது இருக்கிறது என்று சொன்னால், தாராளமாகச் சொன்னால், அதிகாரிகளிடம் சொன்னாலும் அவர்களும் செய்வதற்குத் தயாராக இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை ஒதுக்கித் தருவதில் கஷ்டங்களை ஏற்படுத்தாமல் தருவதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடம் கலந்துபேசி இதற்கு நல்ல தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்க



வேண்டுமென்று கேட்டார்கள். மனம் இருக்கிறது, ஆனால் அரசாங்கத்திடம் பணமில்லாத காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மனம் இருக்கிறது, பணம் இல்லையென்கிறீர்கள். நிதியமைச்சர் சந்தோஷமாக தரலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். சம்பந்தப்பட்ட நிதியமைச்சர் சந்தோஷமாக இருக்கிறார். அவர் என்ன நினைக்கிறார் என்றால்— 99 இலட்சம் பரவாயில்லை, நாட்டு மக்கள் நன்மைக்குத்தானே என்று. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி பணம் என்பதை நான் வாங்கிக்கொண்டு நான் என்ன இலங்கைக்குப் போய் செலவழிக்கப் போகிறேனா? இல்லையென்றால் மலேசியாவிற்குப் போகப் போகிறேனா? 99 இலட்சமும் இங்கேதான் செலவிடப்படும். அதே மாதிரி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சம்பளம் காணவில்லை. கஷ்டமாக இருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் சம்பளம் காணவில்லை. நான்கு ஆயிரம் ரூபாய் ஏற்றி-இந்தா அல்வா சாப்பிடு, திருநெல்வேலி அல்வா வாங்கி கையில் கொடுத்து, டப்பென்று தட்டிப் பிடித்து திரும்பவும் அப்படிக் கொண்டு போய்விட்டால் எவ்வளவு கஷ்டம் பார்த்தீர்களா? அல்வா, அல்வா, அல்வா என்று ஏங்கி சாகிற மாதிரி, நான் மீண்டும் கேட்கிறேன். வசதிக்காக அல்லது வாழ்வு வளத்திற்கு, நலத்திற்கு, எங்களை மேம்படுத்திக்கொள்வதற்காக அல்ல. கஷ்டப்படுகிறோம். இரண்டு உதவியாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அரசாங்கத்திலே நீங்கள் கொடுக்கவில்லை. நாங்கள் சென்னையிலும் கொடுக்க வேண்டும். மதுரையிலும் உட்கார்ந்து எம்.எல்.ஏ. ஆபீஸ் பார்த்துக் கொள்கிறவர்களுக்கும் கொடுக்க வேண்டும். முன்னாலே எல்லாம் கட்சிக்காரர்கள் வாங்கிக் கொடுத்தார்கள், டீ எல்லாம். இப்போது என்னவோ வருகிறது என்று நினைத்துக்கொண்டு யாருமே பையிலிருந்து காசு எடுப்பதே கிடையாது. (சிரிப்பு) நானே செய்ய வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆக, எல்லா வழியிலும் கஷ்டம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் இளகிய மனதை நான் அறிவேன். உங்களுக்காகவும் சேர்த்தே பேசுகிறேன். ஏனென்று சொன்னால், தாய்ப் பால் குடிக்காமல், பசும்

பால் குடித்து வளர்ந்திருக்கிறீர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) அதுவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாடல்கேட்டு பால் குடித்து வளர்ந்திருக்கிறீர்களே என்பதையெல்லாம் மனதாலே நினைத்து, அந்தப் பசும் பாலைப் போல, பசு மாட்டைப் போல கொஞ்சம் அமைதியாக, இளகிய மனதோடு என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

அதே மாதிரியாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சம்பளத்திற்காக மாத்திரமல்ல. சம்பளம் 4 ஆயிரம். பழைய 4 ஆயிரத்திலிருந்து நிதியமைச்சர் கூட்டித் தருவதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்று கருதுகிறேன். நிதிநிலை நெருக்கடி இருந்துகொண்டேதான் இருக்கும். அது எந்தக் காலத்திலும் நிதிநிலையை நாம் ஒருகாலத்திலும்-இந்தியாவிலே நிதிநிலை சரியாகிவிட்டது என்று சொன்னால் அமெரிக்கா பஞ்சம் ஆகிவிடும். (சிரிப்பு) ஆகவே நெருக்கடி வந்து கொண்டேதான் இருக்கும். அதற்காக இதிலே சிக்கல் வரக்கூடாது என்பதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது மாதிரியாகச் சொல்வது என்று சொன்னால், நிறைய சொல்லலாம். சிக்கலாக இருக்கக்கூடிய சில பிரச்சினைகளைச் சொல்வதற்காகத்தான் குறிப்பிடுகிறேன்.

அதே மாதிரியாக, வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கு சொல்கிறேன். என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு நிமிடம். மத்திய தொகுதிக்குள் நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி திடீர் நகரத்து மக்கள், சாதாரண மக்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்— அன்றைக்கு நான் சொன்னேன் கவர்னர் உரையிலேயே— நாடோடி மன்னன் படத்திலே அவர்கள் சொல்வார்கள். உழ முடியாத கலப்பை, பலம் இல்லாத மாடு. அதிகாரம் இல்லாத பதவி, இவற்றை நாங்கள் விரும்புவதில்லை என்று சொல்லப்பட்ட இடத்திலே அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டால் எப்படி நடக்கும் என்பதற்காகச் சொன்னார்.

பிற்பகல் 12-40

இங்கே தாதிகள் பட்டு விரிக்கிறார்கள். மலர் தூவ வருகிறார்கள். நீங்கள் நோகாமல் நடந்து வருகிறீர்கள். ஆனால் காலில் குத்திய முள்ளில் பாதியை ஒடித்து எறிந்துவிட்டு, மீதியைப்பற்றிக் கவலைப்படாமல் நடந்துகொண்டிருக்கிற ஒரு கூட்டம் இருக்கிறதே,



உங்களால் எண்ணிப் பார்க்க முடியுமா என்று புரட்சித் தலைவர் அன்றைக்கு கேட்டார். 'உழுவார்கள், உழைப்பார்கள், அறுப்பார்கள், எடுப்பார்கள், கொடுப்பார்கள்-ஆனால் உண்பதற்கு உணவு இருக்காது. இந்த ஏழைகளைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டார். 'ஈராயிரம் சேலைகள் இருக்கிறது எதை எடுப்பது, எதை அணிவது, எதைக் கழற்றுவது என்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒரு சேலை இருந்தால் போதும். நாணத்தை மறைத்துக் கொண்டு, பாதியை நனைய விட்டாலும், மீதியை காய விட்டு அதைத் தங்கள் உடலில் போர்த்திக் கொள்ளலாம் என்று வாழுகின்ற கூட்டம் இன்று இருக்கிறதே அதை நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? இல்லை. அந்தக் கூட்டத்தின் பிரதிநிதிகள்தான் இன்றைக்கு திடீர் நகரிலே வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள். அந்தச் சாதாரண மக்கள் வீடுகளிலே குடியிருக்கிறார்கள். வசதி இல்லை. வளம் இல்லை. நல்ல வாழ்வு இல்லை. பொருளாதாரப் பசுமையும் கிடையாது. ஆனால் கஷ்டத்தில் இருக்கிறார்கள். பட்டா போட்டுக் கொடுங்கள் என்று எவ்வளவு வருடமாகக் கேட்பது? புரட்சித் தலைவியின் ஆட்சி, புரட்சித் தலைவரின், பொன்மனச் செம்மலின் அந்த நல்ல இதயத்தை மேம்படுத்த, வழிப்படுத்த இந்த அரசாங்கம் வளமான வாழ்வை அந்த மக்கள் பெறுவதற்கு, அந்தச் சட்டத்தைத் தீட்டித் தருகிற விதத்திலே உங்களுடைய பட்டா கொடுக்கிற வேலையை துரிதப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லீஸ் நகரில் அதேமாதிரியாகத்தான் ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் 2 லட்சம் ரூபாய் ஒரு வீட்டுக்கு என்று சொன்னால், அட்வான்ஸ் ஒரு லட்சம், மீதி ஒரு லட்சம் பத்திரம் பதிகிறபோது, முடித்துக் கொடுக்கிறபோது கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் காலம் கடந்தது. தி.மு.க. ஆட்சி அதைச் செய்யாமல் விட்டதன் விளைவு இன்றைக்கு ஆறாவது ஆண்டின் தொடக்கத்தில் என்ன குற்றம் சாட்டுகிறார்கள்? வட்டி ஏறிவிட்டது, பணத்தினுடைய மரியாதை குறைந்துவிட்டது. அந்த ஒரு லட்சத்திற்கு திருப்பி முடித்துத் தர முடியாது. எனவே தொகை கூட்டப்படுகிறது. வட்டி விதிக்கப்படுகிறது. அபராத வட்டி போடப்படுகிறது. அந்தத் தொகை கணக்கிலே வருமென்றால், கந்து வட்டி, ரன் வட்டி, மீட்டர் வட்டி, வசதியாக வாழ்வதற்காக அவன் சொந்தத்திற்கு செய்கிற மாதிரி அரசாங்கம் செய்யக் கூடாது. மக்களுக்கு அரசாங்கம் வட்டி போட்டது, ஒப்பந்தத்தை மீறிச் செய்வது என்பது அந்த மக்களைப்

பாதிக்கின்ற வேலையாக இருக்கிறது. ஆகவே அதற்குப் பாதுகாப்பாக பத்திரத்தை முடித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு, புரட்சித் தலைவியின் சர்க்கார் துணை நிற்க வேண்டுமென கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த அடிமட்ட தொண்டனாகிய என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், மாவட்ட கழகச் செயலாளராகவும், பின்னர் கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி ஆன்றோர்களும் சான்றோர்களும், சரித்திரம் படைத்தவர்கள் எல்லாம் இருக்கக்கூடிய இந்த அவையில் என்னுடைய பேச்சைப் பதிய வைப்பதற்கு வாய்ப்பளித்த என்னுடைய இதய தெய்வம், எங்கள் குடும்பத்தினுடைய குலவிளக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேத வேதாசல யுத்தம் 18 ஆண்டுகள் நடந்ததாகக் கூறுகிறார்கள். ராமர், ராவணன் யுத்தம் 12 ஆண்டுகள் நடந்ததாகக் கூறுகிறார்கள். பாரதப் போர் 18 நாளிலே முடிந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் ஆண்டிப்பட்டி தொகுதியில் நடந்த இடைத் தேர்தலிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனித்து நின்று ஐந்தே நாளில் ஆண்டிப்பட்டித் தொகுதியை வலம் வந்து பொதுமக்களைச் சந்தித்து, கத்தியின்றி, ரத்தமின்றி, எதிர்த்து நின்றவர்களை, வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் வீழ்த்திக் காட்டி மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்திலே அரியணையில் முதலமைச்சராக இருந்துகொண்டிருக்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதுதான் வரலாறு என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா



அவர்களின் 15 அம்சத்திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்கள் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கும், மற்ற முன்னேறிய சமுதாயங்களுக்கு சமமாக தரத்தை நிலைநிறுத்தவும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மேலும், வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் பள்ளி கல்லூரிகளில் இட ஒதுக்கீடு 50 விழுக்காடு மட்டுமே அனுமதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள போதிலும், தமிழ்நாடு சட்டம் 45/1994-ல் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியால் இந்த மன்றத்திலே 1993-ஆம் ஆண்டிலே மார்ச் 9 ஆம் தேதி இந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினருக்காக ஒரு சட்டத்தை இயற்றினார்கள். அது குறித்து இங்கே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமெரிக்க நீக்ரோ மக்களின் அடிமை விலங்கை உடைத்தார் ஆப்ரகாம் லிங்கன். அன்னைத் திருநாடாம் இந்திய தாய்நாட்டின் அடிமைத் தளையை அகற்றினார் அண்ணல் மகாத்மா. ஆப்ரிக்க மக்களின் அடிமைத் தளையை அகற்றி உரிமை வாழ்வு அளித்தார் நெல்சன் மண்டேலா. திராவிடர்களின் விழிகளைத் திறந்து வழிகாட்டி வைத்தார் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார். சமூக நீதி என்னும் இலட்சியப் பயிரைக் கண் எனக் காத்துத் தந்தார் பேரறிஞர் அண்ணா. இட ஒதுக்கீட்டில் ஏற்றமிகு உயர்வு அளித்து, புதிய பாதை கண்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இந்தச் சான்றோர்களின் அத்தனை தத்துவங்களுக்கும் மொத்த உருவமாக 69 சதவீதம் இட ஒதுக்கீட்டிற்கு 1993 ஆம் ஆண்டிலே மார்ச் 9 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை இயற்றி, அதை ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கச் (மேசையைத் தட்டும் ஒலி) செய்து இந்திய அரசமைப்புச் சட்டத்தையே திருத்த வேண்டும் என்று சமூக நீதி காத்த வீராங்கனை எங்களுடைய புரட்சித் தலைவி என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிய வைக்க விரும்புகிறேன். அதன் விளைவாகத்தான் 50 விழுக்காடு மட்டுமே அனுமதிக்க வேண்டும்

என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளபோதிலும், தமிழ்நாடு சட்டம் 45/1994, எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியின் விளைவாக மேற்குறிப்பிட்ட சட்டம் அரசமைப்புச் சட்டத்தில் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. மேலும், இவ்வாறு தடையாணை இருந்தபோதிலும், தற்போதுள்ள அளவிலேயே, அதாவது 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைச் சேர்த்துச் செயல்படுத்த, எங்கள் அம்மா ஆணை பிறப்பித்துள்ள 15 அம்சத் திட்டத்தின்படி அவர்கள் வாழ்வில் வளம் பெற மிக முக்கியமான அம்சங்களை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினை 27 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்துமாறும் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளை அனைத்துப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கான பணியாளர் தேர்வில் செயல்படுத்துமாறும் இவ்வரசு மைய அரசிடம் வலியுறுத்தியுள்ளது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் முன்னேற்றத்திற்கு கல்வி ஒரு சிறந்த கருவியாக விளங்குவதால் இப்பிரிவினரின் கல்வி மேம்பாட்டிற்குத் தரமான கல்வி அளிக்கும்பொருட்டு, பல்வகையான நிலைகளிலும் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வழங்கள், கழிவறை வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் மிக விரைவுத் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 193 பள்ளிகளுக்கு ரூபாய் 125 இலட்சம் செலவில் கழிவறை வசதியும், ரூபாய் 47 இலட்சம் செலவில் 50 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும், 40 பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதியும் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். எஞ்சியுள்ள பள்ளிகளுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறையின் மூலம் இயங்கிவரும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாடத் திட்டம் செயல்படுத்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 15 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் 8 பள்ளிகளில் கணினிப் பாடத்



திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பாட்டிற்கென நடப்பு ஆண்டில் ரூபாய் 2,250.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், உத்தமபாளையத்திலுள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பிறமலைக் கள்ளர் இனத்தவருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க ஒவ்வொரு 50 இடங்கள் கொண்ட இரு பிரிவுகளை ரூபாய் 85 இலட்சம் செலவில் நிறுவ எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

2002-2003 ஆம் ஆண்டிற்கு மட்டும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும், அதாவது 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகளும், பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும், ஒவ்வோர் ஆண்டும் இரண்டு தொகுதி (set) சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 21,120 மாணவ, மாணவியரும், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 20,000 மாணவ, மாணவியரும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 44,950 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுவார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவை தவிர பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 50,000-க்குக் குறைவாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்குப் பல்வேறு படிப்பு உதவித் தொகைகள் வழங்கவும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு முன்வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் படிப்பு உதவித் தொகை, பள்ளிப் படிப்பு உதவித் தொகை, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவசக் கல்வி, மாநில அளவிலான பரிசுகள், மாவட்ட அளவிலான பரிசுகள், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு, தந்தை பெரியார் நினைவுப் பரிசு போன்ற பரிசுத் திட்டங்களையும் இவ்வரசு செயல்படுத்துகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் விவசாயிகளுக்கு எங்கள் அரசு, எங்களுடைய தலைவர் உற்ற துணைவராக இருக்கிறார் என்று கூறினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது-மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்—அப்போது அவர் விவசாய அணிச் செயலாளர். முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலைக்கு முன்னால் பல கூட்டங்களைக் கூட்டி, போராடி, கரும்புக்கு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று கூறினார். அதுமட்டுமல்ல, திருச்சி மாநாட்டிலே, தி.மு. கழகத்தின் மாநாடு திருச்சியிலே நடந்தபோது தீர்மானத்தையே இயற்றினார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று. கொடுத்தார்களா? சொன்னதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று சொல்கிறார்களே, காற்றிலே பறக்க விட்டார்கள். இதைக் குறிப்பாகச் சொல்லப்போனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுடைய நலனைக் கருதி இன்றைக்கு 310.5 கோடி ரூபாயை, வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்து இருக்கிறது என்றால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு இன்றைக்கு விவசாயிகளுக்கு உற்ற துணையாக இருந்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். ஒரே ஒரு சிறிய clarification அவரிடம் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத்



துணைத் தலைவர் அவர்களே, 310 கோடி என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைக் கொடுக்கின்றபோது விவசாயிகளுக்கான அந்தத் தொகையை தள்ளுபடி செய்கின்ற வகையில் 100 கோடி ரூபாய் மட்டுமே இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 310 கோடி என்பது அல்ல. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசில் விவசாயிகளுக்கான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு, இருந்த வட்டி வீதத்தில் 7 சதவீதம் தள்ளுபடி செய்திருந்தோம். மீதம் உள்ள 5 சதவிகிதத்திற்கு மட்டுமே இந்த அரசு 310 கோடி ரூபாய் நாங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்தோம் என்று சொல்லி செய்ததே தவிர, அதிலேகூட 100 கோடி மட்டுமே ஒதுக்கியிருந்தார்கள். 210 கோடி என்பது இல்லாமல் இருந்தது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த அரசு 311 கோடி ரூபாய் வரிச் சலுகை அறிவித்தது. அதிலே 226 கோடி ரூபாயை விவசாயிகள் பலனாகப் பெற்றிருக்கிறார்கள். கடந்த நிதிநிலை அறிக்கையிலே 100 கோடி ரூபாய்; மீதியை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறோம். ஆகவே விவசாயிகளுக்கு முழுவதுமாக 226 கோடி ரூபாய்க்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது இந்த அரசாலே என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் 310 கோடியாக இன்னும் ஒதுக்கவில்லை என்றார். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலாவது ஆண்டு ஒதுக்கியிருக்கிறார். இந்த ஆண்டு இன்னும் அதை ஒதுக்கி, கடனைத் தள்ளுபடி செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய 15 அம்சத் திட்டத்திலே இன்றைக்கு அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு மகத்தான திட்டம் என்று கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 63 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏனென்றால் இன்றைக்கு அந்தத் திருக்கோயில்களிலே சாமி கும்பிட வருபவர்கள் மட்டும் அதைச் சாப்பிடவில்லை; ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களெல்லாம் ஒருவேளை பசியாறிச் செல்வதற்கு இந்த அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஓர் உதாரணம் சொன்னால்,

"ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும், உண்பதற்கு அமிர்தமாம்
முப்பழமோடு பால் அன்னம் முகம் கடுத்திடுவாராயின்
கத்திய பசியோடு கடும் பசியாவும்தானே"

என்று சொல்வதைப்போல, ஒப்பத்தக்க வார்த்தைகளைப் பேசி, இருக்கிற கூழைக் கொடுத்தாலும், அது அமிர்தம் ஆகிவிடுகிறதாம். ஆனால் பழங்களிலே உயர்ந்த பழங்களான மா, பலா, வாழை மற்றும் உயர்ந்த அன்னங்களை வைத்து கடுமையாகப் பேசி உணவிட்டால், அந்த உணவைச் சாப்பிட்டாலே வயிற்றிலேகூட ஒட்டாமல் போய்விடுமாம். அதேபோல இந்த அன்னதானத் திட்டத்தை புன்முறுவலோடு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டுவந்திருக்கிறார்களே— இன்றைக்கு தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து மக்களும் பாராட்டக்கூடிய இந்த அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லி நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டே வருகிறேன். Mood out பண்ணிவிடாதீர்கள். இன்னும் கொஞ்சம் பேச அனுமதி கொடுங்கள். பேரவைத் தலைவர் என்றால், அவருக்கு இராமுத்தேவன்பட்டி; எனக்கோ ஆராய்ச்சிப்பட்டி. ஏன் என்றால் அந்தப் பட்டி என்கிற வகையிலாவது எனக்கு அவர் கூடவே ஒரு 5 நிமிஷம் கொடுப்பார். ஏன் என்றால் இன்னமும் நான் தொகுதிக்கே வரவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே தொகுதிக்கு வாருங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** வந்துவிடுகிறேன், வந்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த கிராமப்புறத்திலே இருக்கிறவர்களை எல்லாம் அமைச்சர் பெருமக்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இங்கே கொண்டு வந்து அழகு பார்த்திருக்கிறார்கள் என்றால், அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்குப் பக்கத்திலேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் செல்லையா அவர்களுக்கு வையம்பட்டி, மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களுக்கு சிம்மம்பட்டி, மாண்புமிகு உறுப்பினர் சண்முகவேல் அவர்களுக்கு சாமிராயப்பட்டி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாவற்றுக்கும் சேர்த்து ஆண்டிப்பட்டி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆமாம், எல்லோருக்கும் சேர்த்து ஆண்டிப்பட்டி. சரி, உறுப்பினர் உங்கள் தொகுதியைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சரோஜா அவர்களுக்கு முருகப்பட்டி. மாண்புமிகு உறுப்பினர் லியாவுதீன் சேட் அவர்களுக்கு பள்ளப்பட்டி, மாண்புமிகு உறுப்பினர் பாப்பா சுந்தரம் அவர்களுக்கு வலயப்பட்டி, மாண்புமிகு அமைச்சர் திரு. இரா. விசுவநாதன் அவர்களுக்கு வேம்பர்பட்டி, மாண்புமிகு அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்களுக்கு புளியம்பட்டி, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு இராமுத்தேவன், பட்டி, இந்த சுப்பையா பாண்டியனுக்கோ ஆராய்ச்சிப்பட்டி. இந்த பட்டி

என்கிற ஊரிலேதான், சேற்றிலேதான் செந்தாமரை முளைக்கிறது என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்டியிலே உள்ளவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து இன்றைக்கு அமைச்சர் பெருமக்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இந்த மாமன்றத்திலே வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எங்கள் புரட்சித் தலைவியை நாங்கள் எப்படி வாழ்த்துவது என்றே எங்களுக்குப் புரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இத்தனைக்கும் மேலாக எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்டியிட்டு 41,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வந்தது ஆண்டிப்பட்டி என்பதை இந்த மாமன்றத்தில் நான் பேசி பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு வந்துவிடுகிறேன். ஏன் என்றால் நீங்கள் மணியடிப்பதிலே ரொம்ப **-ஆக இருக்கிறீர்களா, அதை, 'டக்', 'டக்' என்று அடித்துக்கொண்டு இருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் பாராட்டுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவரும் அதை follow பண்ணுகிறார். ரைட் (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும். நான் அந்த வார்த்தையைச் சொன்னால் அது record ஆகிவிடும். அதனால் அந்த வார்த்தையை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ** என்ற வார்த்தையைச் சொன்னார். அதை நீக்க வேண்டும். நான் கூறியதையும் நீக்கிவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** நான் பணிவோடு ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கடையநல்லூர் தொகுதி, குறிப்பாக என்னுடைய தொகுதிக்கும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் உள்ளது. ஏற்கெனவே கடந்த முறை நான் இந்தக் கோரிக்கையை வைத்தேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு செய்ய வேண்டும் என்று. ஏனென்றால் தென்காசியிலே வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. தென்காசிக்குப் பக்கத்திலே 5 கிலோ மீட்டரில் உள்ளது செங்கோட்டை. இந்த செங்கோட்டையிலும் ஒரு வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. 5 கிலோ மீட்டருக்குள் ஒரு வட்டாட்சியர் அலுவலகம், கடையநல்லூரை தலைமையிடமாகக் கொண்ட எங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகம் இல்லை. கடையநல்லூரில் உள்ள மக்கள் பெரும்பாலும் 20 கிலோ மீட்டர் தூரம் தென்காசிக்குத்தான் செல்ல வேண்டி இருப்பதால் இந்த செங்கோட்டை நகராட்சியை தென்காசியில் சேர்த்துவிட்டு, செங்கோட்டையிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை கடையநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு, செயல்படும் வகையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையோடு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையநல்லூரில் அதிகமான பெண்களும், ஆண்களும் கல்லூரியில் படிக்கவிருப்பதாலும், மக்கள்தொகை அதிகமாக உள்ளதாலும், கடையநல்லூரிலே ஒரு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட அருள்மிகு திருமலை குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் செய்யப்படவில்லை. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, அந்தத் திருக்கோயிலிலே—கிட்டத்தட்ட 300 ஏக்கர் தென்னந் தோப்பும், மாந்தோப்பும் உள்ளன. வருடத்திற்கு 50 இலட்சம் ரூபாய் அந்தத் திருக்கோயிலுக்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. நீண்டநாள் கோரிக்கையாக, அந்தக் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்யவில்லை என்ற ஒரு குறைபாடு இருந்துகொண்டு

வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா எல்லா திருக்கோயில்களுக்கும் ஒருகால பூசை நடத்தப்படும் என்று கூறியிருப்பதை மனதிலே கொண்டு, இந்த திருமலை குமாரசுவாமி திருக்கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்வதற்கு பண ஒதுக்கீடு செய்துதர இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டிக்கொண்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) முடியுங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** கடையநல்லூர் தொகுதியில் உள்ள விவசாயிகளின் உயிர்நாடியான கருப்பா நதியின் அணைக்கட்டில் மொத்த நீர் கொள்ளளவு 72 அடியாகும். இதில் கடந்த 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல், வெள்ள மழையால் அணையின் உட்பகுதியில் 27 அடி உயரம் மண் திட்டு ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போது அணையின் நீர் மொத்த கொள்ளளவு 45 அடியாகக் குறைந்துவிட்டது. அணையிலிருந்து விவசாயத்திற்கு வெளியேறும் தண்ணீர் 72 குளங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருப்பதால், அணைக்கட்டின் உட்பகுதியில் உள்ள மண் திட்டை அகற்றி நீர் கொள்ளளவை அதிகப்படுத்தினால் வரும் ஆண்டில் பருவமழையின்போது அணையின் நீர்ப்பிடிப்பு அதிகமாகும். இவ்வணையை நம்பியுள்ள 72 குளங்களில் உள்ள 8700 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியடையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் விவசாயிகளின் வயிற்றில் பால் வார்க்க முடியும். கடையநல்லூர் மக்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை எப்பொழுதுமே வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள் என்று கூறிக்கொண்டு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஞானத்தில் உச்சநிலை, பலத்தில் உச்சநிலை, வீரத்தில் உச்சநிலை, சேவையில் உச்சநிலை, கீர்த்தியில் உச்சநிலை, விநாயகத்தில் உச்சநிலை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலும் உச்சநிலை, முதலமைச்சர் ஆவதிலும் உச்சநிலை, வருங்காலத்தில் இந்தியப் பிரதமர் ஆவதிலும் உச்சநிலை, அறிவு, வலிமை, புகழ், அஞ்சாமை, பக்தி, பணிவு, நோயின்மை, சொல்வன்மை, விழிப்புணர்வோடும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவார்கள் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை என்பதைக் கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி



அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, என்னுடைய உரையை முடித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 1-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் பால் வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய அன்புகலந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாடு சுதந்திரம் பெற்று 54 ஆண்டுகளைக் கடந்து, 55-வது ஆண்டிலே இன்று நாம் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைய சூழ்நிலையைப் பொறுத்த அளவிலே, இந்த நாட்டிலே பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லி, இப்படி பல்வேறு கூறுகளாக நாம் பிரித்து வைத்திருக்கிறோம். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், நாம் இவ்வளவு காலமாகியும்கூட, இன்னும் பொருளாதார ரீதியாக, கல்வியிலே, வேலைவாய்ப்பிலே, எல்லா நிலைகளிலும் முன்னேறவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆகவே அந்த வகையிலே தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால், இந்தச் சமூக மேம்பாட்டிற்கு எல்லா வகையிலும் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே, இங்கே மிக முக்கியமான பிரச்சினை சமூக நீதிப் பிரச்சினை. சமூகம் என்று சொன்னாலே மக்கள் வாழக்கூடிய ஒரு தொகுப்புக்கு சமூகம் என்று பெயர் ஆகவே மக்கள் வாழக்கூடிய இந்தத் தொகுப்பிலே எல்லா மக்களுக்கும் சமூக நீதி வேண்டும் என்பதுதான் இன்றைய தலையாய கடமை.

அந்த அடிப்படையிலேதான் தந்தை பெரியார் அவர்கள், ஒரு நாடு சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது; இந்த நாட்டிலே எப்பொழுது முழுமையான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமலாக்கப்படுகிறதோ, அன்றுதான் இந்த நாடு முழுமையான சுதந்திரம் பெற்ற நாடாகும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தந்தை பெரியார் பெயரைச் சொல்லிக்கொண்டு— தந்தை பெரியார் இல்லை என்று சொன்னால் இவ்வளவு விழிப்புணர்வை நாம் எல்லோரும் பெற்றிருக்க முடியாது. அப்படி விழிப்புணர்வு பெற்றிருந்தாலும்கூட தந்தை பெரியார் சொன்ன வழியிலே, ஆட்சி செய்துகொண்டிருந்தாலும்கூட— அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நம்முடைய தமிழக அரசு இதுவரையிலே பின்பற்றவில்லை; முழுமையாக அமலாக்கவில்லை என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "அரசாங்கக் காரியதரிசிகள் எல்லாம் அழகாகப் பேசறாங்க, எழுதறாங்க. ஆனால், அவங்ககிட்ட சரக்கு ஒண்ணுமில்லையே? நான் மந்திரியாக இருந்தபோதே அதைப் பார்த்தேனே. எங்கிட்டேயா தகுதி திறமையைப் பற்றிப் பேசறது. இந்தத் தகுதி திறமைச் சங்கதியை என்னுடைய இறுதிப் போராட்டமாக வைத்துக்கொள்ள போகிறேன். நான் பேசறதை வெளியிடாமல் தடுத்துவிட்டால் போதும் என்று பத்திரிகைக்காரன் நினைக்கிறான். தடுக்கட்டுமே. சூரியனைக் கையால் மறைக்க முடியுமா? மறைத்துப் பாரேன். எவ்வளவு நாள் மறைப்பே? நான்தான் ஊர், ஊராகப் போய் 3½ கோடி மக்களையும் சந்தித்து, இந்தத் தகுதி, திறமை மோசடி ஒழியணும் என்கிற சங்கதியை நேரடியாகச் சொல்லறது என வந்துவிட்டேனே."

அதுமாத்திரமல்லாமல், அதற்கு மேலேயும் சொல்கிறார். "சோஷலிசம் என்றால் உற்பத்திச் சாதனங்களை அரசாங்கமே தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பணத்தைச் சமமாகப் பங்கிடுவது அல்ல. பொருளாதாரத் துறையில் உள்ள மேடு, பள்ளங்களைச் சமப்படுத்துவது என்று மட்டும் நினைப்பது தவறு. சோஷலிசம் என்பது வெறும் பொருளாதாரச் சமத்துவம் ஏற்படுத்துவது மட்டுமன்று. மனித தர்மத்தை நிலைநிறுத்த, மக்களைச் சமத்துவமாக மனிதர்களாகவே



மதிக்கத்தக்கதொரு கொள்கையுடைய புதிய சமுதாயத்தை உருவாக்குவதுதான்" என்று சொன்னார்கள்.

அதே நேரத்தில், பொருளாதார ரீதியில் பேசுவோம் என்று சொன்னால், நாட்டில் நிலவும் வறுமையைப் பங்கிடச் செய்வதல்ல. நாட்டின் செழுமையை அதிகரிக்கச் செய்து அந்தச் செழுமையை மக்கள் பகிர்ந்து அனுபவிப்பது ஆகும். நாட்டின் செல்வம் ஒரு சிலரிடத்தில் மட்டும் சென்று குவிவதைத் தடுத்து, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி, நாளும் அதிகரித்துக்கொண்டே வரும் செழுமையைச் சமமாக மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்துவதுதான் சோஷலிசத்தின் இலட்சியம் என்றும் இதுவே பொருளாதாரத் தத்துவம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு நாட்டில் ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, வீடு, கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய வசதிகள் தவறாமல் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்படியான புதியதொரு சமுதாய அமைப்பை ஏற்படுத்தியே தீர வேண்டும். இந்த இலட்சியம் எனது இலட்சியம் என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன குறிப்புகளைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிறைய இருக்கின்றன. நேரத்தின் அருமை கருதி நான் குறைத்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

ஆக இப்படி இந்தச் சமுதாயத்திலே இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை எல்லாம் போக்குவதற்குத்தான் இந்தச் சமூக நீதி. ஆகவே, இந்தச் சமூக நீதியைப் பெறுவதற்காக எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள், தொண்டர்களையெல்லாம் அணி திரட்டி, 7 நாள் தொடர் சாலை மறியல் போராட்டம் செய்து, 21 உயிர்களை பலி கொடுத்தார்கள். அப்படி 21 உயிர்களை பலி கொடுத்த பிறகுதான் இந்த நாட்டிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற ஒரு சமுதாய அமைப்பு, அரசாங்கத்தினுடைய ஆணையைப் பெற்று 1989-லே வந்தது. ஆக 50 சதவிகிதமாக இருந்த அந்த பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 30, 20, மொத்தம் 50 ஆகப் பிரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டது. ஆக இப்படி 50 ஆகப் பிரிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம், மலைவாழ் மக்களுக்கு 1 சதவிகிதம், மொத்தம் 69 சதவிகிதம். இந்த 69 சதவிகிதம் வந்தாலும் கூட, இந்த 69 சதவிகிதத்திலே உச்ச நீதிமன்றத்திலே இப்பொழுது வழக்கு இருக்கிறது. இந்த வழக்குக்குப் பிறகு, உச்ச நீதிமன்றம் ஒரு

வழியைக்காட்டி இருக்கிறது. அது என்ன என்று சொன்னால், கூடுதலான இடங்களை அமைத்துக்கொள்ளலாம் என்று. இப்பொழுது 8 ஆண்டுகளாக அதை நாம் பின்பற்றி வருகிறோம். இப்பொழுது அந்த நடைமுறையை நாம் பின்பற்ற இருக்கிறோம். இந்த ஆண்டு நடைமுறையிலே எவ்வளவு குளறுபடி இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுவரையிலே நாம்கூட, 69 சதவிகிதம் என்பது எல்லா சமுதாய மக்களுக்கும் வரப்பிரசாதம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அது அல்ல. உதாரணத்திற்கு ஆயிரம் இடங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த 1000 இடங்களிலே 69 சதவிகிதம் என்று சொன்னால், மொத்தம் 690 இடங்கள். மீதி ஓ.சி. என்பது 31 சதவிகிதம். இந்த 31 சதவிகிதத்திற்கு 310 இடங்கள் ஆகிறது. ஆக Supreme Court உத்தரவுப்படி, கூடுதலாக இடங்கள் அமைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால், கூடுதலாக வரக்கூடிய இடங்கள் 190. ஆக O.C.-க்கு எவ்வளவு, 310 + 190 = 500. ஆக, 31 சதவிகிதம் வழங்கப்பட்டது. இப்பொழுது இந்த 500 சீட்டின் கணக்கின் அடிப்படையிலே பார்த்தால், 42 சதவிகிதம் வருகிறது. ஆக 69 சதவிகிதம் பெற்ற, அந்த 690 இடங்களைப் பெற்றவர்களுக்கு 58 சதவிகிதம். ஆக மொத்தத்திலே, 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது இந்த அறிவிப்பினாலே, இந்த நடைமுறையினாலே 58 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. 31 சதவிகிதமாக உள்ள O.C.-க்கு இந்த அறிவிப்பினாலே 42 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. இது மிகப் பெரிய மோசடிக் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. இந்த விளக்கத்திற்கு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை கடந்த சில மாதங்களுக்கு முன்பு வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பிலே மருத்துவப் படிப்பிற்குத் தேர்வு செய்யக்கூடிய நேரத்திலே, இங்கே எல்லா சமுதாய மக்களுக்கும் முறையாக இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் 2 அமைச்சர்கள் பதிலுரை சொல்ல வேண்டும். உங்கள் பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நல்ல கருத்தைச் சொன்னால் மணியடித்துக்கொண்டிருக்கிறீர்கள். பல உறுப்பினர்களுக்கும்



பொருந்தக்கூடிய ஒரு முக்கியமான கருத்தைக் கூறும்போது மணியடிக்கிறீர்கள். சட்டமன்றத்திலே இப்படிப்பட்ட நடைமுறைகளையெல்லாம் பின்பற்றக்கூடாது. என்ன நீதி இது? சமூக நீதி இங்கேயே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல் பேச ஒத்துக்கொண்டார்கள். உங்களுக்கு மட்டும் கொடுத்தால் எப்படி? சரி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்தக் கருத்தின்படிப் பார்த்தாலும் கூட, 31 சதவிகிதம் O.C. இருக்கிறது. அதிலே அவர் சொன்னது B.C.-க்கு 23 கிடைக்கப்பெற்றிருக்கிறது. M.B.C.-க்கு 3, S.C.-க்கு 5, S.T.-க்கு ஒரே ஒரு மாணவன். சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது O.C.-யிலே 31-லே, B.C. 23 சதவிகிதம் எடுத்துவிட்டார்கள் என்று சொன்னால், மொத்தம் எவ்வளவு, B.C.—30+23=B.C.-க்கு 53, M.B.C.-க்கு 20+3=23. அப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு, நன்கு கவனிக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைத்த ஒரு சதவிகிதம் கூட, அல்ல ஒரே ஒரு சீட். இந்த இட ஒதுக்கீடு இல்லையென்று சொன்னால், தாழ்த்தப்பட்டவர்கள் இந்த நாட்டிலே எப்படிப் படிக்க முடியும், வேலைவாய்ப்பிற்கு வர முடியும்? ஆகவே, எவ்வளவு பெரிய குறைபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அரசாங்கக் கணக்குப்படி, உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய தமிழக அரசாங்கத்தின் சார்பிலே மரியாதைக்குரிய திரு. ஏ.கே. கங்குலி அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார். உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. பரூச்சா முன்னால், இந்த நாட்டிலே இட ஒதுக்கீட்டைப் பெறக்கூடிய மக்கள்தொகை 88 சதவிகிதம், அவர் சொன்னது. ஆகவே முக்கியமானது, தயவுசெய்து கொஞ்சம் நேரம் கொடுங்கள். எல்லோருக்குமான பேச்சு இது. எனக்கு மட்டும் அல்ல. ஆக, இப்படி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்திலே, நிதி எல்லா வகையிலும் குறைக்கப்பட்டிருக்கிறது. அட்டவணைப் பட்டியலிலே இருக்கக்கூடிய, இந்த தலித் மக்கள் முன்னேற வேண்டும் என்பதிலே எல்லோருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. அந்த வகையிலே இந்த ஆண்டு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இது கடந்த ஆண்டைவிடக் கூடுதலாக இருந்தாலும்கூட, இது போதாது. இன்னும் கூடுதலாக ஆக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேநேரத்திலே இங்கே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர், ஆகியோர் 70 சதவிகிதத்திற்கு மேலே இருக்கிறார்கள். இவர்களுக்கு 2001-2002-லே, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கியிருப்பது 152.4 கோடி ரூபாய். ஆனால் இந்த ஆண்டு, 2002-2003-லே ஒதுக்கியிருப்பது 124.69 கோடி ரூபாய். அதாவது, 27.75 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. 18.2 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்கள்தொகை 20 சதவிகிதம். இவர்களுக்கு தற்போது இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டான, 18 சதவிகிதத்தை 22 சதவிகிதமாக உயர்த்திக் கொடுத்தால்தான் பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 369.74 கோடி ரூபாய். ஆக, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே, M.B.C., B.C., Minorities, Denotified எல்லோருக்கும் சேர்த்து, ஒருவருடைய செலவு அரசாங்கத்திலிருந்து வழங்கக்கூடிய தொகை என்பது 28 ரூபாய், 70 காசு. அதைப்போல S.C./S.T.-யின் தனிச் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது 290 ரூபாய். இது எவ்வளவு பெரிய முரண்பாடு என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மிகக் குறைவான நிதியொதுக்கம். இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தின் அடிப்படையிலே, கடந்த ஆண்டு 58.5 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு 52 இலட்சம் ரூபாய். நாம் எல்லோரும், பொருளாதாரத்திலே, தொழில் துறையிலே மேலோங்க வேண்டும் இல்லையா? தொழில் செய்வதற்கு ஆண்டினுடைய நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டு ரூ. 58.5 இலட்சம். இந்த ஆண்டு ரூ. 52.00 இலட்சம். இதை வைத்துக்கொண்டு 70 சதவிகிதம் மக்கள் பொருளாதார ரீதியாக எந்த வகையிலே முன்னேற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



அதைப்போலவே கல்வித் திட்டத்திற்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 94.74 கோடி ரூபாய், இந்த ஆண்டு 77.6 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. குறைவு என்பது 17.14 கோடி ரூபாய். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், வீட்டு வசதிக்காக கடந்த ஆண்டு 12.36 கோடி ரூபாய். இந்த ஆண்டு 3.36 கோடி ரூபாய். மொத்தம் 9.00 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக இப்படி எல்லா வகையிலும் அரசு நிதியைக் குறைத்துக்கொள்வதற்கு காரணம் என்ன என்று சொன்னால், எனக்குத் தெரிந்த காரணத்தைச் சொல்கிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மக்கள்தொகை எவ்வளவு? அந்தக் கணக்கு கிடையாது. இந்த மக்களுடைய பொருளாதார நிலை என்ன? இவர்களுடைய கல்வி நிலை என்ன? இவர்களுடைய வேலைவாய்ப்பு என்ன? ஒரு குடும்பத்தினுடைய ஆண்டு வருமானம் என்ன? இதைப்பற்றியெல்லாம் விவரங்கள் இல்லாத காரணத்தினாலேதான் அரசு நிதி ஒதுக்கவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே....

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Adi Dravidar and Tribal Welfare Department-ஐப் பொறுத்தவரைக்கும், நிதி ஒதுக்கீட்டின் மூலமாக ஒதுக்கப்பட்ட நிதி அல்லாமல், ஹட்கோ அமைப்பின் மூலமாக நிதி ஒதுக்கீட்டிலே Non budgetary provision is not normally shown in the budgetary allocation. அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையிலே, ஹட்கோ அமைப்பின் மூலமாக, 41 கோடியே, 40 இலட்சம் ரூபாய் Adi Dravidar and Tribal Welfare Department-க்கும், அதைப்போலவே, Backward Classes and Most Backward Classes Welfare Department-க்கு 27 கோடியே, 22 இலட்சம் ரூபாய் கடன் பெற்று, அதனுடைய அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, அதுவும் குறைவாகத்தானே இருக்கிறது. இன்னும் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கம். ஆகவே அந்த வகையிலே, பல்வேறு பிரிவுகளிலே இருக்கக்கூடிய இவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு எல்லா வழிவகைகளையும் செய்ய வேண்டுமென்று

சொன்னால், நம்முடைய அரசு கட்டாயம் சாதிவாரியாக கணக்கெடுப்பைச் செய்தாக வேண்டும். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதிச் சங்கங்களும் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அரசியலமைப்புகள் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு என்பதைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். 1989-லே கவர்னர் அலெக்ஸாண்டர் இருந்த நேரத்திலே, வெங்கடகிருஷ்ணன் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த வெங்கடகிருஷ்ணன் கமிஷன், சாதிவாரிக் கணக்கு எடுக்க வேண்டுமென்று சொல்லி வற்புறுத்தியது. ஆனால் 1989-லேயிருந்து இன்றைய வரையிலே அரசு கிடப்பிலே போட்டிருக்கிறது. அந்த சாதிவாரிக் கணக்கெடுப்பைக் கட்டாயம் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)**

தமிழ்நாடு, பெரியார் பிறந்த மண். பெரியார் பிறந்த மண்ணிலே சாதிவாரிக் கணக்கெடுப்பு இல்லாமல் இட ஒதுக்கீடு என்பதைச் சரியாக நிறைவேற்ற முடியாது என்ற கூற்று, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே நமக்குச் சரியாகத் தெரிய வருகிறது. ஆந்திரப்பிரதேசத்திலே, 1968-லே — அங்கு பெரியார் பிறக்கவில்லை — மக்கள்தொகை அடிப்படையிலே, அன்றைய நேரத்திலே Backward Class-க்கு 25 சதவிகிதம். அதற்குப் பிறகு இன்னும் சிறப்பாக இருக்கிறது. அந்த Backward Class-க்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய 25 சதவிகித இட ஒதுக்கீட்டை, அதன் நான்கு பிரிவுகளாக, தொகுப்புகளாக A-Group 7 சதவிகிதம்; B-Group 10 சதவிகிதம், C-Group 1 சதவிகிதம்; D-Group 7 சதவிகிதம். இது Backward Class. இப்படி ஆந்திர மாநிலத்திலே, 1968-லே ஒதுக்கப்பட்டது. அதைப்போலவே, Scheduled Caste. இந்த S.C.-க்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இட ஒதுக்கீடு 14 சதவிகிதம். மலைவாழ் மக்களுக்கு 4 சதவிகிதம். இந்த S.C.-க்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 14 சதவிகிதத்தை, நான்கு தொகுப்புகளாகப் பிரித்து, அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. உண்மையான சமூக நீதி அங்கே கிடைத்துக்கொண்டிருக்கிறது.



அதைப்போலவே கர்நாடக மாநிலத்தைப் பார்த்தீர்களென்றால், சாதிவாரியாகவே வழங்கப்பட்டிருக்கிறது. 1959-லே, அப்போதே. 14 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 14 தொகுப்புகளிலேயும், அங்கு சாதிவாரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே இரண்டு சாதிதான் major சாதிகள். ஒன்று, லிங்காயட்ஸ், அடுத்தது, ஒக்கலிக்கா. அந்த லிங்காயட்ஸ். including ஜங்கம்மா மற்றும் குடுவக்காளா. இந்த மூன்று சாதிக்கு மட்டும் 10.9 சதவிகிதம் வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த major community ஒக்கலிக்கா, including ரெட்டி, குஞ்சியாஸ், மட்வாரா மற்றும் குப்பூஸ். இந்த ஐந்து சாதிகளுக்கும் 9.2 சதவிகிதம். இந்த இரண்டு போக, மீதி இருக்கக்கூடியவர்களுக்கு 3.3 சதவிகிதம். 4.8 சதவிகிதம், 2.8 சதவிகிதம், 7 சதவிகிதம், 1.5 சதவிகிதம், 1.7 சதவிகிதம், 1.6 சதவிகிதம், 1.5 சதவிகிதம், 3.8 சதவிகிதம், 3.9 சதவிகிதம், 2 சதவிகிதம். ஆக 54 சதவிகிதம். இது எப்பொழுது, 1959-லே. இப்படி சாதிவாரியாக வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே கேரளாவை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், கேரளாவிலேயும் சாதிவாரியாக வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே, 1970-லே 10 தொகுப்புகளாகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஈழவர் சாதிதான், அங்கே major community. ஆகவே ஈழவர்களுக்கு 14 சதவிகிதம். முஸ்லீம்களுக்கு 12 சதவிகிதம். Anglo-Indian, Latin Christian மதம் மாறிய கிருஸ்தவர்கள், அவர்களுக்கு 4 சதவிகிதம். நாடார் சமுதாயம் 2 சதவிகிதம். S.C./S.T. கிருஸ்தவர்கள் 1 சதவிகிதம். விஸ்வகர்மா 3 சதவிகிதம். தீயவர்ணம் 1 சதவிகிதம். ஏனைய பிற்படுத்தப்பட்ட, அதாவது மக்கள் தொகையில் குறைவான எண்ணிக்கையிலே உள்ள 60 சாதிகளுக்கு 3 சதவிகிதம். S.C.-க்கு 8 சதவிகிதம், S.T.-க்கு 2 சதவிகிதம். ஆக இப்படி, கேரள மாநிலத்திலேயும் தெளிவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைப் பார்க்கின்ற நேரத்திலே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, நாங்களெல்லாம் கடந்த ஐந்தாண்டுகாலம் சட்டமன்றத்திலே பேசி, அன்றைய தமிழக அரசு ஒரு வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த வெள்ளை அறிக்கையின்படிப் பார்த்தாலும்கூட, அந்த இட ஒதுக்கீடு என்பது முழுமையாக இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு

இருக்கக்கூடிய 20 சதவிகித இட ஒதுக்கீடு என்பது, A, B, C, D. அரசுப் பணிகளிலே A-Category, B-Category, C-Category and D-Category இந்த நான்கிலேயும் இல்லை, அரசுத் துறைகளிலே. அரசு சார்பு நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய பொதுத் துறை நிறுவனங்கள், 96 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த 96 நிறுவனங்களிலேயும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, இதுவரையிலே கிடைத்த இட ஒதுக்கீடு என்பது 6.7 சதவிகிதம். 8.2 சதவிகிதம். இப்படி 10-க்குக் குறைவாகவே இருக்கிறதே தவிர, எந்தத் துறையிலேயும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகிதம் இல்லை. அதைப்போலவே தாழ்த்தப்பட்டவர்களுக்கும். இப்படி எல்லா நிலைகளிலும் நம்முடைய தமிழக அரசிலே இருக்கக்கூடிய இட ஒதுக்கீடு என்பது முழுமையாக இல்லை என்ற காரணத்தினாலேதான், நம்முடைய முதலமைச்சர் அவர்களைக்கூட, இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்த காரணத்தினாலே, அவர்களை சமூக நீதி காத்த வீராங்கனை என்று சொன்னார்கள்; நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்த சமூக நீதி, தமிழ்நாட்டிலே பெரியார் பிறந்த மண்ணிலே முழுமையாக இல்லை. இதை நிறைவேற்றவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல இன்னொரு முக்கியமான பிரச்சினை. இந்த அரசுத் துறைகளிலே— தொடர்ந்து மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே 108 ஜாதிகள். அதிலே மேஜர் கம்யூனிட்டி—தமிழகத்தினுடைய மூன்றில் ஒரு பங்கு மக்கள்தொகை என்று சொல்வது வன்னியர் சமுதாயம். இந்த வன்னியர் சமுதாயத்திற்கு அரசுப் பணிகளிலே இருக்கக்கூடிய புள்ளிவிவரங்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இதுவரையிலே தமிழக அரசிலே தற்போது அரசு தலைமைச் செயலாளர் இல்லை. உள் துறைச் செயலாளர் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துக்கொள்கிறேன். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி இல்லை, உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர். ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் இல்லை. சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத் தலைவர் இல்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் இல்லை. வெளிநாட்டுத் தூதுவர்கள் இல்லை. கவர்னர் இல்லை. அரசுப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள்



தமிழ்நாட்டிலே இதுவரையிலே ஒருவர்கூட வன்னியர் இல்லை. மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் 30 பேர். ஒரு S.P.கூட வன்னியர் இல்லை. அரசு மருத்துவக் கல்லூரி Dean 8 பேர். ஒருவரும் இல்லை. அரசு பொறியியல் கல்லூரி முதல்வர்கள் 6 பேர். ஒருவரும் இல்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, மின் வாரியத் துறை, வீட்டு வசதி வாரியம், Agricultural Engineering என்று இத்தனைத் துறைகளிலும் சேர்த்து 36 தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். ஒருவர்கூட வன்னியர் இல்லை. அரசுக் கல்லூரி முதல்வர்கள் 60 பேர். ஒருவரும் இல்லை. மாவட்ட நீதிபதிகள் 35 பேர். ஒருவரும் இல்லை. மாவட்ட திட்ட அலுவலர்கள் 29 பேர். ஒருவரும் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலர், D.R.O..29 பேர். ஒருவரும் இல்லை. அரசு சார்பு நிறுவனம் மற்றும் கழகங்களினுடைய தலைவர்கள், மேலாண்மை இயக்குநர்கள் 60-க்கும் மேற்பட்ட பதவிகள். ஒருவரும் வன்னியர் இல்லை. கூட்டுறவு நூற்பாலைத் தனி அலுவலர்கள் 12 பேர். ஒருவரும் இல்லை. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தனி அலுவலர்கள் 17 பேர். ஒருவரும் இல்லை. பல்கலைக்கழகப் பதிவாளர்கள் 16 பேர். ஒருவரும் இல்லை. I.A.S. அதிகாரிகள் 329 பேர். அதிலே வன்னியர்கள் 10 பேர். நீங்கள் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர், உயர் நீதிமன்றத்திலே, நீதிபதிகளிலே இடம் இல்லை என்று கூறினார்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்திலே உயர் நீதிமன்ற நீதிபதிக்கு என்று எந்தவிதமான Reservation Policy-யும் கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தெரிந்துதான் சொல்கிறேன். நீதித் துறையிலேயும் இட ஒதுக்கீடு வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் ஒருவரும் இல்லையா? காமராஜர் அவர்கள் அதைத்தான் சொல்லியிருக்கிறார். தகுதி . . .

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தெரிந்துகொண்டே சொல்கிறார் என்றால், அது எனக்குப் புரியவில்லை. சட்டத்தைத்

தெரிந்துகொண்டு சொல்கிறாரா, அல்லது தெரியாமல் சொல்கிறாரா? தெரிந்துதான் சொல்கிறேன் என்று மீண்டும், மீண்டும் சொல்லிக்கொண்டு இருக்கிறார், இடம் இல்லை என்று. நான் சொல்கிறேன், சட்டத்திலே அதற்கு இடம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இடம் இல்லை என்பது தெரியும். இருந்தாலும்கூட, இந்த அடித்தட்டிலே இருக்கக்கூடிய சமுதாய மக்கள் மேலே வருவதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். சட்டம் என்பது யாருக்காக, மக்களுக்காக. மக்களுக்காக சட்டத்தை . . .

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான் சொல்வது இந்திய அரசமைப்புச் சட்டம். நன்கு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த மறு ஆய்வுக் குழுவை இப்போது அமைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் திருத்திக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே அதையெல்லாம் மாற்ற திருத்தம் கொண்டுவர வேண்டும். காலத்திற்கு ஏற்பச் சட்டத்தைத் திருத்த வேண்டும் அதைத்தான் நான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பிறகு, I.A.S. அதிகாரிகள் 329 பேர், 10 பேர்தான் வன்னியர்கள். ஒருவர் இப்போது training- இருக்கிறார். துறை மேலாளர்கள் 36, வன்னியர்கள் 2 பேர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 29. ஒருவர்தான் வன்னியர். கூடுதல்/இணைச் செயலாளர்கள் Non-I.A.S.-60 பேர். ஒருவர்தான் வன்னியர். துறைத் தலைமைத் தலைவர், இயக்குநர் மற்றும் ஆணையர்கள் 75-க்கும் மேற்பட்ட பதவிகள் இருக்கின்றன. 2 பேர்தான் வன்னியர். பல்கலைக்கழக துணை வேந்தர்களில் 16 பேரிலே ஒன்று. உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் இதர நீதிபதிகள் 36 + 19. அதிலே ஒன்று. I.P.S. அதிகாரிகள் 181. அதிலே 7 பேர் வன்னியர்கள். ஐ.எப்.எஸ். அதிகாரிகள் 125, அதிலே 3 பேர் வன்னியர்கள். இவ்வளவு பணிகள் குறைவாக இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)



**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போன்றுதான் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த 12-வது சட்டமன்றத்திலே மூன்று அமைச்சர்களையும், ஒரு அரசு தலைமைக் கொறடாவையும் நியமித்து அந்த மாபெரும் வாய்ப்பினை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.பி.எஸ்./ஐ.ஏ.எஸ். எல்லாம் தேர்வு எழுதி வருவது. அதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மணி, கொஞ்சம் ஒத்துழைப்பு தந்து 2 நிமிடங்களிலே உரையை முடித்தீர்கள் என்றால் பரவாயில்லை. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நான்கு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு பேசுவதற்கான வாய்ப்பே கொடுக்கப்படவில்லை. அதனால் தயவு செய்து - மாலையிலே வேறு 2 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. எல்லோரும் போய்விட்டுத் திரும்ப வர வேண்டும். 2 மணித்துளிகளிலே உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தியோடு செய்தியாக 4 கட்சிகளுக்கும் இடம் அளிக்கப்படவில்லை என்று சொல்கிறீர்களே. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எங்களுக்கு வாய்ப்பில்லை என்றால், எங்களை எல்லாம் முற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக ஆக்கிவிட்டீர்களா? அதோடு 1½ மணியும் ஆகிவிட்டது . இப்பொழுது வந்து சபையை ஒத்தி வைத்து எங்களை அனுப்புவீர்கள் என்று எதிர்பார்த்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குள்ளேயேவா? ஒன்றரை மணிக்கேவா? கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சிவபுண்ணியம் இதுவரைக்கும் பேசாமல் இருந்தார். நான் பேசுகையிலேதான் தொல்லை. மற்றவர்களெல்லாம் பேசும்போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். நல்ல கருத்தைப் பேசுகின்ற நண்பர் அவர். ஆகவே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், ஆவினிலே பாதாம்கீரும், மோரும் கொடுத்திருக்கிறார்களாம். கொஞ்சம் குடித்து பசியைத் தீர்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே பள்ளிகளிலே, கல்வி நிலையங்களிலே படிக்கின்ற மாணவர்களுடைய தேர்ச்சி விகிதம், மாணவர்களுடைய படிக்கின்ற விகிதம், மாணவர்களுடைய இடைவிலகல் விகிதம் இவற்றையெல்லாம் சேர்க்கை பார்க்கின்ற நேரத்திலே இங்கே ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். மாணவ மாணவிகள் தேர்ச்சி விழுக்காடு என்பது கடந்த ஆண்டு 2001-2002-லே தருமபுரி - 55.57%, புதுக்கோட்டை - 53.58%, பெரம்பலூர் - 57.25%, திருவாரூர் - 62.07%, தஞ்சாவூர் 62.82%, விழுப்புரம் - 44.14%, கடலூர் - 47%, திருவண்ணாமலை - 42.22%, வேலூர் - 52.67%, காஞ்சிபுரம் - 52.58%, திருவள்ளூர் - 41.11%, இராமநாதபுரம் - 51.14% இது மாணவர்களுடைய தேர்ச்சி விகிதம். இதைப்போலவே, இடை விலகல் இன்னும் நிறைய இருக்கிறது. புள்ளி விவரங்கள் சொல்வதற்கு நேரம் இல்லை. இப்படி தொடர்ந்து, வட மாவட்டங்களிலேதான் இந்த தேர்ச்சி விகிதம் இடைவிலகல் எல்லாமே குறைவாக இருக்கிறது. ஆகவே இப்படி இருக்கக்கூடிய நேரத்திலே இங்கே யார் அதிகமாக வாழ்கிறார்கள், இவர்களுக்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமா, வேண்டாமா? பாகுபாடு இல்லாமல் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களை கல்வியிலே, வேலைவாய்ப்பிலே, பொருளாதாரத்திலே, சமூக அந்தஸ்திலே உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைத்தான் இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி எல்லா வகைகளிலும் பின்தங்கியிருக்கக்கூடிய இந்தச் சமுதாய மக்களுக்கு 20% இட ஒதுக்கீடு பெற்றிருக்கக்கூடிய இந்தச் சமுதாய மக்களுக்கு இந்த இட ஒதுக்கீடு போதாது. உதாரணத்திற்கு ஒரு மாவட்டத்திலே, தலைநகரிலே கல்லூரி இருக்கிறது அல்லது பள்ளிகள் இருக்கின்றன. அதிலே இட ஒதுக்கீடு கொண்டுவருகிறார்கள். உதாரணத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே பெருமைமிக்க நாடார்



சமூக மக்கள் 60% இருக்கிறார்கள். மற்ற பிற்படுத்தப்பட்டவர்களும் இருக்கிறார்கள். S.C./S.T. இருக்கிறார்கள். அங்கே போய் 30% இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்லூரிகளிலே, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், அந்த மாவட்ட அளவிலே வரக்கூடிய வேலைவாய்ப்பிலே 30% ஒதுக்கினால் நாடார் சமூக மக்கள் எப்படிப் பயன் அடைவார்கள்? மற்ற பிற்படுத்தப்பட்டவர்கள் எப்படிப் பயன் அடைவார்கள்? உதாரணத்திற்கு வேலூர் மாவட்டத்திலே, காஞ்சிபுரம் மாவட்டத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் 40%-க்கு மேலே இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே 18% என்று சொன்னால், கல்லூரிகளிலே மற்ற இடங்களிலே எப்படிப் பொருத்தமாக இருக்கும்? மேற்சொன்ன காரணத்தினாலே மாவட்ட அளவிலே உள்ள கல்வி நிலையங்களிலே மக்கள்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு கொண்டுவருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சீக்கிரம் முடித்துவிடுகின்றேன். பால் உற்பத்தி. நான் முடித்துவிடுகின்றேன். பால் ஊற்றியவர்கள் எல்லாம் ரொம்ப நாளாகவே பட்டுவாடா இல்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த பால் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். மினி டெய்ரியை எல்லாம் மூடிக் கொண்டு இருக்கிறார்கள். சரியாக பால் யாரும் வாங்கவில்லை என்று சொல்வதால் அங்கே பால் கொள்முதல் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்புறம் டாக்டர் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

மிக முக்கியமான, எல்லா விவசாயிகளுடைய கோரிக்கை. சினை ஊசி போடுகிறார்கள், மாட்டுக்கு. அதற்கு 12 ரூபாய், 15 ரூபாய் கட்டணம். அரசு இலவசமாகவே ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆக இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கையிலே நான் பேசுகின்ற நேரத்திலே இன்னொன்றை மிக முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது (மணியடிக்கப் பெற்றது). முடித்து விடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரத்திற்கு மேலே ஆகிவிட்டது.

பிற்பகல் 1-35

**திரு. ஜி.கே. மணி:** நான் மிக முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் அளிக்கின்ற நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. மணி, தயவுசெய்து மானியக் கோரிக்கையோடு பேசி முடியுங்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது முடிந்துபோன ஒன்று. கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று திரு. மணி அவர்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கினாலும்கூட இன்று மிகப் பின்தங்கிய சமுதாயமான வன்னியர் சமுதாய மக்களுக்கு இந்த நிவாரண உதவி வழங்குவது முதலாக எந்த நிலையிலும் நீங்கள் நீதி வழங்கவில்லை என்பதைக் கண்டித்து, பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியான நேரத்தில் வெளிநடப்புச் செய்கிறீர்கள். 31 மணித்துளிகள், வேறு யாருக்கும் கொடுக்காத அளவுக்கு வாய்ப்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 31 மணித்துளிகள் நீங்கள் பேசி முடித்துவிட்டு வெளிநடப்பும் செய்கிறீர்கள். அதைப்பற்றிக் கவலையில்லை.

இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகளும் இன்று மதியத்திற்கு மேலே எடுத்துக்கொள்ளப்படும். மதியத்திற்கு மேலே இரண்டு மானியக் கோரிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 4-30 மணியளவில், **மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் பதிலுரை.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்ற குறள்நெறிப்படி, அஞ்சாமை, எளியோர்க்குக் கொடுத்துதவுதல், அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுறாமல் இருத்தலே வேந்தர்க்கு இயல்பு என்ற குறளுக்கு முழு இலக்கணமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் செயல்படும் அமைச்சரவையில், சாதாரண கழகத் தொண்டர்களில் ஒருவனான என்னை அமைச்சராக நியமனம் செய்ததன்மூலம் எனக்கு அரசியல் அங்கீகாரமும், முகவரியும் தந்து, ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கற்பித்து, துன்பம் வரும்போது துவளாத் தன்மைக்கு முன்மாதிரியாக இருந்து, எங்களை வழி நடத்தும் அன்னையே, நானும் என் குடும்பமும் போற்றி வணங்கும் மனித தெய்வம், எங்களின் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில், என் நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, எனது எளிய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கிராமப் பகுதியிலுள்ள பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூகநல முன்னேற்றத்திற்கும், பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், பால் வளத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் பால் கொள்முதல் திட்டத்தில் மட்டுமே உறுப்பினர்களால் வழங்கப்படக்கூடிய பாலுக்கான பணம் முழுவதுமாக கிடைக்கப் பெறுகிறது. இதனால் கிராமப்புற மக்களின் குடும்பத்திற்கும், வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கும் பால் வளத் துறை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து உதவிகரமாக இருந்துவருகிறது. தற்போது சந்தையில் விற்பனைக்கு வரும் எந்தப் பொருளுக்கும் தரம் மிக முக்கியமானதாக உள்ளது. தரமான பால் உற்பத்தி செய்தால்தான், பொது மக்களுக்குத் தரமான பாலை விநியோகம் செய்ய இயலும். 1991-96 ஆம் ஆண்டில், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், தரமான பாலை உற்பத்தி செய்து, தரமான பாலை மட்டுமே கொள்முதல்

செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடும், நுகர்வோருக்குத் தரமான பாலை விநியோகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடும், கலப்படம் செய்வதைத் தவிர்க்கவும், பசும்பாலுக்கான கொள்முதல் தரம், கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதமும், இதரச் சத்து 8.5 சதவிகிதமும் இருத்தல் வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டு, அதே சமயத்தில், பால் உற்பத்தியாளர்களின் நலன் பாதிக்காவண்ணம், குறைந்தபட்ச கொழுப்புச் சத்து 3 சதவிகிதம் மற்றும் இதரச் சத்து 8 சதவிகிதம் வரை, பசும்பால் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நடைமுறையைக் கடைப்பிடித்தோம். 8 சதவிகித அளவுக்குக் கீழ் வரக்கூடிய பாலுக்கு, விலைப் பட்டியலில்கூட இடம் கொடுக்கப்படவில்லை. பால் உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் ஊற்றும் பாலுக்குச் சீரான, நியாயமான விலை கிடைத்தது. தரமான பாலைக் கொள்முதல் செய்த காரணத்தினால், ஒன்றியங்களும், அவற்றைச் சார்ந்த சங்கங்களும் இலாபத்தில் இயங்கி வந்தன. மேற்கண்ட காலகட்டங்களில், மாநில அளவில் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் மொத்த சராசரி இதரச் சத்து, 8.3-சதவிகிதத்திலிருந்து 8.4 சதவிகிதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பாலின் குறைந்தபட்ச தரத்தினை முற்றிலுமாக மாற்றினார்கள். பசும்பாலுக்கு இதரச் சத்து 8 சதவிகிதத்திற்கும் குறைவாக 7.7 சதவிகிதம் வரை கொள்முதல் செய்யலாம் என முடிவெடுத்தார்கள். இதன் விளைவாக, சங்கங்களில் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் மொத்த சராசரி இதரச் சத்து 8 சதவிகிதம் குறைந்ததோடு அல்லாமல் தரம் குறைந்த பாலுக்கும், தண்ணீருக்கும் விலை கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இலாபத்தில் இயங்கிக்கொண்டிருந்த பல சங்கங்கள், நட்டத்தில் இயங்க, முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் வழிவகை செய்துவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றியங்களுக்கு வரப்பெறும் பாலின் தரம் குறைந்தது. தரத்தைக் கைவிட்டால், சந்தையில் போட்டியைச் சந்திக்க இயலாது. நிர்வாகத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் செயல்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், 1-12-2001 முதல் பசும்பாலின் குறைந்தபட்ச கொள்முதல் தரத்தை 1996 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்ததைப்போல, குறைந்தபட்ச அளவு கொழுப்புச் சத்து 3 சதவிகிதம் மற்றும் இதரச் சத்து 8 சதவிகிதம் என மாற்றியமைக்கப்பட்டது. இப்போது, பெருவாரியான ஒன்றியங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலின் மொத்த சராசரி கொழுப்புச் சத்து 4.3 சதவிகிதத்திலிருந்து 4.5



சதவிகிதமாகவும், இதரச் சத்து 8.3 சதவிகிதத்திலிருந்து 8.4 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ.2 கோடி அளவில் சேமிப்பு ஏற்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

7-4-1998 அன்று முந்தைய தி.மு.க. அரசு பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.40 உயர்த்தியும், விற்பனை விலையை ரூ.1-80 ஆக உயர்த்தியும் அறிவித்தது. 7-4-1998-ல் செய்த அறிவிப்பை 16-4-1998 அன்று மாண்புமிகு முன்னாள் முதல்வர் சட்டமன்றத்தில் லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா என விற்பனை விலையைக் குறைத்ததுடன், விலைக் குறைப்பால் ஏற்படும் நட்டததை இணையத்திற்கும் ஒன்றியங்களுக்கும் ஈடு செய்து தருவதாகவும் அறிவித்தார்கள். இவ்வகையில் 365 நாட்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா என்ற அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 14.80 இலட்சம் லிட்டர் பால் விற்பனைக்கு இழப்பாக ரூ.27 கோடியும், 314 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களை மீண்டும் பணி அமர்த்தியதன்மூலம் ஏற்பட்ட இழப்பையும் சேர்த்து மொத்தம் ரூ.30 கோடியை வழங்குவதாகவும் இம்மாமன்றத்தில் முன்னாள் முதல்வரால் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் வழங்கியதோ ரூ.20.70 கோடியாகும். ஆக முதலாம் ஆண்டிற்கான வருவாய் இழப்பு ரூ.24.88 கோடியும், இரண்டாம் ஆண்டிற்கான வருவாய் இழப்பு ரூ.24.90 கோடியும் ஆக மொத்தம் இணையம் மற்றும் ஒன்றியங்கள் கோரிய ரூ.49.78 கோடி தரப்படவில்லை. ஏற்கெனவே லிட்டருக்கு 50 பைசா விலைக் குறைப்பினால் பாதிக்கப்பட்ட 17 ஒன்றியங்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் வருவாய் இழப்பு முழுவதுமாக ஈடு செய்யப்படாததால் பால் பணம் பட்டுவாடா நிலுவை உயர்ந்துகொண்டே போய்விட்டது. இதை அறிந்த முந்தைய அரசு மானியத்தை எல்லாம் மறந்துவிட்டு கடனாக ரூ.28 கோடியை 17 சதவீத வட்டியுடன் வழிவகை முன்பணமாக வழங்கியது. முன்னாள் முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த ரூ.30 கோடியும் வழங்கவில்லை. விற்பனை விலையைக் குறைப்பதுபோல் குறைத்து, நிர்வாகத்தைச் சரிவரச் சீரமைக்காமல் பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையை நிலுவையாக வைத்துவிட்ட கபட நாடகத்தைக் கண்டு தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் பால் உற்பத்தியாளர்கள்மீது கருணை கொண்டு நிர்வாகத்தைச் சீரமைக்க உத்தரவிட்டதுடன், தி.மு.க.

அரசால் பால் வளத் துறையின்மீது சுமத்தப்பட்ட கடன் தொகை ரூ. 28 கோடியை 2001-2002 ஆம் ஆண்டு மானியமாகவும் அதன் மீதான வட்டி ரூ.3.73 கோடியைத் தள்ளுபடி செய்தும் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மேற்கண்ட உத்தரவு, ஆவின் நிர்வாகம் மற்றும் ஒன்றியங்கள் மூச்சு திணறிக்கொண்டிருந்த வேளையிலே அவர்களுக்கு பிராணவாயு வழங்கியதுபோல் இருந்தது என்றால் அது மிகையாகாது. மேலும் இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரை மற்றும் ஆலோசனையின்படி விலை நிர்ணயிப்பதில் இணையம் மற்றும் ஒன்றியங்களுக்கு முழுச் சுதந்திரம் அளித்ததன்மூலம், ஆவின் இணையம், எதிர்பார்த்த ரூ.28.10 கோடி நட்டத்திலிருந்து மீண்டுவிட்டதுடன், 2001-2002 ஆம் ஆண்டு மார்ச் முடிய உள்ள காலகட்டத்தில் ரூ.15.46 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது. அதேபோன்று திருச்சி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களும் நிகர லாபம் ஈட்டியுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பால் விற்பனை மற்றும் வாடிக்கையாளர் நலம்:** பால் கொள்முதல் விலை, விற்பனை விலை மற்றும் நிர்வாகத்தைச் சீரமைக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், மாநிலம் முழுவதும் உற்பத்தியாகும் பால், சென்னை மற்றும் பெருநகரங்களில் உள்ள நுகர்வோரைச் சரியான முறையில் சென்றடைவதற்கான விற்பனை யுக்திகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். நுகர்வோர் சேவையை மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் பால் அட்டைகளை கணினி மூலம் புதுப்பிப்பதற்கும் புதிய அட்டைகள் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். Credit Card மூலமும் காசோலைகள் மூலமும் பால் அட்டை வழங்கும் வசதி அறிமுகப்படுத்தப்படும். வாடிக்கையாளர் சேவையை நிறைவாக செய்திட 24 மணி நேரமும் செயல்படும் சேவை மையம் சென்னை நந்தனம் முத்துராமலிங்கனார் சாலையில் அமைந்துள்ள அலுவலகத்தில் செயல்படுத்தப்படும். பால் பொருட்கள் விற்பனையைப் பொறுத்தவரை ஒன்றியங்கள் மற்றும் இணையம் மொத்தமாக விற்பனை செய்த பால் பொருட்களின் மதிப்பு சென்ற ஆண்டு 2000-2001-ல் ரூ. 120 கோடியாக இருந்தது. இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் இந்த ஆண்டு 2001-2002-ல் பால் பொருட்களின் விற்பனை ரூ. 130 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று தமிழகம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பதற்கு முகவர்களை நியமிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவடைந்த மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் நிதிநிலைமையைச் சரி செய்யவும், நட்டத்திலிருந்து மீட்டு தன்னிறைவு பெறவும் 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுகளுக்கு உதவும் வண்ணம் புனரமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவிற்காக ஆகும் தொகையில் 50 விழுக்காடு மத்திய அரசும் 50 விழுக்காடு மாநில அரசும் மானியமாக வழங்கும். முதல் கட்டமாக தேசிய பால்வள வாரியம் இத்திட்டத்தின்கீழ் ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களைத் தெரிவு செய்து முறையே ரூ. 9 கோடி மற்றும் ரூ. 4 கோடி, ஆக மொத்தம் 13 கோடி ரூபாய் அளவிற்கு கருத்துரு ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழக அரசு ஏற்கெனவே ரூ. 6.50 கோடியை அளித்துள்ளது. மத்திய அரசின் பங்காக ரூ. 6.50 கோடி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 93 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் தேசிய கால்நடை மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டக் கால முடிவில் அதிக அளவில் பால் கறக்கக்கூடிய கலப்பினப் பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். துறையிலே பல்வேறு தகவல்களைச் சொல்ல வேண்டுமென்ற நிலையிருந்தாலும் காலத்தின் அருமை கருதி சில புதிய அறிவிப்புகளை இங்கே எடுத்துச்சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 4-40

**பால் பண்ணை வளர்ச்சித் துறை:** மாவட்ட ஒன்றியம் மற்றும் கிராமங்களில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தலைவர் பதவிகளில் பெண்களுக்காக 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறப் பெண்களைத் தன்னாற்றல் மிக்கவர்களாக ஆக்க, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கக் கட்டடம் 1983

மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் 1988 ஆகியவற்றுக்கு திருத்தங்கள் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கறவை மாடு வைத்துள்ள சொந்தக்காரரையும் அக்கறவை மாட்டையும் பாதுகாக்கும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கால்நடை காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டு காப்புறுதி சந்தாத் தொகையை இணையமும் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள், காப்புறுதி நிறுவனங்களுக்கு முதலில் செலுத்திவிட்டு, அதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் ஊற்றும் பாலுக்கான தொகையிலிருந்து தவணை முறையில் நேர் செய்துகொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தவறான நிர்வாகத்தின் காரணமாக, சரியான முறையிலே உற்பத்தியாளர்களுடைய நலனைப் பாதுகாக்கத் தவறிவிட்டதன் காரணத்தை அம்மா அவர்கள் கருணையோடு பரிசீலித்து பால் பணம் பட்டுவாடா செய்வதில் தற்போதுள்ள காலதாமதம் குறைக்கப்படவும், ஆவின் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றில் தேவையான கடனைப் பெற்று உடனடியாக பால் பணம் பட்டுவாடா செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையை சிரமேற்கொண்டு, ஆவின் நிர்வாகம் முடுக்கிவிடப்பட்டு, இன்றையதினம் ரூ. 51.03 கோடி தொகை பணப் பட்டுவாடா செய்வதற்கென எல்லா மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் பெருவாரியான ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகை 22-4-2002 முடிய முழுமையாக வழங்கப்பட்டுவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



சொந்த நிலமற்ற கிராமப்புறப் பெண்கள், பெண்கள் தலைமையேற்கும் குடும்பங்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களில் பால் உற்பத்தித் தொழிலில் ஆர்வமுள்ள பெண்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ஊக்கம் அளிக்கும் STEP திட்டம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ.649.463 இலட்சமாக இருக்கும். இத்திட்டம் 3 ஆண்டுகளில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும். 10,000 பெண்களுக்கு சட்ட அறிவு, கால்நடைகளுக்கான செயற்கைமுறைக் கருத்தரிப்பு, முதலுதவி, பால் சோதனைக் கருவிகளை உபயோகித்தல், பாலில் கலப்படத்தைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகள், பால் மாடுகள் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம் நிலையான வருவாயைத் தொடர்ந்து பெற முடியும். மைய அரசின் 90 சதவிகித நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மீதமுள்ள 10 விழுக்காடு திட்டத் தொகையை பயனாளிகளுக்காக மாவட்ட ஒன்றியங்கள் ஏற்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) கொடுத்தாகிவிட்டது. பணப் பட்டுவாடா நாளையிலிருந்து நிலுவையிலே இருக்காது.

பிற்பகல் 4-45

கண்ணை இமை காப்பதுபோல, தமிழக மக்களின் நலனைக் கட்டிக் காத்துவரும் இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழ் மாநிலத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, பால் வளத் துறை ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் உழைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த உரையை நிகழ்த்த வாய்ப்பு தந்த இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துறை சீரோடும், சிறப்போடும் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்திட மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களாகிய நீங்கள்

பல அரிய கருத்துகளை மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்தீர்கள். அவற்றிலே பல இடங்களிலே பணம் பட்டுவாடா செய்து முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் தங்களுடைய அரிய கருத்துகள் இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் முடிக்கட்டும். இன்னும் இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்திட வேண்டும் என்று சபதம் எடுத்த கருணையற்ற முன்னாள் ஆட்சியாளர்கள் மக்கள் வரிப் பணத்தில் 57 கோடி ரூபாய் பணமும், அதிகார துஷ்பிரயோகமும் செய்து முன்னாள் முதலமைச்சர் என்றும் பாராமல், தாய்க் குலத்தைச் சேர்ந்தவர் என்றும் கருதாமல், உண்மைக்குப் புறம்பான வழக்குகள், சிறைவாசம், தாங்க முடியாத அவமானங்கள், வேதனைகள், சோதனைகள், தேவையற்ற விமர்சனங்கள் தந்து, அதற்காக உயர்ந்த ஸ்தானத்திலிருந்து உதவி புரிந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதற்காக உயர்ந்த ஸ்தானத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்பும், பெரும் பதவிகள் அளித்து, கடந்த ஆட்சி மக்களை திசை திருப்பும் எண்ணத்தில், நாங்கள் ஒன்றும் செய்யவில்லை, சட்டம் தன் கடமையைச் செய்கிறது என்று சொல்லி எங்கள் கழகக் காவல் தெய்வத்தை அழிக்க நினைத்தவர்களின் கொடுமைகளைத் தாங்கி இரவென்றும் பகலென்றும் பாராமல் மக்களைச் சந்தித்து என் போன்ற தொண்டர்களை நம்பிக்கையுடன் அரியாசனத்தில் அமர்த்தி தாய் உள்ளத்தோடு, மக்களுக்காக நீங்கள் இரவு பகல் என்று பார்க்காமல், உழைப்பு, நேர்மை, எளிமை என்று சொல்லித் தந்து, எதையும் தாங்கும்



இதயம் கொண்ட எங்கள் பூமாதேவியான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த மாமன்றத்தில் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால 5 வருட ஆட்சியில் ஏழை மாணவ மாணவியர்களுக்கு 37 விடுதிகள் மட்டும் கட்டப்பட்டன. கருணையற்ற கடந்த கால ஆட்சியாளர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அழிக்க மக்கள் வரிப்பணத்தில் 57 கோடி ரூபாய் செலவழித்து வீணாக்கியதற்குப் பதிலாக, ஏழை மாணவ மாணவிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் ஒரு விடுதி ரூ.30 இலட்சம் வீதம் 190 விடுதிகள் கட்டியிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சுமார் 12,000 ஏழை மாணவ மாணவியர்கள் அடிப்படை வசதிகளுடன் நிறைவுபெற்று இருப்பார்கள் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களை கல்வி, பொருளாதார மேம்பாடு, பயிற்சி, வீட்டுமனை மற்றும் இதர இனங்களாக வகைப்படுத்தலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் இச்சமுதாய ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இவ்வரசு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்குக் கல்வி சிறந்த வழியாகும். இப்பிரிவினரின் கல்வி அறிவினை வளர்க்கவும், அவர்களது கல்வித் தரத்தினை, குறிப்பாக இப்பிரிவினைச் சார்ந்த பெண்களின் கல்வி அறிவினைப் பெருக்கவும், இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 2000-2001 ஆம் ஆண்டு வரையில், 62 பள்ளிகளில் குடிநீர் வசதியும், 72 பள்ளிகளில் மின் இணைப்புகளும் மற்றும் 72 பள்ளிகளில் கழிவறை வசதியும் மட்டுமே செய்து கொடுக்கப்பட்டிருந்தன. 2001-2002 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வழங்கல், கழிவறை வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் அளிப்பதற்கான மிகு விரைவுத்

திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக மீதமுள்ள 193 பள்ளிகளுக்கு ரூ.125 இலட்சம் செலவில் கழிவறை வசதியும், ரூ.47 இலட்சம் செலவில் 50 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும், 40 பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதியும் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும் மின்சார வசதியும் 2002-2003 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பாட்டிற்கென நடப்பு ஆண்டில் ரூ.2250.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

உத்தமபாளையத்தில் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பிரமலைக்கள்ளர் இனத்தவருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க, ஒவ்வொன்றும் 50 இடங்கள் கொண்ட இரு பிரிவுகளை ரூ.85 இலட்சம் செலவில் நிறுவ அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த, ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்கும், எந்த நிபந்தனையுமின்றி அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணமும் ஈடு செய்யப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.722.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்காக, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.1100.69 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலவசக் கல்வித் திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/ மாணவியருக்கு அரசு ஏற்பளித்துள்ளவாறு அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் பொருந்தத்தக்க வீதங்களில்



கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டண விலக்களிப்பினால், கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்புத் தொகை, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் மூலம் இக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.1645.39 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களைப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற ஊக்குவிக்க மாநில/மாவட்ட அளவிலான பரிசுகள் வழங்கப்படுகின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் திட்டத்திற்காக ரூ.2.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்னிரெண்டாம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்கள் பெற்று தொழிற்படிப்பு மேற்கொள்ளும் மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுத் திட்டமும், இதேபோன்று பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்று பட்டயப் படிப்பு மேற்கொள்பவர்களுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசுத் திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது. அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக நடப்பு ஆண்டிற்கென ரூ.22.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-55

972 மாணவர் இல்லங்களில் 770 மாணவர் இல்லங்கள் போதிய அடிப்படை வசதிகளின்றி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே அந்த 770 மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டும் மிகப் பெரும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு அமல்படுத்தியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.36.99 கோடி செலவில் 114 மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதைத் தவிர அரசுக் கட்டடங்களில் இயங்கும் மாணவர்

இல்லங்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகு விரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.35.77 இலட்சம் செலவில் 94 மாணவர் இல்லங்களுக்கு மின் இணைப்புகள் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் மாணவர் இல்லங்களுக்குக் குடிநீர் வசதியும், கழிவறை வசதியும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. 30-9-2001 வரை, கல்லூரி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.400/-ம், பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.225/-ம் மாதாந்திர உணவுக் கட்டணமாக அனுமதிக்கப்பட்டது. பள்ளி இல்ல மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை போதுமானதாக இல்லாததனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இக்கட்டணத்தை, 1-10-2001 முதல் ரூ.225/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்தி, கருணையுள்ளம் கொண்ட அம்மாவின் அரசு உத்தரவிட்டு அமல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு ஆண்டிற்கு மாணவர் இல்லங்களைப் பராமரிக்க மொத்தம் ரூ.4194.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினருக்கு, குறிப்பாக, ஆண்டு வருமானம் ஊரகப் பகுதிகளில் ரூ.16,000/-க்குட்பட்ட மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.24,000/-க்குட்பட்ட சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும்வகையில், சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கு ஆண்டுதோறும் பித்தளை தேய்ப்புப் பெட்டிகளும், முடிதிருத்தும் கருவிகளும், கல் உடைக்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் 2001-2002-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வேலைவாய்ப்புப் பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிடத் தகுதி பெற, இந்த வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் வகை செய்கின்றன. இந்தப் பயிற்சித் திட்டங்கள் மாணவ/மாணவியர் தகுதியினை உயர்த்துவதுடன் வேலைவாய்ப்பினைப் பெறவும் உதவுகின்றன. வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும் அளிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 19 பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.425.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட 5000 மகளிருக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 7 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற மகளிர் தொழில் தொடங்க அவர்களுக்குத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5.00 கோடி கடன் வழங்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெரும்பாலான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குச் சொந்தமாகக் குடியிருப்புகள் இல்லை. எனவே தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி இவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தியது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேலாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய போதிலும், இவற்றில் சுமார் 4000 பயனாளிகளே வீடுகள் கட்டியுள்ளனர். எனவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறையின்கீழ் இவ்விடங்களில் சாலை, தெரு விளக்குகள், குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான மாபெரும் திட்டத்தை இவ்வரசு 2001-2002 முதல் அமல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 2002-2003-லும் தொடரப்படும். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.360.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-00

இந்தியத் திருநாட்டில் பல்லாண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் ஒரு சில மாநிலங்களில் தமிழகம் தலைமையிடம் வகிக்கின்றது. அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களில் அனுமதியிலும் இட ஒதுக்கீட்டுக்கான முன்னோடி இயக்கம் தமிழ்நாட்டில்தான் தோன்றியது. தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக இப்பிரிவினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மிகையானவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாகத் தொடர்ந்து அதிகரித்து தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. அரசுக் கொள்கையின்படி, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடும் இட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது. மண்டல் குழு வழக்கு என்று அழைக்கப்படும் இந்திரா சஹானி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஒட்டுமொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக்கூடாது. இச்சிக்கலைச் சமாளிக்க நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இவ்வரசுதான் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீடு அளித்து வரலாற்றுச் சிறப்புமிக்க (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994) ஒன்றை இயற்றி, அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்தது. இச்சட்டத்தினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியர் ஆயத்திற்கு அனுப்பப்பட்டு அவை நிலுவையில் இருந்து வருகின்றன.



மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் தொகை எத்தனை விழுக்காடாக இருக்கின்றதோ அதற்கு ஏற்றபடி இட ஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான முடிவாகும். இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவதால் இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தந்த மாநில அரசின் முடிவிற்கு விடப்பட வேண்டும். இதற்கு வழிவகை செய்திட அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவர மைய அரசு கோரப்பட்டுள்ளது.

மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை தற்போதுள்ள 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும், அனைத்திந்தியப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துமாறும் மைய அரசு கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 16-11-1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு, 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ.1200 இலட்சமாகவும், செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூபாய் 1119.01 இலட்சமாகவும் உள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார முன்னேற்றத்திற்கென, இப்பிரிவைச் சார்ந்த தனிநபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் நிலைத்திருக்கக்கூடிய திட்டம், தொழில் அல்லது செயல்முறைத் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புதுடெல்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திலிருந்து ரூபாய் 3,315.55 இலட்சமும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூபாய் 464 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது.

இதுவரையில் 36,903 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு நிதியுதவியாக ரூ. 3,293.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-05

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஹட்கோவிடமிருந்து கடன் உதவி பெற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒருங்கிணைப்பு முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சமுதாய மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வழிவகைகளை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு எளிய கடன் வசதிகள் விரைவில் கிடைக்கும் வகையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பணிகள் மேலும் சீரமைக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

## அறிவிப்புகள்

நிதிநிலை நெருக்கடியான சூழ்நிலையிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென பின்வரும் புதிய திட்டங்கள் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

இத்துறையின்கீழ் செயல்படும் 972 மாணவர் இல்லங்களில் 770 மாணவர் இல்லங்கள் போதிய அடிப்படை வசதிகளின்றி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, இந்த 770 மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் மிகப் பெரும் திட்டத்தைத் தவிர அரசுக் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகு விரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 35.77 இலட்சம் செலவில் 94 மாணவர் இல்லங்களுக்கு மின் இணைப்புகள் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2002-2003-ல் அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் ரூ.50.00 இலட்சம் செலவில் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 2000-2001 ஆம் ஆண்டு வரையில், 62 பள்ளிகளில் குடிநீர் வசதியும், 72 பள்ளிகளில் மின் இணைப்புகளும் மற்றும் 72 பள்ளிகளில் கழிவறை வசதியும் மட்டுமே செய்து கொடுக்கப்பட்டிருந்தன. 2001-2002 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வழங்கல், கழிவறை வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் அளிப்பதற்கான மிகு விரைவுத் திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக மீதமுள்ள 193 பள்ளிகளுக்கு ரூ.125.00 இலட்சம் செலவில் கழிவறை வசதியும், ரூ.47.00 இலட்சம் செலவில் 50 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும், 40 பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதியும் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 100 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு ரூ.80,000/- வீதம் குடிநீர் வசதி மொத்தம் ரூ.80.00 இலட்சம் செலவிலும் 75 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு ரூ.30,000/- வீதம் மின் இணைப்பு வசதி மொத்தம் ரூ.22.50 இலட்சம் செலவிலும், ஆக மொத்தம் ரூ.102.50 இலட்சம் செலவில் இவ்வாண்டில் செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதி ஒன்றிற்கு ரூ.1,000/- வீதம் மொத்தம் ரூ. 9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளிலும் தங்கிப் பயில்பவர்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

972 விடுதிகளிலும், விடுதி ஒன்றிற்கு ரூ.3,000/- வீதம் மொத்தம் ரூ. 29.16 இலட்சம் செலவில் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மலைப் பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் 922 மாணவ/மாணவியர்கள் தூங்குவதற்கு ரூ.17.00 இலட்சத்தில் இரண்டு அடுக்குப் படுக்கைகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மலைப் பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்கள் குளிப்பதற்கு வெந்நீர் வழங்க ஒரு விடுதிக்கு ரூ.13,000/- வீதம் ரூ.2.34 இலட்சம் செலவில் சூரிய சக்தியின் மூலம் இயங்கும் ஹீட்டர்கள் பொருத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-10

முக்கிய அரசுக் கட்டடங்களுக்குப் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.110 கோடியில் விடுதிகளிலுள்ள சமையலறை மற்றும் உணவு அறைகள் பொதுப் பணித் துறை மூலமாகப் பராமரிக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகர்ப்புறங்கள், கிராமப்புறங்களில் மகளிர் மேம்பாட்டிற்கென தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று சிறு வியாபாரங்களில் ஈடுபட ஒரு இலட்சம் மகளிருக்கு ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் மிகக் குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக ரூபாய் 20 கோடி அளவுக்குச் சிறு கடன்கள் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பணிகளில் சேருவதற்கு குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதியுடைய மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு 30-லிருந்து ஏற்கெனவே 32-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முற்பட்ட இனத்தவருக்குச் சமமாக அதிகபட்ச வயதாக 30 வயது தற்போது நடைமுறையில் உள்ளது. எனவே, இந்தச் சலுகையை பிற்படுத்தப்பட்டோரும் பெறும் வகையில் நேரடி நியமனங்களில் குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அதிகபட்ச வயதை 30-லிருந்து 32-ஆக உயர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில் அதிக விடுதிகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் கேட்டுக் கொண்டார். 2001-2002 ஆம் ஆண்டில் 114 மாணவ மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டது. நடப்பாண்டில் 200 மாணவ மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார். பதில், கடந்த ஆண்டுகளில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேலான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியபோதிலும் இதுவரை



சுமார் 4 ஆயிரம் பயனாளிகளே வீடு கட்டியுள்ளனர். எனவே பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான குடிதண்ணீர், சாலை வசதி மற்றும் மின் விளக்கு போன்றவை ஏற்படுத்தித் தரும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

அதேபோன்று கடந்த ஆட்சிக் காலத்தில் வக்ஃப் வாரியத்திற்கு இடமும் அளித்ததாகக் குறிப்பிட்டார். எங்கள் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 45 இலட்சம் அரசு நிர்வாக மானியமாக இவ்வாரியத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2001-2002 ஆம் ஆண்டில் வக்ஃப் வாரியத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூபாய் 40 இலட்சம் அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2001-2002 ஆம் ஆண்டில் வக்ஃப் வாரியம் மற்றும் 10 வட்டார அலுவலகங்களுக்குக் கணினிகள் வாங்க ரூபாய் 15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மசூதிகள் மற்றும் தர்க்காக்களைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் சிறப்புப் பழுதுகள் பார்ப்பதற்கும் 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 80 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் கூறியதுபோல அச்சுப் பிழை ஏதுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

15 அம்ச திட்டம் சம்பந்தமாக— மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டம் என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி சம்பந்தமாக- பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. அதில் 14-வது அம்சமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பினர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்தப்பட உள்ள புதிய அணுகுமுறை பற்றியது ஆகும். ஆனால் மாண்புமிகு பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டம் சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்காகப் பல்வேறு துறைகளால் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது சரியே என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய வகையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று இம்மானியக் கோரிக்கையை ஏற்று முழுமையாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையைத் தருகிறபோது 69 சதவிகிதம் குறித்து உருவாக்கப்பட்ட அந்தச் சட்டத்திற்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு ஒன்று நிலுவையில் இருப்பதைக் குறிப்பிட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த வழக்கை விரைவுபடுத்துவதற்காக, துரிதப்படுத்துவதற்காக மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கினுடைய நிலை என்ன? அந்த மனுவை இந்த அரசும் மேலும் வலியுறுத்துகிறதா? அல்லது புதிதாக வலியுறுத்துகிறதா? மனு போடுகிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே சொன்னார் அவர். விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.



**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் **சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண்** *9*-**ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.** *123,33,90,000*/- **மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.***1,35,41,000*/- **ஆகியவற்றுக்கு** மேற்படாத தொகைகள் அரசுக்கு **வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின்** முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. **(ஆம்)**

மறுப்போர் ‘இல்லை’ என்க. **(இல்லை)**

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[2002 மே 2

**(ஆ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—பால்வளம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.



2002 மே 2]

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம் மானியக் கோரிக்கை எண் 8-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,87,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



பிற்பகல் 5-20

**(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கை எண் 6-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6351, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒட்டன்சத்திரம் தொகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க,

1. சத்திரப்பட்டி 2. வெரியப்பூர் 3. ஓடைப்பட்டி 4. வாகரை 5. பெருமாள் கோவில் வலசு.

நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 702, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை மூலம் நியாய

விலைக் கடைகளை ஏற்படுத்தி குறைந்த விலையில் ஆட்டிறைச்சி, கோழி, மீன் ஆகியவற்றை விற்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4798*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6888*, திரு. ஜே. ஹேமசந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *7944*, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3795*, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3909*, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4113*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5984*, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு வருவாய் கிராமத்தில் கிராத்தூர் பகுதியில் புதிய கால்நடை மருந்தகம் உருவாக்க தேவையான நிதி ஒதுக்கக் கோருவது பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1338, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8001, திரு. கோ. இரவிராஜ்

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் உள்ள கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வாங்க அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல்ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4215, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1940, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5315, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5610, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5346, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால் நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 818, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1897, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1000*, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காலநடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6959*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7028*, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும்



மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1504*, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேரளாவைப் போல தமிழக மீனவர்களுக்கும் மாதம் 400 லிட்டர் மண்ணெண்ணெய் ரேஷன் விலையில் வழங்குவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7799*, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2729*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும்

மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2676*, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால் நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5547*, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்சி திருவெறும்பூரில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனையைப் பழுதுபார்த்து நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால் நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4726*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8158*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *402*, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை முகாம்கள் நடத்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6512*, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் கால்நடை வளர்ப்பு தொழில் செய்வோருக்கு கறவை மாடுகள் அரசு மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7663*, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *4473*, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறப்பு கால்நடை பராமரிப்பு பயிற்சி முகாம்கள் தமிழகம் முழுவதும் தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5142, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

***திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மேலப்பாளையம் கால்நடை கிளை மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5218, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் அத்தாணி கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்குவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 914, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை ஒன்றியம் பழையனூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6221, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம் நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர் ஆகிய தொகுதிகளில் விவசாயிகளுக்கு கறவை மாடு, ஆடுகள் வாங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள

கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி அவற்றை சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் அவற்றிற்கு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5.25*

### (ஈ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7,—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் மானியக் கோரிக்கை எண் 7-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,25,22,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6350, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 701, திரு. சி. ஞானசேகரன்.

@ 743 முதல் 778 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் அரசு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4909, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4413, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7947, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3791, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3910, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4524, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1337, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7973, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கான மானியத் தொகையினை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4235, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4943, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5356, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1896, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1001, திரு. ப. ரங்கநாதன்

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6961, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7027, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1501, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள மீன்பிடித் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 300 லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7807, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2730, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4713, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6227, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள ஏரி, குளங்களில் சிறப்புத் திட்டத்தின் மூலம் மீன்கள் வளர்க்க விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8179, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில் கிடைக்கும் கடல் வளங்களான வெள்ளை இறால், மீன் மற்றும் கடற்பாசி உணவு வகைகள் ஆகியவற்றைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும் வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 401, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உதகமண்டலம் குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் தரமான உணவு வகை மீன்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் பற்றிய 7-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6438, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் வண்ண மீன் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5137, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

***திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வீரபாண்டியன்பட்டினத்தில் விசைப்படகுதளம் அமைப்பதால் தென் மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்படுவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — மீன் வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5234, திரு. ப. அரசன்.



***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டை நகரிலுள்ள மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அறந்தாங்கிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,25,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7722, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 7 என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கேள்விகளுக்கு இறுதியில் என்னுடைய பதிலையும், அரசு எடுத்திருக்கின்ற முடிவுகளையும் தெரிவிக்கிறேன் எனக் கூறி, அமர்கிறேன்.

பிற்பகல் 5-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. டி.பி.எம். மைதீன்கான்.

---

@ 779 முதல் 798 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

* **திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரேழு வயதினிலே போராளியானவர், ஈரோட்டுப் பள்ளியின் இணையற்ற மாணவர், பாராள பைந்தமிழ்ப் படையினைக் கண்டவர், சீராளர் அண்ணாவின் நெஞ்சத்தைக் கொண்டவர், தாம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தவச்சாலை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டிய தலைவர் கலைஞர் அவர்கள், தாய்மொழி தமிழைக் காக்க தனிமைச் சிறையில் இருந்த, பாளையங்கோட்டை தொகுதி மக்களின் பிரதிநிதியாக நான் இந்த மாமன்றத்தில் பங்கேற்பதற்கு முழுமுதற் காரணமாக இருந்த, அகவை 78-லும் 18 வயது இளைஞனைப் போல ஓயாது உழைத்துக்கொண்டிருக்கும் தமிழகத்தின் உதயசூரியன், என் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி உணர்வோடும், இம் மாமன்றத்தில் தன் சுட்டு விரல் அசைவில் எங்களைக் கட்டுப்பாடாக வழிநடத்தும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கழகத்தின் பொதுச் செயலாளர் எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களுடைய வழிநடத்துதலோடும், அடக்கு முறைகள் அடுக்கடுக்காகக் கட்டவிழ்த்து விடப்பட்ட போதிலும், அந்தத் தடைக் கற்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்து, தடந்தோள் தட்டும் நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் தளபதி, வணக்கத்திற்குரிய மேயர் ஸ்டாலின் அவர்கள்மீது ஏவப்படும் ஜனநாயக உரிமை அடக்கு முறைகளுக்கு என் எதிர்ப்பை இந்த மாமன்றத்தில் பதியவைத்தவனாக என் உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 5-30

மீன் வளம், கால்நடை பராமரிப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது என் கருத்துகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துரைக்கும் இந்த நல்ல வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு மக்கள் மேற்கொள்ளும் தொழில்களில் தங்கள் உயிரையும் பணயம் வைக்கக்கூடிய இயற்கைச் சீற்றத்திற்கெதிராக இடைவிடாது போராட வேண்டிய நிலையில் வாழ்க்கையை நடத்தும் மீனவப் பெருமக்கள் வாழ்வையும், தாங்கள் வறுமையில் வாடியவண்ணம் மக்கள் வயிறார உண்ணப் பாடுபடும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டிய



பொறுப்புடைய மீன் வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மீதான, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள அரசின் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால், அரசு எந்த அளவுக்கு மேம்போக்காக இந்த மக்களின் வாழ்வில் அக்கறையற்ற முறையில் செயல்பட்டிருக்கிறது என்பதைக் காணலாம். ஏதோ நல்ல திட்டங்களைச் சொல்லப் போகிறார்கள், அந்த மக்களின் வாழ்க்கையைப் பா[illegible]ற்குக் கோடிக்கணக்கில் செலவிடுகிறார்கள் என்று பார்[illegible] ஒரு புதிய திட்டம் எதுவும் தராமல், முந்தைய [illegible] நல்ல திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்திட ஒதுக்கிய போதிய நிதி ஆதாரத்தைக்கூட ஒதுக்காமல் இந்த மானியக் கோரிக்கை அமைந்துள்ளது என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் என்பது முதன் முதலாக 1975-76-ல், அன்றைய முதல்வராக இருந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டு செயல்படுத்தப்பட்ட அற்புதமான திட்டமாகும். 1996-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய இந்த தன்னிகரற்ற திட்டத்திற்கு திராவிட இயக்க ஆரம்ப கால தளகர்த்தர்களில் ஒருவரும், பொதுவுடமைவாதியும், மீனவ சமுதாயத்தின் விடிவெள்ளியுமாகத் திகழ்ந்த சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரின் திருப்பெயரைச் சூட்டினார்கள்.

1996-2000 ஆண்டு வரையான காலகட்டத்தில் இலவச வீடுகளுக்காக வழங்கும் தொகையை ரூ.32,000/-த்திலிருந்து ரூ.37,000/-ஆக உயர்த்தி வழங்கியவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக, இந்த அரசு இந்தத் திட்டத்தில் நல்ல பெயரை எடுப்பதற்குப் பதிலாக சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் அந்த நல்ல பெயரையே இந்தத் திட்டத்திலிருந்து எடுத்துவிட்டு கொள்கைக் குறிப்பில் வெறுமனே, மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம் என்று தெரிவித்துள்ளதற்கு முதலில் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. 2001-2002-ல் சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரின் மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள், எங்கு கட்டி, மீனவர்களுக்கு வழங்கப்பட்டன என்பதை இந்த அரசு தெரிவிக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதனை

விட்டுவிட்டு அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் 1975-76 முதல் 2001-2002 வரை 26 ஆண்டுகளில் 43,280 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 1975-76, 1989-90, 1990-91, 1996-2001, ஆக, 8 ஆண்டுகளில் மட்டும் கலைஞர் ஆட்சியில் 23,000-த்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்டன என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கு நிலமற்ற கடல் மீனவர்களுக்கு 500 வீடுகளும், நிலமுள்ள கடல் மீனவர்களுக்கு 3000 வீடுகளும் இலவசமாகக் கட்டிக்கொடுக்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆட்சியில் 5 வருடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 20,000 வீடுகளில் 15,558 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள 4442 வீடுகளை இக்கழக ஆட்சி, அரசு பொறுப்பேற்றவுடன் கட்டி முடிக்க வேண்டிய கட்டாயத்தை முந்தைய அரசு ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டது. நிதி வசதியும் கிடையாது. இருப்பினும் சென்ற ஆட்சியில் கட்டாமல் இருந்த வீடுகளை இவ்வரசு கட்டி முடிக்க முனைந்து 2001-2002 ஆம் ஆண்டிற்கு 2712 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 1,730 வீடுகளின் பணிகள் நடைபெற்று வருகின்றன. தாங்கள் முடிக்காமல் செய்த வீடுகளை முடிப்பதற்கே எங்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. நடப்பு ஆண்டிலே இன்னும் 4,000 வீடுகள் கட்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-35

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கட்டிக்கொடுக்கப்படவில்லை என்றுதான் சொன்னேன், அவரும் அதைத்தான் சொல்கிறார். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தில் அரசின் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 4, பத்தி 2.1-ல் 1987-88 முதல் 2001 வரை 13,925 இயந்திரங்களும், 2886 மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றில் 1996 முதல் 2001 வரை கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட



இயந்திரங்கள் மட்டும் 6,675 என்றும், மீன்பிடி வலைகள் 1521 என்பதையும் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். ஆனல் இந்த ஆட்சியில் 2001-2002 ஆம் ஆண்டில் ஓர் இயந்திரமோ, வலையோ இதுவரை வழங்கப்பட்டதாக எந்த இடத்திலும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீன் பிடிக்கச் செல்லும் இயந்திரப் படகுகளுக்கான டீசல் மானியம் மாநில அரசின் சார்பில் 7 பைசாவாக இருந்ததை 17 பைசாவாக உயர்த்தி, மொத்தம் லிட்டருக்கு 45 பைசாவாக வழங்கியது கலைஞர் ஆட்சியில். இதன்மூலம் 7,000 பயனாளிகளுக்கு 5 கோடியே 21 இலட்சம் வழங்கினோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியில் கூடுதலாக மானியம் வழங்க வேண்டும் என்பதை ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

ஒரிசாவில் சில்கா லேக் போல, அதையடுத்து இரண்டாவது பெரிய ஏரியான பழவேற்காடு ஏரியில் அதைச் சுற்றியுள்ள 19 கிராம ஏழை மீனவ மக்களின் வாழ்க்கை அடங்கியுள்ளது. ஆனால் எண்ணூர் அனல் மின் நிலையங்களின் கழிவுநீர் கலந்து சுற்றுச்சூழல் மாசுபட்டு, மீன் பிடிப்புத் தொழில் பாதிக்கப்பட்டு, மீனவர்கள் வாழ்வு கேள்விக்குறியாகி உள்ளது. எனவே அரசு உடனடியாக இந்த மக்கள் வாழ்வைச் சீராக்க எண்ணூர் அனல் மின் நிலைய மாசுக் கழிவை ஏரியில், கடலோரப் பகுதியில் கலக்கவிடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மீன் மற்றும் கால்நடை தீவனத்திற்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த 11 மற்றும் 4 விழுக்காடு வரிக்கு முழுவதுமாக வரிவிலக்கு அளிக்கப்பட்டது டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.31.80 இலட்சத்தில் இலவசமாக 25 மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு, மீனவ மகளிர் மீன் விற்பனைக்கு உதவி செய்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீனவர் காப்புறுதித் திட்ட நிதி ரூ.35,000/- என்பதை ரூ.50,000/-ஆக உயர்த்தியவர் கலைஞர் அவர்கள். கடலில் மீன்பிடிக்கப் போய் காணாமல் போகும் மீனவக் குடும்பங்களைக் காத்திடும் வகையில் நாள் ஒன்றுக்கு ரூ.50/- நிதி உதவி வழங்கிடவும், இலங்கை கடலோரக் காவல் படையினரால் சுடப்பட்டு உயிரிழக்கும் மீனவக் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு

1 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும் தந்தவர் கலைஞர்தான். அவர்தான் இன்றைக்கு மீனவ மக்களுடைய உண்மையான பாதுகாவலர் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

ஆசியாவிலேயே முதலாவதாக ஒரு கால்நடை ஆராய்ச்சி மருத்துவப் பல்கலைக்கழகத்தை நிறுவியவர் 1990-ல் அன்றைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு அந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் சீர்குலைந்திருப்பதாகப் பத்திரிகையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி உடனடியாக அதில் தலையிட்டு அந்தப் பல்கலைக்கழக நிர்வாகத்தைச் சீர்செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவமனைகளில் வளர்ப்புப் பிராணிகளுக்கு 5 ரூபாய் என்று வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் தலைவர் கலைஞர் ஆட்சியில், 1996-ல் நீக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடைகளுக்கு குடற்புழு நீக்குவதற்காக வசூலிக்கப்பட்ட 1 ரூபாய் கட்டணம் 1996-ல் தலைவர் கலைஞரின் ஆட்சியில் இரத்து செய்யப்பட்டதன் மூலம் 3 கோடியே 67 இலட்சத்து 37 ஆயிரம் கால்நடைகள் பயனடைந்தன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 5-40

வாடிய பயிரைப் பார்த்தவுடன் தான் வாடியதாக வள்ளலார் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்களுக்கு நோய் வருவதற்கு முன்பே தடுப்பதற்காக 'வருமுன் காப்போம்' திட்டத்தை மானிட சமுதாயத்திற்காக தலைவர் கலைஞர் கொண்டுவந்தார். வாய் பேச முடியாத கால்நடைகளுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர் என்பதை இங்கே பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்ததாகச் சொன்னாலும்,



எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், கடந்த ஆண்டிலே 2 கோடியே 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 4620 முகாம்கள் நடத்திய வரலாறை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் நடத்தியிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் வாழ்க்கையே பிரச்சினை. என்று இருப்பார்கள், என்று இறப்பார்கள் என்று தெரியாத அளவிற்கு அவர்களுடைய உயிர் கேள்விக்குறியான சூழ்நிலையில் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் உயிருக்குத் துணிந்து, அவர்கள் இன்றைக்கு இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞருடைய ஆட்சியில், அவர்களுடைய பகுதிகளுக்கு, கிராமங்களுக்கு 2 கோடியம் விளக்குகள் வீதம், மீன் பிடித்துவிட்டு இரவு நேரத்திலே வருபவர்களுக்கு வசதியாக அன்றையதினம் கலைஞர் அரசால் செய்துகொடுக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் அணுகு சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வசதி போன்ற வசதிகள் எல்லாம் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை இந்த அரசு தொடர வேண்டுமென்பதை என்னுடைய வேண்டுகோளாக வைத்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினையைச் சொல்லி, விடைபெறலாம் என்று நான் கருதுகிறேன்.

ஒரேயொரு பிரச்சினையை முதலிலே சொல்லிவிடுகிறேன். என்னுடைய பாளையங்கோட்டை தொகுதியிலே—எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் நாங்கள் பாரபட்சம் இல்லாமல் கடமையாற்றுகிறோம் என்று இந்த அவையிலே பல முறை சொல்லப்பட்டது. ஆனால் என்னுடைய தொகுதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 18-12-2001 அன்று கால்நடை பராமரிப்புத் துறைச் செயலாளர் 19331 எண்ணிட்ட ஓர் ஆணையைப் பிறப்பித்து, பாளையங்கோட்டை தொகுதியிலே, மேலப்பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க ஒரு கடிதத்தினை எழுதி, அரசாணையை இட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆணை, அதற்குப் பின்னாலே 3 மாதம் கழித்து, எப்படி இரத்து செய்யப்பட்டது என்று தெரியாமல் பக்கத்து தொகுதியான நெல்லைத் தொகுதிக்கு அது மாற்றப்பட்டிருக்கிறது. நெல்லைத் தொகுதிக்கு மருத்துவமனை அமைவதில் எனக்கு ஒன்றும்

ஆட்சேபனை இல்லை. அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் என் தொகுதிக்கு வந்ததை மாற்றுவது எந்த வகையிலே நியாயம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொன்று, இந்தப் பிரச்சினையில்—அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, எந்தக் கட்சியினுடைய எம்.எல்.ஏ.-க்கள் என்று பார்க்காமல், பாளையங்கோட்டை தொகுதிக்கு அந்த மருத்துவ நிலையத்தை ஒதுக்கித் தந்தாலும், அந்த இடத்திலே உள்ள உள்ளாட்சி அமைப்பிலே தீர்மானங்கள் போட்டு, அதற்கான இட ஒதுக்கீடுகள் கடைசி நேரம் வரை செய்யப்படாத காரணத்தினால், உடனடியாக மாற்றப்பட வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டதால்தான் மாற்றப்பட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசியலில் கருத்து' மாச்சர்யங்கள் இருக்கலாம். ஆனால் வெளியில் இருக்கும்போது அண்ணன், தம்பியாகப் பழகுவதுதான் நாகரிகம்" என்று நம்முடைய அண்ணா சொன்னதுபோல, "மக்கள் பணியிலே அரசியல் இருக்கக்கூடாது" என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல, முழுக்க முழுக்க திட்டமிடப்பட்டு, இந்த மருந்தகம் மாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஒருவேளை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்று நினைத்திருந்தாலும், அந்தக் கட்சியைப் பழிவாங்க வேண்டுமென்று நினைத்திருந்தாலும் அல்லது என்னைப் பழிவாங்க வேண்டுமென்று நினைத்திருந்தாலும் நான் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் மாறாக, என்னுடைய தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்த மக்கள் என்ன குற்றம் செய்தார்கள்? என்னை வெற்றிப்பெறச் செய்த குற்றத்தைத் தவிர, வேறு எந்தக் குற்றமும் அவர்கள் செய்யவில்லை. ஆகவே அவர்களைப் பழிவாங்குவது எந்த வகையில் நியாயம் என்பதை இந்த சபையிலே கேட்டுக்கொண்டு, இன்றைக்கு நான் பல கோரிக்கைகளை வைக்க இருக்கிறேன்.

எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் வந்த மருந்தகத்தை மாற்றியிருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) கோரிக்கைகளை எங்கே



நிறைவேற்றப் போகிறீர்கள் என்ற சந்தேகத்துடன் ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைத்து விடைபெறுகிறேன்.

எனது தொகுதியில் பாய்ந்து வரும் தாமிரபரணி ஆற்றிலிருந்து தென்காசி, சங்கரன்கோவில், கோவில்பட்டி போன்ற தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு அவர்களுடைய தேவை நிறைவு செய்யப்படுகிறது. ஆனால் துரதிருஷ்டவசமாக, என் தொகுதியிலே இந்த ஜீவ நதி பாயும் 55 வார்டுகளை உள்ளடக்கிய மாநகராட்சியில், 17-வது 18-வது ஆகிய 2 வார்டுகளில் மட்டும் இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை. அதுவும் என் தொகுதியில் வருகிறது. வி.எம். சத்திரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற பெயரால் ஏட்டில் இருந்தபோதிலும்கூட, நிதி வசதி இல்லை என மாநகராட்சி அதைச் செயல்படுத்தாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, அந்தத் தொகுதியில் உள்ள 25,000 பொதுமக்கள் பயன்பெறுகிற வகையில் அந்த 17-வது, 18-வது வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

என்னுடைய தொகுதியில், பாளையங்கோட்டை - நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் குலவணிகர்புரத்திலுள்ள இரயில்வே கேட்டில் ஒரு மேம்பாலம் கட்டப்பட வேண்டும். பாளையங்கோட்டை மத்திய சிறை, கொக்கிரகுளம் கிளைச் சிறைச்சாலைகளில் கைதிகளைப் பார்க்கவரும் பார்வையாளர்களை வெயில், மழையிலிருந்து பாதுகாக்க ஒரு நிழல் கொட்டகை அமைக்கப்பட வேண்டும். பாளையங்கோட்டையில் வண்ணாரப்பேட்டை, முருகன்குறிச்சி ஆகிய இரு இடங்களில் சாலையைக் கடப்பதற்குச் சுரங்க நடைபாதைகள் அமைத்துத்தர வேண்டும். பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை, நெல்லை, குமரி, தூத்துக்குடி ஆகிய 3 மாவட்டங்களுக்கும் பொதுவான மையமாக அமைந்துள்ள ஒரு மருத்துவமனை. அந்த 3 மாவட்டங்களுக்கும், இதுதான் பிரயோஜனமாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ஆம்புலன்ஸ்களும், மார்ச்சுவரி வண்டிகளும் சரியாக ஓடவில்லை. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து, அங்கே பத்திரிகையிலேகூட பேட்டி கொடுத்திருந்தார்கள். அதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னாலும்கூட, அது மிக அவசரத் தேவை என்ற

காரணத்தினால், மக்களுடைய உயிர்ப் பிரச்சினை என்ற காரணத்தால், போர்க்கால அடிப்படையில்—கிட்டத்தட்ட 8 ஆம்புலன்ஸ்கள் ஓட வேண்டிய இடத்தில், இன்றைக்கு 2 கூட சரியாக ஓடவில்லை. 3 மார்ச்சுவரி வண்டிகள் ஓட வேண்டிய இடத்தில் ஒன்றுகூட ஓடவில்லை ஆம்புலன்ஸ்கள் மற்றும் மார்ச்சுவரி வண்டிகளுக்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை எம்.ஆர்.டி. ஸ்கேன் கொண்டதாக, மதுரை, சென்னை போன்ற மருத்துவமனைபோல, அதற்கு இணையாக அதன் தரத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு, நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் என்பதற்காக புறக்கணித்தார்கள் என்று சொன்னார்கள். இந்த நேரத்திலே பணிவோடு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுவது, எனது சட்டமன்றத் தொகுதியிலே வீடு முழுக்க உதயசூரியன் படம் போட்டு வரைந்த, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேலை செய்த ஒரு தொண்டன், தனது மகனுக்கு இன்ஜினியரிங் கல்லூரியில் படிப்பதற்கு நிதி உதவி கேட்டு இங்கே மனு கொடுக்க வந்த இடத்தில் வந்த அவனுக்கு, அவன் எந்தக் கட்சி என்று பாராமல், அவன் குடும்பத்திற்கு, அவன் தி.மு.க. என்று பாராமல் (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது எங்களுடைய மாவட்டச் செயலாளரையோ அல்லது எங்கள் மாவட்ட அமைச்சரையோ யாரையும் கலந்தாலோசிக்காமல், அவனுடைய வறுமை ஒன்றையே பார்த்த ஒப்பற்ற தலைவியின் இந்த ஆட்சி, கட்சி வேறுபாடு இல்லாமல் நடக்கிறது என்பதற்குப் பல உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட தலைவி என்பதை இந்த நேரத்திலே நான் எங்களுடைய மாவட்ட சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தெரிந்ததுதான் கோரிக்கைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு) திரு. தாமோதரன்..

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலிலே அரிச்சுவடி கற்றுக்கொண்டிருந்த என்னை படிப்படியாக உயர்த்தி, பல பதவிகள் கொடுத்து, இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக்கி, சட்டமன்றத்திற்கு வந்து பேச எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனக்கு வாக்களித்த கிணத்துக்கடவு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றிகூறி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

கடந்த ஆண்டு நமது அரசு பொறுப்பேற்றவுடன் நிதிநிலை கவலை அளிப்பதாக இருந்தது. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தமிழகத்தை முதல் மாநிலமாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்ற முறையைப் போலவே இந்த ஆண்டும் பல துறைகளின் முன்னேற்றத்திற்காக நல்ல பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அந்த வகையிலே, கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளத் துறையைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு பல நல்ல திட்டங்கள் நமது அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லும் வகையிலே, கால்நடைகள் உடல் நலம் பேணும் வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலே அளித்தல், செயற்கை முறைக் கருவூட்டல் பணியை தீவிரப்படுத்துதல், கிராமப்புறத்திலே வாழும் பெண்களை கோழி வளர்ப்பில் ஊக்குவித்தல், மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துதல், கால்நடை மருத்துவ சேவையில் தனியாரை ஊக்குவித்தல், இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்குத் தரமான இறைச்சி வழங்குதல் போன்றவை மிகவும் சிறப்பான திட்டங்களாகும்.

*பிற்பகல் 5-50*

அதேபோல நமது அரசு கால்நடை வளர்ச்சி முகமையைத் தொடங்கியுள்ளது. இந்த முகமையின் மூலமாக கால்நடை இனவிருத்தி, நாட்டினங்கள் பாதுகாப்பு, இனவிருத்திக்குத் தேவைகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலே அளித்தல், உள்ளிருப்பு வசதிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்ற திட்டங்கள் சிறப்புடையதாகும். மற்றும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு செம்மறி

ஆடு, வெள்ளாடு அலகுகளை மானியத்துடன் வழங்குவது, கால்நடை பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் மிக மிக சிறப்புடையதாக, பாராட்டத்தக்க திட்டங்களாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல மீன் வளத் துறையிலும் பல நல்ல திட்டங்களை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். எனது தொகுதியான கிணத்துக்கடவு தொகுதி, கோவை மாவட்டத்திலேயே அதிகமான குக்கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். சுமார் 200-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட தொகுதியாகும். இன்றைக்கு எனது தொகுதி, கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் வறட்சியான நேரத்தில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க எனது தொகுதியையும், பொள்ளாச்சி தொகுதியையும் இணைத்து, அம்பராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால் டெண்டர் விடப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்தின் வேலை இன்னும் தொடங்கப்படவில்லை. அந்த வேலையை உடனடியாகத் தொடங்க ஏற்பாடு செய்து, எனது தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினையை அம்மா அவர்கள் தீர்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மழைநீர் சேகரிப்பு அணைத் திட்டத்தில், — எனது தொகுதியில் மழைநீர் எல்லாம் கேரள மாநிலம் சென்றுவிடுகிறது. எனது தொகுதியில் வீணாகும் மழைநீரைத் தேக்கி சேமிக்கின்ற வகையிலே, புரவிபாளையம் என்ற பகுதியில், கிடப்பில் போடப்பட்ட புளிப்பாறை என்ற அணைத் திட்டத்திற்கு, மீண்டும் புத்துயிரூட்டி -- புளிப்பாறை அணையைக் கட்டிக் கொடுத்து, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில், எனது தொகுதியில் வடக்கு மற்றும் மேற்குப் பகுதியில் உள்ள தரிசு நிலங்களை இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். மேலும், அப்பகுதியை வளமாக்க, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை விரிவாக்கி, எனது தொகுதியின் மேற்குப் பகுதியான சூலக்கல், நாகூர், ஜமீன் காளியாபுரம், முத்துக்கவுண்டர்புதூர் வரை பாசன வசதி செய்து தர வேண்டும். மற்றும் எனது தொகுதியில் வடசித்தூர், அரசம்பாளையம் பகுதிகளிலே 4500 ஏக்கர் இதே பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் சேர்க்கப்பட்டது. ஆனால் இப்போதும்கூட அந்தப் பகுதியிலே வாய்க்கால் வெட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள வாய்க்காலையும் விரைவில் வெட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டத்தின் விரிவாக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தில் தற்போது பாசனம் பெறும் பகுதிகளில், காற்றாலை மின்சாரம் தயாரிக்க ஒதுக்கப்பட்ட பூமிகள், தொழிற்சாலை அமைக்க ஒதுக்கப்பட்ட பூமிகள், வீடு கட்ட ஒதுக்கப்பட்ட பூமிகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுக்க ஒரு குழுவை அமைத்து, கணக்கெடுத்து அவற்றையெல்லாம் பாசனத் திட்டத்திலிருந்து நீக்கி, எவ்வளவு பூமிகள் நீக்கப்படுகின்றனவோ, அந்த அளவு பூமியை எனது தொகுதியின் மேற்குப் பகுதி வரை, பரம்பிக்குளம்-ஆழியாறு விரிவாக்கத் திட்டத்திலே சேர்த்து, அப்பகுதியிலுள்ள விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையான தண்ணீர்ப் பிரச்சினையையும், பொது மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும் நிரந்தரமாக தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் தற்போது ஒரு மடை விட்டு, ஒரு மடை பாசனத்தில் சேர்க்கப்பட்டு பாசனம் பெற்று வருகிறது. 1000 ஏக்கருக்கு, ஒரு மடை விட்டு, ஒரு மடை பாசனம் என்ற இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே மாற்றி, 500 ஏக்கருக்கு ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனத் திட்டம் என்று மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கெல்லாம் மேலாக நீண்டகாலமாக எங்கள் பகுதி விவசாயிகளின் கோரிக்கையான ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்திற்கு அடுத்த ஆண்டிலாவது நிதி ஒதுக்கீடு செய்து, தொடங்கப்பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் முடிவடைந்தால் அதிகமான நீர் கிடைப்பதுடன், அதிகமான பூமிகள் பாசனம் பெறுவதுடன், 350 மெகாவாட் மின்சார உற்பத்தி அரசிற்குக் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, அரசு இந்தத் திட்டத்தை, சிறப்புக் கவனம் செலுத்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் பெரியார் மாவட்டமும், கோவை மாவட்டமும் முழுமையாகப் பயன்பெறும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இன்னும் பல கிராமங்களுக்கு ரோடு வசதி கிடையாது. பஸ் வசதி கிடையாது. 1966-ல் என்று நினைக்கிறேன். அண்ணா அவர்கள் எனது தொகுதியில் உள்ள வெள்ளேகவுண்டன்புதூர் என்ற கிராமத்திற்குச் சென்று வந்துள்ளார்கள். அந்தக் கிராமத்தைப் பற்றிகூட சட்டமன்றத்திலே அண்ணா அவர்கள் பேசியதாகத் தகவல் உண்டு. அண்ணா சென்று பார்த்தபோது அந்தக் கிராமம் எப்படி இருந்ததோ, அதேபோல்தான் இன்றும் உள்ளது. அந்தக் கிராமத்திற்கு இன்றும் ரோடு வசதி, பஸ் வசதி இல்லை. அதேபோல, இன்னும் நிறைய கிராமங்கள் எனது தொகுதியிலே உள்ளன. நமது ஆட்சிக் காலத்திலாவது அப்படி உள்ள கிராமங்களுக்கு ரோடு வசதி மற்றும் பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-55*

எனது தொகுதியில் தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு பகுதி தற்போது வறட்சியால் பாதிக்கப்பட்டு காய்ந்து விட்டது. அரசு அதற்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் கொப்பரைக் கொள்முதலைத் தொடங்குவதுடன், கொப்பரைக்குப் பதிலாக தேங்காயைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட கோவில்பாளையம், சந்தேகவுண்டன்பாளையம், ஏரிப்பட்டி போன்ற கிராமத்தைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களில், சென்ற ஆட்சிக் காலத்தில் பல முறைகேடுகள் நடந்துள்ளன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏழையெளிய மக்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தை வைப்பு நிதியாக வைத்திருந்தார்கள். அவற்றை அந்தச் சங்கத்தில் வேலை பார்த்தவர்கள் எல்லாம் முறைகேடாக எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதுபற்றி தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த விசாரணையைத் துரிதப்படுத்தி, தவறு செய்தவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், வைப்பு நிதியை இழந்துள்ள அந்தப் பகுதி ஏழையெளிய மக்களுக்கு அரசு வைப்பு நிதியைத் திருப்பித் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட காட்டம்பட்டி, கொல்லபட்டி, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை



மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் கல்லூரி கிடையாது. அரசுக் கல்லூரி ஒன்றை கிணத்துக்கடவில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணத்துக்கடவில் கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது. அதை மருந்தகமாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள பணப்பட்டி என்ற கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் தொடங்க வேண்டுமென்று நீண்ட காலமாக கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய கருத்துருக்கள் அரசிற்கு வரப்பெற்றுள்ளன. அதனால் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியான வடசித்தூர் பகுதியில் புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி, கோவை தேசிய நெடுஞ்சாலையில் முள்ளுப்பாடி அருகில் இரயில்வே கேட்டில் மேம்பாலமும், கோவை சிட்கோ அருகில் உள்ள இரயில்வே கேட்டில் ஒரு மேம்பாலமும் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்தை எளிமையாக்க, கிணத்துக்கடவு தனி வட்டமாக உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி மக்கள் மருத்துவ வசதி வேண்டுமென்றால், பொள்ளாச்சி மற்றும் கோவைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதனால், கிணத்துக்கடவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இந்த ஆண்டு மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது எனது தொகுதியிலே பாறை உடைக்கும் தொழிலாளர்கள் சுமார் 5000-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். தற்போது பாறை உடைப்பவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படுவதில்லை. அதனால், அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் குடும்பம் நடத்த மிகவும் சிரமப்படுகின்றனர். அவர்களுக்கெல்லாம் பாறை உடைக்க லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே

கேட்டுக்கொள்கிறேன். மற்றும் எனது தொகுதியில் கிரானைட் போன்ற கற்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது. அவற்றையெல்லாம் அரசு எடுத்து, அரசின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது எனது தொகுதியிலே, பல பகுதிகளிலே மின் அழுத்தம் சற்று குறைவாக இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதுபற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் பொள்ளாச்சியிலே மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதில் 2,500 மாணவிகள் பயின்று வருகிறார்கள். ஆனால் அந்த இடம் மிகவும் குறுகலான இடம். ஓர் ஏக்கர்தான் உள்ளது. கட்டட வசதியும் போதாது. அதனால் அந்தப் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மற்றும் பொள்ளாச்சி, வால்பாறை தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை பொள்ளாச்சி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பது. அப்படி விரிவுபடுத்தும்போது தற்போது செயல்பட்டுவரும் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறைக்கு பொள்ளாச்சி நகராட்சி நிர்வாகம் வேறு நல்ல இடத்தைக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி கடந்த ஓராண்டு காலமாக நானும், பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் ஜெயராமன் அவர்களும் இதற்குண்டான அதிகாரிகள் மற்றும் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளோம். இதுபற்றி அம்மா அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, இந்த நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளம் ஆகிய கோரிக்கை எண்கள் 6 மற்றும் 7-ன்கீழ் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் வணக்கத்தினையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



நமது நாட்டின் மக்கள் தொகையில் 75% பேர் கிராமங்களில் வாழ்கின்றனர். அந்த ஊரக மக்களின் பொருளாதார மேம்பாடு விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இயற்கையின் ஒத்துழையாமை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, விளை பொருள்களுக்குச் சரியான, நியாயமான விலை கிடைக்காத நிலைமை போன்ற பல்வேறு காரணங்களால், விவசாயத்தின் அடிப்படையிலான கிராமப் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை கிராமப்புற மக்களின் துணை வருவாயைப் பெருக்குவதிலும், கிராமப்புறங்களில் சுயவேலைவாய்ப்பினை அளிப்பதிலும், அதிலும் குறிப்பாக மகளிர் பெரும் அளவில் பங்குகொள்ளும் வாய்ப்பினையும், கால்நடை வளர்ப்பு பெரும் பங்கினை வகிக்கின்றது. இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தொலைநோக்குப் பார்வையில் ஊரகப் பொருளாதார மேம்பாட்டிற்கும், சுய வேலைவாய்ப்பினை அதிகரிக்கும்பொருட்டும் புதிய 15 அம்சத் திட்டத்தில் கால்நடை பாதுகாப்பினையும் ஓர் அம்சமாக இணைத்துள்ளதைப் பாராட்டி, வரவேற்கிறேன்.

தேசிய கால்நடைக் கொள்கை வரையறைகளின் அடிப்படையில், உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடைக் கொள்கைகளில் கண்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் வரவேற்கத்தக்கன, பாராட்டத்தக்கன. கால்நடை உடல்நலம் பேணும் வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல், செயற்கைமுறை கருவூட்டல் பணியைத் தீவிரப்படுத்துதல் ஆகிய இந்தப் பணிகளை கிராமப்புறங்களில் சிறப்பாகச் செய்வதற்காக, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் (Intensive Cattle Development project) என்ற திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கிளை நிலையங்கள் ஊரக கால்நடைப் பராமரிப்பில் சிறப்பான பங்கினை வகிக்கின்றன. இந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்சமயம் தமிழகத்தில் 2126 கிளை நிலையங்கள் உள்ளன. ஆனால் இந்த 2126 கிளை நிலையங்களில், 1000-த்திற்கும் மேற்பட்ட கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர்கள் பணியிடம் நிரப்பப்படாமல் அவை சரியான முறையில் செயல்படாமல் இருக்கின்றன. எங்கள் சிவகாசி தொகுதியிலுள்ள 6 கிளை நிலையங்களில் ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்ற நிலைமை உள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம்

உள்ள 110 கிளை நிலையங்களில், 40 கிளை நிலையங்களில் ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் சரிவர செயல்படாமல் உள்ளன. மேலும், தேனி மாவட்டத்தில், மொத்தம் உள்ள 72 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களில், 27 கிளை நிலையங்களில் ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் சரிவர செயல்படாமல் செயலற்று இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், இந்தத் துறையின் தொலைநோக்கு வளர்ச்சியைக் கருத்திலேகொண்டு, கால்நடை பராமரிப்புத் துறையில் முதன்முதலாக வெளியிட்ட 2-7-2001 ஆம் தேதியிட்ட அரசாணை எண் 92 இன்று வரை அமலாக்கப்படாததை, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 2000 ஆண்டில் தேசிய வேளாண்மைக் குழு, 5000 கால்நடை அலகுகளுக்கு ஒரு கால்நடை நிலையம் என்ற விகிதத்தில் இருந்தால்தான் முழுமையான கால்நடை நலப் பணிகளைத் தர முடியுமென பரிந்துரை செய்துள்ளது. தமிழ்நாட்டில் 137 இலட்சம் கால்நடை அலகுகள் உள்ளன. இதற்கு தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி 2739 கால்நடை நிலையங்கள் செயல்பட்டால்தான் பூர்த்தி செய்ய இயலும். ஆனால் தற்போது 1016 கால்நடை நிலையங்கள் மட்டுமே உள்ளன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி ஒரு குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயித்து, தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்ற வேண்டுமென இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தத் துறையின்கீழ் மொத்தம் 951 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அதில் 258 சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன என்ற நிலைமை வருத்தத்திற்குரியதாகும். மீதியுள்ள சங்கங்கள் ஏன் செயல்படவில்லையென்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அனைத்துச் சங்கங்களும் சிறப்பாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மீன்வள மேம்பாட்டு இயக்கம் ஒன்றினை அமைக்க இந்த அரசு உத்தேசித்துள்ளதை வரவேற்கிறேன். கடற்கரைப் பகுதியில் மீன் வளத்தைப் பாதுகாத்தல், நிலைத்து மீன்பிடித்தலை மேற்கொள்ளுதல்,



உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற திட்டங்களுக்கு இந்த அரசு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடலாடி தொகுதியில் மூக்கையூர் என்ற கடலோர மீனவ கிராமப் பகுதியில் தரமாகவும், சுவையாகவும் அதிக அளவில் மீன்கள் கிடைக்கின்றன. ஆனால் அந்தக் கடல் பகுதியில் வருடத்தில் ஏப்ரல் மாதம் தொடங்கி 6 மாத காலத்திற்கு தென் திசையிலிருந்து வீசும் காற்றினால் மீன் பிடிப் படகுகள் கவிழ்க்கப்படுவதனால் அந்தப் பகுதி மீனவ மக்கள் 6 மாத காலத்திற்கு இடம் பெயர வேண்டியுள்ளது. இந்த நிலைமை மாறிட Break water scheme-ஆக கடலிலே தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டுமென நீண்டகாலமாக அந்த மக்கள் கோரி வருகின்றனர். இந்தத் திட்டச் செலவிற்கு மத்திய அரசும் பாதித் தொகையினை அளித்திடத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அவர்களின் கோரிக்கையை, கடலாடி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 6-05

ஏழை மீனவர்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் வகையில் மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சகம் கடல் அட்டை மீன் மற்றும் சங்கு போன்ற 53 வகையான மீன்களை கடலில் பிடிக்கக்கூடாது என 11-7-2001 ஆம் தேதியிட்ட அரசு இதழில் S.O.No.665 (E)-ல் ஓர் உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. தென் கடலோர மாவட்ட மீனவர்களின் முக்கியமான மீன்பிடித் தொழில், கடல் அட்டை மீன் Sea Cucumber பிடித்தல் ஆகும். உலகத்தில் எந்த நாட்டிலும் கடல் அட்டை மீன் பிடித்தலுக்குத் தடை இல்லை என்கிறார்கள். தமிழகக் கடலோரப் பகுதிகளான பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதிகளில் கிடைக்கின்ற 200-க்கும் மேற்பட்ட அட்டை வகைகளில், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக பிடித்துவரும் வெள்ளை அட்டை மீன், சிவப்பு அட்டை மீன் மற்றும் கருப்பு அட்டை மீன் ஆகிய இந்த 3 அட்டை மீன்களுக்கு மட்டுமாவது விதிவிலக்கு அளித்து, தகுந்த உத்தரவினை மத்திய அரசிடமிருந்து பெற்று, அந்த மீனவ மக்களின் நலன் காக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி தொகுதியில், சிவகாசி நகரம் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் நிலவிவரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு போர்க்கால நடவடிக்கையாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், அத்துடன் நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு நிரந்தர நீர் ஆதாரத்தின் மூலம் (perennial water source) மூலம் எங்கள் தொகுதியில் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகவும் வேண்டி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சிவகாசி தொகுதியில், சிவகாசி நகரம் உட்பட அனைத்துப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 400 அடிக்குக் கீழே சென்றுவிட்ட நிலைமையில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திடவும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், பாசன வசதிகளைப் பெருக்கவும் அனைத்துக் குளங்களிலும் தூர்வாருதல், நீர் வரத்துக் கால்வாய்களை தூர்வாரி அகலப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி-திருத்தங்கல் சாலையில் ஓர் இரயில்வே மேம்பாலமும், சிவகாசி—ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் ஓர் இரயில்வே மேம்பாலமும் அமைத்திட வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருத்தங்கல் தேர்வுநிலைப் பேரூராட்சியின் எல்லைக்குள் ஒரு பேருந்து நிலையமும் அமைத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரி வரும் அழகர் அணை-பேயனாறு திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் வளாகத்தினை ஸ்ரீவில்லிபுத்தூரில் கட்டுவதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், சிவகாசியில் சார்பு நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் எங்கள் இயக்கத்தின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வணக்கத்தினையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இடையிடையே புகுந்து பேசக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். முடியும்போது கேளுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் விவாதத்திலே கலந்துகொண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நான் விவாதத்தில் பேசுவதற்கு முன்பாக என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியினுடைய சில குறைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எடுத்துக்கூறி விவாதத்திலே பேசுகின்றேன் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-10*

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் இதுவரையில் 50 ஆண்டுகால சுதந்திர வரலாற்றிலே, அந்தப் பகுதியுடைய கிராமப்புற ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வி பெறுகின்ற வகையில் இதுவரையில் ஓர் அரசு கலைக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அல்லது குறைந்தபட்சம் அரசு தொழில்நுட்பப் பயிலகமோ இல்லாத கொடுமையான, ஒரு பின்தங்கிய தொகுதியாக என்னுடைய தொகுதி இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல என்னுடைய தொகுதியிலே அதிகம் விளைகிற முந்திரி விவசாயம், அந்த முந்திரி விவசாயத்திற்கு தமிழக அரசு நல்ல விலையை நிர்ணயம் செய்து, அந்த விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, நான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறபோதெல்லாம் கேட்டு வருகிறேன். அதையும் நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நடைபெற்ற சில துயரமான சம்பவங்கள் பற்றி இந்த அவையில் பலமுறை என்னுடைய கருத்துகளைக் கூறியிருந்தாலும்கூட, நிவாரணம் என்பது அரசாங்கத்திலிருந்து இதுவரை தரப்படாமல் என்னுடைய தொகுதி மக்கள் இன்றைக்கு மிகவும் வேதனையிலும் வறுமையிலும் வாழ்ந்துகொண்டு இருக்கிற அந்தச்

சூழ்நிலையில், அரசு சரியான நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் அமர்ந்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெண்ணாக இருக்கின்ற காரணத்தால், நிச்சயமாக அங்கேயிருக்கின்ற அத்தனை பிரச்சினைகளையும் அவர்கள் கேட்டு, நான் கூறுகின்ற இந்தப் பிரச்சினையிலே பாதிப்புக்குள்ளாகி இருக்கும் தாய்மார்களுக்கு, பாதிப்புக்குள்ளாகி, தங்களுடைய குழந்தைகளை இன்றைக்கு படிக்கவைக்க முடியாமலும், மிகுந்த வறுமையிலும் வாழ்ந்துகொண்டிருக்கிற தாய்மார்களுக்கு, தற்கொலை முடிவுக்கு அவர்களை இழுத்துச் செல்கின்ற அளவுக்கு இருக்கும் தாய்மார்களுக்கு, நிவாரணம் வழங்குவார்கள் என்று நம்புகிறேன். அந்த வகையில் அவலமான சூழ்நிலையில் என்னுடைய தொகுதியில் பல்வேறு குடும்பங்கள் இருந்துவருகின்றன. அதிலும் குறிப்பாக, சில மாதங்களுக்கு முன்பு காங்கிருப்பு என்ற கிராமத்திலே, ஒரு கணவன் மனைவி இருவரையும் வன்முறைக்கும்பல் வெட்டிக் கொலை செய்துவிட்டது. அப்படி கொலை செய்த பிறகு, அவர்கள் பெற்று ஆளாக்கி வந்த இரண்டு பெண் பிள்ளைகள்—அதில் ஒருவர் 21 வயதைக் கடந்தவர், இன்னொருவர் 12 வயதை எட்டியவர்—அந்தப் பெண் குழந்தைகள் படிப்பதற்கும், திருமணம் செய்யமுடியாமலும், ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் உற்றார் உறவினர்களிடம் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கு நம்முடைய அரசு கருணை அடிப்படையில் நிவாரண உதவி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்த ஊரான புலியூர்காட்டுசாலை என்னும் கிராமத்தில், என்னுடைய பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஒரு பள்ளி மாணவன், பள்ளிக்குச் சென்றுவிட்டுத் திரும்புகிறபோது மர்மமான முறையில் இறந்து, இந்நாள் வரை அவர் எப்படி இறந்தார், எப்படி அந்தச் சாவு நடந்தது என்று அறிந்துகொள்ள முடியாமல், அந்தப் பகுதி மக்களும் அவரைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரும் அவதியுற்று வருகிறார்கள். அந்தப் பையனைப் பெற்றெடுத்த பெற்றோருக்கு இந்த அரசு ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பத்திரக்கோட்டை என்னும் கிராமத்திலே ஒரு மாணவன் மர்மமான முறையில், பள்ளிக்குப் பின்புறம் தூக்குமாட்டி இறந்திருக்கிறார். அதைப்பற்றியும் சட்டமன்றத்திலே நான் பேசியிருக்கிறேன். அந்தக் குடும்பத்திற்கும்



நம்முடைய அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேல்பெரியாங்குப்பத்திலே, ஒரே இன மக்கள், ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள், தங்களுக்குள் இருந்த சிறு பிரச்சினையைப் பெரிதாக்கி, ஒரு மிகப் பெரிய சம்பவம் அங்கே ஏற்படக் காரணமாக இருந்து, அதனால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு 5 பேர் படுகாயம் அடைந்து, அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று உயிருடன் திரும்பியிருக்கிறார்கள். அவர்களின் குடும்பத்தாருக்கும் நம்முடைய அரசு நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்கள்மீது காவல் துறை துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தால், அதன் உண்மையை விசாரித்து, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலும், நெல்லிக்குப்பத்திலும் உள்ளடங்கிய சில கிராமங்களில் விஷச் சாராயத்துக்கு 54 உயிர்கள் பலியாகியிருக்கின்றன. அப்படிப் பலியான அந்தக் குடும்பங்களில் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், பிற சாதிகளைச் சேர்ந்தவர்களும் உயிர்களை இழந்திருக்கிறார்கள். உயிரிழந்தவர்களின் அந்தக் குடும்பங்களை நான் நேரடியாகச் சென்று பார்க்கிறபோது, அந்தக் குடும்பத்தை நடத்திச் செல்ல யாரும் இல்லாமல், கணவனை இழந்து மனைவியும், மனைவியை இழந்து கணவனும், பெற்றோரை இழந்து குழந்தைகளும் இன்றைக்கு அனாதைகளாக விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயிருக்கிற, ஒருவேளை உணவுக்குக் கூட வழியில்லாமல் கொடுமை நிலவுகிற— சாராயத்திற்கு பலியாகியிருக்கிற அந்தக் குடும்பங்களுக்கு நம்முடைய அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் கலவரம் ஏற்பட்டபோதுகூட இப்போது சென்று நிதி வழங்கியிருக்கிறார்கள். பாதிப்பு எங்கு நடந்தாலும், நிவாரணம் வழங்குகிற நம்முடைய முதல்வர் அவர்கள், என்னுடைய தொகுதியிலும் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டிருப்பதால்— தொடர்ந்து எங்களுடைய மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருப்பதால், அரசிடம் நிதி இல்லை என்று தெரியும், என்றாலும்—அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு தொகையை முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடந்த 26 ஆம் தேதி, மாமல்லபுரத்தில் நடைபெற்ற வன்னியர் விழாவுக்கு வந்திருந்த என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நண்பர்கள், பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த இளைஞர்கள் ஆகியோர் பல்வேறு இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி, அவர்களைத் திட்டமிட்ட ஒரு வன்முறைக் கும்பல் தாக்கி, அதிலே இன்றைக்கு ஒருவர் உயிர் இழந்திருக்கிறார். என்னுடைய தொகுதியைச் சார்ந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், காலையில் இதுபற்றிய கவன ஈர்ப்புக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இங்கே மானியக் கோரிக்கையைத் தவிர மற்றதையெல்லாம் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) கோரிக்கைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மானியக் கோரிக்கைகளில் ஏதாவது கருத்துச் சொல்ல முடிந்தால், அதை மட்டும் எடுத்துச் சொல்லி பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 6-15*

**திரு. தி. வேல் முருகன்:** எனது தொகுதியைச் சார்ந்த ஒருவரைக்கூட 'அப்பலோ' மருத்துவமனையிலிருந்து—நேற்று காலையில் நான் ஊருக்குச் சென்று அவரை அழைத்து வந்து—discharge செய்து, அரசு மருத்துவமனையிலே கொண்டுபோய் சேர்த்திருக்கிறேன். இன்றைக்கு அவர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார். இரண்டு கிட்னியும் அவருக்கு பாதிக்கப்பட்டுவிட்டது. இப்படித் தொடர்ந்து பாதிப்புகளை உருவாக்கி இருக்கின்ற எங்களுடைய மக்களுக்கு, நம்முடைய அரசு ஒரு சரியான நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கடந்த மாதம் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, என்னுடைய தொகுதியில்; உளுந்து—நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், உளுந்து பற்றி பேச நேரம் இல்லை என்று சொல்லி, துணைக் கேள்வியின்போது எனக்கு அனுமதி மறுத்தீர்கள்— அந்த உளுந்துக்கு நிவாரணம் வழங்கவில்லை. மற்ற எல்லாப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்குகிறபோது, விவசாயப் பயிரான உளுந்துக்கும், நம்முடைய அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே உள்ள விவசாயம் சார்ந்த தொழில்களிலே, மீன்பிடித் தொழில் ஒரு முக்கிய தொழிலாக இருக்கிறது. ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேலாக கடற்கரையைக் கொண்ட நம்முடைய தமிழகத்திலே இன்றைக்கு, ஆறுகள், கிளை ஆறுகள், கால்வாய்கள், குளங்கள், குட்டைகள், ஏரிகள் ஆகியவற்றிலும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இத்தொழில், மாநில வருவாய்க்கு அதிகப் பங்கினை அளிக்கிறது. ஏறக்குறைய 4.6 இலட்சம் மக்களுக்கு வேலை அளிக்கிறது. மீன் ஏற்றுமதியிலிருந்து அன்னியச் செலாவணி கிடைக்கின்றது. மீன் தொழிலில் கிடைக்கக்கூடிய மீன், மனித வாழ்வில் சிறந்த பங்கு வகிக்கிறது. எனவே, இத்தொழிலை வளர்ப்பதும், சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெறுகிறது. இத்தொழிலை வளர்ப்பதற்காக, தற்போது அரசு உருவாக்கி இருக்கும் மீன் மேம்பாட்டு இயக்கத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனதார நாங்கள் வரவேற்கின்றோம். அதேசமயத்தில், தற்போது மீன் தொழிலையும், மீனவர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இந்த அரசு, இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, அறிவிக்கப்பட்ட திட்டங்கள்கூட செயல்படுத்தப்படவில்லை என்பதையும் இங்கு நான் வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக இராமேஸ்வரத்தில் ரூ.53.86 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கவும், ரூ.10 கோடியே 60 இலட்சம் செலவில், பழைய மீன்பிடித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்ளவும் மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு நிதி பெறப்பட்டதா, அதனுடைய திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் நம் மீனவர்களுடைய மீன்பிடி கடல் மண்டலப் பகுதியில், மீன் பிடிக்க இயலும் வகையில், ஒவ்வொரு நான்கு கடல் மைல் தொலைவுக்கும் ஒன்று வீதம் கடலிலே, பகலிலும், இரவிலும் கடல் எல்லை தெரியும் வகையில், கடல் வழிகாட்டும் விளக்கு ஒளிரும் மிதவைகளை நிறுவ அரசு உத்தேசித்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இத்திட்டம், இந்த ஆண்டு செயல்முறைப்படுத்தப்படும் என்று நாங்கள் கருதுகிறோம். அவ்வாறு மிதவைகளை நிறுவி இருந்தால், சமீபத்திலேகூட ஜெகதாபட்டினம், புதுக்கோட்டை,

நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் 42 மீனவர்கள், மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதே எங்களுடைய கருத்து. அப்போதுகூட, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரி, எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் அய்யாகூட, இந்திய நாட்டினுடைய பாரதப் பிரதமர் அவர்களுக்கும் தந்தி அனுப்பினார். எங்களுடைய எம்.பி. மூலமாக நாங்கள் வேண்டுகோளை வைத்தோம். இன்றைக்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்து விடுதலை செய்திருக்கும் என்று கருதுகிறேன்.

மேலும், இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் மீன் வளத் துறையின் நிதி ஒதுக்கீடு, சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட 11 கோடி ரூபாயை விடக் குறைக்கப்பட்டுள்ளது. 2001-2002 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மீன் வளத் துறைக்கு 59.26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டின் மதிப்பீட்டில் அது, வெறும் 42 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மீனவர்களுடைய நலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவும் 5.2 கோடி ரூபாயிலிருந்து 4.92 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கம் மற்றும் பயிற்சிக்கான நிதி ஒதுக்கீடு 1.9 கோடி ரூபாயிலிருந்து 1.74 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப் படகுகள் மற்றும் இயந்திரமயமாக்குதல், மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு வெறும் ஒரு இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு ரூ.7.4 கோடியிலிருந்து ரூ.6.6 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மீனவர் நலத்திற்கான மூலதனச் செலவு, வெறும் 39 இலட்சம் ரூபாயிலிருந்து, இன்னமும் குறைத்து வெறும் ஒரு இலட்சமாக இன்றைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. கடல் மீனளத்திற்கான மூலதனச் செலவுபற்றி நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் குறிப்பிடப்பெறவில்லை என்பது வேதனையான ஒரு செய்தியாகும்.

அதேபோல மீன்பிடித் துறைமுகம் மற்றும் கரை சேர்க்கும் வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4.6 கோடியிலிருந்து ரூ.1.95 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் மீனளம் குறித்த மூலதனச் செலவு ரூ.4.5 கோடியிலிருந்து ரூ.1.95 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மீன் வளத்திற்கான கடன்களுக்கு எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. துறைமுகங்களுக்கும் எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதேபோல துறைமுகங்களிலுள்ள கலங்கரை விளக்கங்களுக்கான



கடன்களைப் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேமாதிரி 2001-2002 திருத்திய மதிப்பீட்டில், ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இது வெறும் 11 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மீனவர் வீட்டு வசதிக்கான நிதி ஒதுக்கீடு ரூ.14 கோடியிலிருந்து ரூ.7 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு டீசல் மானியத்திற்கு ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு, டீசல் உதவித் தொகைக்காக எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் மானியத்திற்கு ரூ.162.18 இலட்சத்திற்கு Bill பெறப்பட்டு இன்று விநியோகிக்க அனுப்பப்பட்டுள்ளது. மண்டல இணை இயக்குநர், துணை இயக்குநர்கள், பயனாளிகளுக்கு விநியோகிப்பார்கள் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-20

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அந்த அறிவிப்புக்கு நன்றி.

அதேபோல இன்றைக்கு மீனவர்களுடைய நிலைமை, தரைமேல் பிறந்து, தண்ணீரில் வாழும் மக்கள் கண்ணீரில் வாழும் ஓர் அவல நிலை மாறவில்லை. பெரும்பாலான மீனவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். அவர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. மீன் வளத் துறையின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் திட்ட முதலீட்டில் பெரும் பங்கு மீன் வளத் துறையின் வசதிகளைப் பெருக்குவதற்காகத்தான் பயன்படுகிறதே தவிர, மீனவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லை. அரசு அளிக்கும் மானியங்களும் சாதனங்களும் அவர்களின் தேவைக்குக் குறைவாகவே உள்ளன. எனவே அரசின் திட்டங்களை உருவாக்கும்போது மீனவர்களின் தேவைகளையோ அல்லது மீன்பிடித் தொழிலின் தேவைகளையோ அடிப்படையாகக் கொண்டு அவற்றைத் தயார் செய்ய வேண்டுமெனக் கருதுகிறோம். திட்டங்களுக்கும் மீனவ மக்களின் தேவைகளுக்கும் ஓர் இடைவெளி காணப்படுகிறது. இதனால்தான் எவ்வளவு திட்டங்களைத் தீட்டியும் மீனவர்களின் வாழ்க்கையில் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை.

எனவே, எதிர்காலத்தில் மீனவர்களை மையமாகக் கொண்டு மீன் வளத் துறைக்கான ஒரு கொள்கையை வகுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

மீன் வளத் துறையில் வருவாய் மதிப்பீட்டு அடிப்படையில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். உதாரணமாக மீன் வளத் துறை ஒவ்வோர் ஆண்டும் மாநில வருவாய்க்கு எவ்வளவு தொகை அளிக்கிறதோ, அதில் 10 சதவீதம் மீன் வளத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆனால், தற்போது நம்முடைய ஆட்சி 1.22 சதவீதம்தான் கொடுத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அதேபோல உயர்ந்த திட்ட ஒதுக்கீடானது மீன் தொழிலின் தரத்தையும் மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த உதவும் திட்டங்களைச் செயல்படுத்த உதவும்.

அரசு, மீன்வளத் துறையில் செயல்படுத்த உள்ள திட்டங்களின் சமூகப் பொருளாதார தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கும், மீன் வளத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கான சிறந்த திட்டங்களை அளிப்பதற்கும் ஓர் உயர்நிலைக் குழுவை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் நிலையை அல்லது கடத்தப்படும் நிலையை மாற்ற வேண்டுமெனில், இந்திய கடல் எல்லையில் இந்திய கடற் படையை நிறுத்தி வைக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது. அதை நிறுத்தி வைப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமெனவும் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

மீனவர்களுக்கு அளித்து வரும் டீசல் மானியத் தொகையை நிறுத்தாமல் கொடுப்பதோடு, அதன் அளவையும் உயர்த்தித் தர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

அதேபோல், தற்போது அரசு டீசல் நிலையங்களில் அல்லது கூட்டுறவு டீசல் நிலையங்களில் டீசல் பெற்றுக் கொண்டால்தான் மீனவர்களுக்கு டீசல் மானியம் அளிக்கப்படுகிறது. இந்த நிபந்தனை மீனவர்களுக்கு பெருத்த கஷ்டத்தை உருவாக்குகிறது. இக்கஷ்டத்தைப்



போக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கும் சிறந்த தனியார் டீசல் மையங்களை அங்கீகாரம் செய்து அங்கு டீசல் வாங்கினால் டீசல் மானியம் வழங்கப்படும் என்ற உத்தரவை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீன் வளத்தை உயர்த்துவதற்கு சுரங்கங்கள், கற்சுரங்கங்கள், நெல் பயிரிடும் நிலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

வீடு இல்லாத மீனவர்கள் பலர் இருப்பதால் புறம்போக்கு நிலத்தில் அவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு ஒரு வீட்டிற்கு 60 ஆயிரம் ரூபாய் அளவுக்கு உதவித்தொகை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோல நம்முடைய கால்நடைத் துறையிலே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள கால்நடை பாதுகாப்புத் திட்டம்... (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்; கால்நடை பற்றிச் சொல்ல ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள். எருமை இனப் பெருக்கத்தின் புதிய திட்டம். தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் 1000 மகளிர் பயன்பெறும் வகையில் 145 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் புதிய திட்டத்தை நாங்கள் மனதார வரவேற்கின்றோம். இருந்தாலும் 2001-2002 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.168.75 கோடி இன்றைக்கு ரூ.167.6 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை கடந்த ஆண்டு மதிப்பீட்டில் ரூ.49 கோடியாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு மதிப்பீட்டில் மிகக் கணிசமாகக் குறைந்து ரூ.11 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருந்துகள் வாங்குவதற்கு சென்ற ஆண்டு ரூ.12 கோடி ஒதுக்கப்பட்டது; இந்த ஆண்டு ரூ.11 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு பால் உற்பத்திக்கு ரூ.37 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு எந்தத் தொகையும் அதற்கு ஒதுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள் திரு. எச்.எம். ராஜு. (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** அரசுக்கு நன்றி சொல்ல ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர், கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தன்னுடைய பகுதியிலே கோமாரி நோய் ஏற்பட்டு, அங்கு கால்நடைகள் எல்லாம் இறக்கின்ற ஒரு சூழ்நிலையை அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து இருக்கின்றார். உடனடியாக நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களும் இராணிப்பேட்டை பகுதியிலிருந்து 2000 ஊசி மருந்துகளை, தேவையானவற்றைக் கொண்டுவந்து அந்த கால்நடைகள் இறக்காமல் இருப்பதற்கும், தொடர்ந்து அந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கும், சரியான நேரத்தில், சரியான ஒரு நடவடிக்கை எடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மனமார்ந்த நன்றியினைக் கூறி, இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல் முருகன் அவர்கள் பேசுகிறபோது (குறுக்கீடு) மீனவர்களுடைய குடியிருப்புக்காக நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொன்னார். மீனவர்களுக்காக பட்ஜெட் மூலமாக 7 கோடி ரூபாயும், பட்ஜெட்டுக்கு அப்பாற்பட்டு outside the budget என்ற முறையிலே ஹட்கோ மூலமாக 7 கோடி ரூபாயும் ஒட்டுமொத்தமாக 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.



***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை மானியக் கோரிக்கையிலே நான் பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு தங்களுக்கு மனமார்ந்த நன்றியினைக் கூறிக்கொண்டு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துகளைக் கூற முன்வருகிறேன்.

நம் நாட்டில் கால்நடை வளர்ப்பு, கிராமப்புறங்களில் முக்கிய தொழிலாக தொன்றுதொட்டு இருந்து வருகிறது. மக்களுடைய துணை வருவாய் அதிகரிக்க இத்தொழில் மிகவும் உதவிடுகிறது. சுய வேலைவாய்ப்பும் மகளிர் பங்குகொள்ளும் வாய்ப்பும் இத்துறை நமக்கு அளித்துக்கொண்டிருக்கிறது. வேளாண் தொழிலாளர்கள், சிறு குறு விவசாயிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பிற்கும் இத்துறை நமக்கு வாய்ப்பு அளித்துக் கொண்டிருக்கிறது. 1997 ஆம் வருடத்தின் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டினுடைய கால்நடைகளின் எண்ணிக்கை 26.15 மில்லியன் ஆகும். இது நம் நாட்டினுடைய மொத்த சதவிகிதத்தில் 5.55 ஆகும். ஆனால் எருமையினுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 27,16,774 என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் இது மிகவும் குறைவாக உள்ளது. எருமை இனத்தினுடைய வளர்ப்பு அதிகரிக்க வேண்டுமானால் துறையினுடைய அதிகாரிகள் தயவுசெய்து ஏதாவது சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். காலப்போக்கில் எருமையினுடைய இனம் குறைவாகிக் கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைகளின் மூலம் வரும் மிக முக்கியமான மூலப்பொருள் தோலாக இருக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 26,150.10 மில்லியன் ரூபாய் அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கப்பெற்றது. கால்நடைகளுடைய எரு, விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கிறது என்பதை நாம் அறிகிறோம்.

கால்நடைகளைப் பொறுத்தவரையில், அதன் மேம்பாடு தமிழ்நாட்டில் இன்னும் சிறப்பாகச் செயல்படவேண்டுமானால் 1.23 இலட்சம் ஹெக்டேர் மேய்ச்சல் நிலங்களை, சட்டம் இருந்தாலும்கூட புறம்போக்கு நிலங்களாக நாம் மாற்றவே கூடாது. அந்த மேய்ச்சல் நிலங்கள் கால அளவிலே குறைந்துகொண்டே வந்துகொண்டிருக்கிறது. எனக்குக் கூட 1.23 இலட்சம் ஹெக்டேர் மேய்ச்சல் நிலங்களாக இருக்கும் என்பதிலே சந்தேகமாகத்தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால், எந்த வகையிலும் அந்த நிலத்தை நாம் வேறு நிலமாக மாற்றக்கூடாது என்பதை ஒரு கருத்தாகச் சொல்கிறேன்.

மேலும், ஜெர்சி, ஃப்ரிசியன், ஹோல்ஸ்டைன் பொலி காளைகளின் மூலமாக இனப்பெருக்கம் செய்து....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேய்ச்சல் நிலத்தை மேய்ச்சலுக்குத்தான் பயன்படுத்த வேண்டும், வீடு கட்டுவது போன்ற பணிக்குப் பயன்படுத்தக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். அந்தத் தவறை இந்த ஆட்சி செய்யவில்லை. கடந்த ஆட்சியிலேதான் மேய்ச்சல் நிலங்களையெல்லாம் வீடு கட்டுவதற்கு ஒதுக்கிவிட்டார்கள். அது கூடாது என்ற தடையை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது விதித்திருக்கிறார்கள் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாட்டினுடைய மக்களின் சார்பாகவும் விவசாயிகள் சார்பாகவும், நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு) தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவே சொல்லலாம். ஜெர்சி, ப்ரிசியன், ஹோல்ஸ்டைன் பொலி காளைகள் மூலம் இனப்பெருக்கம் செய்து, அதன் தரத்தை மேலும் நாம் உயர்த்த வேண்டும். காங்கேயம் மற்றும் முர்ரா போன்ற பொலி காளைகள் மூலம் எருமையினப் பெருக்கத்தை நாம் தரம் உயர்த்தி விவசாய மக்களுக்கு அதை மானிய விலையிலே கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செயற்கைக் கருவூட்டல் முறையை அதிகப்படுத்த வேண்டும். கலப்பினக் கால்நடைகளுக்கு பாலின் திறன் அதிகம் உள்ளது. பால் வற்றும் காலம் மிகவும் குறைவாகவுள்ளதால் 12 மாதம் முதல் 15 மாதங்களுக்குள்ளாக கன்று பெறும் அளவுக்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டானிடா உதவியுடன் நமது மாநிலத்தில் ஐந்தே ஐந்து மாவட்டங்கள்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மீதமுள்ள மாவட்டங்களுக்கும் டானிடா உதவி சென்றடைய வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவர்கள் வாரத்திற்கு இரண்டு முறையாவது கிராமத்திற்குச் சென்று அங்குள்ள கால்நடைகளுக்கு பராமரிப்பு தர வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டம், குந்தா ஊராட்சிக்குட்பட்ட



கிண்ணக்கொரை, பாலக்கொலா ஊராட்சிக்குட்பட்ட பி.மணிஹட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் மொத்தமுள்ள 48 ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில், ஒவ்வொரு ஊராட்சியிலும் அல்லது பேரூராட்சியிலும் கால்நடை மருந்தகங்களைக் கண்டிப்பாக ஆரம்பிக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் இருக்கிறோம்.

பிற்பகல் 6-30

கிராமப்புற கால்நடை மருந்தகங்களில் மருந்து தட்டுப்பாடு சில கிராமங்களில் இருக்கின்றது. எல்லாக் கிராமங்களிலும் என்று சொல்ல மாட்டேன். பொதுவாக, பாலக்கொலா கிராமத்தை எடுத்துக்கொண்டால், பி.மணிஹட்டி, பரமூலை, கண்ணகிமந்து மற்றும் இத்தலார் ஊராட்சியில் டி. காந்திநகர், துணிதலை போன்ற கிராமங்களில் இந்த மருந்துகள் அடிக்கடி தீர்ந்துவிடுகின்றன. இதனால் விவசாயப் பெருமக்கள் அதிகக் கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே மருந்துகளை, எந்தெந்தக் கிராமங்களுக்கு எந்த மருந்துகள் தேவையோ, மற்ற கிராமங்களிலிருந்து அந்த மருந்துகளை தேவைப்பட்ட கிராமங்களுக்கு அதிகாரிகள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், தமிழ்நாட்டில் நடமாடும் ஆய்வுக்கூடங்கள், நோய் புலனாய்வுகளின் மையங்கள் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும். தற்போது இருப்பது குறைவாக உள்ளது என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், கோமாரி, வெக்கை நோய், ப்ளோரா, நிமோனியா, ஆட்டுக்கொள்ளை நோய், நீலநாக்கு நோய், கோழியைத் தாக்கும் மேல் குத நோய், லீச்சி நோய், கோழி காலரா, தொண்டை அடைப்பான், சப்பை நோய், வாய் மற்றும் கால் நோய், துள்ளுமாரி, ஆட்டம்மை, லிம்ஸ்டன் ஜெடிஸ் ஆகிய நோய்களைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த நோய்களின் மூலமாக பல கால்நடைகளை நாம் இழந்துகொண்டு இருக்கிறோம். எப்படியாவது எந்த வகையிலாவது அதிகாரிகள் அதற்குத் தகுந்த உத்தரவுகளை அனுப்பி உங்களின்கீழ் பணி செய்யும் அந்த அதிகாரிகளுக்கு அறிவுரை சொல்லி இந்த நோய்கள் வராமல் காப்பதற்கு, என்னென்ன தரமான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தரமான கால்நடைத் தீவனங்களை நமது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோகம் செய்து, கால்நடைகளின் தரத்தை நாம் அதிகரிக்க வகை செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், கால்நடை

இன்சூரன்ஸ் பிரிமியம் 1 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டு வரை வாங்கிக் கொள்கிறார்கள். 11 ஆம் ஆண்டு அந்த கால்நடை துரதிருஷ்டவசமாக இயற்கை எய்தும்போது, அதற்கு அந்த 10 வருடம் கட்டினாலும் அந்த பிரிமியத் தொகை தருவது இல்லை என்று விவசாயப் பெருமக்கள் சொல்கிறார்கள். ஆகவே தயவுசெய்து அது 11-வது வருடம் இயற்கை எய்தினால்கூட பிரிமியம் செலுத்திய அந்த இன்சூரன்ஸ் பணத்தைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று விவசாய மக்கள் சொல்கிறார்கள். இதையும் தயவுசெய்து நீங்கள் ஆராய வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரியில் அங்கோரா என்ற வகை முயல்கள் அதிக அளவிலே இருக்கின்றன. அவற்றை நாம் வளர்க்கலாம். அவற்றிலிருந்து கிடைக்கும் உரோமங்கள் மூலமாக கம்பளிகள் தயாரித்து, பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை அன்னியச் செலாவணி மூலம் பெறுவதற்கு வாய்ப்புண்டு. அங்கு தயாரிப்பாளர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வங்கியின் மூலமாகக் கடன் கொடுத்து அந்த முயல் வளர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்தி நீங்கள் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், நீலகிரி மாவட்டத்தில் ஒரு கால்நடை மருத்துவ ஆலோசனைக் குழு அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்கிறேன்.

இறைச்சிக் கூடங்கள் நவீனமாக்கப்பட வேண்டும். சுகாதாரத்துடனும், சுத்தத்துடனும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊட்டிக்கு ஒரு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு ஒன்றும் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு, கொடூரமான முறையில் இந்தக் கால்நடைகள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து லாரிகள் மூலமாகப் போகும்போது, அவஸ்தைப்பட்டுக்கொண்டு அந்தக் கால்நடைகள் செல்கின்றன. போவதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை நான். அவை வசதியாகச் செல்லட்டும். இறப்பதற்கு முன்பாக நல்ல வகையிலே போகட்டும் என்றுதான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் அவஸ்தைப்படுகின்றன. 100 மாடுகள் போகும் இடத்திலே 200 மாடுகளைத் திணித்துக்கொண்டு செல்கிறார்கள். மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சிங்காநல்லூரில் உள்ள ஒரு கால்நடை மருந்தகம் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது என்று நமது தோழர் சொல்கிறார். அதற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் வேண்டும் என்று சொல்கிறேன்.

மீன்வளத் துறையைக் குறித்து, நீலகிரியிலே Trout fish என்பது உலகப் பிரசித்தி பெற்ற ஒரு மீன் வகை. அது எதிர்நீச்சல் அடித்துக்கொண்டு வாழ்க்கை செய்யும். சுத்தமான நீர் உபயோகிக்கும். ஒரு தடவை உபயோகித்தால் இரண்டாவது அந்த நீரை உபயோகிக்காது. அதற்குத் தகுந்த வழிவகை செய்து, ஏற்றுமதிக்கு நீங்கள் பாடுபட வேண்டும். அந்த மீன் அருமையானது. எதிர்நீச்சலில் ஆயுள் முழுவதும் வாழ்ந்து கொண்டு இருக்கும். அந்த அவலாஞ்சி பகுதி மக்களுக்கு-அங்கு இருப்பவர்கள் எல்லாம் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த இயலும் வகையில் அதை அதிகரிப்பு செய்வதற்காக துறை அதிக அளவிலே செலவுசெய்து அந்த இனத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மீனவர்கள் கடல் அட்டை மீனைப் பற்றிச் சொல்ல எங்களிடம் வந்தார்கள். அவர்கள், தடை விதிக்கப்பட்டுள்ள 52 வகை மீன்களிலே 3 வகை மீன்கள்-சிகப்பு அட்டை, வெள்ளை அட்டை, கருப்பு அட்டை மீன்களுக்காவது மத்திய அரசிடமிருந்து எப்படியாவது ஒரு விதிவிலக்கு வாங்கித் தரக் கேட்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஆயிரக்கணக்கான மீனவர்களும் கஷ்டப்படாமல் இருக்க தடை உத்தரவுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். இந்த அட்டை மீன் என்பது Sea Cucumber மீன் என்பது-பெண் கடல் அட்டை மீன் என்பது வருடத்திற்கு 20 இலட்சம் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்து-அது அழியும் இனம் அல்ல என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான்....

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுறா, திருக்கை மற்றும் வெள்ளை அட்டை, சிகப்பு அட்டை மற்றும் கருப்பு அட்டை மீன்களுக்கும் சேர்த்து 52 வகையான மீன்களுக்கு தடை விதித்தது, மைய அரசின் அமைச்சராக இருக்கும் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் டி.ஆர். பாலு அவர்கள். 28 வகை சிப்பி மற்றும் சங்கு மீன்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அட்டை வகை மீன்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை. மறுபடியும்

இக்கோரிக்கையினை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து கடிதம் அனுப்பி உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

*பிற்பகல் 6-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இந்த பதில் உங்களுக்கும்தான்.

**திரு. எச்.எம். ராஜு*:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தங்களுக்கு நன்றி சொல்லிக்கொண்டு பொதுவாக மானியக் கோரிக்கையில் நான் வேறொரு பொருளைப்பற்றிப் பேசமாட்டேன். இதுவரைக்கும் நான் பேசியதில்லை. இன்று உங்கள் அனுமதியுடன் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் முதல் குன்னூரிலிருந்து வாகனங்கள் மேட்டுப்பாளையம் செல்வதற்கு தடை விதித்திருக்கிறது மாவட்ட நிர்வாகம். நான் தடையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அங்கு 4 ஆதிவாசிகள் ஊர் இருக்கின்றன. குரும்பாடி, புதூர், புதுக்காடு, கோழிக்கரை போன்ற ஆதிவாசி கிராமங்கள் இருக்கின்றன. பரலியார் மரப்பாலத்திலும் 450 குடும்பங்கள் இருக்கின்றன. குன்னூரிலிருந்து கோத்தகிரி சென்று, கோத்தகிரியிலிருந்து மேட்டுப்பாளையம் சென்று, மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே மரப்பாலம் வரை வர வேண்டும். நான் கேட்பதெல்லாம், மேட்டுப்பாளையத்திலிருந்து கல்லார் வரை ஒரு நகரப் பேருந்து வந்துகொண்டிருக்கிறது. அந்த நகரப் பேருந்தை தயவுசெய்து நீட்டித்து, அது மரப்பாலம் வரை வர வேண்டும். இல்லையென்றால், குன்னூரிலிருந்து 2, 3 நடைகள் மரப்பாலம்—பரலியார் வழியே. அந்தப் பேருந்துகள் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் season ஆரம்பித்துவிட்டது. மாண்புமிகு ராஷ்டிரபதி அவர்கள் வரவிருக்கிறார்கள். மலர்க் கண்காட்சியெல்லாம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வருகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆகவே இந்தச் சூழ்நிலையிலே—நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்த ஆதிவாசிகள் குடும்பங்கள் எல்லாம் கஷ்டப்படக்கூடாது. மாண்புமிகு



முதல்வர் அவர்களும் இருக்கிறீர்கள்; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறீர்கள். அப்பகுதி மக்களுக்கு உதவி செய்து கொடுங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். வாழ்க பாரதம், வளர்க பாரதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி. (குறுக்கீடு) புகழேந்தி, என்ன சொல்லுங்கள்?

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேய்ச்சல் நிலங்களை எல்லாம் கடந்த கால அரசு வீடு கட்டுவதற்குக் கொடுத்துவிட்டது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசில் பட்டா கொடுப்பதற்கு சிறப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டு, 10 ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும், வெள்ளைக்காரர்கள் காலத்திலேயிருந்து வீடு கட்டிக் கொண்டு, குடிசை கட்டிக்கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, அதே இடத்தில் அவர்கள் வசிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றபொழுது பட்டா கொடுக்கலாம் என்ற ஒரு முடிவுதான் சொல்லிக் கொடுக்கப்பட்டதே தவிர, மேய்ச்சல் நிலங்களுக்கு எல்லாம் பட்டா கொடுக்க வேண்டுமென்று எந்தக் காலத்திலும், எந்த உத்தரவும் போடப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலம், பயன்படாத நிலம், fallow land எங்கெங்கு இருக்கின்றதோ ஏரியில் இருக்கின்ற நிலம், குளத்தில் இருக்கின்ற நிலத்தைக்கூட பட்டா போடுவதற்கு, பட்டா கொடுக்க அனுமதி கொடுத்து, அப்படி ஆகிவிட்ட உண்மை நிலையை மாற்றுவதற்குத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது உத்தரவு போட்டு, அதுபோன்ற நிலங்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கக்கூடாது, அந்த நிலங்கள் எல்லாம் நிலத்தடி நீரைச் சேகரிப்பதற்கும், Rain water Harvest-க்கும் மேய்ச்சல் நிலங்கள் போன்ற நிலங்கள் எல்லாம் ஆடு, மாடுகளுக்கும் தேவை என்று தற்போது இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லி விட்டீர்கள். திரு. புகழேந்தி சொன்னார். அதற்கு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். முடிந்து விட்டது.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு explanation தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து பல்வேறு நிலங்கள் அப்போதே பாகுபாடு செய்யப்பட்டுள்ள நிலங்கள் உண்டு. ஏரிப் புறம்போக்கு, வாய்க்கால் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு என்று பாகுபாடு செய்திருந்தாலும்கூட, அவை திரும்ப 50 ஆண்டுகாலமாக மறு ஆய்வு செய்யப்படாமலே கிடந்திருக்கின்றன. அதிலே பல குடியிருப்புகள், பல வீடுகள் எல்லாம் வந்துவிட்ட காலகட்டத்திலே— இப்போது எப்படி சென்னை மாநகரத்திற்கு சில விதிவிலக்குகளைக் கொடுக்கிறோமோ, அந்த அடிப்படையிலே ஏழை எளிய மக்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அது செய்யப்பட்டதே தவிர, ஏரி, மற்றவற்றிற்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுகூட ஒரு நிரந்தரத் திட்டமாக அல்ல. அதுபோன்று, ஏழைகளாக இருப்பவர்கள், 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கிறவர்கள் அவர்களுக்கு மட்டும் கொடுக்கலாம் என்ற ஒரு சிறப்புத் திட்டமாக அது அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மற்றும் மீன்வளத் துறை சம்பந்தமாக சில விவரங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே கால்நடைத் துறையையும், பால்வளத் துறையையும் சேர்த்து இணைத்து வைத்திருந்தால் கொஞ்சம் வசதியாக இருந்திருக்கும். ஏனென்றால் இரண்டு துறைகளுக்கும் ரொம்ப சம்பந்தம் இருக்கிறது. ஆக இந்த கால்நடைத் துறை சம்பந்தமாகச் சொல்லும்போது, நம்முடைய நாட்டிலே மொத்தத்திலே இப்போது இரண்டாயிரத்திற்கும் அதிகமான கிளை நிலையங்கள் உள்ளன. ஆனால் கிளை நிலையங்கள் முழுமையாகச் செயல்படுகின்றனவா என்று கேட்டால் இல்லை. ஏறத்தாழ 900-க்கும் அதிகமான கிளை நிலையங்கள் செயல்படாத நிலை இருக்கிறது. அதற்குக் காரணம், போதுமான பணியாளர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.



ஆகவே அரசாங்கத்தினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், முழுக்க அந்தக் கிளை நிலையங்களுக்குத் தேவையான ஊழியர்களை நியமனம் செய்வது என்பது தவிர்க்க முடியாத ஒரு விஷயமாக மாறியிருக்கிறது.

அதுபோன்று கால்நடை சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், இனப் பெருக்கத்திற்காக வெளிநாடுகளிலிருந்து நாம் வரவழைக்கின்ற ப்ரிசியன், ஜெர்சி மாடுகள், கலப்பின மாடுகளை கிராமங்களிலே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு நாம் வழங்குகிறோம், அவற்றை எந்த அளவுக்குப் பாதுகாக்கிறார்கள் என்ற அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, ஒரு குடும்பத்திற்கு, மிகவும் வறுமைக் கோட்டிலே இருக்கின்ற ஆதிவாசி பழங்குடியினரானாலும் சரி, ஆதிதிராவிடர்களானாலும் சரி, அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 2 மாடுகளை நாம் கொடுப்போமேயானால், அவர்களுக்காக நாம் கவலைப்பட வேண்டி வராது. அந்த வருவாயைக் கொண்டு அவர்கள் முழுமையாகப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதை வைத்துக்கொண்டு முழுக்க முழுக்க அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வார்கள். அந்த அடிப்படையிலே அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 6-40

அதேபோன்று இந்த கால்நடைகளுக்கு இதுசம்பந்தமான அந்த கலப்பின மாடுகளிலிருந்து கிடைக்கின்ற அந்த விந்து ஊட்டும் ஏற்பாடு, பொதுவாகக் குறைந்து வருகிற நிலையைப் பார்க்கிறோம். எனவேதான் அதை பொதுவாக உயர்த்திக்கொண்டு வருவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொன்னால், நெல்லை மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியில்தான் விந்து சேகரிக்கும் நிலையம் உள்ளது. அங்கிருந்து கன்னியாகுமரி மாவட்டம் கடைசிப் பகுதியான களியக்காவிளையில் உள்ள கால்நடை மையத்திற்கு, அந்த விந்தை அபிஷேகப்பட்டியிலிருந்து கொண்டுவருகிறார்கள். அதனால் அதனுடைய தரம் குறைந்து பத்து தடவை அதற்கான இன்ஜெக்ஷனைப் போட்டாலும் சினை பிடிப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நான் ஒரு கோரிக்கையாக இங்கே வைக்க விரும்புவது, நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவில் உலக்கையருவி என்ற ஒரு பகுதி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருடைய பகுதியாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனுடைய தட்பவெப்ப நிலை மிக சாதகமானது. நாம் இந்த மாடுகளை வளர்த்துக்கொள்வதற்கு சாதகமான ஓர் இடம். அந்த இடத்திலே ஒரு விந்து ஊட்டல் மையத்தை ஏற்படுத்துவதன் மூலமாக அந்த மாவட்டத்திலே அதிகப்படியான சினை மாடுகளை உருவாக்க முடியும். அந்த வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரசாங்கத்திலே ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள். ஏற்கெனவே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த ஆணையை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதிக்குள்ளே வருகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கால்நடை மருந்தகம் கட்டப்பட்டு, ஆறு மாதங்களுக்கு முன்னாலே முடிவடைந்தது. ஆனால் மின்சாரத் துறையினர் அதற்குத் தேவையான மின்சாரத்தைத் தருவதற்கும், அதனுடைய இணைப்பைத் தருவதற்கும் காலம் கடத்தியே இன்று வரை திறக்கப்படாமல் இருக்கிறது. இன்று அந்த மையம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. எனவே களியல் கிராமத்தில் அரசநாடு என்ற பகுதியிலே இருக்கிற அந்தக் கால்நடை மருந்தகத்தைத் திறந்து, நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளத் துறை சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே நாம் நெல் சாகுபடி செய்வதற்கு ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறோம். அதற்குப் போதுமான மானியங்கள் கொடுக்கின்றோம். பலவற்றைச் செய்கிறோம். நெல் நமது உணவு என்ற அடிப்படையிலே பார்க்கிறபோது, நெல், அரிசியைத் தாண்டினால் அதிகப்படியான ஊட்டச்சத்து இருக்கின்ற ஒரு பொருள், நம்முடைய கடலிலிருந்து நாம் பிடிக்கின்ற மீன் ஆகும். இந்த மீன் பிடிப்புப் பகுதி என்பது நம்முடைய மாநிலத்திலே கடைசி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்திலே நீரோடி என்ற பகுதியில் ஆரம்பித்து, ஆரம்பாக்கம் வரையிலே ஏறத்தாழ 1300-க்கு அதிகமான மைல் கல்லைக் கொண்ட பகுதியிலே இந்த மீன் வளம் இருக்கிறது. அதன் மூலமாக மத்திய அரசுக்கு அல்லது அதனுடைய ஏற்றுமதிக்கு



நாம் பிடிக்கின்ற மீன்களின் கணக்கையெல்லாம் தந்திருக்கிறீர்கள். 13 கடலோரக் கிராமங்கள். அந்த 13 கடலோரக் கிராமங்களில் ஏறக்குறைய 3 இலட்சம் மக்கள் இதிலே பணியாற்றி வருகிறார்கள். இதிலே 8500 விசைப் படகுகள், 40 ஆயிரம் சாதாரணப் படகுகள், கட்டுமரங்கள், வள்ளங்கள் இதன் மூலமாக மீன்பிடித் தொழில் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. சுமார் 4 இலட்சம் மெட்ரிக் டன் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன என்று உங்களுடைய கொள்கை விளக்க அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். 4 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவை இந்த மாநிலத்திலே தருவது மட்டுமல்லாமல், பிற நாடுகளுக்கும் நாம் ஏற்றுமதி செய்கிறோம். அந்த மீனவர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே பல சிக்கல்கள்கூட இருக்கின்றன. எனவேதான், இப்படி நம்முடைய உணவுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்கின்ற அந்த மீனவ மக்களைப் பாதுகாக்கின்ற ஒரு சிறப்பான திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே அன்னியச் செலாவணி என்று சொல்லி 2015 கோடி ரூபாயை நாம் ஏற்றுமதியின் மூலமாக இங்கே பெற்றுக்கொடுக்கிறோம் என்று தகவலைத் தந்திருக்கிறார்கள். இந்த 2015 கோடியிலே எத்தனை ரூபாய் நமக்கு வருகிறது? நம் கடலிலுள்ள இந்த வளத்தின் காரணமாக மத்திய அரசுக்கு எவ்வளவு செல்கிறது? இதிலே நமக்கு எவ்வளவு பங்கு வருகிறது என்ற விவரம்கூட கிடைத்தால் நல்லது. மத்திய அரசிலேயிருந்து நாம் இப்போது 3 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றபோது, சில நிபந்தனைகளைச் சொல்கின்றார்கள். நாம் அதிலே கலந்து கொள்ளாத துர்பாக்கியமான நிலை நமக்கு இருக்கிறது. பொதுவாகச் சொன்னால் நாம் ஏற்றுமதி செய்கின்ற மணல் ஆஸ்திரேலியாவுக்கும், ஜப்பானுக்கும் செல்கின்றது. இதன் மூலமாகக் கிடைக்கின்ற அன்னியச் செலாவணியையும், மீன் ஏற்றுமதி மூலம் கிடைக்கின்ற அன்னியச் செலாவணியையும் சேர்த்து நம்முடைய மத்திய அரசாங்கம் போதுமான நிதி ஆதாரத்தை குறைந்தபட்சம் ஐயாயிரம் கோடி ரூபாய் நமக்குத் தந்திருக்க வேண்டும். இந்த ரூபாய் ஐயாயிரம் கோடியிலே நமது தமிழ்நாட்டில் எந்தெந்தப் பொருட்கள் மூலமாக அன்னியச் செலாவணியை நாம் பெற்றுத் தருகிறோம் என்ற விவரங்கள் கிடைப்பது என்பது, தருவது என்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

பிற்பகல் 6-45

அதுபோன்று இந்தச் சமயத்திலே ஓர் ஒப்பந்தம் 2001-லே தைவான் நாட்டிலேயிருந்து கப்பல்கள் மூலமாக மீன்பிடிப்பதற்கு ஒரு ஒப்பந்தத்தை—மத்திய அரசாங்கம் செய்துள்ளது. ஏற்கெனவே பிற நாடுகளிலுள்ள கப்பல்கள் வந்து மீன்பிடிப்பதால் நம்முடைய கடலோரத்திலே இருக்கின்ற மீனவர்கள் ஆழ்கடலிலே சென்று மீன் பிடிக்க வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்படுகிறது. பக்கத்திலே மீன் கிடைப்பது இல்லை. அதற்கு மேலே இன்னும் சொல்லப்போனால்—நம்முடைய இந்தத் துறையினுடைய அமைச்சருக்கே இரண்டு கப்பல்கள்,—மீன் பிடிக்கின்ற இரண்டு இழுவைக் கப்பல்கள், சென்னையினுடைய அருகாமையிலே அவை முகாம் அடிக்கின்றன. —கரையோரப் பகுதியிலே வெளி நாட்டுக் கப்பல்கள் வந்து மீன் பிடிப்பதன் காரணமாக இந்த மீன் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்ற காலங்களிலே நம்முடைய மீன் உற்பத்தி என்பது அழிந்து போகிறது. இந்த அடிப்படையிலே இன்று வெளிநாட்டுக் கப்பல்களுக்குத் தாராளமாக மீனை இங்கு வைத்து பிடித்து செல்வதற்காக ஒரு வாய்ப்பை மத்திய அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

சமீபத்தில் கூட கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு தைவான் நாட்டுக் கப்பல் அதனுடைய எல்லைக் கோட்டையெல்லாம் மீறி உள்ளே நுழைந்ததற்குப் பின்னால் நம்முடைய கடலோரக் காவல் படையினர் அதைச் சுற்றி வளைத்துத் துரத்திவிட்டார்கள் என்று ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது.

ஆக இந்த அடிப்படையிலே நின்றுகொண்டுதான் நம்முடைய விசைப்படகு, அதுபோல நம்முடைய படகு, கட்டுமரங்கள், இன்னும் நாட்டுவிசைப்படகுகள் என்று சொல்லும்போது, வள்ளங்களைப் பயன்படுத்துகிறார்கள். இதற்கு மேலே வருகின்றபோது இதிலே அந்தக் கடைசிப் பகுதியிலேயிருந்து சென்னை வரையில் பார்க்கின்றபோது ஆரம்பாக்கம் வரையிலே பார்க்கின்றபோது, கடல் சீற்றம் ஏற்படுகின்றபோது பல்வேறு பகுதிகளிலே மீனவர்கள் காணாமல் போய்விடுகிறார்கள். இப்போதுகூட ஒரு வருடத்திற்கு முன்னாலே மாலத் தீவிலே போய் 12 பேர் மாட்டிக்கொண்டார்கள். அதிலே 11 பேரை விடுதலை செய்தார்கள். ஒருவரை இன்றைக்கு பிணைக் கைதியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய படகு,



வலையெல்லாம் அங்கே இருக்கின்றன. சமீபத்திலேகூட இன்னொரு பகுதியிலிருந்து—குளச்சலுக்கு அருகாமையிலுள்ள பகுதியிலேயிருந்து சென்ற ஒருவரையும் பிணையக் கைதியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்வதற்காக அவசரமான நடவடிக்கையை இந்த மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு பேசி, அவர்களுக்கு ஏதாவது தண்டனை இருந்தால், அவர்களுக்காக கொடுக்க வேண்டிய பணம் இருந்தால் அதைக் கொடுத்து அவர்களை மீட்டுத்தர வேண்டுமென்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல கடலுக்குள்ளே மீன்பிடிக்கப் போகின்ற அந்தப் படகுகள் பூராவிலும் வயர்லெஸ் பொருத்துவதற்கு—அது ஒன்றும் அதிகச் செலவு வரக்கூடிய சமாச்சாரம் அல்ல. அந்த வயர்லெஸ்ஸைப் பொருத்தினால் இந்தச் சிக்கல்களிலிருந்தெல்லாம் அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய உரையில் பாதி இடத்திற்கு வரவில்லை. முக்கியமான பிரச்சினை சொல்லியே ஆகவேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இன்னொன்று, நம்முடைய கடலோரக் கிராமத்திலே இருக்கின்றவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற முக்கியமான பிரச்சினை. ஏற்கெனவே நம்முடைய முன்னாள் மீன்வளத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை அந்தப் பகுதியிலே வந்து பார்வையிட்டபோது நீரோடி என்ற கிராமத்தில் அரசாங்கம், முன்னாலே கட்டிக்கொடுத்த 90 வீடுகளும் உடைந்து போயிருந்தன பயங்கரச் சூறாவளிக் காற்றின் காரணமாக. அந்த வீடுகளைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுபோன்றுதான் சமீபத்திலே இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒரு சுவற்றிலே 10 தென்னங்கீற்றை வைத்து தூங்கிக்கொண்டிருந்தவர் மீது சுவர் இடிந்து விழுந்து ஒரு நபர் இறந்துவிட்டார் என்ற செய்திகூட வந்திருக்கிறது. ஆக இந்த மீனவக் கிராமங்களிலே, நீரோடியிலிருந்து ஆரம்பித்து சென்னையினுடைய கடற்கரைப் பகுதி வரையிலும், எந்தெந்தப் பகுதிகளில் நாம் வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டுமோ, அந்த அடிப்படையிலும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதுபோல இங்கே சொன்ன விஷயத்தை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். இராமேஸ்வரத்திலே கடலிலே இருக்கக்கூடிய மீன்கள், இப்போது எந்த மீன் வலைக்குள்ளே வரவேண்டும், எந்த

மீன் வரக்கூடாது என்று மத்திய அரசாங்கம் போட்ட அந்த ஆணை தெரியுமா என்று கேட்டால் அதற்குத் தெரியாது. இந்தக் கப்பலிலே வலைபோட்டு மீனைப் பிடித்தாலும் சரி, நம்முடைய மீனவர்கள் வலையின் மூலமாக வலைபோட்டு மீனைப் பிடித்தாலும், இந்த வெள்ளை அட்டையும் வரும், சிகப்பு அட்டையும் வரும், கருப்பு அட்டையும் வரும் சுறாமீனும் வரும், இதை எப்படித் தடுத்துக்கொள்ள முடியும? ஆக இது ஒரு விவேகமான முடிவா என்று கேட்டால் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே மத்திய அரசாங்கம் போட்ட அந்த 53 வகையான மீன்களை இங்கு பிடிப்பதற்கான தடை உத்தரவை இரத்து செய்வதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் இன்னும் சிறப்பான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-50

ஏற்கெனவே பல உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். இந்த சிகப்பு, கருப்பு அட்டைகளினுடைய சமாசாரத்தை, அது இராமேஸ்வரத்திலே அதிகமாகக் கிடைக்கிறது. அந்த அட்டையினுடைய உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். உலக ஆராய்ச்சி நிறுவனம்கூட அது அழியும் பொருள் அல்ல, ஏனென்றால் ஓர் ஆண்டிலே எவ்வளவு முட்டையைப் போடுகின்றது என்ற விவரங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். ஆக அதுபோல சுறா மீன்பிடிக்க மீனவர்கள் எங்கே போகிறார்கள்? அங்கே மீன் பிடிப்பதற்கு இந்த மீனவர்களுக்கு நம்முடைய கடற்கரையிலே அதிகபட்சம் போனால் 5 மாதம்தான் Season. இங்கேயிருந்து ஆரம்பித்து எனக்குத் தெரிந்த வரையில் முதலில் அவன் விழிஞ்சத்திலே கேரள மாநிலத்தில் அந்த நீண்டகரை, கொச்சி துறைமுகத்திற்குப் போகிறான். பிறகு நீண்ட கடற்கரைக்குப் போகிறான். பிறகு அதிலிருந்து கோழிக்கோட்டிற்குப் போகிறான். திரும்பி அவன் சுறா மீன் பிடிப்பதற்கு கோவாவிற்குச் செல்கின்றான். கோவாவிலே பிடிக்கின்ற மீனைப் பக்குவப்படுத்தி அந்த சுறா மீனுடைய— அவர்களுடைய பாஷையிலே சொன்னால் சுறாபீலி என்று சொல்வார்கள். இந்தச் சிறகை அதிகமாக ஏற்றுமதி செய்வது ஜப்பானுக்கும், அமெரிக்காவிற்கும். ஆக அதன் மூலமாக நாம் நம்முடைய மத்திய அரசுக்கு அதிகப்படியான அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறோம். இந்த மீனவர்களுக்கு வருகிற இன்னல்களுக்குக் கையிலே கணக்கு ஒன்றும் கிடையாது. அந்த



வகையிலே நம்முடைய மீனவர்களைப் பாதுகாத்துக்கொள்கிற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோல தூத்துக்குடி. தூத்துக்குடியிலே ஒரு புதிய துறைமுகம் இருக்கிறது. அந்த துறைமுகத்திற்குப் பக்கத்திலே மீனவ மக்கள் குடியிருப்புகள் ஏராளமாக இருக்கின்றன. ஆண்டுகள் பல ஓடிவிட்டன. குடிக்கத் தண்ணீர் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. 6 மணிக்கு மேலே போனால் அங்கே இருட்டாகத்தான் இருக்கும். வெளிச்சம் இல்லை. மின்சாரம் இல்லை. ஆக அடிப்படை வசதிகளை தூத்துக்குடி வட்டார மீனவ மக்களுக்குச் செய்துதர வேண்டும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளைச் சொல்லிக்கொள்கின்றேன்.

அதேபோன்று பழவேற்காட்டிலே, அதனுடைய முகத்துவாரம் மணலால் அடைபட்டுப் போய் உள்ளது. ஏற்கெனவே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதைத் தூர்வாரி அந்த இடம் சரியாக்கப்படும் என்று. ஆனால் கடந்த ஆண்டு இந்த மாமன்றத்திலே சொன்னார்கள், 30 இலட்சம் ரூபாய் அதற்காகச் செலவிடப்படும் என்று. செலவிட்டார்களா இல்லையா என்பது தெரியாது. ஆனால் அந்த மீனவ மக்களுடைய குறைந்தபட்சக் கோரிக்கை, பழவேற்காடு முகத்துவாரத்திலுள்ள அந்த மண்ணை அகற்றி அவர்களுக்கு ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும்.

அதுபோல பஞ்ச நிவாரணம். இந்த 5 மாதம் கழித்தால் அவர்களுக்குப் பஞ்ச நிவாரணம் என்பதில்லை. நாம் அடிப்படையாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அவர்கள் கட்ட வேண்டியது. 50 ரூபாய் என்று முதலிலே வைத்திருந்தோம். ஆனால் சமீபத்திலே இந்த மாநில அரசாங்கம் அதை 75 ரூபாய் என்று தீர்மானித்தது. அதை அவர்களால் கட்ட இயலவில்லை. எனவேதான் அந்த 50 ரூபாயை வைத்துக்கொண்டு அரசாங்கம் செலுத்த வேண்டிய நிதியையும் செலுத்தி அவர்களுக்கு அந்தப் பஞ்ச நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது அண்டை மாநிலமாக இருக்கின்ற பாண்டிச்சேரியிலே எந்த அளவிற்கு அவர்களுக்குப் பஞ்ச நிவாரணம் வழங்குகிறார்கள் என்பதைப் பார்த்து அதுபோன்று உதவுவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சில நல வாரியங்கள். மீனவ மக்களுக்கு என்று தனியாக ஒரு நல வாரியம் வேண்டும். அந்த நல வாரியத்தின் மூலமாகத்தான்

அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவது, நம்முடைய உள்நாட்டு மீன். ஒரு கணக்குத் தந்திருக்கிறார்கள், எவ்வளவு பிடித்திருக்கிறோம் என்று சொல்லி. நம்முடைய வற்றாத குளங்கள், ஏரிகளில் அதிகப்படியாக மீன் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய பகுதியிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் 1, சிற்றார் 2 பிரம்மாண்டமான மீன் வளருகிற ஒரு பகுதி. நான்கு வகையான மீன்கள். நான்கு ஆண்டு காலத்திலே 10 கிலோ, 20 கிலோ வளருகிறது. கட்லா என்று ஒரு இனமும், அதுபோல மிர்கால் என்பதும், கெண்டை என்பதும், கல்பாஸ் என்பதும் 4 ஆண்டு காலத்திலே 20 கிலோ வரை வளருகிறது. மீனை இன்று வளர்த்து வருகிறார்கள். விற்பனை செய்கிறார்கள். ஆனால் விற்பனையிலே அதற்குக் கொஞ்சம் விலை ஜாஸ்தி. ஒரு கிலோவிற்கு, 20 ரூபாய்க்குக் கீழே வந்தால் சாதாரண மக்கள் அதை வாங்கிப் பயன்படுத்தமுடியும். எனவேதான் 4 ஆண்டு காலமாகவே பார்த்தோம் என்று சொன்னால் தேவையான மீன் குஞ்சுகளைப் பிற பகுதியிலேயிருந்து கொண்டு வந்துதான் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குட்டைகளிலே வைத்து, ஒரு அடி அளவிற்கு வளர்ந்ததற்குப் பின்னால்தான் அவற்றை இந்த அணைக்கட்டிலே விடுகின்றனர். ஆனால் சிவலோகம் என்ற ஊரிலே அந்தத் தொட்டிகள் எல்லாம் இப்போது காலியாக இருக்கின்றன. என்ன என்று தெரியவில்லை. அதிகாரிகளுடன் பேசிப் பார்த்தேன். அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. ஆக நம்முடைய தமிழ்நாட்டிலே நாம் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி, வற்றாத தண்ணீர் இருக்கின்ற ஏரிகளிலும், குளங்களிலும், அணைக்கட்டுகளிலும் இந்த மீன் குஞ்சுகளை அதிகமாக வளர்த்தோமேயானால், நம் நாட்டினுடைய உணவுப் பிரச்சினைக்கு, அந்தப் பஞ்சத்திற்கு, அந்த ஊட்டச் சத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அந்த வகையிலே இந்தத் துறை அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, அதுபோல, அந்த மீனவர்களுக்குக் குறைந்த விலையிலே வள்ளம், வலை, கட்டுமரங்கள் அதுபோல படகுகள் வாங்குவதற்கு நாம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறோம் என்பது தெரியாது. அவை மானிய விலையிலே கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 6-55

அதுபோல கடல் சீற்றத்தைத் தடுக்க இப்போது எங்கள் மாவட்டத்திலே தூண்டில் வளைவு கேட்கிறோம். தூண்டில் வளைவு,



தூண்டில் வளைவு என்று சொன்னால், அது அதிக செலவு வரக்கூடியது. அங்கே நான்கு தாலுகாக்களில் மூன்று பகுதிகளில் தூண்டில் வளைவு வேண்டும். ஏனென்றால் இந்தக் கடல் அலையைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் அந்த ஏற்பாடு இருக்கும். ஏற்கெனவே கேரள மாநிலத்திலே கொல்லத்திலே நீண்டகரையிலே அந்தத் தூண்டில் வளைவு செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே வருடா வருடம் மிகப் பெரிய தாக்குதலுக்கும், நூற்றுக்கணக்கான வீடுகள் உடைந்து போவதற்கும், இன்னும் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதற்கும் ஏதுவாகின்றது. விளவங்கோடு தொகுதியினுடைய வள்ளவிளை கிராமம் அல்லது மார்த்தாண்டம் துறையோ அல்லது சின்னதுறை, இவற்றில் ஏதாவது ஒரு பகுதியைத் தேர்வு செய்து, இந்தத் தூண்டில் வளைவைப் போடுவது என்பது ஒரு முக்கியமான காரியம். அதோடு சேர்த்து கல்லைப் போட்டு இந்தக் கடல் தண்ணீரைத் தடுப்பது என்று ஒரு சம்பிரதாயம் மேற்கொண்டிருக்கிறார்கள். அது சாதாரண சின்ன கல் அல்ல. அந்தக் கல் என்பதே கிட்டத்தட்ட கிரேனைப் பயன்படுத்தி, லாரிகளில் ஏற்றி அதற்குப் பின்னால் கிரேன் மூலமாகத்தான் கடலில் போடமுடியும். இந்த வேலையைத் தொடங்குவதற்கு, பணத்தையெல்லாம் ஒதுக்கியிருக்கின்றார்கள் என்ற தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த மே மாதம், நேற்றிலிருந்து மழை ஆரம்பித்திருக்க வேண்டும். இன்னும் அடுத்த ஆனி, ஆடி மாதம் வருகின்றபோது அதிகப்படியான சேதங்கள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அந்த வகையிலே அவசரமாக அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கடலுக்குள் மீன் பிடிக்கப்போனால் பல்வேறு இடங்களில் உயிர்ச் சேதங்கள் வருகின்றது. இப்போது சமீபத்திலே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் கடலுக்குள் மீன் பிடிக்கப் போனபோது heart attack வந்து இறந்து போனார். ஆனால் அதிகாரிகள் இவருக்கு அரசாங்கம் தர வேண்டிய நல உதவி அல்லது பாதுகாப்பு உதவி தர இயலாது— என்று சொல்லிவிட்டார்கள், எப்படி ஆபத்து வந்து செத்தாலும் சரி— heart attack வந்தாலும் சரி, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு உள்ளது. அந்த விதிமுறை ஏதாவது இருக்குமானால் அதைத் தளர்த்தி அவர்களுக்கும் இந்த உதவி கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டு, பொதுவாக நம்முடைய உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற நம்முடைய மீனவ மக்களை—அது நாட்டுப்

பகுதியானாலும் சரி, கடலுக்குள்ளேயானாலும் சரி, மிகப் பெரிய மீன்கள் பிடித்து அன்னியச் செலாவணியை ஏற்படுத்தித் தருகின்ற நம்முடைய அந்த மீனவ மக்களை—பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறைமீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**THIRU C. GNANASEKARAN:** Hon. Deputy Speaker, Sir, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன அமைச்சரிடம்தானே கேட்க வேண்டும்? கடைசியில் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இன்று விபத்தில் காயமடைந்ததாகத் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரோ அல்லது அமைச்சர்களோ சென்று பார்த்தார்களா? அவருடைய உடல்நிலை எப்படியிருக்கிறது என்பதை அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், குத்தாலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நேற்று கார் மூலம் சென்னை வந்துகொண்டிருந்தபோது கிட்டத்தட்ட அதிகாலை 4-30 மணியளவில் அவர்கள் வந்த கார் விபத்துக்குள்ளாகி உடனடியாக அவர்கள் அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குப் பின்



மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சருடைய பாதுகாவலரும், மாண்புமிகு அமைச்சருடைய வாகன ஓட்டுநரும் நல்லமுறையில் இருக்கின்றார்கள் என்ற தகவலைத் தெரிவிக்கின்றேன். சிறப்பான வைத்தியம், அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்தி அவர்களுக்கு முதல் தரமான மருத்துவ உதவி தரப்பட வேண்டுமென்று அவர்கள் காலையிலே, அதிகாலையிலே எல்லோரையும் பணித்து, அவர்கள் இன்று நல்ல முறையில் உடல் தேறி வருகின்றார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று 4 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரையும் பார்த்துவிட்டு வந்திருக்கின்றார்கள். அமைச்சர்கள், நாங்களும் சென்று பார்த்துவிட்டு வந்தோம். அவர் உடல்நிலை நல்ல முறையில் தேறி வருகிறது. அவருக்கு ஆண்டவன் நலம் புரிய வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் பிரார்த்தனை செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 7-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை என்பது ஒரு காலத்தில் ஒரு மிகப் பெரிய செல்வம் எனக் கருதப்பட்டது. ஆனால் நம் காலத்தில் கால்நடைகளான ஆடு, மாடுகள் மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கின்றன. அன்றாடம் கேரளாவை நோக்கி தமிழகத்தின் செல்வங்களான பசுக்கள் கொள்ளை கொண்டு போவது போன்று சென்றுகொண்டிருக்கின்றன. தமிழக அரசு, இந்தச் செல்வங்களான கால்நடைகளைப் பாதுகாக்கின்ற வகையில், ஏதேனும் ஒரு வகையில் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கின்ற முயற்சியை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய விவசாயப் பணிகளான உழுவது, கதிர் அடிப்பது போன்ற பணிகள் எல்லாம் கூட மாடுகளை மட்டுமே பயன்படுத்தி, பணிகள் முடிக்கப்பட்டன. ஆனால் இன்று நடைமுறை அவ்வாறு இல்லை. அவை அனைத்தும்—கால்நடைகள் அழிக்கப்பட்ட சூழ்நிலையில் முற்றிலும் தானியங்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதுமட்டுமல்ல. அன்று நிலங்களுக்கு உரங்களாக மக்கிப்போன மாட்டு, ஆட்டுச் சாணங்கள் பயன்படுத்தப்பட்டன. இன்று அவை எல்லாம் காணாமல் போன நிலையில், மானியங்கள் மறுக்கப்பட்ட நிலையில், நவீன உரங்கள். இரசாயனம் கலந்த உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் நிலத்தின் வளங்களெல்லாம் அழிந்துவிட்டன. மீண்டும், பழையபடி மாட்டுத் தொழுவத்தில் கிடைக்கும் பழைய உரங்களை இட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எனவே மீண்டும் கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற பணியான மிகவும் சத்தான உணவுப் பொருளான பாலை உருவாக்குகின்ற நடைமுறைகளை இந்த அரசு வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மீது மிக அவசர கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகள் வெக்கை நோய், கோமாரி போன்ற கொள்ளை நோய்களால் மிக அதிகமான முறையில் அழிந்துகொண்டிருக்கின்றன. இந்நோய்களைத் தடுக்க தடுப்பூசி எல்லாம் இருந்தும்கூட அந்நோய்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தடுப்பூசி போடும் முறைகளில் மாறுதல் கொண்டு வந்து, காலத்தை உணர்ந்து, நோயின தன்மை மற்றும் அறிகுறிகளை உணர்ந்து தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. அ. பாப்பா சுந்தரம் தலைமை)**

இத்துறைக்கு கவர்னர் உரையில் ரூ.98 கோடி ஒதுக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பெரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்படும் நிதி மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பல பங்குகள், பல முறைகேடுகள் நடக்கின்றன. அவற்றைக் கண்டறிந்து குறைகளைப் போக்கி நல்லமுறையில் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சிகள் மூலம் கொடுக்கப்படும் நவீன இன பசுக் கன்றுகள் ஊருக்கு ஒன்றோ, இரண்டோ கொடுத்துவிட்டு கணக்கு முடித்து விடுகின்றனர். தனியார் துறையின் மூலம் ஆடு, மாடு, கோழி, பன்றி வளர்ப்பு ஆகியவை பெரிய அளவில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. உதாரணமாக, எங்களின் அண்டை மாவட்டமான நாமக்கல்லில் கோழி முட்டைகள் தயார் பண்ணுகிற அந்தத் தொழில், நாடு முழுவதும் விநியோகிக்கின்ற முறையில் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. இப்படிப்பட்ட திட்டங்களை அரசு ஏதேனும் செயல்படுத்துகிறதா என்று சொன்னால் இல்லை என்று சொல்கிறபோது வேதனையளிக்கிறது. அதே நேரத்தில் தெற்காசிய நாடுகளெல்லாம் வியக்கும் வண்ணம் சென்னையில் ஓர் ஆராய்ச்சிக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சிக் கல்லூரி அமைந்திருப்பது நமக்கு பெருமை சேர்க்கும் விஷயமாகும். ஆசிய நாடுகள், ரஷ்யா போன்ற பெரிய நாடுகள் எல்லாம் கூட கால்நடைகள்பற்றி விவரமறிய satellite மூலம் இங்கிருந்து விவரம் அறிந்து கொள்கின்ற வகையில் செயல்படுகின்ற இந்தச் செயல்முறை சிறப்பானது ஆகும். இதை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம்.



நாய்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. தெருவெல்லாம் நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக்கொண்டே உள்ளது. நாய்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்வது நல்லது என்று கருதுகிறேன். வெறி நாய்களினால் ஆண்டொன்றுக்கு இந்தியா முழுவதும் 30,000-க்கும் மேற்பட்டவர்கள் இறக்கின்றார்கள். இதைத்தடுக்கும் வகையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பன்றிகளால் மூளைக் காய்ச்சல் வருகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே தெருவெல்லாம் அசுத்தம் செய்வதைத் தடுக்கும்பொருட்டு சுட வேண்டும் இந்த நிலையிலே மத்திய அரசு சுடக்கூடாது; இவற்றை தடுத்து நிறுத்த வேண்டும். இது ஒரு உணவுப் பொருளுக்கான வளர்ப்பு முறை என்ற முறையிலே அணுகி இருக்கிறது. குறைந்தபட்சம் இந்தப் பன்றி வளர்ப்பாளர்களை அழைத்துப் பேசி இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களைப், போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிராணிகள் வளர்ப்பு ஆய்வாளர்களை அரசுப் பணியாளர்களாக ஏற்று அவர்களுக்கு வேலை உத்தரவாதம் போன்றவை வழங்கப்பட வேண்டும். கடைகளில் குடிநீரில் I.S.I. முத்திரையிடுதல், தண்ணீர் சுத்தமாக இருத்தல் போன்றவற்றை எல்லாம்கூட அவர்களை வைத்துப் பார்வையிட ஏற்பாடு செய்யலாம். நீண்டகாலமாக uniform உடையிலே 250 பேருக்கு மேலாக நிரந்தரமான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. கால்நடை பராமரிப்புத் துறையில் 40 ஆண்டுகளுக்கு மேலாக 3,000 பேர்களுக்கு மேல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் நிரந்தரமாக ஈடுபடுத்தி, நாட்டில் ஏற்படுகிற சாதாரண சமூகச் சீர்கேடுகளையும் ஒழுக்கக் கேடான முறைகளையும்,

போக்குகின்ற வகையில் இவர்களை வைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்வது சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். ஆடு வளர்ப்புக்கு கூட்டுறவு சொசைட்டி மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அவற்றில் முறைகேடுகள் நடப்பதாகக் கண்டறிகிறேன். தவறு நடக்காத வண்ணம் பார்த்து சாதாரண ஏழையெளிய குடும்பங்கள் பயன்படுத்தும் முறையில் இந்தக் கடன் கிடைக்கப்பெற வேண்டும்.

பிற்பகல் *7-05*

அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இந்தக் கடன்களில் பசு வளர்ப்பு, பால் உற்பத்தி பெருக்குதல் போன்றவற்றிற்கு 50 சதவீதம் மானியம் கொடுத்து, மேலும் அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அனைத்து மாவட்டங்களுக்கும் காங்கேயம் மாடுகளை வழங்கி அவை பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காங்கேயம் மாடுகள்தான்.

அதேபோன்று பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு ஏரி முகத்துவாரம் மணல் மேட்டால் அடைபட்டு, கடல் நீர் நின்றுபோனதால் மீன், இறால் வளர்ச்சி போன்றவை குன்றிப்போயுள்ளது. 29 மீனவர் குப்பங்களில் சுமார் 50,000 மீனவ சமூக மக்களின் வாழ்க்கை கேள்விக் குறியாக உள்ளது. ஏற்கெனவே இம்மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது போல் ரூபாய் 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, முகத்துவாரத்தைத் தூர் வாரி, பழவேற்காடு மீனவ மக்கள் 50,000 பேர்களுடைய குடும்பங்களை வாழ வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக எனது தொகுதியினுடைய சில கோரிக்கைகளை மட்டும் வைத்து முடிக்கலாம் என்று கருதுகிறேன். திருப்பத்தூரிலிருந்து சேலம் செல்லும் பாதையில் அனுமன்தீர்த்தம் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அது ஒரு மிகப் பெரிய அளவிலான போக்குவரத்து நிறைந்த பாதையாகும். அந்தப் பாலம் ஓட்டை விழுந்து, தூண்கள் எல்லாம் விழுந்துவிடும் அபாயத்தில் இருக்கிறது. அதை உடனடியாகப்



பழுதுபார்த்து புதிய பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி - திருவண்ணாமலை மாவட்டங்களை இணைக்கும் பொருட்டு அம்மாப்பேட்டை அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வேங்கடதாம்பட்டி ஊராட்சி, ஊத்தங்கரையின் மத்தியப் பகுதியில் இருக்கிறது. அந்த ஊராட்சி மத்தூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சியை ஊத்தங்கரை ஒன்றியத்தோடு இணைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பாற்று அணையில் உள்ள இலங்கை அகதிகள் மற்றும் அங்கு உள்ள மக்களுக்கு ஒரு பகுதி நேர ரேஷன் கடை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்களுடைய பணப் பட்டுவாடா பல மாதங்களாக வழங்கப்படாமல் உள்ளதால் மிகப் பெரிய அளவிலே, எத்தனையோ போராட்டங்கள் எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அடையாளம் கண்டு ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளராக்கி, திருமயம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, சான்றோரும், ஆன்றோரும் சரித்திரம் படைத்திட்ட தமிழகச் சட்டமன்றத்தில் இன்று மானியக் கோரிக்கையில் பேசிட மாபெரும் வாய்ப்பைத் தந்த ஒப்பற்ற தமிழினத் தாயே, அருந்தமிழ் பேரே, பன்மொழிப் புலமையில் பார் வியக்கும் பாசத்தின்

உருவே, எளியோனுக்கும் வாய்ப்பளித்த எங்கள் குடும்ப தெய்வமே, நன்றி என்ற ஒரே சொல்லால் முடிக்கின்ற மனம் இத்தொண்டனுக்கு இல்லை அம்மா. துடிக்கின்ற இதயமும், புடைக்கின்ற நாளமும், அம்மா உங்கள் பெயரைத்தானே ஒவ்வொரு நாழிகையும் உச்சரித்து மகிழ்கிறது. இந்தப் பிறவியில் எனக்குத் தந்திட்ட உயர்வுக்கு, தாயே உங்களைச் சிரம் தாழ்ந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். ஆனால் அம்மா, நீங்களோ அந்த வட இந்தியத் தலைவர்களை வாசலுக்கு வரவழைத்து, டெல்லியின் ஆட்சிக்குத் தீர்ப்பு எழுதுவது சென்னைதான் என்று தம் செயலால் காட்டி, மக்கள் மனதில் உயர்ந்து வாழ்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரை நீங்கள் எங்களுக்குக் கிடைத்த இலட்சிய தாகத்தில் இங்கர்சால், எதிரியைக் கவரும் பேச்சில் எட்மன்ட்பர்க், அறிவுத்திறனில் அரிஸ்டாட்டில், அஞ்சாமைத் தொகுப்பில் அலெக்சாண்டர், தத்துவ ஞானத்தில் பிளாட்டோ, சீரிய சிந்தனையில் சாக்ரட்டீஸ், ஆங்கிலப் புலமையில் அறிஞர் அண்ணா, பெண்ணுரிமை காப்பதில் தந்தை பெரியார், ஈகைக் குணத்திலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்று அனைத்து அறிஞர்களின் மொத்தமாய், ஓர் உருவாய்த் திகழ்ந்து, இந்திய அரசியலில் பத்தரை மாற்றுத் தங்கமாய், பேரொளியாய்த் திகழ்ந்திடும் எங்கள் அம்மாவே, உங்களுக்கு நிகர் இவ்வுலகில் நீங்கள் தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

நடக்கவோ நரம்பில் வலுவில்லை, நாடாண்ட ஆசையோ படுக்கவே விடவில்லை என்பதைப்போல் தமிழகத்தின் இருண்ட ஆட்சியென வாலாற்று வல்லுநர்களால் வர்ணிக்கப்பட்ட ஆட்சிதனை தமது ஆட்சியாய் தமிழகத்தில் நடத்தி, நிதிநிலையைச் சீர்குலைத்து சிலர் மக்கள் நிம்மதியை வேரறுத்திட்டார்கள். அந்தச் சிலரோ மீண்டும் 'A Political ghost in a plain smile' என்ற ஆங்கிலப் பழமொழிக்கேற்ப கடந்த பொதுத் தேர்தலில் மக்களிடையே மீண்டும் வாக்கு கேட்டு வலம் வந்தார்கள். ஆனால் கொதித்தெழுந்த மக்கள் கூட்டமோ மாதரசி ஆட்சிதனை மீண்டும் அரியணையில் அமர்த்தி மகிழ்ந்திட்டார்கள். தன்னை நம்புகிற, தம் மக்கள் வாழ்ந்திட முதல்வராகி கோப்பில் எங்கள் அம்மா முதல் வாசகமே "Attack on poverty will be my first priority" வறுமையை ஒழிப்பதே தனது தலையாய பணி என்று வைர வரிகளால் வரைந்திட்டார்கள்.



தாய்க்குத்தான் தன் பிள்ளையின் பசி அறிய முடியும் என்பதைப்போல, தலையாய பிரச்சினையாம் தமிழகத்தின் வறுமைப் பிரச்சினைக்கு முடிவு கட்ட எங்கள் அம்மா அவர்கள் சபதமிட்டார்கள்; சபதம் எடுத்திட்டார்கள். அரசின் வருவாய்க்கு வழி இல்லா திட்டங்கள் பல தந்து, தங்கள் வருவாயைப் பெருக்கிட்ட கடந்த ஆட்சியாளரின் சீர்கெட்ட ஆட்சியால், சீழ்பிடித்து நோயுற்று காட்சிதரும் தமிழ்நாட்டைச் சீர்தூக்கிக் காட்டி தமிழகத்தை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று உறுதி பூண்டு, இரவு பகலென இமை மூடாது பாடுபடும் ஒரே முதல்வர் இந்தியத் திருநாட்டிலேயே எங்கள் அம்மாதான்.

*பிற்பகல் 7-10*

பிறர் புண்ணானால் நான் புண்ணாவேன், பிறர் மகிழ்ந்தால் நான் மகிழ்வேன் என்று அமெரிக்க புரட்சிக் கவிஞர் வால்ட் விட்மென் சொன்னதைப்போல், என் மக்கள் புண்ணானால் நான் புண்ணாவேன், என் மக்கள் மகிழ்ந்தால் நான் மகிழ்வேன் என்று தமிழக மக்களுக்காகவே வாழ்ந்து வருபவர்தான் எங்கள் அம்மா.

அம்மா, இவ்வுலகில் வாழும் எட்டு கோடி தமிழருக்கு மட்டும் நீங்கள் தலைவி அல்ல. எங்கிருந்தோ தமிழ் மண்ணை நம்பி வந்தாளே குவைத் நாட்டு இளம்பெண் தலால் ஆஸ்மி, அந்தப் பெண்ணை அரவணைத்து, அன்பு காட்டி, வாழ்வில் விளக்கேற்றி, மைய அரசோடு வாதாடி, வலியுறுத்தி, 'வந்தாரை வாழவைக்கும் தமிழகமே' என்ற வசனம் மட்டுமே எழுதிடுவோர் போலன்றி, எம் மண்ணை நம்பி வந்தவரை நாளும் காப்பதுதான் தமது அரசின் தலையாய பணி எனக் காட்டி, உலக ஒட்டுமொத்த தாயினத்தின் ஒப்பற்ற தலைவியாய் விளங்கி, மொழி, நாடு, எல்லை கடந்து இன்று பல கோடி மக்களுக்கும் தலைவியாய் விளங்குகிறீர்கள் அம்மா! நீங்கள் எங்களுக்கு இளைப்பாற நிழலாய், வீசுகின்ற தென்றலாய், சுவாசிக்கும் மூச்சுக் காற்றாய், உயிர் காக்கும் தண்ணீராய், நாளும் உச்சரிக்கும் வேதமாய், இவை அனைத்துமாய் விளங்குகிறீர்கள் அம்மா!

தமிழினம், தமிழினம் என்று வாய் கிழியப் பேசி, தமிழ் காக்க வந்தவராய் தம்மை விளம்பரப்படுத்திக்கொள்ள தவறிடாதவர்களின் ஆட்சியில், தமிழகத்து மீனவர்கள் பத்தொன்பது பேர் மீன் பிடிக்கச் சென்றபோது திசைமாறிச் சென்று பாகிஸ்தான் நாட்டில் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இவர்கள் சிறையில் இருந்த நாட்கள் ஒன்றல்ல,

இரண்டல்ல; கிட்டத்தட்ட, ஒன்றரையாண்டு கடந்த பின்னரே தாயகம் திரும்பினார்கள். ஆனால் எங்கள் அம்மாவோ, ஏழையர் கண்ணீர், கூரிய வாளுக்குச் சமம் என்பதைக் கடந்த ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதை அறிந்து, அந்த மீனவ மக்கள் உணர்வுகளைத் தெரிந்து, உடனடி நடவடிக்கை எடுத்து, மீனவர்களை மீட்டுத் தாருங்கள் என்று மத்திய அரசின் நடவடிக்கைக்குக் கோரினார்கள். அதன்படி 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்கள் 29 பேரை 22 நாட்களில் அவர்கள் சென்ற படகுகளுடன் அம்மா அவர்கள் மீட்டுத் தந்து சரித்திரம் படைத்து இரட்டிப்பு சாதனை செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியாளர்கள், மக்களுக்கு உழைப்பேன் என்று மார் தட்டிக்கொள்வதும், மாலை மரியாதை வந்தவுடன் மதிமாறி மக்களை மறந்து இருக்கும் காலத்தில், ஆட்சியில் இருந்தாலும், இல்லை என்றாலும், அலங்காரப் பேச்சின்றி, அகங்காரப் போக்கின்றி, அன்பு கொண்ட நெஞ்சோடு உழைத்து வருபவர் உலகத்திலேயே எங்கள் அம்மா மட்டும்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளப் பிறந்தவன் ஆண்; அவனை அண்டி வாழப் பிறந்தவள்தான் பெண் என்கிற நிலையை மாற்றி விலைமோரிலே வெண்ணெய் எடுக்கும் வித்தை தெரிந்தவர்களின் சொத்தை வாதத்தைச் சுக்கு நூறாக்கி, இந்த மண்ணில் பிறந்த எந்த ஒரு அணுவும் அனாதை அல்ல என்ற விவேகானந்தரின் வார்த்தைக்கிணங்க, காற்றைப்போல், நீரைப்போல், ஆண்டான்-அடிமை, ஏழை-பணக்காரன், எளியோர்-வலியோர், படித்தவர்-பாமரர், ஆடவர்-பெண்டிர், பாவ ஆத்மா-புண்ணிய ஆத்மா என்ற பாகுபாடின்றி எம்மதமும் சம்மதம் என்ற உயரிய நோக்கத்தோடு அனைவருக்கும் அன்னையாய்த் திகழ்ந்து அருட்கொடையாய் விளங்கி, நல்லாட்சி நல்கிடும் நான்காம் தமிழ் தந்த நற்றமிழ்த் தாயே, உங்களின் பொற்பாதங்களை வணங்கி மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு திறமையாக செயல்பட வேண்டுமானால், அதற்குத் தேவை, ஒரு சீரிய சிந்தனை கொண்ட தலைமை; அந்தத் தலைமை இடுகின்ற கட்டளை; அந்தக் கட்டளைகளை நிறைவேற்ற முழுமையாக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அலுவலர்கள்; அந்தச் சிந்தனையின் மூலம் உருவாகும்



பயனை முழுமையாக அடைய ஆர்வம் கொண்டுள்ள பயனாளிகள்; இவை அனைத்தும் ஒருங்கிணைந்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உருவாகி செயல் வடிவம் பெற்றதுதான் மீன்வளத் துறை அமல்படுத்தவிருக்கும் மீனவள மேம்பாட்டு இயக்கம்—Fisheries Development Mission. ஓர் இயக்கம் வெற்றிகரமாகச் செயல்பட அரசுத் தரப்பும், தனியார் துறையும், பயனாளிகளும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால்தான் முழுப்பயனும் அடைய முடியும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அந்த வகையில் இந்த மீன்வள மேம்பாட்டு இயக்கத்தை உருவாக்கி, ஆறே முக்கால் இலட்சம் கடல் மீனவர்களுக்கும், அறுபதாயிரம் உள்நாட்டு மீனவர்களுக்கும், அவர்கள் மூலமாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய மீன் உணவை அதிகப்படுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும், திட்டங்களைத் தீட்டி நமக்கு வழிகாட்டும் அம்மா அவர்களுக்கு நன்றியை மீனவ மக்கள் சார்பில் தெரிவிப்பது நம் தலையாய கடமையாகும்.

*பிற்பகல் 7-15*

நீர்காணும் இடமெல்லாம் மீன்வளம் காண வேண்டுமென்று சிந்தித்தவர், சிந்திக்கச் செய்தவர், சிந்திப்பதைச் செயல்படுத்திட உள்ளவர்தான் ஏழை மீனவர்கள்மீது அக்கறை கொண்ட எங்கள் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். இதனடிப்படையில்தான், பயன்படுத்தப்படாத நீர்நிலைகளையும், கல்குவாரிகளையும், தகுந்த ஆய்வு செய்து, அதற்குத் தகுந்த மீனின வகைகளைக் கண்டறிந்து, உற்பத்தியைப் பெருக்க இவ்வியக்கம் வழிவகை செய்யும் 'மீன் வள மேம்பாட்டு இயக்கம்,' என்ற தீர்க்கமான திட்டம், இதுவரையில் எந்த அரசாலும் கொண்டுவரப்படவில்லை.

மேலும், கடல்வாழ் உயிரினங்கள் அழியாமல் பாதுகாப்பதும், அழிந்துவரும் மீனினங்கள் பாதுகாக்கப்பட வேண்டியதும் நம் கடமையாகும். கடலில் இயற்கை கொடுத்த வரப்பிரசாதத்தை, இயற்கையின் சொத்தைப் பாதுகாக்கத்தான் கடல் மீன் இருப்பு செய்தல் என்ற உயரிய திட்டமான 'Sea Ranching' திட்டத்தை நமக்கு இதய தெய்வம் தந்துள்ளார்கள். இந்தியாவிலேயே மீனவர் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, இந்தத் திட்டத்தை முதன்முதலாகக் கொண்டு வந்தவர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால்

தமிழகத்தை ஆண்ட எந்த ஆட்சியாளர்களுக்கும் இப்படியொரு தொலைநோக்குச் சிந்தனை உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மீனவர் நலத் திட்டத்தில் இலவச வீட்டு வசதித் திட்டம் ஒரு முக்கிய திட்டமாகும். முதன்முதலாக நிலமில்லாத ஏழை மீனவர்கள் 500 பேர்களுக்கும், உள்நாட்டு மீனவர்கள் 500 பேர்களுக்கும் மற்றும் கடற்கரையோரம் 3 சென்ட் நிலமுள்ள 3000 மீனவர்களுக்கும் ஆக மொத்தம் 4000 வீடுகள் கட்டிக் கொடுக்க தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆனால் முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டிமுடிக்கப் பெறாத வீடுகளையும் கழக அரசே கட்ட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. சென்ற ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையால் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் நிலைகுலைந்து போனாலும், மீனவர் நல மேம்பாட்டைக் காண விரும்பும் இதய தெய்வம் அம்மா அவர்கள், 2001-2002 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட 4000 வீடுகளையும் கட்டி, பயனாளிகளுக்கு வழங்கிட உள்ளார்கள். இத்திட்டம், வரும் ஆண்டில் தொடர்ந்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

சர்வதேச எல்லையைக் கடந்து மீன்பிடிப்பில் ஈடுபடும்போது நமது மீன்பிடி விசைப் படகுகளை அடையாளம் காணவும், முதன்முறையாக தமிழகத்தில் உள்ள அனைத்து இயந்திரப் படகுகளையும் மாவட்ட வாரியாகப் பிரித்து அறிய ஏதுவாக, உரிய வண்ணங்கள் பூசிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, திட்டம் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், சின்னமுட்டத்தில் ரூ.6.84 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் ஒன்று கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைக்க ரூ.55.25 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரூ.10.60 கோடி மதிப்பில் பழையாறு மீன்பிடித் துறைமுகம், இரண்டாம் நிலை கட்டும் திட்டத்திற்கு கருத்துரு, மைய அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.



நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் ரூ.40 கோடியிலும், கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாதிரி ஆய்வும் நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சர்வதேச கடல் எல்லையை, தங்களை அறியாமல் கடக்கும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்படுகின்றனர். அவ்வாறு சிறை பிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களது இன்னலைப் போக்கிட, தமிழக அரசு பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பத்திற்கு, சிறை பிடிக்கப்பட்ட நாள் முதல், நாளொன்றுக்கு தலா ரூபாய் 50 வீதம், அம்மீனவர்கள் வீடு திரும்பும்வரையிலும் உதவித் தொகை வழங்கி வருகிறது. இதேபோல் இதர நாடுகளால் சிறை பிடிக்கப்படும் மீனவர்கள் குடும்பத்திற்கும் உதவித் தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் பெரும் நீர்நிலைகள் மூலம் மீன் உற்பத்தி மற்றும் தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்திடல் ஆகியவையே உள்நாட்டு மீன் வளக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் மீன் வள மேம்பாட்டு இயக்க அறிவிப்பினை ஒட்டியும், மாண்புமிகு அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்திடவும், உள்நாட்டு மீன் உற்பத்தியை 1.14 இலட்சம் டன்னிலிருந்து நடப்பு நிதியாண்டில் 10 விழுக்காடு அதிகமாக மேற்கொள்ள, அரசின் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்தவும், நன்னீர் இறால் வளர்ப்பு நீர்ப்பரப்பை அதிகப்படுத்தவும், பயன்படுத்தாத கல்குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் ஆகியவற்றில் மீன் வளர்ப்பு செய்து உற்பத்தியைப் பெருக்கிடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1991-92 ஆம் ஆண்டு முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் ரூபாய் 170.42 இலட்சம் இலாபத்தில் இயங்கி வந்த நிலையில், இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிமீது களங்கம் கற்பித்து, புனைசுருட்டுகளைப் புனைந்து, பொய் வழக்குகள் போடுவதையே இலட்சியமாகக் கொண்டு, பொறுப்பேற்ற அன்றைய அரசு, மீனவ மக்கள் மீதும், தமிழக மக்கள் மீதும் சிறிதும்

அக்கறையற்று, தனது குடும்பமும், குடும்பத்தைச் சார்ந்தவர்களுமே தமிழகம் என்ற குறுகிய எண்ணத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டால், 1996-97 முதல் 2000-2001 வரை மொத்தம் ரூபாய் 134.23 இலட்சம் வரை மீன் வளர்ச்சிக் கழகம் நஷ்டம் அடைந்து நலிவுற்றது. ஆனால் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர்ந்து அரியணை ஏறிய 2001-2002 ஆம் ஆண்டு இக்கழகம் ரூ.22.21 இலட்சம் இலாபம் ஈட்டி உள்ளது. கழக ஆட்சி அமர்ந்த ஓராண்டில் 22 இலட்சம் ரூபாய் இலாபம் ஏற்பட்டுள்ளது என்றால் கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்குக் காரணம் யார்? நிர்வாகத் திறமையின்மையா அல்லது கொள்ளையில் கூட்டுப் பங்கு என்ற கொள்கையா என்றுதான் மக்கள் கேட்கிறார்கள்.

பிற்பகல் 7-20

தமிழகத்தை இந்திய அளவில் முதல் மாநிலமாக மாற்றியமைப்பேன் என்ற சூளுரையில் நம்பிக்கையுடன் வீர நடை போட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரைப்படி, பல திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இருப்பினும், மீனவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்திட கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையின்படி, பல புதிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) தமிழ்நாட்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு என்று தனியாக திட்டம் ஏதும் எந்த அரசாலும் வகுக்கப்படவில்லை. ஏழை மீனவர்கள்பால் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் புதிதாக முதன்முறையாக ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன் வள மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த உயரிய திட்டம், நமது மாநிலத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான திட்ட அறிக்கையை மீன் வளத் துறை தயாரித்து செயல்படுத்தும். இம்மாவட்டங்களில் உள்ள



பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய பாசனக் குளங்கள் மற்றும் தகுதியான நீர்நிலைகளில் விரலளவு மீன் குஞ்சுகள் உற்பத்தியினைப் பெருக்கிட புதிய உட்கட்டமைப்பு உருவாக்கிடவும், தற்சமயம் உபயோகத்தில் இருக்கும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேவைகளுக்கேற்ப மீன் குஞ்சு பொறிப்பகங்கள், பண்ணைகள் மற்றும் இருப்பு செய்யப்படும் பகுதிகள் சீர் செய்யப்படும். இத்திட்டத்தினை இரு கட்டங்களில் செயல்படுத்திட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு இதுகுறித்து திட்ட அறிக்கை அனுப்பப்படும். முதற்கட்டம், ஏற்கெனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாம் கட்டத்தில் மீன்பிடி இடுபொருட்கள் மீனவர்களுக்கு வழங்கப்படும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் கடன்பெற்று இத்திட்டத்திற்கான தொகை வழங்கப்படும். இத்தொகைக்கு அரசு உத்தரவாதம் வழங்கும். இந்த ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.250 இலட்சம் வாங்கி வழங்க, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தால் கூடுதலாக ஒன்றரை கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும்.

தமிழ்நாடு கடற்கரை அண்மைக் கடல் பகுதியில் குறைந்து விட்ட மீன் வளத்தினை அதிகப்படுத்தும் வகையில், கடலில் மீன் குஞ்சு இருப்பு செய்யும் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும். வழக்கமாக பாரம்பரிய மீனவர்களால் சினை இறால்கள் கடலிலிருந்து பிடிக்கப்பட்டு மீன் குஞ்சு உற்பத்தியாளர்களிடம் விற்கப்படுகின்றன. இதனால் அண்மைக் கடல் பகுதியில் சினை மீன்வளம் குறைந்து வருகிறது. கடல் மீன் வளத்தை அதிகப்படுத்தும் பொருட்டு, அரசு ஒரு விரிவான திட்டத்தைத் தயாரிக்கும். தமிழ்நாட்டில் 25 ஊராட்சி ஒன்றியங்கள் கடலோரப் பகுதியில் உள்ளன. இப்பகுதிகளில் அண்மைக் கடல் மீன் வளத்தைப் பெருக்குவதற்காக மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். இம்மீன் குஞ்சுகளை மீன் பெருக்குத் திட்டத்தின்கீழ் அண்மைக் கடல் பகுதிகளில் இருப்பு செய்து மீன் வளம் பெருக்கப்படும். மேலும், இராமநாதபுரம் மாவட்டத்திற்காக மீன் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குவதற்காக தனியே ஒரு திட்டம் தயாரிக்கப்படும் என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடல்மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், அண்மைக் கடல் பகுதியில் மீன்பிடி கலன்களில் நெரிசலைக் குறைத்திடவும் நடப்பு ஆண்டில் புதிய இடைநிலை மீன்பிடி கலன்கள் அறிமுகப்படுத்தப்படும். மாநில அரசு, 20 மீட்டர் நீளம் வரையிலான இடைநிலை மீன்பிடி கலன்கள் வாங்கிட அதன் விலையில் 25 விழுக்காடு தொகையினை மானியமாக வழங்கும். இவ்வகை மீன்பிடி கலன்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கப்பட்டு, அதன் உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கி, அவர்களை ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட ஊக்குவிக்கும். இதற்கான செலவை மைய அரசு மற்றும் மாநில அரசுகள் தலா ஒரு பங்கும், பயனாளிகள் 2 பங்கும் என்ற விகிதத்தில் ஏற்பர். இவ்வாண்டு 20 மீன்பிடி கலன்கள் வாங்கப்படும். இதற்கான மாநில அரசு பங்காக ரூ.375 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாத இறுதியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க நாகப்பட்டினம் சென்று மீனவர்களைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்த சமயத்தில், மீனவர்களின் இன்னல்களையும் அவர்கள் படும் துயரங்களையும் காண முடிந்தது. இது மாண்புமிகு இதய தெய்வத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மீனவர்களின் இன்னல்களையும் துயரங்களையும் களைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள், இயந்திரப் படகுகளுக்குக் கடலில் இருப்பிடம் காட்டும் கருவி மற்றும் மீன் கண்டுபிடிப்பு சாதனம் ஆகியவை பொருத்திட வழிவகை செய்ய முனைந்தார்கள். அம்முயற்சியின் பலனாக, கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் மூலம் மானியம் பெறவும் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெறவும் நடவடிக்கை எடுக்க ஆணையிட்டார்கள். இக்கடன் தொகை மாநில அரசின் உத்தரவாதத்துடன் வழங்கப்படும். இவ்வாண்டில் மீன் இருப்பிடம் காட்டும் கருவி 100-ம், மீன் கண்டறியும் கருவி 100-ம் வாங்குவதற்காக ரூ.1 கோடி கடனாகப் பெற்று வழங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-25

தமிழகக் கடற்கரைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களில் மீன் இறங்குதளங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்திட ரூ.25 இலட்சம் செலவில் மாதிரி ஆய்வு மேற்கொள்ள



மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இச்செலவினம் ஒவ்வொரு திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தொகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

கடல்மீன் பிடிப்பு என்பது உலக அளவில் அமைந்துள்ள அனைத்து தொழில்களிலும் மிகுந்த ஆபத்தான மற்றும் உயிருக்குப் பாதுகாப்பில்லாத தொழிலாகும். உலக அளவில் கடல்மீன் பிடிப்பின் மூலம் சுமார் 24 ஆயிரம் மீனவர்கள் ஒவ்வோர் ஆண்டும் கடலில் மீன் பிடிக்கும்போது இறக்கின்றனர் என சர்வதேச தொழிலாளர் நிறுவனம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இவ்வாறு அதிக ஆபத்து நிறைந்த இத்தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களது பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீனவர்களின் உயிரைக் காக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் உயிருக்கு உத்தரவாதம் கொடுக்கும்வகையில், உயர்ந்த உள்ளத்தில் உதித்ததுதான் உயிர்காப்பு கவச உடை வழங்கும் திட்டம். இத்திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மீனவர்களுக்கு, கடலில் செல்ல பாதுகாப்புக்காக உயிர்காப்பு கவச உடைகள் வழங்கப்படும். இச்செலவினத்தை மாநில மற்றும் மத்திய அரசுகள் தலா ஒரு பங்கும், பயனாளிகள் இரண்டு பங்கும் என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வர். இதற்கு நடப்பு ஆண்டில் 25 ஆயிரம் மீனவர்கள் பயனடையும்வகையில் ரூ.60 இலட்சம் மாநில அரசின் பங்காக வழங்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இயற்கையின் இடர்பாடுகளால் சர்வதேச எல்லைக் கோட்டை, அவர்கள் அறியாமல் கடந்து செல்ல நேரிடுகிறது. அப்பொழுது அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. உயிர் காக்கும் கவச உடை தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், மேலும் இவர்கள் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும்வகையில் சர்வதேச எல்லையை மீனவர்கள் கடந்து செல்லாமல் இருக்க, அம்மாவின் சிந்தனையில் உதித்ததுதான் ஒளிரும் விளக்குடன் கூடிய வழிகாட்டும் மிதவைகள். நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி மாவட்டங்கள் வரை உள்ள கடற்பகுதியில் சர்வதேச எல்லையில் விளக்குடன் கூடிய வழிகாட்டும் மிதவைக்ள் நிறுவ, கழக அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.150 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை கடல்

பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு முழுமையாக ஏற்கவோ அல்லது சரிசமமாக ஏற்கவோ வலியுறுத்தப்படும். இத்திட்டத்திற்காக இவ்வாண்டு ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கடல் மீனவர்களைப் பாதுகாக்க 5 சுற்றுக் காவல் படகுகள் மைய அரசு நிதியில் கட்டப்பட்டுள்ளன. இவை கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டு கடல் மீனவர்களின் பாதுகாப்பிற்காக இவ்வாண்டு இயக்கப்படும். இவற்றை இயக்குவதற்கான தொடர் செலவினம் மிக அதிகமாக உள்ளதால் பெயரளவில் குத்தகை நிர்ணயித்து இப்படகுகள் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்படும்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது, அண்டை நாடுகளில் சிறை பிடிக்கப்படும் மீனவர்கள் தாயகம் திரும்பும்வரை அவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் உடனுக்குடன் வழங்க ஏதுவாக நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள 8 கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ. 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள 8 மாவட்டங்களில் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக தலா ரூ. 1 இலட்சத்தை நிவாரணமாக வழங்குவார்கள். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். செலவு செய்தபின், இத்தொகை உடனடியாக ஈடு செய்யப்படும்.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் இயந்திரப் படகுகளுக்கு மைய மற்றும் மாநில அரசால் உயர்வேக எரியெண்ணெய்க்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் உபயோகிக்கும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு மண்ணெண்ணெய் மானியம் இதுவரை வழங்கப்படவில்லை. அவர்கள் மண்ணெண்ணெயை திறந்த வெளிச் சந்தையில் வாங்கி உபயோகப்படுத்தும் நிலைக்கு ஆளாகி



இருக்கிறார்கள். இந்த அடித்தள மீனவர்களின் துயரத்தை நீக்க மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்ததுதான் மண்ணெண்ணெய் மானியம். கடல் மீனவர் நலத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் எரிபொருளாகப் பயன்படுத்தும் மீன்பிடிக் கலன்களுக்கு ஆயத் தீர்வை மானியம் லிட்டருக்கு 50 பைசா இவ்வாண்டு முதல் வழங்கப்படும் என்ற உயரிய திட்டத்தை இவ்வாண்டு செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகையினை மைய மாநில அரசுகள் பகிர்ந்து ஏற்கும். ஆண்டு முழுவதும் 26,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய், பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் பயன்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு, அடிக்கடி நமது மாநிலத்திற்கு வழங்கும் பொது விநியோக மண்ணெண்ணெய் அளவினைக் குறைத்துக்கொண்டே வருகிறது. இந்நிலையிலும், தொடர்ந்து போராடி தேவையான பொது விநியோக மண்ணெண்ணெய் அளவினைக் குறைவின்றி பெற நமது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனுடன் கூடுதலாக மீன் பிடிப்பதற்குத் தேவைப்படும் மண்ணெண்ணெயைப் பெற அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும். இதற்காக ரூபாய் 130 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 25,000 பாரம்பரிய மீனவர்கள் பயனடைவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-30

உச்ச நீதிமன்ற ஆணையின்படி அனுமதியின்றி அமைக்கப்பட்ட இறால் பண்ணைகளை இடித்து அகற்ற, அனைத்துக் கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், இவ்வாண்டு மொத்தம் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை ஆழப்படுத்த, கடந்த ஆண்டு நிதி விடுவிக்கப்படாத காரணத்தால், இவ்வாண்டு ரூ.30 இலட்சம் ஒதுக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு, வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள மீனவர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கூடுதலாக மாதம் 20 கிலோ அரிசி பொது விநியோக விலையில் வழங்க அறிவிக்கப்பட்டது. இச்சலுகையை இவ்வாண்டும் நீட்டிக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆணை வழங்கிய நாள் முதல் 90 நாட்களுக்குள் இச்சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகப் பொறுப்புக் கழக ஆளுகைக்குட்பட்ட கடற் பகுதியிலும், அதைச் சுற்றிலும் தூர்வாரும் பணி இவ்வாண்டு மேற்கொள்ளப்படும். இதனை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் மூலம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கேள்விகளுக்கு எல்லாம் நான் கூறுகின்ற இந்த பதிலுரையிலே எல்லா பதில்களையும் சொல்லி விட்டேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு, நீலகிரி மாவட்டம், அவலாஞ்சியில் Trout மீன் வளர்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த மீன் ஆங்கிலேயர்களால் இங்கு கொண்டுவரப்பட்டது. இந்த மீன் அங்கு வளர்க்கப்பட்டு அவலாஞ்சி நீர்த்தேக்கத்தில் விடப்படுகிறது. தூண்டில்களுக்கு உரிமம் கொடுத்து, Trout மீன் தூண்டில் மூலம் மட்டுமே பிடிக்கப்படுகிறது. இது விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்கான மீன். இவ்வகை மீன்கள் குளிர்ப் பிரதேசங்களில் மட்டுமே வளரும். இவ்வகை மீனை அதிகமான அளவிற்கு வளர்த்து ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏதும் தற்போது இல்லை. மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் மைதீன்கான், வேல் முருகன், ராஜகோபால், டி. மணி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் வீடுகளைப் பற்றியும், மீனவர்களின் நலனைப் பற்றியும் கூறினார்கள். அவற்றுக்கெல்லாம் என்னுடைய பதிலுரையிலே நான் கூறிவிட்டேன். 15 அம்சத் திட்டத்தை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீன் வளத் துறைக்கும் 15 புதிய திட்டங்களை மொத்தம் ரூபாய் 7.53 இலட்சத்திற்கு அளித்ததற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். வேறு எந்தத் துறையிலும் இல்லாத ஒரு சிறப்பு, மீன் வளத் துறைக்கு உண்டு. மீன் வளத் துறையில்தான் ஒதுக்கப்படும் பண ஒதுக்கீட்டில், சுமார் 65 விழுக்காடு மக்களை நேரடியாகச் சென்றடையும் திட்டங்கள் உள்ளன



என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 148 வெட்டுத் தீர்மானங்களை மீனவர் நலன் காக்கவும், மீன் வளத்தைப் பெருக்கவும் அளித்துள்ளார்கள். மேலும் இம்மாமன்றத்தில் உறுப்பினர்கள் கூறிய நல்ல கருத்துகளை கவனத்தில் கொண்டு மீனவ மக்களின் துயர் துடைக்க நல்ல பல திட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு நான் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்று, மீன் வளத் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற பேரியக்கத்தின் பெருந்தலைவி எங்கள் இதய தெய்வம் அம்மாவே, வரலாற்றில் நீங்காத இடத்தைப் பிடித்த சரித்திரத்தின் சகாப்தமே, வாழும் தமிழர்களின் நம்பிக்கையே, திசைதோறும் வணங்கும் தன்னம்பிக்கையே, எத்தனை சோதனைகள் வந்தபோதும் தாங்கி நின்ற சாதனைத் தலைவியே, சோதனைகளுக்கே சோதனை தந்து நெருப்பிலே போட்ட தங்கமாய் வென்று காட்டுகிற வீரத் திருமகளே, எங்கள் அம்மாவே, வேதனை அம்புகள் சரமாரி பாய்ந்தபோதும், பொய்யான குற்றச்சாட்டுகள் தினமும் பெய்த போதிலும், தன்னந்தனியாக அரசியல் போர்க்களத்தில் வாளெடுத்துப் புறப்பட்டு எதிரிகளைப் புற முதுகு காட்டி ஓடவைத்த புறநானூற்றுத் தாயே, ஏழைகளின் கண்ணீர் கன்னத்தைத் தாண்டும் முன்னே துடைக்கின்ற ஈகைக் குணமே, வாழும் வரலாறே, வையகம் காக்க வந்த எங்கள் தென்திசைத் தெய்வமே, கழகத்தில் அடிமட்டத் தொண்டனாய் இருந்த எனக்கு, பல்வேறு பொறுப்புகளை வழங்கி, சட்டமன்ற உறுப்பினராக்கி தங்களின் சீரிய தலைமையிலே என்னையும்

அமைச்சராக்கிய அன்னையே, உங்களுக்கு எப்படி என் நன்றியை வெளிப்படுத்தப் போகின்றேன்? பகவானின் சன்னிதானத்தில் பக்தன், கைகட்டி, கரம் கூப்பி, கண்ணீர் மல்கி இருப்பதைப்போல, எங்கள் அன்னை தெய்வத்தின் பாதத்தில் என் நன்றியை ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் செய்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தினை சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 7.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, கால்நடை பராமரிப்புத் துறையினுடைய கோரிக்கை எண் 6 மீது நடைபெற்ற விவாதத்தில், இம்மாமன்றத்தில் முதல் முறையாக என்னைப் பங்கேற்கச் செய்த எங்கள் இதய தெய்வம், உலகத் தமிழ் மக்களினுடைய விடிவெள்ளி, 6 கோடி தமிழ் மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் நடைபெறும் இந்த நல்லாட்சியில், அம்மா அவர்களின் மேலான ஆலோசனை மற்றும் நல்ல அறிவுரையின் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் அதிகரித்து, கால்நடை வளர்க்கும் கிராம மக்களுடைய வருமானத்தை அதிகரிக்கச் செய்து, எல்லோரும் வளம்பெற்று வாழ, அரிய பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு, கால்நடை பராமரிப்புத் துறை சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்பு கிராம மக்களுக்கு ஒரு கூடுதல் வருமான ஆதாரமாக இருப்பதுடன், புரதச்சத்து மிக்க உணவையும் வழங்குகின்றது.

மனிதர்களுக்கு மட்டுமின்றி கால்நடைகளுக்கும் காவல் தெய்வமாக விளங்கும் எங்கள் அம்மா மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வாயில்லா பிராணிகளான கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில், மேய்ச்சல் நிலங்களை அதிகரிக்க, நடவடிக்கை எடுக்க ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்திலே மொத்த மாட்டு இனத்திற்கு வருடத்திற்கு சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 440 இலட்சம் டன்கள் உலர் தீவனமும் மற்றும் 6 இலட்சத்து 61 ஆயிரத்து 340 இலட்சம் டன்கள் பசுந்தீவனமும் தேவைப்படுகிறது.



தமிழகத்திலே உள்ள மொத்த நிலப்பரப்பில் மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகள் விகிதம் இதற்குப் போதுமானதாக இல்லை. மேலும், இது ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது. மேய்ச்சல் நிலங்கள் ஏனைய பணிகளுக்கு வரையறையின்றி பயன்படுத்தப்படுவதால் தரம் மற்றும் பரப்பளவு குறைந்து வருகிறது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, மேய்ச்சல் நிலங்களை வேறு எந்த நிலமாகவும் மாற்றக்கூடாது என்று இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறு மாற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும் சூழ்நிலைகளில், மாற்றப்படும் நிலத்திற்கு சமமான அளவு பரப்புள்ள வேறு நிலம் அதே மாவட்டத்தில் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த ஒதுக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலப்பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புரட்சிகரமான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமான தகுதிவாய்ந்த தரிசு நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு அடிப்படை வசதியான மேய்ச்சல் நில பாதுகாப்பு பற்றி இதுவரை எந்த அரசும் செய்திராத திட்டத்தினை முதல்முறையாக இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசுதான் கருணை கொண்டு, இதுபோன்ற சீரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியன ஒருங்கிணைந்து வளமான பசு மற்றும் எருமையின மேம்பாட்டிற்காக 93.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மைய அரசின் நிதியுதவியுடன் பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பசுவினம் மற்றும் எருமையினங்களின் இனவிருத்தி வசதிகளை அதிகரிக்கவும், இனவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலே அளிக்கவும், தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடங்கியுள்ளது. இதற்காக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.2.00

கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் 198 கால்நடைச் சந்தைகள் மற்றும் 183 இறைச்சிக் கூடங்கள் உள்ளன. இங்கே அடிப்படை வசதிகளும் மற்றும் அவசரக் காலங்களில் மருத்துவ வசதிகளும் கிடைப்பதில்லை. இங்கு கொண்டுவரப்படும் கால்நடைகள் கொடுமைக்கு ஆளாகின்றன. இதை அறிந்த, கால்நடைகளிடமும் பரிவு காட்டும் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, கால்நடைகளை வதைப்பதிலிருந்து தடுக்க, கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை வளர்ப்புபற்றி பயிற்சி அளிக்க உத்தரவிட்டுள்ளது. மேலும், முக்கியச் சந்தைகளில் கால்நடை முதலுதவி நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். போக்குவரத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் முறையற்ற செயல்களைத் தடுக்க, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாண்டு முதற்கட்டமாக ஜெர்மன் நாட்டு உதவியுடன், பொள்ளாச்சி மற்றும் வேலூரில் உள்ள பொய்கை. சத்தியமங்கலம் ஆகிய வாரச்சந்தை தலங்களில் கால்நடைகளுக்குத் தேவையான கட்டமைப்புகள் உருவாக்கவும், கோயம்புத்தூர் மாநகராட்சி இறைச்சிக் கூடத்தில் வசதிகளை மேம்படுத்தவும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பங்கேற்புடன் தேவையான திட்டங்கள் இவ்வாண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

பிற்பகல் 7-40

இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய தலைமையில் கடந்த 1993 ஆம் ஆண்டு அகில இந்திய கால்நடை மற்றும் கோழி கண்காட்சியுடன் நூற்றாண்டு விழா கொண்டாடி மகிழ்ந்த இத்துறை, 1970-க்குப் பிறகு தற்போது திறனாய்வு செய்யப்பட்டு, மறுசீரமைப்பு செய்யப்பட உள்ளது. இச்சீரமைப்பினால் தற்போது பணிபுரியும் பணியாளர்கள் எவ்வித பாதிப்புக்கும் ஆளாகக்கூடாது என மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பணிப்பளு அதிகமாக உள்ள கால்நடை கிளை நிலையங்களை உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாக மாற்றி தாமான சேவை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990-91 ஆம் ஆண்டு இத்துறையில் 22 கால்நடை பெருமருத்துவமனைகள், 57 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 758 கால்நடை மருந்தகங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. கலப்பினப் பசுக்களின் எண்ணிக்கை பெருகியதாலும், தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்றவாறு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், இதய தெய்வம் அம்மா அவர்களின் கடந்த கால ஆட்சியில்தான், 60 கால்நடை மருந்தகங்களும், 41 கால்நடை மருத்துவமனைகளும், 2 பிரதம மருத்துவமனைகளும் 3 பன்முக மருத்துவமனைகளும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் பன்முக மருத்துவமனைகள் 24 மணி நேர மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. வருகின்ற ஆண்டுகளில் திருநெல்வேலி, சேலம், திருச்சி ஆகிய மூன்று மாநகராட்சிகளிலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு இல்லாமல் பன்முக மருத்துவமனைகளைத் தொடங்க இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு எண்ணியுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும், குறிப்பாக குக்கிராமங்களில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கும் முழுமையான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு சில பகுதிகளில் மட்டுமே செயல்பட்டு வந்த கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை விரிவாக்கம் செய்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு 2001-2002 ஆம் ஆண்டில் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் ரூ.2 கோடியே 31 இலட்சம் செலவில் 4,620 முகாம்கள் நடத்தியது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த கால்நடைகள்மீது அன்பு காட்டும் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.2 கோடியே 31 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்சசியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மழைக்காலங்களில் தரிசு நிலங்கள் மற்றும் இதர புறம்போக்கு நிலங்களில் வளரும் பசுந்தீவனம் கால்நடைகளுக்கு உணவாகக் கிடைக்கிறது. ஆனால் எல்லா நாட்களிலும், பசுந்தீவனங்கள் கிடைப்பது

மிகவும் அரிதாக உள்ளது. வருடம் முழுவதும் பசுந்தீவனம் கிடைத்தால் கால்நடைகளை நம்பி வாழ்க்கை நடத்தும் நிலமற்ற ஏழை விவசாயிகள் பயனடைவார்கள். இதற்காக முழுக்க முழுக்க பெண்களே பொறுப்பேற்கும் சுய உதவிக் குழுக்கள் மூலம் கிராமங்களிலே சமுதாய தீவன வங்கிகள் ஏற்படுத்த இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு திட்டமிட்டுள்ளது. இக்குழுக்களால் பசும்புல் மற்றும் பசுந்தழைகளை வளர்க்க ஊக்கப்படுத்தப்படும். இக்குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்களை ஓரிடத்தில் இருப்பு வைத்து கால்நடை வளர்ப்போருக்கு விற்க பசுந்தீவன வங்கிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற குடும்பங்களும், ஏழை விவசாயிகளும் கால்நடைகளை வளர்த்துப் பயனடைவார்கள் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்டுக் கொள்ளை நோயானது ஆடுகளில் மிக எளிதில் பரவி அதிக இழப்பினை உண்டாக்கும் கொடிய நச்சு உயிரியால் ஏற்படும் நோயாகும். இந்நோய் தோற்றத்தில் வெக்கை நோய் போன்றது. இந்நோய் முதன்முதலில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் 1989 ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் அரசூர் கிராமத்தில் கண்டறியப்பட்டது.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தேசிய வெக்கை நோய் ஒழிப்பு ஆணையத்தின் பொருள் உதவி கொண்டு இந்நோய்க்கு சிறந்த உயிர் தடுப்பூசி தயாரித்துள்ளார்கள். பல மாநில அரசுகள் இந்தத் தடுப்பூசி தயாரிக்கத் தேவையான வித்து நச்சுயிரி மற்றும் தொழில் நுட்பத்தைக் கேட்டுள்ளன. இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகக் கொண்டு வருவேன் என சூளுரைத்து நல்லாட்சி புரிந்துவரும் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, இத்தடுப்பூசியை ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை தடுப்பூசி மையம் மூலம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக்க உடல் வலிமை கொண்ட நெருப்புக் கோழி வறட்சி நிலையிலும் வளர்க்கப்படும் பறவை இனமாகும். இதன் தாயகம் தென்னாப்பிரிக்கா ஆகும். முழுமையான வளர்ச்சி அடைந்த நெருப்புக் கோழி சுமார் 120 கிலோ எடை உடையது. இதனுடைய இறகு, தோல் மற்றும் இறைச்சி பொருளாதார மதிப்பு கொண்டது. இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகம்,



தமிழகத்தின் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் இதனை வளர்த்து வருகிறது. இதன் மூலம் இப்பகுதியின் தட்பவெப்ப நிலையில் நெருப்புக் கோழி வளரும் தன்மையைப்பற்றி ஆராய்ச்சிக் குறிப்புகள் கிடைக்கின்றன.

வருங்காலங்களில் தமிழகத்தின் இதர பகுதிகளில் உள்ள அரசு கால்நடைப் பண்ணைகளில் நெருப்புக் கோழி விநியோகிக்கப்பட்டு வளரும் தன்மைபற்றி ஆராயப்பட உள்ளது. இதய தெய்வம் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நெருப்புக் கோழி வளர்ப்போரை வளப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 7-45

ஊழலின் ஊற்றுக் கண்ணாக, ஊழலின் பிறப்பிடமாக இருந்த கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கால்நடைத் துறையில் கால்நடைக்கு இரண்டு காசு, கை வீச்சுக்கு ஐந்து காசு என்று துறையை கூறு போட்டு விற்ற கடந்த கால ஆட்சியின் கால்நடைத் துறை தவறுகள் விரைவிலே வெளிச்சத்திற்கு வரும். அதிகாரி வீட்டில் திருடி, தலையாரி வீட்டில் ஒளித்து வைத்ததைப் போல, இந்திய வரலாற்றிலேயே ஊழலுக்காக ஓர் ஆட்சி கலைக்கப்பட்டது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய கடந்த கால ஆட்சியில், கால்நடைகளுக்காக மருந்து வாங்கியதில் சுமார் 8 கோடி ரூபாய் அளவிலே ஊழல் செய்துள்ளார்கள். ஊழல் செய்தவர்கள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் இதன்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்கள் என்ற வரலாறு உண்டு.

ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன் என்று பாடிய (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவரின் வழிவந்த அம்மா அவர்கள் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை விரைவிலே தண்டிப்பார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே. ஆதாரத்தோடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இது குறித்து நீதிமன்றத்திலே வழக்கு போடப்பட்டு வழக்கு நடக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) ஆதாரம்தான். திரு. பி.ஆர். சுந்தரம் வழக்கு போட்டு நீதிமன்றத்திலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) ஊழல், ஊழல் என்று இது கண்டறியப்பட்டுத்தான் வழக்கு போடப்பட்டிருக்கிறது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** கடந்தகால ஆட்சியிலே கால்நடை பராமரிப்புத் துறை, அடிமாடு போல அடங்கிக் கிடந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்றவுடன், கால்நடை பராமரிப்புத் துறை ஜல்லிக்கட்டுக் காளையாக துள்ளி வருகிறது. குத்திக் கெட்டது பல், குடைந்துக் கெட்டது காது என்பதைப் போல, கடந்த கால அரசின் தவறுகளை இந்த அரசு சரிசெய்து கால்நடை பராமரிப்புத் துறை புத்துணர்ச்சி பெற்று இலட்சியப் பாதையை நோக்கி, பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது. இக்காலத்தில் உடல் நலம் பேணுதல் என்பது மனிதர்களுக்கு வழக்கமான ஒரு நடவடிக்கையாக இருக்கிறது. ஆனால் கால்நடைகளிடம் பரிவுகாட்டும் எங்கள் தாய் கால்நடைகளுக்கு உடல்நலம் பேண பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

முதத்தடுப்பு ஊசி-கால்நடை மருத்துவ சேவை மையங்கள், தொடர்பு பணியாளர் தம்பதியர் மூலம் கால்நடைகளைப் பேணுதல், கால்நடை மருத்துவ முகாம்கள் என கால்நடைகளுக்கும் உடல்நலம் பேண பல திட்டங்களைத் தீட்டி கால்நடைகளுக்கு முழுமையான பாதுகாப்பு அளித்துள்ளார்கள். மகத்தான திட்டங்கள் இந்தியாவிலேயே யாரும் செயல்படுத்தாத புதிய திட்டங்கள் அளித்து இன்று கால்நடைத் துறைக்கு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் புது மெருகேற்றி வருகிறார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறையில் 2002-2003 ஆம் ஆண்டிற்கான ஐந்து புதிய திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவையிலே அறிவிக்கச் சொல்லி, அதைப் பேரவையிலே அறிவிப்பதிலே நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பகுத்தறிவு கொண்ட



மனித இனத்திற்கு பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அவர்கள் குறைகளையும் கேட்டுப் பெற்றுக்கொள்கிறார்கள்.

ஒரு பசு தனக்கு ஏற்பட்ட குறையை மணியோசை எழுப்பி, மன்னனின் மகனுக்கே தண்டனை வாங்கிக் கொடுத்த வரலாறு இருந்தாலும், வாய் பேச முடியாத கால்நடைகள் யாரிடம் போய் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும்?

குறிப்பாகச் சொன்னால், 'கன்றின் குரலும், கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா' என்ற பாட்டிற்கு இலக்கணமாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கால்நடைகளின்பால் கொண்ட கருணையும், ஈடு இணையற்ற அன்பின் வெளிப்பாடாக, இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்ய முடியாத, பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

நமது மாநிலத்தில் உள்ள கால்நடைகளை கோமாரி, தொண்டை அடைப்பான் மற்றும் சப்பை நோய் போன்ற கொடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க, சரித்திர சகாப்தம் மிகுந்த முத்தடுப்பு ஊசி போடுவதற்கான ஒரு திட்டத்தினை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

இந்தச் சீர்மிகு திட்டத்தின்கீழ் 40 இலட்சம் கலப்பின கறவை மாடுகளுக்கு இத்தடுப்பூசி இரண்டு வருடங்களில் போடப்படும். இதற்காக மாநில அரசின் பங்கு ரூ.2 கோடி ஆகும். நடப்பாண்டில் இத்திட்டத்தை அமல்படுத்த ரூ.1 கோடியை இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவை மைய அரசு ஒரு பங்கும், மாநில அரசு ஒரு பங்கும், பயனாளிகள் இரண்டு பங்கும் ஏற்றுக்கொள்வார்கள்.

பிற்பகல் 7-50

நமது மாநிலத்தில் 5 மாவட்டங்களில் டானிடா திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டு 6 மாவட்டங்களில் டானிடா போன்ற ஒரு திட்டம், டானிடா மற்றும் மாநில அரசு பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டது. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் எஞ்சியுள்ள 17 மாவட்டங்களிலும், வருகிற இரண்டு

ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் டானிடா ரூ.1760-ம் மாநில அரசு பங்காக ரூ.3205-ம் செலவிடும். இத்திட்டத்தின் மூலம் தொடர்பு பணியாளர் தம்பதிகளுக்கு இலக்கு கால்நடை வளர்ப்போருக்கும் அளிக்கப்படும். பயிற்சிக்கான நிதி ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் "சுவர்ண ஜெயந்தி கிராம சுவரோஜ்கார் யோஜனா" திட்டத்தின் நிதியின் மூலம் ஏற்கப்படும். ஏனைய செயல்பாடுகளுக்கு செலவு டானிடா மற்றும் மாநில அரசின் நிதி மூலம் தரப்படும்.

இந்தத் திட்டம் நடப்பாண்டில் 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தில் உள்ள எல்லா கிளை நிலையங்கள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் சிறப்பாகச் செயல்படுவதைக் கண்காணிக்கும்பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வாகனமில்லாத கோட்ட கால்நடை உதவி இயக்குநர்களுக்கு, அவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட நிலையங்களை மாதம் ஒருமுறையாவது பார்வையிடவும், ஆய்வுசெய்யும் பொருட்டு, அவர்களுக்கு அதற்கான வாகன எரிபொருள் செலவை அரசு செலவில் வழங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக இரு சக்கர வாகனங்கள் பயன்படுத்துவோர்கள், 1000 கிலோ மீட்டர் செல்ல மாதம் 25 லிட்டரும், நான்கு சக்கர வாகனங்களுக்கு மாதம் 1000 கிலோ மீட்டர் செல்ல 100 லிட்டரும், எரிபொருள் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். அவ்வாகனங்களை அதிகாரிகள், அவர்கள் சொந்த செலவில் வாங்கிக்கொள்ள வேண்டும். இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் இதய தெய்வம் அம்மா அவர்கள் 7 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் படித்த கால்நடை மருத்துவர்கள் பல மாநிலங்களில் வேலை பார்க்க மறுக்கப்பட்டு, ஏற்கெனவே வேலை பார்த்த மருத்துவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்ட வரலாறு உண்டு. இந்த அவலநிலையை உடைத்தெறிந்து கால்நடை மருத்துவ உலகிற்கே புரட்சி செய்திருக்கிறார் எங்களுடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதன் மூலம் கால்நடை மருத்துவ பட்டதாரிகள், பிற மாநிலங்களில் மேற்படிப்பு படிக்கவும், இந்தியா முழுவதும் வேலையில் சேரவும், வழிவகை செய்திருக்கிறார். கால்நடை பட்டதாரிகள் இரண்டாந்தர குடிமக்களைப் போல, அடையாளமற்று



இருந்தவர்களை உலகளாவிய அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்திருக்கிறார் எங்கள் உத்தமத் தலைவி. இச்சட்டம் தாய்த் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் இந்தியக் குடியரசுத் தலைவரினுடைய ஒப்புதல் வாங்கப்பட்டது.

தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பட்டதாரிகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், இந்திய கால்நடை மருத்துவமன்ற சட்டம் 1984-ஐ தமிழ்நாட்டில் செயல்படுத்த நடப்பு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் தீர்மானம் முன்மொழியப்பட்டு அந்நாள் முதல், இச்சட்டம் நமது மாநிலத்தில் அமல்படுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கூட்டத்தின் இறுதி நாளன்று, இப்பேரவையில் இச்சட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

வேலையில்லாத கால்நடை பட்டதாரிகளுக்கு, கால்நடை மருத்துவ சேவை பெறப்படாத ஊரகப் பகுதிகளில் உள்ளாட்சி நிறுவனங்களின் உதவியுடன் ஒரு கட்டடம் வாடகைக்கு வழங்கப்பட்டு, அதில் தேசிய பசு மற்றும் எருமையின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கடனாக, திரவ நைட்ரஜன் குடுவையும், மருத்துவ சேவை வழங்க கிட்டியும் வழங்கப்படும்.

மருந்துகளும், உபகரணங்களும், கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனாகப் பெற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆதரவளிக்கும். இதனால் வேலையில்லாத கால்நடை பட்டதாரிகள், அரசு அங்கீகாரத்துடன், கால்நடை மருத்துவ சேவை பெறப்படாத பகுதிகளில் மருத்துவ சேவை புரியவும், அவர்கள் வாழ்க்கைக்கு ஓர் உத்தரவாதம் கிடைக்கவும், இதய தெய்வம் அம்மாவின் அரசு உதவி செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், பாளையங்கோட்டையினுடைய சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியிலே ஒதுக்கப்பட்ட மருத்துவமனை மாற்றப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கடந்த காலத்திலே,. பாளையங்கோட்டை தொகுதியில் 1996-லிருந்து 2001 வரை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கலாம். ஏன் செய்யவில்லை?

1996 முதல் 2001 வரை எம்.எல்.ஏ.வாக இருந்தவர் திரு. கோதர் மைதீன். முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர். அவர் தி.மு.க.-வைச் சேர்ந்தவர் அல்ல என்பதற்காக அந்தப் பகுதியிலே பல்வேறு நலக் காரியங்கள் செய்யவில்லையா என்ற கேள்வியோடு என்னுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்றார் என்பதைப் பார்க்காமல் எல்லா மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேலப்பாளையத்திற்கு அரசு கால்நடை மருத்துவமனை ஒதுக்கியிருந்தாலும், உடனடியாக அதைச் செயல்படுத்துவதற்கான வழிகளை ஆராய, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. மேலும் அடிப்படை வசதிகள் இல்லாததால், இந்தத் திட்டம் பகுதி-2-ன்கீழ் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரே அதற்கான இடங்களை ஒதுக்கித் தரலாம். சட்டமன்றத்தில் பேசுகின்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியில் அங்கே இடத்தை ஒதுக்கித் தந்திருந்தால், அந்தப் பகுதியில் மருத்துவ நிலையம் அமைந்திருக்கும். அப்படி அமைக்கப் படாததற்கான காரணம், அதை மாற்றுவதற்குக் காரணம், அவர் அதைச் சரியாகச் செய்யவில்லை என்ற காரணத்திற்காக அங்கே இடம் ஒதுக்கப்படவில்லை. வசதியில்லை என்ற காரணத்திற்காக மாற்றப்பட்டது என்ற வரலாறு உண்டு. (குறுக்கீடு)

*பிற்பகல் 7-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மைதீன்கான், என்ன? இடம் ஒதுக்கித் தருகிறேன் என்று சொல்கிறீர்களா?

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** ஆமாம். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் எல்லாம் மேலப்பாளையத்தில் உள்ள மண்டல அலுவலகத்தின் எதிர்ப்புறம் உள்ள இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை. அதுமட்டுமல்ல, மேலப்பாளையத்தில் ஆஸ்பத்திரி மட்டுமல்ல, அதை ஒட்டியுள்ள 20 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் அது பயன் தருகிறது. தருவை, முன்னீர்ப்பள்ளம், பொன்னாக்குடி போன்ற....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பயன் கிடைக்கிறது என்று இல்லை. சட்டமன்ற உறுப்பினர் இடத்தை ஒதுக்கிக் கொடுக்கிறீர்களா என்று கேட்கிறார்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இடம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் அதில் பிரச்சினை இருக்குமானால் இடத்தைப் பார்ப்பதற்கு, பெறுவதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. இரா.தா. இன்பத்தமிழன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற மேலப்பாளையம் என்ற இடத்தில் பசு மாடுகள் வெட்டிக் கொல்லப்படுகின்றன. அப்படியுள்ள இடத்தில் எப்படி கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஏழை எளிய மக்கள், குறிப்பாக கிராமப்புற விவசாயப் பெருங்குடி மக்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் இத்துறையின் மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்து அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. திட்டப் பணிகளின் பயன்கள் மக்களை விரைவில் சென்றடையும் வகையில் நிறைவேற்றப்படவுள்ளன. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் பல்வேறு கருத்துகளை ஏற்று, இம்மானியக் கோரிக்கைக்கு நான் அளித்த பதிலை ஏற்று, நிறைவேற்றித் தர இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு அதற்கு நான் அளித்த விளக்கத்தை ஏற்று, ரூ.167,60,56,000/-க்கான கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

## (இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை—கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.



**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கை எண் 6-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.167,60,56,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

*பிற்பகல் 8-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, என்ன? சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, பசு வதைத் தடுப்பிற்காக, அரசு உரிய நடவடிக்கை எடுப்பதாக இங்கே அறிவித்தார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே, 250 பேர் S.P.C.A. அமைப்பு

மூலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். காவல் துறைக்கான அதிகாரம் அத்தனையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. காக்கிச் சட்டை வழங்கப்பட்டிருக்கிறது; தொப்பி வழங்கப்பட்டிருக்கிறது. F.I.R. போடுகிற அதிகாரம் இருக்கிறது. Court -லே நிறுத்துகின்ற அதிகாரம் இருக்கிறது. இவ்வளவு இருந்தும், அவர்கள் போடுகிற F.I.R. - Court-லே நிறுத்தப்பட்ட பின்னர், fine விதிக்கக்கூடிய அளவில், நீதிமன்றம்கூட fine விதித்து, அதற்கான தண்டனையும் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் உள்ள அந்த 250 பேர்களையும், டெல்லி, கேரளா, மேற்கு வங்கம் போன்ற அமைப்புகளில், அரசாங்கம் தன்னுடைய பணியாளர்களாகத் தேர்ந்தெடுக்கிறது. நம்முடைய மாநில அரசு நிதி கொடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் அதற்கு நிதி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நம்முடைய அரசு முழுமையாகப் பயன்படுத்தவில்லை; கடந்த காலத்திலே அது பயன்படுத்தப்படவில்லை; இன்றும் பயன்படுத்தப்படவில்லை. அதற்கு மட்டும், தமிழ்நாட்டிலே ரூ.250 கோடி அசையாச் சொத்துக்கள் இருக்கின்றன. சில தனி நபர்களால், அந்தச் சொத்துக்கள் பராமரிக்கப்பட்டு, அவர்கள் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை, அரசு வரக்கூடிய காலத்திலாவது கவனித்து, அதற்கு உரிய முறையிலே, அதாவது நம்முடைய கால்நடைத் துறையிலே இணைத்து, அவர்களுக்கு பணி வரன்முறை செய்வதற்கான முயற்சிகளை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், அதுபற்றி கவனியுங்கள்.

**(ஈ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை. திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 2

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் மானியக் கோரிக்கை எண் 7-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,35,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,25,22,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

225. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஆறாவது அறிக்கை. (2001-2002)

226. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஏழாவது அறிக்கை. (2001-2002)

227. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி எட்டாவது அறிக்கை. (2001-2002)

228. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)



2002 மே 2]

229. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

230. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை. (2001-2002)

231. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (2001-2002)

232. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2001-2002)

233. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

234. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கை. (2001-2002)

235. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை. (2001-2002)

236. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2001-2002)

237. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2001-2002)

238. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002)

239. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

240. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002)

241. நெடுஞ்சாலைகள் துறையின் "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

242. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் "குடிமக்கள் உரிமை ஆவணம்". (தமிழ், ஆங்கிலம்)

243. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

244. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் "குடிமக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

245. நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் "குடிமக்கள் உரிமை ஆவணம்". (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

246. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் "குடிமக்கள் சாசனம்". (2002) (தமிழ்)

247. முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

248. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள். (2002-2003) (தமிழ்)

249. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

250. பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த திட்ட அறிவிப்புகள். (தமிழ்)

251. செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

252. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)



253. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

254. இந்து சமய அறநிலையத் துறையின் 'மக்கள் சாசனம்'. (2002-2003) (தமிழ்)

255. ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

256. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

257. மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த புதிய அறிவிப்புகள். (2002) (தமிழ்)

258. மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

259. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் செயல்முறைத் திட்டம். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

260. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்'. (2002-2003) (தமிழ்)

261. மானியக் கோரிக்கை எண் 9—2002-2003 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

262. மானியக் கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

263. மானியக் கோரிக்கை எண் 8—2002-2003ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

264. மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

265. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை — கால்நடை பராமரிப்பு பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

266. மானியக் கோரிக்கை எண் 6—2002-2003ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

267. மானியக் கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

268. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம். (2002-2003.) (தமிழ், ஆங்கிலம்)

269. மானியக் கோரிக்கை எண் 7—2002-2003 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

270. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002) (தமிழ்)

271. இந்து சமய அறநிலையத் துறையின் 'மக்கள் சாசனம்'. (2002-2003) (ஆங்கிலம்)



# இணைப்பு I

(497 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### முகவுரை

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு அரசு எல்லாவித முயற்சிகளையும் எடுப்பதோடு, இந்த வகுப்பினரின் நலனுக்கென பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் இச்சமுதாய ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இவ்வரசு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்.

### இட ஒதுக்கீடு

உரிமைகள் குறைந்த மற்றும் நலிவடைந்த வகுப்பினரின் மேம்பாட்டிற்கு உதவுவதற்கும், அவர்கள் முன்னேற்றத்தை எளிதாக்குவதற்கும், விரைவுபடுத்துவதற்கும் மற்றும் சமுதாயத்தில் முன்னேற்றமடைந்துள்ள பிரிவினருக்குச் சமமாக போட்டியிடச் செய்வதற்காகவும், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குக் கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் பொதுப் பணிகளில் நியமனம் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு வழங்கும் கொள்கை தமிழ்நாட்டில் 1921 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. 1980 ஆம் ஆண்டில் 68 விழுக்காடு இட ஒதுக்கீடு என அரசால் நிர்ணயிக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டில் பழங்குடியினருக்குத் தனியாக 1 விழுக்காடு வழங்கி 69 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, அதே அளவிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 16(4)-ன் கீழான மொத்த இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடு என்று கட்டுப்படுத்தி உச்ச நீதி மன்றம்

தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை அரசு தொடர்ந்து செயல்படுத்த உதவும் நோக்கில் இந்த மாண்புறு சட்டமன்றப் பேரவை ஒரு சட்ட முன்வடிவினை ஒருமனதாக நிறைவேற்றி, பின்னர் இது சட்டமாகியது. (தமிழ்நாடு சட்டம் 45/1994) நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியின் விளைவாக மேற்குறிப்பிட்ட சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் இந்தச் சட்டத்தை எதிர்த்து வழக்குள்ள போதிலும், இட ஒதுக்கீட்டினைத் தற்போதுள்ள அளவிலேயே பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

மைய அரசு மற்றும் மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் மற்றும் மைய அரசினால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்களில் சேர்க்கை ஆகியவற்றில் சமூக மற்றும் கல்வி ரீதியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மொத்தமாகக் குறைந்தபட்சம் 50 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவதே சரியாகவும் முறையாகவும் அமையும் என்பது தமிழ்நாடு அரசின் உறுதியான கருத்தாகும். அரசின் ஒத்துக்கொள்ளப்பட்ட இந்தக் கொள்கைக்கு ஒப்ப, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினை 27 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்துமாறும், இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை அனைத்திந்தியப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணிகளுக்கான பணியாளர் தேர்வில் செயல்படுத்துமாறும், மைய அரசு வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்தந்த மாநிலத்தின் தேவைக்கேற்ப இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயித்துக்கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவருமாறும் மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## கல்வி

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு கல்வி ஒரு சிறந்த கருவியாகும் என்பதை உணர்ந்து இப்பிரிவினரின் கல்வி மேம்பாட்டிற்கும், இவர்களின் கல்வித் தரத்தினை எல்லா நிலைகளிலும் மேம்படுத்தவும் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.



## *கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்*

கல்வி நிலையில் சீர்மரபின சமுதாயத்தினர், குறிப்பாக பிரமலைக் கள்ளர் இனத்தவர், பிற இனத்தவரை விட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இவர்களது எழுத்தறிவு விகிதம் மிகக் குறைவு. சீர்மரபினர் கல்வியில் மேம்பாடு அடையும் வகையில், குறிப்பாக பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக் கள்ளர் அதிகமாக வாழும் மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், இத்துறையின் மூலம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 50,071 ஆகும். இப்பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல், கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருதல், ஆய்வகங்கள் மற்றும் மாணவியர்களுக்கு கழிப்பறைகள் கட்டுதல், ஆய்வுக் கூட உபகரணங்களை வழங்குதல், மின்சார வசதி மற்றும் குடிநீர் வசதிகள் செய்தல் ஆகியவை இந்த இலக்கை எட்டுவதற்கு இவ்வரசின் பல்வேறு நடவடிக்கைகளாகும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ், அரசு கட்டடங்களில் இயங்கும் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 2000-2001 ஆம் ஆண்டு வரையில், 62 பள்ளிகளில் குடிநீர் வசதியும், 72 பள்ளிகளில் மின் இணைப்புகளும் மற்றும் 72 பள்ளிகளில் கழிவறை வசதியும் மட்டுமே செய்து கொடுக்கப்பட்டிருந்தன. 2001-2002 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வழங்கல், கழிவறை வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் அளிப்பதற்கான மிகுவிரைவுத் திட்டத்தின்கீழ், முதல்கட்டமாக மீதமுள்ள 193 பள்ளிகளுக்கு ரூ. 125.00 இலட்சம் செலவில் கழிவறை வசதியும், ரூ.47.00 இலட்சம் செலவில் 50 பள்ளிகளுக்கு குடிநீர் வசதியும், 40 பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதியும் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள பள்ளிகளுக்கு குடிநீர் வசதியும் மின்சார வசதியும் 2002-2003 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாடத்திட்டம் செயல்படுத்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 15 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் 8 பள்ளிகளில் கணினி பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

[2002 மே 2

உத்தமபாளையத்திலுள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பிரமலைக் கள்ளர் இனத்தவருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க, ஒவ்வொன்றும் 50 இடங்கள் கொண்ட இரு பிரிவுகளை, ரூ.85.00 இலட்சம் செலவில் நிறுவ அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பாட்டிற்கென நடப்பு ஆண்டில் ரூ.2250.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பாடப்புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும், 10-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகளும், பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.40.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சீருடை வழங்கல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 21,120 மாணவ/மாணவியரும், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 20,000 மாணவ/மாணவியரும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 44,950 மாணவ/மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.136.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### படிப்பு உதவித் தொகை

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகைப்படாத பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.



2002 மே 2]

### பள்ளிப் படிப்பு உதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் 9ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியருக்கு, அனைத்துப் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்துறையின் விடுதிகளில் தங்கி நான்கு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத, 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவர்/மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப்புத்தகங்களும் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் கல்வி நிலையங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்குப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் மாணவர்கள் சார்பில் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகின்றது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த, ஆங்கில மொழி வழி கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்குக் கல்விக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்கள் இச்சலுகையைப் பெற எந்த நிபந்தனையும் இல்லை. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.722.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை

கிராமப்பகுதிகளிலுள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்கள் ஆரம்பப் பள்ளி அளவிலேயே படிப்பை நிறுத்திவிடும் சூழ்நிலையைக் குறைக்கவும், குறிப்பாக வறுமையின் காரணமாக தொடர்ந்து கல்வி பயிலாமல் இடையில் நிறுத்திவிடும் இவ்வகுப்பைச் சார்ந்த மாணவியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்கள் நடுநிலைப் பள்ளி வரை தொடர்ந்து பயின்றிடுவதை

ஊக்குவிப்பதற்கெனவும் 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.500/- ஊக்கத் தொகையும், 6ஆம் வகுப்பு பயிலும் 30,000 மாணவியருக்கு மாதமொன்றிற்கு ரூ.100/- வீதம் பத்து மாதங்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத, பள்ளிகளில் மேல்நிலை வகுப்பு முதல், கல்லூரிகள்/பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சியாளர் நிலை வரையில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்குப் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தக விலை ஆகியவற்றில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

மேனிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், அவர்களது கல்விக் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு உட்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தில் வேறு பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆனால் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாறான நிபந்தனைகள் ஏதுமில்லை. +2 பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் சார்பில் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகிறது. கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உண்டி மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்காக, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 1100.69 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### இலவசக் கல்வி

பத்தாம் வகுப்பு முதல் பி.ஏ., பி.எஸ்.சி., மற்றும் பி.காம்., போன்ற பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு



வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில், (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்கு மேல் இருக்கக் கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் வேறு பட்டதாரிகள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தவர்களுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் பட்டயப் படிப்பு அல்லது தொழிற்கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தொழில் பட்டப்படிப்பு மற்றும் பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

இலவசக் கல்வித் திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்குக் கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத பல்வகை கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.1645.39 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### பரிசுகள் வழங்குதல்

#### (1) மாநில அளவிலான பரிசுகள்

இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட இன மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3000/-மும், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5000/-மும் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட இன மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1500/-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட.

சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/-மும் வழங்கப்படுகிறது.

**(2) மாவட்ட அளவிலான பரிசுகள்**

மாவட்ட அளவில் இதுபோன்றே, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட இன மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.1500/-ம் மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.3000-மும் வழங்கப்படுகின்றன. இதே போன்று பத்தாம் வகுப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்ட இன மாணவ, மாணவியருக்கு ரூ.500/- வீதம் இரண்டு முதல் பரிசுகள், ரூ.250/- வீதம் இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் ரூ.150/- வீதம் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.1,000/-, ரூ.500 மற்றும் ரூ.300/- ஆகும்.

2002-2003 ஆம் ஆண்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் திட்டத்திற்காக ரூ.2.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(3) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு**

பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர் மற்றும் மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3000/- வீதம் பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு நான்கு/ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

**(4) தந்தை பெரியார் நினைவுப் பரிசு**

இதேபோன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் உயரிய மதிப்பெண்கள் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேரும் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம்





மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக நடப்பு ஆண்டிற்கென ரூ.22.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(5) உயரிய மதிப்பெண்கள் பெற்ற மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ மாணவியருக்கு ஊக்கத் தொகைகள் வழங்குதல்:**

+2 பொதுத் தேர்வில் மாநில அளவில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்களுக்கு தொடர் உயர்கல்வி பயில ஆண்டுதோறும் தலா ரூ.1500 வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த ஊக்கத் தொகைகள் ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு பட்டப்படிப்பு முடிக்கும் வரையிலோ அல்லது அதிகபட்சம் ஐந்து ஆண்டுகாலத்திற்கோ இதில் எது குறைவோ அந்தக் காலம் வரையில் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. இத்திட்டம், பெற்றோர் ஆண்டு வருமான வரம்பின்றி செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டிற்கு ரூ.30.00 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள்**

இத்துறையின்கீழ் இயங்கும் 972 மாணவர் இல்லங்களில், 537 மாணவர் இல்லங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழும், எஞ்சியுள்ள 435 மாணவர் இல்லங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் 52,751 மாணவ/மாணவியர்கள் மாணவர் இல்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவர் இல்லங்களில் சேர, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்குட்பட்டு இருத்தல் வேண்டும். 972 மாணவர் இல்லங்களில் 770 மாணவர் இல்லங்கள், போதிய அடிப்படை வசதிகளின்றி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே இந்த 770 மாணவர் இல்லங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் மிகப்பெரும் திட்டத்தை அரசு அமல்படுத்தியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.36.99 கோடி செலவில் 114 மாணவர் இல்லங்களுக்கு கட்டடம்

கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதைத்தவிர அரசுக் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகு விரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.35.77 இலட்சம் செலவில் 94 மாணவர் இல்லங்களுக்கு மின் இணைப்புகள் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் மாணவர் இல்லங்களுக்கு குடிநீர் வசதியும், கழிவறை வசதியும் 2002-2003 ஆம் ஆண்டில் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர் இல்லங்களுக்கு மாவு அரவை இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு மட்டும்), விளையாட்டுச் சாதனங்கள், நூலகங்கள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவர் இல்லங்களுக்கு ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன. அரசு இல்லங்களில் தங்கியுள்ள 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ/மாணவியர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மற்றும் +2 அரசு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியர்களின் திறனை உயர்த்த அவர்களுக்கு இலவசமாக எல்லாப் பாடங்களுக்கும் வழிகாட்டி நூல்களும் (கையேடுகள்) வழங்கப்படுகின்றன. மலைப்பகுதி மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்குக் கம்பளி ஆடைகள் வழங்கும் புதிய திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாணவர் இல்லங்கள் முறையாகச் செயல்படுவதை உறுதிப்படுத்த ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் மாணவர் இல்ல கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### உணவுக் கட்டணங்கள் மற்றும் உணவு மானியங்கள்

30-09-2001 வரை, கல்லூரி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.400/-ம், பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு ரூ.225/-ம் மாதாந்திர உணவுக் கட்டணமாக அனுமதிக்கப்பட்டது. பள்ளி இல்ல மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை போதுமானதாக இல்லாததினால் இக்கட்டணத்தை, 01-10-2001 முதல்



ரூ.225/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டிற்கு மாணவர் இல்லங்களைப் பராமரிக்க மொத்தம் ரூ.4194.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழை மாணவ. மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டுவரும், அரசு அங்கீகாரம் பெற்ற 39 தனியார் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.150/- வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 1,720 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். இந்த மானியத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.25.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார மேம்பாடு

ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் புதிய அணுகுமுறையின்கீழ், இலவசக் கருவிகள் வழங்குதல், தையல் இயந்திரம் வழங்கும் புதிய திட்டம் மற்றும் வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### இலவசக் கருவிகள் வழங்குதல்

பித்தளை தேய்ப்புப் பெட்டிகளும், முடிதிருத்தும் கருவிகளும், கல்லுடைக்கும் கருவிகளும், ஆண்டு வருமானம் ஊரகப் பகுதிகளில் ரூ.16,000/-க்குட்பட்ட மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.24,000/-க்குட்பட்ட சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்

2001-2002-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### முடி திருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்

பூர்வீகத் தொழிலை மேற்கொண்டு வரும் மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு முடி திருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கிறது:—

| திட்டத்தின் பெயர் | அரசு உதவித் தொகை | வங்கிக் கடன் உதவி | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்தச் செலவு |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| முடி திருத்தகம் | 1,500 | 3,500 | 5,000 |
| சலவை நிலையம் | 1,500 | 3,500 | 5,000 |
| நடமாடும் சலவை நிலையம் | 600 | 1,400 | 2,000 |

இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சியும் வேலைவாய்ப்பும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற இயலும் வகையில் 100 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்க சென்னையில் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சி நிலையம் ஆதிதிராவிடருக்கான பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. மேலும், வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்கு



பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. இலவச இட வசதி, சிறப்புப் பயிற்சி, நூல் நிலைய வசதி ஆகியவற்றுடன் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500 வீதம் உணவுக் கட்டணமும் அளிக்கப்படுகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/மாணவியர் இப்பயிற்சி நிலையத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள். நடப்பு ஆண்டிற்கு இப்பயிற்சித் திட்டத்திற்கு ரூ.36.85 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்

வேலைவாய்ப்பு பெறுவதற்கு அவர்களின் திறமையை மேம்படுத்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலைவாய்ப்புப் பயிற்சிகள் பட்டதாரிகளுக்கு தொழில்நுட்பவியலில் முன்னேற்றம் அளிப்பதற்கும், பட்டதாரி நிலைக்குக் கீழே உள்ளோர் மற்றும் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு தொழில் ரீதியான முன்னேற்றம் அளிப்பதற்கும் வகை செய்கிறது. பயிற்சிக் கட்டணம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பின்வரும் தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:

| வ. எண் | பயிற்சி | பயிற்சியின் காலம் |
|---|---|---|
| 1. | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 3 மாதங்கள் |
| 2. | தானியங்கி பொறியியல் | 12 மாதங்கள் |
| 3. | குளிர்சாதன/குளிர்பதனப் பெட்டி பழுதுபார்த்தல் | 6 மாதங்கள் |
| 4. | அலங்கார ஆடை வடிவமைப்பு | 2 மாதங்கள் |
| 5. | ஆடை தயாரிப்பு | 10 மாதங்கள் |
| 6. | கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் | 10 மாதங்கள் |
| 7. | செவிலியர் உதவியாளர் பயிற்சி | 12 மாதங்கள் |

| | | |
|---|---|---|
| 8. | பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல் | 6 மாதங்கள் |
| 9. | தோல் பொருட்கள் தயாரித்தல் (குறுகிய காலப் பயிற்சி) | 6 மாதங்கள் |
| 10. | தோல் பொருட்கள் தயாரித்தல் (நீண்ட காலப் பயிற்சி) | 15 மாதங்கள் |
| 11. | தையல் இயந்திரம் இயக்குதல் | 2 மாதங்கள் |
| 12. | அலுவலகச் செயலர் பயிற்சி | 6 மாதங்கள் |
| 13. | தட்டச்சுப் பயிற்சி | 6 மாதங்கள் |
| 14. | சுருக்கெழுத்துப் பயிற்சி | 12 மாதங்கள் |
| 15. | தொலைபேசி இயக்குதல் | 1 மாதம் |
| 16. | தகவல் தொழில் நுட்பம் | 12 மாதங்கள் |
| 17. | மருத்துவ ஆய்வுக்கூடப் பயிற்சி | 12 மாதங்கள் |
| 18. | பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு சிறப்புப் பயிற்சி | 6 மாதங்கள் |
| 19. | உணவுப் பொருட்கள் மற்றும் பேக்கரி/கன்பெக்ஷனரி பயிற்சி மற்றும் உணவு விடுதி நிர்வாகம் | 6 மாதங்கள்/ 12 மாதங்கள் |

இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.425.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட 5,000 மகளிருக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 7 நாள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற



மகளிர் தொழில் தொடங்க அவர்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5.00 கோடி கடன் வழங்கப்படவுள்ளது.

## வீட்டுவசதி

பெரும்பாலான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குச் சொந்தமாக குடியிருப்புகள் இல்லை. எனவே தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி இவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை இத் துறை செயல்படுத்தியது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் சுமார் 1.5 இலட்சத்திற்கு மேலாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய போதிலும், இவற்றில் சுமார் 4,000 பயனாளிகளே வீடுகள் கட்டியுள்ளனர். எனவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறையின்கீழ் இவ்விடங்களில் சாலை, தெருவிளக்குகள். குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான மிகப்பெரும் திட்டத்தை இவ்வரசு 2001-2002 முதல் அமல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 2002-2003-லும் தொடரப்படும். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.360.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காகப் பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை 162 வகுப்புகளிடமிருந்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்

[2002 மே 2

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. இவற்றில் 110 வகுப்புகள் குறித்த விசாரணைகள் முடிவுற்று அரசுக்குப் பரிந்துரைகள் வரப்பெற்று பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள வகுப்பினர் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ.1200.00 இலட்சமாகவும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.1119.01 இலட்சமாகவும் உள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கென, இப்பிரிவைச் சார்ந்த தனிநபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள திட்டம், வியாபாரம் அல்லது செயல் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புதுடெல்லியில் அமைந்துள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில வழிமுகமையாகச் செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட நிறுவனங்கள் கடன்கள் வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முகவர்களாகச் செயல்படுகின்றன:—

1. கூட்டுறவு வங்கிகள்
2. தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
3. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புதுடெல்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.3315.55 இலட்சமும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், 36,903 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு நிதியுதவியாக ரூ.3293.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



2002 மே 2]

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஹட்கோவிடமிருந்து கடனுதவி பெற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒருங்கிணைப்பு முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சமுதாய மக்களுக்குச் சுயவேலைவாய்ப்பு வழிவகைகளை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு எளிய கடன் வசதிகள் விரைவில் கிடைக்கும் வகையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பணிகள் மேலும் சீரமைக்கப்படும்.

## சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கமும் விருதாக வழங்கப்படுகிறது.

## சிறுபான்மையினர் நலன்

தமிழகத்தில் கிறித்துவர், முகமதியர், ஜெயினர்கள், சீக்கியர், புத்த மதத்தினர் மற்றும் பார்சி சமயத்தைச் சார்ந்தவர்கள் முக்கிய சிறுபான்மையின மக்கள் ஆவார்கள். சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே சிறுபான்மையினர் இம்மாநிலத்தின் ஓர் அங்கமாக விளங்குவதை உணரும் வகையில் அவர்களின் நலனுக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு மாண்புமிகு பிரதமரின் 15 அம்சத் திட்டம் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது.

சிறுபான்மையினரின் நலனுக்காகக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

(அ) காவல் துறை பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.

(ஈ) மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி மற்றும் தேசூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

### 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

இஸ்லாமியர் அதிக அளவில் வாழும் மாவட்டங்களிலுள்ள 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திலிருந்து ரூ.2.50 கோடி கடனாகப் பெற்று, ஒவ்வொருவருக்கும் ரூ.25,000 கடனுதவியாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 470 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக ஒருவருக்கு ரூ.25,000 வீதம் மொத்தம் ரூ.1.17 கோடி கடனுதவியாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மாநில சிறுபான்மையினர் ஆணையம்

இம்மாநிலத்தின் மத வழி மற்றும் மொழி வழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு, சிறுபான்மையினர் ஆணையம் அரசால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கண்டறிய இந்த ஆணையம் பல்வேறு மாவட்டங்களைப் பார்வையிட்டு சிறுபான்மையின மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுகிறது. மனுதாரர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து, அம்மனுக்களில்





எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள்மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினருக்கான நலத் திட்டங்களைத் திறம்பட செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது. "வேற்றுமையில் ஒற்றுமை - சிறுபான்மையினரின் உரிமைகளும் நலனும்" என்னும் ஆராய்ச்சி மாநாடு 19-3-2002 அன்று மாநில சிறுபான்மையினர் ஆணையத்தால் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### வக்ஃபு வாரியம்

1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்திய சட்டம் 43/1995) கீழ் வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான எந்தவொரு பூசலையும் முடிவு செய்வதற்கு, 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு நிதியிலிருந்து அரசு நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் இதற்கென இவ்வாரியத்திற்கு ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு அரசு ரூ.40.00 இலட்சம் அனுமதித்துள்ளது. அதில் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.16.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.24.00 இலட்சம் 2002-2003 ஆம் ஆண்டில் வழங்கப்படும். மேலும் 2001-2002-ல் வக்ஃபு வாரியம் மற்றும் அதன் 10 வட்டார அலுவலகங்களுக்கு கணினிகள் வாங்க ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### பழுதுபார்ப்பு/சீரமைப்பு மானியம்

மசூதிகள் மற்றும் தர்காக்கள் புதுப்பித்தல், இஸ்லாமியர் இடுகாட்டிற்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வோராண்டும், அரசு மானியம் வழங்கி வருகிறது. மசூதிகள் மற்றும் தர்காக்களைப் புதுப்பித்தல், சிறப்பு பழுது பார்ப்புப் பணிகளுக்காக ரூ.80.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இத்தொகையில் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.32.00 இலட்சம் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 மே 2

### உலமா ஓய்வூதியத் திட்டம்

முவாஜின் (மோதினார்), பேஷ் இமாம் அல்லது அரபு மொழி ஆசிரியர்கள் அல்லது முஜாவர் (முஸ்லீம்) 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்துள்ள வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. உலமா ஓய்வூதியப் பயனாளிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 2200 ஆகும். அதில், 1,850 நபர்கள் தற்பொழுது பயன் பெறுகின்றனர். இதற்கு நடப்பு ஆண்டில் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு

தமிழக ஹஜ் குழு, வக்ஃபு சம்பந்தப்பட்ட பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சரைத் தலைவராகவும், 15 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டது. மேலும் 10 பேரை மற்ற அங்கத்தினர்களின் சம்மதத்தின் பேரில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ் புனிதயாத்திரைக் குழுவிற்கு, ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியான ரூ. 7.00 இலட்சம் 2001-2002 ஆம் ஆண்டுமுதல் ரூ.10.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. ஹஜ் புனிதப் பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இட வசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜெட்டாவிற்கு விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் போன்ற வசதிகளைப் பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது. 2002 ஆம் ஆண்டு ஹஜ் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து 2,793 பயணிகள் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்டனர்.

ஒவ்வோர் ஆண்டும், நிர்வாகச் செலவிற்கான மானியம் மட்டுமின்றி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஹஜ் தொண்டர்களைச் சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களைத் தேர்வு செய்யும் குழுவில் உள்ள இரண்டு பிரதிநிதிகளைச் சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காகவும், அரசு மானியம் அளித்து வருகிறது.



2002 மே 2]

### முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம்

முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதாந்திரப்படி வழங்குதல், தகுதியுடைய முஸ்லீம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லீம் மகளிருக்குக் கதர் மற்றும் கைவினைப் பொருள்கள் சம்பந்தமான சிறு தொழில்களில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இச்சங்கம் தொண்டர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதன் மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம் திரட்டும் நிதியில், பாதித் தொகையை மானியமாக அரசு ஆண்டுதோறும் வழங்கி வந்தது. 2001-2002 ஆம் ஆண்டு முதல் இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையை மானியமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### முடிவுரை

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும், இவ்வரசு மேற்கொண்டுள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கிடும் குறிக்கோளை அடைவதற்கு இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.

[2002 மே 2

# இணைப்பு

## 2002-2003 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறைத் தலைவர் | திட்டம் | திட்டம் சாராதது | மொத்தம் |
|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | — | 126.69 | 126.69 |
| வக்ஃபு வாரியம், ஹஜ் குழு மற்றும் முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம் | — | 193.50 | 193.50 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 2876.83 | 2686.03 | 5562.86 |
| பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | — | 29.49 | 29.49 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 1710.75 | 4693.64 | 6404.39 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | — | 16.97 | 16.97 |
| மூலதனச் செலவு | 135.41 | — | 135.41 |
| மொத்தம் | 4722.99 | 7746.32 | 12469.31 |



2002 மே 2]

# இணைப்பு II

(507 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 8—பால் வழங்கும் திட்டங்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### பால் பெருக்குத் துறை

மனிதனுக்குத் தேவையான உணவுப்பொருள்களில் பால் ஒரு முக்கியமான சத்துள்ள உணவாகும். கிராமப்புறங்களில் பொதுவாக கறவை மாடுகளை பராமரித்து வளர்த்து குடும்பத்தினுடைய வருவாயைப் பெருக்குவதில் பெண்களின் உழைப்பு பெரும் பங்கு வகிக்கிறது. கிராமங்களில் உற்பத்தியாகும் பாலை குறைந்த விலைக்கு இடைத்தரகர்கள் வாங்கி, பெருகி வரும் நகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிக விலைக்கு நகர்ப்புறங்களில் விற்றார்கள். இந்த முறையில் உற்பத்தியாளரோ அல்லது நுகர்வோரோ எந்த பயனையும் அடையவில்லை. நன்கு கட்டமைக்கப்படாத பால் விற்பனையில் இடைத்தரகர்கள் பெரும் பயன் பெற்றனர். நன்கு கட்டமைக்கப்பட்ட பண்ணை வளர்ச்சியின் காரணமாக இந்த சூழ்நிலை முழுமையாக மாறியுள்ளது. பால் உற்பத்தியாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக இடைத்தரகர்கள் ஆதிக்கம் அறவே நீக்கப்பட்டது. பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட வணிக உதவிகள் மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி பிறந்தது. இதே போல் நகர்ப்புறங்களிலும் பால் கூட்டுறவுகளின் மூலமாக நுகர்வோர்களின் தேவையைப் பூர்த்தி செய்து பால் மற்றும் பாலிலிருந்து பெறப்படும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வழி செய்யப்பட்டது. மேற்காண் மாற்றத்திற்கு நவீன பால் பண்ணைகளையும், பால் குளிரூட்டும் நிலையங்களையும் அமைத்து, மேம்படுத்தப்பட்ட முறைகளினால் பாலைப் பதப்படுத்தியும் மற்றும் பாலை எடுத்துச் செல்ல மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதியுமே வழிவகுத்தன. பால் வளத் துறையின் ஒழுங்கான திட்டமிடப்பட்ட அணுகுமுறையும் செயல்பாடும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுத்தது.

[2002 மே 2

பால் வளத் துறை 1958-ல் தொடங்கப்பட்டு ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. பால்வளத் துறையின் வணிக நடவடிக்கைகள் ஜூலை 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை, கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன.

குஜராத் மாநிலத்திலுள்ள ஆனந்த் வழிமுறையின்படி செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள் பின் வருமாறு:

(அ) முன்பு பால் வழங்கும் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அதன் அளவின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. மாறாக தற்போது உற்பத்தியாளர் சங்கங்களின் உறுப்பினர்கள் வழங்கும் பாலில் உள்ள கொழுப்பு சத்தின் அடிப்படையில் பணம் வழங்கப்படுகிறது.

(ஆ) இச்சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டவை அல்ல.

(இ) இச்சங்கங்கள் உற்பத்தியாளர் நலனை அடிப்படையாகக் கொண்டது.

(ஈ) இவை குறிப்பிடும்படியாக உள்ளூர் விற்பனை எதையும் மேற்கொள்வதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கால்நடைகளுக்கு மருத்துவம், செயற்கைமுறை கருவூட்டல், கால்நடைகளுக்கு சமச்சீர் தீவனம் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகள் சங்க உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே வழங்கப்படுகின்றன.

(ஊ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்களுக்கு செயற்கை முறை கருத்தரிப்பு மற்றும் முதலுதவி சிகிச்சை ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



2002 மே 2]

**பால் வளத் துறையின் முக்கிய பணிகள்**

1. பால் உற்பத்தியாளர் சங்கங்களை அமைத்தல் மற்றும் பதிவு செய்தல்.

2. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் இதர மற்ற பால் கூட்டுறவுச் சங்கங்களின் வணிக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

3. பால் கூட்டுறவுகள் தொடர்பான 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.

பால் வளத் துறையின் செயல்பாடுகளை நிறைவேற்ற பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை சிறப்பு ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் 848 பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட அளவில் 23 பால்பத துணைப் பதிவாளர்கள் செயல்படுகின்றனர். கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 13 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் பால் பெருக்கும் திட்டம் செயல்படாத விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்படும் 22 மாவட்டங்களில் இப்பணிகளை 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செய்து வருகின்றன.

பால் கூட்டுறவுகளை சட்டபூர்வமாக கட்டுப்படுத்துவதைத் தவிர நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் அல்லது ஆண்டுக்கு 500 மெட்ரிக் டன் பால் திடப்பொருள் உற்பத்தி செய்யும் தனியார் பால் பண்ணைகளைப் பதிவு செய்தல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 92-ன்கீழ் இத்துறை மேற்கொள்கிறது.

[2002 மே 2

பால் வளத் துறையின் முன்னேற்றம்

| வ. எண் | இனம் | செயலாக்கம் (31-03-2002) |
|---|---|---|
| 1. | பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 8741 |
| 2. | இதர பால் கூட்டுறவுச் சங்கங்கள் | 62 |
| 3. | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| 4. | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 1 |
| 5. | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 22.75 இலட்சம் |
| 6. | பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) நாள் ஒன்றுக்கு | 21.36 இ.லி. |
| 7. | பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) நாள் ஒன்றுக்கு | 17.49 இ.லி. |
| 8. | சென்னை நகரத்தில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | 7.21 இ.லி. |
| 9. | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை | 20 |
| | திறன் நாள் ஒன்றுக்கு | 28.88 இ.லி. |
| 10. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 38 |
| | திறன் நாள் ஒன்றுக்கு | 11.14 இ.லி. |

*இ.லி. = இலட்சம் லிட்டர்கள்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி

2001-2002 ஆம் ஆண்டில் 101 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



2002 மே 2]

பால்வளத் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

கறவை மாடுகள் வாங்க மானியம்

இத்திட்டம் ஆதிதிராவிடர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு கறவை மாட்டின் விலை ரூ.12,000/- என நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாட்டிற்கும் ரூ.4,000/- அரசு மானியமாகவும் எஞ்சியுள்ள ரூ.8,000/- வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. தாட்கோ நிறுவனமும் இதே அடிப்படையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

கன்று வளர்ப்புத் திட்டம்

இளமையிலேயே தேர்ந்தெடுத்து சமச்சீர் தீவனம் அளித்து கன்றுகளைப் பராமரித்தல் என்ற உயர்நோக்கை குறிக்கோளாகக் கொண்டு தாட்கோவினால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் கலப்பின கிடாரிக் கன்றுகளுக்கு சமச்சீரான தீவனம், தேவையான மருத்துவ வசதி, நோய்த் தடுப்பு நடவடிக்கை மற்றும் 4 முதல் 32 மாதம் வரையிலான கன்றுகளுக்கு, அதாவது, கன்று நன்கு வளர்ந்து சினைப்பட்டு கன்று ஈன்று பால் கொடுக்கும் வரையிலான காலத்திற்கு அளிக்கப்படுகிறது. போதுமான அளவிற்கு சரியான முறையில் தரமான ஊட்டச் செறிவுள்ள தீவனங்களை கன்றுகளுக்குக் கொடுப்பதனால் கன்றுகள் குறுகிய காலத்தில் பருவம் எய்தி சினைப்பட்டு பால் வழங்கும் பசுக்களாகின்றன. ஆதிதிராவிடர் விவசாயிகளிடம் இருக்கும் கிடாரிக் கன்றுகள் நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லிட்டர் பால் தரும் வளமுடைய பசுக்களாக உருவாக்கப்படுகின்றன. இதனால் ஆதிதிராவிடர் விவசாயிகள் ரூ.8,000/- முதல் ரூ.12,000/- வரை மதிப்புடைய கறவை மாட்டிற்கு உரிமையாளர் என்ற பெருமையை அடைகிறார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர்

கறவை மாடு கடன் திட்டம்

கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும், பால்

உற்பத்தியைப் பெருக்கவும், கறவை மாடுகள் வாங்க இத்திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மானியம் ஏதுமில்லை. பயனாளிகளுக்கு இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. ஒரு கறவை மாட்டின் விலை ரூ.12,000/- இதில் தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான மேம்பாட்டுக் கழகம் 85%, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார கழகம் 10%, பயனாளிகள் 5% ஏற்றுக்கொள்கின்றனர்.

### 50:50 விகிதத்தில் மத்திய மாநிலங்கள் பங்களிக்கும் திட்டம்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களைப் புனரமைக்க வழி செய்யும் வகையில் ரூ.1300 இலட்சம் நிதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதில், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.650 இலட்சமாகும். மீதமுள்ள ரூ.650 இலட்சம் மத்திய அரசின் பங்களிப்பாகும். மாநில அரசின் மொத்த பங்குத் தொகை ரூ.650 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பங்குத் தொகையான ரூ.650 இலட்சம் விடுவிப்பதற்கு மத்திய அரசுக்கு தேசிய பால்வள வாரியத்தின் பரிந்துரையுடன் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

### தனி அலுவலர் நியமனம்

பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 33, 10(aa)-ன்படி ஏற்கெனவே முடிந்து விட்டதால் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதம சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளாக தலைவரைத் தேர்ந்தெடுப்பதாலும், பிரதம சங்கத் தலைவர் என்ற முறையில் அவர்கள் மாவட்ட ஒன்றியத்திற்கு இயக்குநர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவதனால் அவர்கள் அனைவரும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக பதவி வகித்து வந்ததால், அப்பதவிகளும் 25-5-2001 அன்று காலாவதியாகிவிட்டன. அதே நாளில் தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 16 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களும், காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு



பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் அம்பத்தூர் பிரிவு பொது மேலாளரும், தனி அலுவலர்களாகவும் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அதன் நிர்வாக இயக்குநர் தனி அலுவலராகவும், அரசு ஆணையின்படி நியமனம் செய்யப்பட்டு 26-5-2001 முதல் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அவர்களது பதவிக்காலம் 25-11-2001-ல் முடிவடைந்தது.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு விட்டதாலும், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதாலும், 8,546 பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் தனி அலுவலர்கள் பதவியில் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

### தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைத்தல்

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 92-ன்கீழ் மாதவரத்தில் சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் ஒரு மத்திய தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ரூ.69.78 இலட்சம் செலவில் மத்திய அரசின் 100% மானியத்தில் அமைக்கப்படும். இந்தத் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் பால் பண்ணையிலிருந்து பெறப்படும் மாதிரிகளைப் பகுத்தாய்வு செய்து பால் மற்றும் பால் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி உள்ளதா என உறுதி செய்யும் வகையில் செயல்படும்.

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.8.10 இலட்சத்தை மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.34.16 இலட்சம் மானியமாக மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

குஜராத் மாநிலத்தில் உள்ள "ஆனந்த்" வழிமுறையைப் பின்பற்றி மூன்று நிலை கூட்டுறவு அமைப்புகள் தமிழகத்தில் ஏற்படுத்த, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் தொடங்கப்பட்டது. கிராமங்கள் தோறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்

மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடங்கப்பட்டு தற்பொழுது 8,803 கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களும், 17 மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களும் செயல்படுகின்றன.

இணையத்தின்கீழ் நான்கு இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இடம் | செயலாற்றல் (நாளொன்றுக்கு) |
|---|---|---|
| 1 | அம்பத்தூர் | 4 இலட்சம் லிட்டர் |
| 2 | மாதவரம் | 2 இலட்சம் லிட்டர் |
| 3 | சோழிங்கநல்லூர் | 4 இலட்சம் லிட்டர் |
| 4 | அயனாவரம் | பால் உபபொருட்கள் உற்பத்திப் பண்ணை |

மேற்குறிப்பிட்டுள்ள முதல் மூன்று பால் பண்ணைகளுக்கு பால் பதப்படுத்துதல், பால் பைகளில் நிரப்புதல், அனுப்புதல் ஆகியவற்றுக்காக பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்று (ஐ.எஸ்.ஓ.9002) அளிக்கப்பட்டுள்ளது.

அயனாவரத்தில் உள்ள நான்காவது பண்ணையில் பால்கோவா, ஐஸ்கிரீம், மோர், தயிர் மற்றும் குலாப்ஜாமுன் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட ஒன்றியத்தின் கட்டடத்தில் வாடகைக்கு இப்பண்ணை 40 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. இதனை அம்பத்தூர் பால் பண்ணைக்கு அருகில் உள்ள தேசிய பால் வள வாரியத்திற்குச் சொந்தமான கிடங்கிற்கு மாற்றுவதற்கு ரூ.1.50 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு, ஒருங்கிணைத்து வழி நடத்தி, அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும், இயந்திரச் சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் Turn key அடிப்படையில்



இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களையும், இம்மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

**பால் உற்பத்தி மற்றும் விற்பனை**

2001-2002 ஆம் ஆண்டில், தமிழகத்தில், சராசரியாக நாளொன்றுக்கு 17.49 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அதில் 13.17 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 5.96 இலட்சம் லிட்டர் பால், அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. 7.21 இலட்சம் லிட்டர் பால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மூலமாக சென்னை மாநகரத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**பால் கொள்முதல் விலை**

பால் உற்பத்திக்குத் தேவைப்படும் தீவனம் மற்றும் இடுபொருட்கள் மற்றும் கால்நடை பராமரிப்புச் செலவின் உயர்வைக் கருத்திற்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை 1-12-2001 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| காலம் | எருமைப்பால் (கொழுப்புச் சத்து கிலோ ஒன்றுக்கு) | ஒரு லிட்டரின் விலை | பசும்பால் மொத்த திடப் பொருள் (கிலோ ஒன்றுக்கு) | ஒரு லிட்டரின் விலை |
|---|---|---|---|---|
| 1-12-2001 முதல் இன்று வரை | ரூ.156.28- லிருந்து ரூ.163.40 | ரூ.10.94- லிருந்து ரூ.11.44 | ரூ.69.23- லிருந்து ரூ.73.08 | ரூ.9.00- லிருந்து ரூ.9.50 |

**பால் விற்பனை விலை**

சமன்படுத்திய பால் (Toned milk), நிலைப்படுத்திய பால் (Standardised milk), முழு கொழுப்புச் செறிந்த பால் (Full cream milk), பாலிதீன் பைகள், தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள்

மூலமாக சென்னை மாநகரில் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றின் விற்பனை விலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

| சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) | | முழுகொழுப்பு செறிந்த பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) | | நிலைப்படுத்திய பால் (தானியங்கி நிலையம்)(லிட்டர் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|---|---|---|---|
| பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் | பால் அட்டை | ரொக்கம் |
| ரூ.12.50 | ரூ.14.00 | ரூ.15.00 | ரூ.16.00 | ரூ.16.50 | ரூ.18.00 | ரூ.14.50 | ரூ.14.50 |

*விற்பனை பற்றிய குறிப்புகள்*

*பால் விற்பனை*

2001-2002 ஆம் ஆண்டில், சராசரியாக, நாளொன்றுக்கு 7.21 இலட்சம் லிட்டர் பாலை சென்னை மாநகரில் இணையம் விற்பனை செய்துள்ளது. சென்னை நகரில், நுகர்வோர் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு 217 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், 182 கண்ணாடியிழை பிளாஸ்டிக் தொட்டிகள், 509 பூத்துக்கள் மற்றும் 34 பாலகங்கள் மூலமாகப் பால் விற்பனை செய்யப்படுகிறது. 47 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது.

இணையம், 3 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 8.5 விழுக்காடு இதர சத்து கொண்ட பதப்படுத்திய, சமன்படுத்திய பாலை (Toned Milk), மிகக் குறைந்த விலையில் சென்னை மாநகரில் நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. இதைத் தவிர, 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 8.5 விழுக்காடு இதர சத்து கொண்ட நிலைப்படுத்திய பாலும் சென்னை மாநகரில் விற்பனை செய்யப்படுகிறது. சராசரியாக, 2001-2002 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு மொத்தம் 7.21 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதில் நிலைப்படுத்திய பால், பாலிதீன் பைகளிலும் மற்றும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் கண்ணாடியிழை பிளாஸ்டிக் தொட்டிகள் வாயிலாகவும் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது. இணையம், 6 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 9 விழுக்காடு இதர சத்து கொண்ட முழு கொழுப்பு செறிந்த பாலினையும் விற்பனைக்காக சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி உள்ளது.



மேலும், சென்னையில் முகவர்கள் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது. தற்சமயம் 40 முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு, நாளொன்றுக்கு 1,00,000 லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது.

*தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில் மாறுதல்:*

தற்சமயம் நிலைப்படுத்திய பால் மட்டும் நுகர்வோருக்குத் தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலமாக விற்கப்பட்டு வருகிறது. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் விற்பனை செய்யும் பாலைத் தவிர, பால் உபபொருட்கள் விற்பனை செய்யவும் சில தானியங்கி விற்பனை பால் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாற்றங்கள் செய்யப்பட்டு, பால் பொருட்களும் விற்கப்படுகின்றன.

*பால் பொருட்கள் விற்பனை:*

இணையத்தின் விற்பனைப் பிரிவானது கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

(1) பெருநகர் பால் விற்பனை

(2) பெருநகர் பால் உபபொருட்கள் விற்பனை

(3) பிற மாநிலங்களில் பால் உபபொருட்கள் விற்பனை.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் இணைந்த தலைமை நிறுவனமாகும். சென்னை பெருநகரில் பால் விற்பனையை மேற்கொள்வதும், அதனுடன் இணைந்த மாவட்ட ஒன்றியங்கள் உற்பத்தி செய்த பால் பொருட்களை விற்பனை செய்வதும் இணையத்தின் பொறுப்பாகும். 17 மாவட்ட ஒன்றியங்களில் சேலம், ஈரோடு, மதுரை, தருமபுரி ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் வசதியுடன், பால் பொருட்களை உற்பத்தி செய்யும் வசதிகளும் உள்ளன. மற்ற ஒன்றியங்களிலுள்ள உபரி பால், அருகிலுள்ள பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இப் பால் பண்ணைகளில், பால் உபபொருட்களாகிய வெண்ணெய், பால் பவுடர் மற்றும் நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

இப்பால் பொருட்கள் தவிர, உதகையில் உள்ள பால் பண்ணையில் பாலாடைக் கட்டிகளும், சேலம் பால் பண்ணையில் டெட்ரா

பாக்கெட்டுகளில் பாலும், 'மாவின்' மாம்பழச்சாறும், சுவையூட்டிய நறுமணப் பாலும் தயாரிக்கப்படுகின்றன. இன்சுவைப் பொருட்களான ஐஸ்கிரீம், யோகர்ட், பால்கோவா போன்றவை இணையத்தின் பொறுப்பில் இயங்கி வரும் அயனாவரம் பால் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பால் பொருட்கள் "ஆவின்" என்ற வணிக முத்திரைப் பெயருடன் இணையத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்சுவைப் பொருட்கள் "ஆவின் குட்னஸ்" எனும் பெயருடனும் ஆவின் நெய் மற்றும் வெண்ணெய் "அக்மார்க்" முத்திரையிடப்பட்டும், பால் பவுடர் மற்றும் பாலாடைக் கட்டி, இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் சான்றுடனும் விற்பனை செய்யப்படுகின்றன.

புதிய பால் உபபொருட்கள்:

கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய பால் உபபொருட்கள் சென்னை மாநகரில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

(1) மைசூர்பா

(2) குலாப்ஜாமுன்

(3) கலாகந்த்

(4) சர்க்கரை கலந்த பால் பவுடர்

(5) இருமுறை சமன்படுத்திய பால் (டெட்ரா பேக்)

ஆவின் பால் உபபொருட்கள் தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விற்கப்படுகின்றன:

சென்னை பெருநகர்

சென்னை பெருநகரிலும் மற்றும் புறநகர்ப் பகுதியிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக நந்தனத்தில் உள்ள உபபொருட்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உபபொருட்கள் அம்பத்தூர் மற்றும் அயனாவரத்தில் உள்ள கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு, விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

உபபொருட்கள் விற்பனை, 34 ஆவின் பாலகங்கள், 124 சில்லறை உரிமம் பெற்றவர்கள், 8 மொத்த விற்பனையாளர்கள், 3,000 சில்லறை



விற்பனை நிலையங்கள் மற்றும் 47 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. திருமணம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனை மூலம் பூர்த்தி செய்கிறது.

உள்ளீட்டுப்பணி:

பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்:

2001-2002 ஆம் ஆண்டில் மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 17.49 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் 7,381 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 1,128 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மகளிரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 16.69 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை தீவனமும், பசுந் தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் கிராம அளவில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் உறை விந்து மூலம் 12.06 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் நடமாடும் கால்நடைப் பிரிவில் உள்ள நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மூலம் 7.60 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசரகால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் 75 நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 26 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

[2002 மே 2

**உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி:**

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 2001-2002 ஆம் ஆண்டில் 1,24,946 வீரியமுள்ள இடேரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள மையக்கரு மற்றும் பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறை விந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறை விந்து நிலையத்திலும் உறை விந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த 2001-2002 ஆம் ஆண்டில், தலா 11.23 இலட்சங்கள் மற்றும் 2.55 இலட்சங்கள் உறை விந்துக் குச்சிகள் முறையே பசுவினத்திற்கும், எருமையினத்திற்கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**கால்நடைத் தீவன உற்பத்திக் கூடம்:**

மூன்று கால்நடைத் தீவன உற்பத்திக் கூடங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் மாதவரத்திலும், ஈரோடு ஒன்றியத்தின்கீழ் ஈரோட்டிலும் மற்றும் மதுரை ஒன்றியத்தின்கீழ் கப்பலூரிலும் கால்நடைத் தீவனக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இக்கூடங்கள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் குச்சி வகை மற்றும் தூள் வகைத் தீவனங்கள் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இத்தீவனம் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**பால் கூட்டுறவுச் சங்கங்களுக்காக கால்நடை பராமரிப்புத் துறையின் செயலாக்கப் பணிகள்:**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இன விருத்தி வசதிகளை, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடை பராமரிப்புத் துறை செய்து வருகிறது.



2002 மே 2]

**அரசினால் அளிக்கப்பட்ட மானியம்**

7-4-1998 மற்றும் 16.4.1998-ல் அரசினால் மாற்றியமைக்கப்பட்ட பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலையினால், இணையத்திற்கு விற்பனை விலையில் ஒரு லிட்டருக்கு ரூ.0.50 இழப்பு ஏற்பட்டது. இந்த இழப்பினைச் சரிக்கட்டுவதற்காக, ஒரு லிட்டருக்கு ரூ.0.50 வீதம் மானியத்தை இணையத்திற்கு அளிக்க அரசு ஒப்புக் கொண்டது. அதன்படி கீழ்க்கண்டவாறு அரசினால் மானியத் தொகை அளிக்கப்பட்டது:

| வருடம் | தொகை (கோடியில்) |
|---|---|
| 1998-1999 | ரூ.5.70 |
| 1999-2000 | ரூ.15.00 |

இதனைத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு நிலுவையில் உள்ள பால் பணம் பட்டுவாடாபற்றி பரிசீலித்து, ரூ.30 கோடி மானியத்தை அரசு அளித்தது.

பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தேங்கி இருக்கும் பால் பணம் பட்டுவாடா செய்வதனைக் கருத்திற்கொண்டு அரசு, ரூ.28 கோடியினை வழிவகை முன்பணமாக ஆண்டிற்கு 17 விழுக்காடு வட்டியுடன் திரும்பச் செலுத்தப்படும் கடனாக அளித்தது. மேற்குறிப்பிட்டுள்ள பணமானது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது. தற்பொழுது வழிவகை முன்பணத்தை மானியமாக மாற்றி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**தொலைநோக்குத் திட்டம்**

தேசிய பால் வள வாரியம், முதல் கட்டமாக தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் 6 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களைத் (கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி, வேலூர் மற்றும் தருமபுரி) தேர்ந்தெடுத்து மேற்குறிப்பிட்ட ஒன்றியங்களுக்கு ரூ.54.89 கோடி பண உதவியும் மற்றும் இணையத்திற்கு ரூ.29.76 கோடி பண உதவியும் அளிப்பதற்குப் பரிசீலித்து வருகிறது.

சென்னை மாநகரம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும், பால் பண்ணையில் பால் குளிரூட்டும் நிலையங்களின் செயல்திறனை அதிகரிக்கவும் தேசிய பால் வள வாரியத்தின் மூலம் 'தொலைநோக்குத் திட்டம்-2010' என்ற திட்டத்தின் வழியாக நிதி உதவி பெற தேசிய பால் வள வாரியத்திற்குக் கீழ்க்கண்டவாறு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | ஒன்றியங்களின் பெயர்/ இணையம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 5.39 |
| 2 | மதுரை | 8.83 |
| 3 | தருமபுரி | 7.64 |
| 4 | திருச்சி | 9.20 |
| 5 | சேலம் | 11.68 |
| 6 | வேலூர் | 12.15 |
| 7 | இணையம் | 29.76 |
| | மொத்தம் | 84.65 |

*புனரமைப்புத் திட்டம்*

*ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் - மத்திய அரசின் திட்டம் - கூட்டுறவுகளுக்கு உதவுதல்*

நட்டத்தில் இயங்கும் ஒன்றியங்கள் / இணையம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, ஒன்றியங்கள் / இணையத்திற்கு உதவும் விதமாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் "கூட்டுறவுகளுக்கு உதவும் புனரமைப்புத் திட்டம்" ஒன்றினை உருவாக்கியுள்ளது.

இத்திட்டச் செலவிற்காக, 50 விழுக்காடு மத்திய அரசு மானியமாகவும், 50 விழுக்காடு மாநில அரசின் மானியமாகவும் வழங்கப்படும். இத்தொகையானது அந்தந்த ஒன்றியங்களின் மொத்த நட்டத் தொகையைவிடக் கூடுதலாக இருக்கக் கூடாது என



நிர்ணயிக்கப்பட்டது. மேலும், மாநில அரசு சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது.

தேசிய பால் வள வாரியம் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களை மேம்படுத்த ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களைத் தெரிவு செய்துள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெறப்படும் இந்த உதவி தமிழக அரசு 50 விழுக்காடும், மத்திய அரசு 50 விழுக்காடும் முழு மானியமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசின் பங்கான ரூ.6.50 கோடி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடம் இருந்து பெற வேண்டிய மீதமுள்ள 50 விழுக்காடான ரூ.6.50 கோடிக்கு கருத்துரு மைய அரசுக்கு தேசிய பால் வள வாரியம் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது.

*மகளிர் நல உதவித் திட்டம்*

மத்திய அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மூலமாக மாநில அரசுகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. இத்துறை ஒப்புதலின் பேரில் 'STEP' என்ற திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக தமிழகத்தில் 145 அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட உள்ளன. இதில் வேலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் சுமார் 10,000 பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடான ரூ.649.463 இலட்சங்களுக்கு மைய அரசு அங்கீகாரம் அளித்து, முதல் தவணையாக ரூ.132.48 இலட்சம் நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

*பால் கூட்டுறவில் "கோ-ஆப்பரேடிவ்" முத்திரையை அறிமுகப்படுத்துதல்*

அகில இந்திய அளவில் பால் கூட்டுறவுகளுக்குப் பொதுவான முத்திரையை நிறுவும்பொருட்டு தேசிய பால் வள வாரியம் "கோ-ஆப்பரேடிவ்" முத்திரையை சென்னையில் 12-11-2001 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. கூட்டுறவு மூலம் விற்பனை செய்யப்படும் பால், நாடு முழுவதும் பொதுவான முத்திரையின்கீழ் விற்பனை செய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்காக தேசிய பால் வள வாரியத்தால் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் ஒன்றியங்களுக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. இதில் இணையத்திற்கு மட்டும் ரூ.30 இலட்சம் ஒதுக்கப்பட்டு பால் விற்பனைக்காக குளிர்சாதன வசதிகள், விளம்பரப் பலகை மற்றும் பாலகங்களைப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிட்டுள்ள தொகையில், 66.6 விழுக்காடு தேசிய பால் வள வாரியம் மற்றும் ஐரோப்பிய பொருளாதாரக் குழு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 33.4 விழுக்காடு தொகையை இணையம் மற்றும் ஒன்றியங்கள் ஏற்கும்.

## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை 1-10-1987 முதல் செயல்பட்டு வருகின்றது. தொடக்க நிலையில் 10,041 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 17 ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சட்டபூர்வத் தணிக்கை இத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தணிக்கை முன்னேற்றம்

### (அ) தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை முன்னேற்றம்

2001-2002 ஆம் தணிக்கை ஆண்டிற்கு 10,041 தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 9,850 சங்கங்களின் தணிக்கை 31-3-2002 வரை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 191 சங்கங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

### (ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றம்

**1997-98 ஆம் ஆண்டு தணிக்கை**

1997-98 ஆண்டுத் தணிக்கை வரை மொத்தமுள்ள 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கையும் முடிக்கப்பட்டுள்ளது.



**1998-99 ஆம் ஆண்டு தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களிலும் தணிக்கை தொடங்கப்பட்டு, 16 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**1999-2000 ஆண்டு தணிக்கை**

மொத்தமுள்ள 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 12 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 5 ஒன்றியங்களின் (திருச்சி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்) தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**2000-2001 ஆம் ஆண்டு தணிக்கை**

மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில் 3 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 10 ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள 4 ஒன்றியங்களின் (விருதுநகர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் திருவள்ளூர்-காஞ்சிபுரம்) தணிக்கை முந்தைய ஆண்டுத் தணிக்கை முடிந்தவுடன் தொடங்கப்படும்.

### (இ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

**1994-95 ஆம் ஆண்டு வரை தணிக்கை**

1994-95 ஆம் ஆண்டு வரை தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளின் தணிக்கை**

இவ்வாண்டுகளுக்கான தணிக்கை பட்டயக்கணக்கரால் முடிக்கப்பட்டுள்ளது. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை இயக்குநரால் சோதனைத் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. சோதனைத் தணிக்கையின் அடிப்படையில் அறிக்கையில் மாற்றம் செய்து தர இணையத்திடம் கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் தணிக்கைச் சான்று வழங்கப்படும்.

### 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளின் தணிக்கை

இவ்வாண்டுகளுக்கான தணிக்கை பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை தணிக்கையாளர்களால் முடிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கைச் சான்று வழங்கப்பட்டபின் இவ்வாண்டுகளுக்கான தணிக்கைச் சான்றுகள் வழங்கப்படும்.

### 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளின் தணிக்கை

இவ்வாண்டுகளுக்கான தணிக்கைப் பணி பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையினரால் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

*அரசு வருவாய்*

2001-2002 ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணமாக ரூ.654.66 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டிய கேட்புத் தொகையில் ரூ.634.84 இலட்சம் 31-3-2002 வரை வசூல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.



## இணைப்பு III

**(178 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)**

## கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003

### *1. முன்னுரை*

கால்நடை வளர்ப்பு கிராமப்புறங்களில் தொன்றுதொட்டு முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. கிராமப்புற மக்களின் துணை வருவாயை அதிகரிப்பதில் கால்நடை முக்கியப் பங்கு வகிக்கிறது. சில சமயங்களில் இருப்பிடத்திலேயே மனித வள ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்தி முழு நேரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு நிரந்தர வருவாயை அளிக்கிறது. மேலும் பால், முட்டை மற்றும் இறைச்சி போன்ற சமச்சீரான ஊட்டச்சத்தினை கால்நடை வளர்ப்பதன் மூலம் அடைய முடிகிறது. இன்றும் கால்நடைச் செல்வம் கிராமப்புற சமுதாயத்தினரால் போற்றி பேணும் செல்வமாகக் கருதப்படுகிறது. கால்நடை பராமரிப்பு, கிராமப்புற வேலைவாய்ப்புகளில், குறிப்பாக கிராமப்புற சுய வேலைவாய்ப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. மற்றும் மகளிர் பெருமளவில் பங்கு கொள்ளும் வாய்ப்பையும் அளிக்கிறது. கால்நடை வளர்ப்பு வேளாண் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எல்லா பருவ காலங்களிலும் நிலைத்த வேலைவாய்ப்பை அளிக்கிறது.

கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த மற்றும் கால்நடை மருத்துவ வசதிகளை அளிக்க ஏற்படுத்தப்பட்டது. மாநிலம் எங்கும் செயல்படும் பல்வேறு கால்நடை நிலையங்களின் மூலம் இப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. கலப்பின கருத்தரிப்புத் திட்டம் மற்றும் அது தொடர்புடைய திட்டங்களைச் செயல்படுத்தியதன் பயனாக கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, உபயோகமற்ற கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன. இதனால் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வந்த போதிலும், தனி மாட்டின் பால் உற்பத்தித் திறனானது அதிகரித்து, பால் உற்பத்தியும் சீராக அதிகரித்து வருகிறது. கலப்பினங்களின் மூலம் பால் உற்பத்தி 1990-91-ல் நாளொன்றுக்கு 6.05 இலட்சம் டன்னாக இருந்தது. 2000-2001-ல் அது 19.05 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

[2002 மே 2

1990-91-ல் நாளொன்றுக்கு 33.75 இலட்சம் டன்னாக இருந்த அனைத்து இனங்களின் பால் உற்பத்தி மதிப்பீடு 2001-2002-ல் 49.90 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதே போல் 1990-91-ல் ஆண்டுக்கு 2,551 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி மதிப்பீடு 2001-2002-ல் 4,223 மில்லியனாக அதிகரித்துள்ளது. 1990-91-ல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவு 166 கிராம் என்பது, 2001-2002-ல் 219 கிராமாக அதிகரித்துள்ளது. இதுபோன்றே ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு உட்கொள்ளும் முட்டை எண்ணிக்கை 46-லிருந்து 68 ஆக உயர்ந்துள்ளது. கலப்பின கருத்தரிப்பின் மூலமும், நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் ஒரு நாளைக்கு ஒருவர் உட்கொள்ள வேண்டிய இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரை அளவான 220 கிராம் பாலும், ஒரு வருடத்திற்கு 183 முட்டைகளும் விரைவில் எட்டப்படும். தமிழ்நாட்டில் அதிகமாக கறிக்கோழி, முட்டைக்கோழி உற்பத்தி செய்யப்படுவதால், கோழிக்கறியும், முட்டைகளும் அதிக அளவில் மக்களுக்குக் கிடைக்கின்றன.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் துணை வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் வகையில் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு போன்ற உப தொழில்களைத் தொடங்க ஊக்கம் அளிக்கப்படும். தனியார், கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழை எளியோர் பயன்பெறும் வகையிலான பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் திட்டங்களுக்கு அரசு தொடர்ந்து தரும் ஆதரவினால், கால்நடை வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை முழுமையாக வெளிபடுத்த இயலும். கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பின் மூலம் பெறக்கூடிய வருமானம், வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிக்க உதவுவதுடன் கிராமப்புற சமூகப் பொருளாதார மேம்பாட்டை அடைய உதவுகிறது.

## 2. கால்நடை மற்றும் கோழியின அபிவிருத்தி

### 2.1. கால்நடை எண்ணிக்கை:

தமிழ்நாட்டின் மொத்த கால்நடைகள் எண்ணிக்கை 261.71 இலட்சம் ஆகும். இது இந்தியாவின் மொத்த 4,708.6 இலட்சம் கால்நடைகளின் 5.56 சதவீத பங்கு ஆகும். 16-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பின்படி 1997-ல் (தற்காலிகம்) தமிழகத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளின் இனவாரியான எண்ணிக்கை விவரங்களும் அதன் விழுக்காடு பங்கும் கீழே தரப்பட்டுள்ளன:



2002 மே 2]

| இனம் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் விழுக்காடு |
|---|---|---|
| மாட்டினம் | 93,62,637 | 35.79 |
| எருமையினம் | 27,16,774 | 10.38 |
| செம்மறியாடுகள் | 53,73,601 | 20.54 |
| வெள்ளாடுகள் | 63,24,873 | 24.17 |
| குதிரைகள் மற்றும் மட்டக் குதிரைகள் | 9,024 | 0.03 |
| பன்றிகள் | 6,22,406 | 2.38 |
| கழுதைகள் | 40,357 | 0.15 |
| நாய்கள் | 17,03,497 | 6.51 |
| முயல்கள் | 12,505 | 0.05 |
| **மொத்த கால்நடைகள்** | **2,61,65,674** | **100** |
| கோழிகள் | 2,68,74,856 | 98.29 |
| வாத்துகள் | 4,62,480 | 1.69 |
| மற்றவை | 6,343 | 0.02 |
| **மொத்த கோழியினங்கள்** | **2,73,43,679** | **100** |

தேசிய கால்நடை கொள்கையின் வரையறைகளைப் பின்பற்றி தமிழ்நாட்டில் கால்நடை கொள்கை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டு கால்நடை கொள்கையின் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

* கால்நடை உடல்நலம் பேணும் வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்.
* செயற்கைமுறை கருவூட்டல் பணியைத் தீவிரப்படுத்துதல்.

* கிராமப்புறங்களில் வாழும் பெண்களை புறக்கடை கோழி வளர்ப்பில் ஊக்குவித்தல்.
* மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துதல்.
* கால்நடை மருத்துவ சேவையில் தனியாரை ஊக்குவித்தல்.
* இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்கு தரமான இறைச்சி வழங்குதல்.

### 2.2 தீவனம் மற்றும் பசுந்தீவனம்:

கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம் உலர் தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகும். இந்தத் தீவனங்களில் உலர் தீவனம் அதிக அளவில் உட்கொள்ளப்படுகிறது. கால்நடை பெருக்கம், மனிதனுக்குத் தேவைப்படாத வைக்கோல், கதிர், அரிசி தவிடு, சிறு சிறு தானியக் குறுணைகள், எண்ணெய் வித்துக்கள் மூலம் கிடைக்கும் பிண்ணாக்கு மற்றும் பருத்திக் கொட்டை போன்றவற்றைச் சார்ந்துள்ளது. 15 முதல் 20 விழுக்காடு கால்நடைகளுக்கு மட்டுமே அடர்தீவனம் தற்சமயம் கிடைக்கிறது. பசுந்தீவனம் பெரும்பாலும், கறவை மாடுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. மாநிலத்தில் பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களிலும், குறிப்பிட்ட இடங்களிலும் மட்டுமே கிடைக்கின்றது. 400 கிலோ எடையுள்ள மாட்டினம் ஒரு நாளைக்கு சராசரியாக 5 கிலோ உலர் தீவனம் மற்றும் 15 கிலோ பசுந்தீவனம் உட்கொள்ளும் என உத்தேசித்து, மாநிலத்திலுள்ள மொத்த மாட்டினத்திற்கு ஒரு வருடத்திற்கு 2,20,440 இலட்சம் டன்கள் உலர் தீவனம் மற்றும் 6,61,340 இலட்சம் டன்கள் பசுந்தீவனம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த நிலப்பரப்பில் மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகளின் விகிதம் போதுமான அளவு இல்லை. மேலும், இது ஆண்டாண்டுக்கு குறைந்துகொண்டே வருகிறது. மாநிலத்தில் தற்போதுள்ள மேய்ச்சல் நிலப் பரப்பளவு 1.23 இலட்சம் ஹெக்டேர் ஆகும்.

சாகுபடி செய்யப்படாத பயனற்ற நிலங்கள் மற்றும் நிரந்தர புல்வெளிகள் இதில் அடங்கும். மேய்ச்சல் நிலங்கள் ஏனைய பணிகளுக்கு வரையறையின்றி பயன்படுத்தப்படுவதால் அவற்றின் தரம்



மற்றும் பரப்பளவு குறைந்துள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகை நிலமாகவும் மாற்றக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறு மாற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்பளவு உள்ள வேறு நிலம் அதே மாவட்டத்தில் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் உட்கொள்ளும் மொத்த தீவனத்தில் மூன்றில் ஒரு பங்கு மேய்ச்சல் மூலம் கிடைக்கிறது. நிரந்தரப் புல்வெளிகள், நிரந்தரமாகப் பயிரிடப்படாத நிலங்கள், பயன்படுத்த முடியாத நிலங்கள், ஏரிக்கரைப் புறம்போக்கு நிலங்கள், சாலையோரப் புல்வெளிகள் மற்றும் சாகுபடி செய்யப்பட்ட வயல் ஓரங்கள் மேய்ச்சலுக்குப் பயன்படுகின்றன. மேய்ச்சல் வசதி வட கிழக்குப் பருவமழைக்குப் பின் 3 அல்லது 4 மாதங்கள் வரை தான் நீடிக்கும். பயிரிடப்படாத காலங்களில் அறுவடை செய்யப்பட்ட நிலங்கள் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட வனப் பகுதி மற்றும் நிலங்களில் அதிகாரிகளின் அனுமதியோடு கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதுடன், உலர் தீவனப்புல் அறுவடையும் செய்யப்படுகிறது. பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க இத்துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. 7 பசுந்தீவன உற்பத்திப் பிரிவுகள் அரசால் இதற்காக நிறுவப்பட்டுள்ளன. நிலமற்ற குடும்பங்களும், ஏழை விவசாயிகளும் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ள ஏதுவாக சமுதாய தீவன வங்கிகளை ஏற்படுத்த உள்ளூர் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி தீவன வசதிகள் அதிகரிக்கப்படும்.

### 2.3 இனப்பெருக்கம்

நாட்டினங்களில் நோய் எதிர்ப்பு சக்தியும், வெப்ப நிலையை தாங்கக்கூடிய தன்மையும் அதிகம் இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாகவும், பால் கொடுக்கும் காலம் குறைந்தும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட நாட்கள் அதிகமாகவும் இருக்கின்றன. ஆனால் அயலினங்களில் முதல் கன்று ஈனும் காலம், பால் வற்றும் காலம் மற்றும் இரு கன்றுக்கு இடைப்பட்ட காலம் ஆகியவை மிக குறைவானதாக உள்ளன. மேலும் பால் கறவை நாட்கள் மற்றும் உற்பத்தித் திறன் மிக அதிகமாக உள்ளது. இருப்பினும் நோய் எதிர்ப்புத் திறனும் தட்பவெட்ப நிலையைத் தாங்கும் தன்மையும் குறைவாக

உள்ளன. நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்பவெட்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைப் பாதுகாத்து மற்ற திறன்களை குறுகிய காலத்தில் குறைந்த செலவில் மேம்படுத்த கலப்பினக் கறவை மாடுகள் இனப்பெருக்கம் செய்வது ஒன்றே சிறந்த வழியாகும். நாட்டினங்கள் அவற்றின் சொந்த பிறப்பிடங்களிலேயே வளர்த்துப் பாதுகாக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள மொத்த கால்நடை எண்ணிக்கையில் 36 சதவீதம் பசுவினங்களாகும். மொத்த பசுவினங்களின் எண்ணிக்கையானது அயலினம் மற்றும் கலப்பினத்தில் 23 சதவீதம், உள்நாட்டு தூய்மை மரபுடைய இனத்தில் 18 சதவீதம் மற்றும் நாட்டினத்தில் 59 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

உள்நாட்டு தூய்மை மரபுடைய உழவு மற்றும் வண்டி இழுக்கும் மாடுகளாகிய காங்கேயம் மற்று உம்பளாச்சேரி இனங்களை பாதிக்காத வண்ணம் அதிக உழைக்கும் திறன் கொண்ட கலப்பினங்களைப் பெருக்குவது துறையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

**2.4 கலப்பின கால்நடை இனப்பெருக்கம்:**

கலப்பின இனப்பெருக்கத்தினால் கீழ்க்கண்ட பலவகையான நன்மைகள் கிடைக்கின்றன:

* உள்நாட்டினங்கள் 3½ ஆண்டுகள் கழித்தே இனவிருத்திக்கு உகந்தவையாக உள்ளன. ஆனால் கலப்பினங்கள் 2-2½ வருடங்களிலேயே இனவிருத்திக்குத் தயாராகின்றன.
* உள்நாட்டினங்களைவிட கலப்பினங்களில் பருவத்திற்கு வரும் அறிகுறிகள் எளிதாகத் தென்படுகின்றன.
* கலப்பின கால்நடைகளில் கருத்தரிப்பு விழுக்காடு அதிகமாக உள்ளதால் அதன் வாழ்நாளில் அதிகமான கன்றுகளை ஈனுகின்றன.
* கலப்பினங்களில் ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய சராசரி பாலின். அளவு, மொத்த கறவை நாட்கள் மற்றும் கறவைத் திறன் ஆகியவை அதிகமாக உள்ளன.
* கலப்பினங்களில் பால் வற்றும் காலம் மிகவும் குறைவாகும். இதனால் விவசாயிகள் 12 முதல் 15 மாதத்திற்குள் 1 கன்று வீதம் பெறும் வாய்ப்பு உள்ளது.



மேலும், நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மை மற்றும் வெப்ப நிலை தாங்கும் தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கவும், கலப்பின பெருக்கம் ஏதுவாக அமைகின்றது.

மாநிலத்தில் கடைப்பிடிக்கப்படும் மாட்டினம் மற்றும் எருமையின பெருக்கக் கொள்கை பின்வருமாறு:

* நாட்டின பசுக்களின் இனப்பெருக்கத்திற்கு அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் பெர்சியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.
* நாட்டின எருமைகளை முர்ரா இனப் பொலிகாளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.
* கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு கலப்பினப் பசுக்களை இனப்பெருக்கம் செய்தல்.
* உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவை அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

இனப்பெருக்கத்திற்கு மேற்கூறிய கொள்கையைக் கடைப்பிடித்ததன் பலனாக கலப்பினம் 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 11.44 இலட்சமாக இருந்தது. 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 21.53 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 88 சதவீதம் அதிகமாகும். இதே காலக்கட்டத்தில் உள்நாட்டினங்கள் 69.51 இலட்சத்திலிருந்து 55.45 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 20 சதவீதம் குறைவாகும். ஆனால் உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்கள் 12.57 இலட்சத்திலிருந்து 16.65 இலட்சமாக அதாவது 32 சதவீதம் அதிகரித்துள்ளது.

**2.5 எருமையினம் தரம் உயர்த்துதல்:**

எருமையினம் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் 23 சதவீதமாகவும், மொத்த கால்நடைகளில் 10 சதவீதமாகவும் உள்ளது. எருமையினம் பசுவினத்தைவிட குறைந்த தரம் கொண்ட நார்ச் சத்துப் பொருட்களை செரிமானமாகக்கூடிய பொருளாக மாற்றும் திறன் அதிகம் கொண்டுள்ளது. எருமைப் பாலானது பசும்பாலைவிட

இரண்டு மடங்கு கொழுப்புச் சத்தும் 30 சதவீதம் அடர்பொருளும் மிகுந்ததாகும். எருமையினம் 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 31.28 இலட்சமாக இருந்தது, 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 27.16 இலட்சமாகக் குறைந்துள்ளது. ஆனால் பால் உற்பத்தியானது 1990-91 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 13.53 இலட்சம் கிலோவாக இருந்தது. 2001-2002 ஆம் ஆண்டில் 18.19 இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. இது மாநில மொத்த பால் உற்பத்தியில் 37 சதவீதம் ஆகும். இதே காலகட்டத்தில் ஒரு மாட்டிலிருந்து 1 நாளைக்குக் கிடைக்கும் சராசரி பாலின் அளவு 3.227 கிலோவிலிருந்து 4.100 கிலோவாக உயர்ந்துள்ளது. முர்ரா எருமையின உறைவிந்தை பயன்படுத்தியதாலும், உற்பத்தித் திறனற்ற எருமையினங்களை முறையாக அகற்றியதாலும் இச்சாதனையை அடைய முடிந்தது.

பால் உற்பத்தியைப் பெருக்க மற்றும் கிராமப்புற ஏழை மக்களிடம் எருமையின வளர்ப்பை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, 800 தரமுயர்த்தப்பட்ட எருமை கிடேரிகளை மானியத்தில் கன்னியாகுமரி, தேனி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கரூர், நாமக்கல், தருமபுரி, திருவாரூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 800 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.28.00 இலட்சம் செலவில் வழங்க 2001-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### 2.6 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்:

பசு மற்றும் எருமையினத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி இத்துறையினால் 1948-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி 1975-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. திரவ விந்தின் உபயோகம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக 1993-ல் அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களிலும் உறைவிந்து உபயோகப்படுத்தப்பட்டன.

3,572 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:



1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

மொத்தம் 260 எண்ணிக்கையிலான ஜெர்சி, ஹோல்ஸ்டைன் ப்ரிசியன் கலப்பினங்கள், காங்கேயம் மற்றும் முர்ரா பொலிகாளைகள் மேற்கண்ட நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் நடுத்தர உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. அபிசேகப்பட்டி உறைவிந்து நிலையத்தில் உள்ள முர்ரா இனவிருத்தி காளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க 2001-2002 ஆம் ஆண்டில் 20 முர்ரா காளைகள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் ஈச்சங்கோட்டையில் 3 எண்ணிக்கையிலும், அபிசேகப்பட்டி மற்றும் ஓசூரில் தலா 2 எண்ணிக்கையிலும், உதகமண்டலம், சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ஆக மொத்தம் 10 செயல்படுகின்றன. இவை உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகளை உறைய வைக்கவும், வீரியம் குறையாமல் பாதுகாக்கவும் பயன்படுகின்றன. மாநிலத்தில் வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுகல் மற்றும் சேலம் ஆகிய 12 இடங்களில் உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் பிரதான பணிகளாக திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்தினைப் பாதுகாத்து பல இடங்களில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல் பணிக்குப் பயன்படுத்த உதவி வருகிறது.

2001-2002-ல் 29.03 இலட்சம் உறைவிந்து குச்சிகளும், 2.25 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும், உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் மற்றும் திரவ நைட்ரஜன் நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**2.7 தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமை:**

தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு மாநில கால்நடை வளர்ச்சி முகமையைத் தொடங்கிட ஆணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

* அதிக மாட்டினங்களை செயற்கைமுறை இனவிருத்திப் பணியில் கொண்டு வந்து செயல்படுத்துவதே செம்மையான இனவிருத்தித் திட்டச் செயல்பாடாகும்.
* இனவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளை, விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்.
* செயற்கைமுறைக் கருவூட்டல் பணிக்கான காளைகளின் தரத்தை உயர்த்துதல்.
* நாட்டினங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
* உள்ளீடு மற்றும் சேவையின் தரத்தை உயர்த்துதல்.
* உள்ளிருப்பு வசதிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளுதல்.

இத்திட்டம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.93 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இதற்காக 2002-2003-ல் ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.8 கால்நடைப் பண்ணைகள்:**

கால்நடைப் பண்ணைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட கால்நடைகளை இனப்பெருக்கம் செய்து பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகள் செயல்விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு மூலாதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. மூன்று ஆட்டுப் பண்ணைகளையும் சேர்த்து மொத்தம் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன.

ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள பண்ணையில் ஜெர்சி இன கால்நடைகளும், உதகமண்டலத்தில் அமைந்துள்ள பண்ணையில் ப்ரீசியன் இன கால்நடைகளும் பிரத்யேகமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. அபிசேகப்பட்டி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணைகளில் முர்ரா இன எருமைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டினங்களின் தனித்தன்மையைப் பாதுகாக்கவும், அவ்வினங்களை இனப்பெருக்கம் செய்ய ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் சிகப்பு சிந்தி மற்றும் காங்கேயம் இன கால்நடைகள் ஒசூர் பண்ணையிலும், உம்பளாச்சேரி இன கால்நடைகள் கொருக்கை பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.



எதிர்கால இனப்பெருக்கத் திட்டங்களுக்குத் தேவையான கலப்பினக் காளைகளைத் தேர்வு செய்யும் நோக்கத்துடன் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு களப்பணித் தொடர்புடைய மரபு வழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் கலப்பினக் கால்நடைகள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் கலப்பினங்களின் உயரின மரபுகள் அளவு மிகையாகாமல் கட்டுப்படுத்துவது, நோய் எதிர்ப்புத் திறனை இழக்காமலும், தட்ப வெட்ப நிலையைத் தாங்கக்கூடிய வகையிலும், பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது ஆகும்.

கரு மாற்றல் தொழில்நுட்பம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரு மாற்று தொழில்நுட்பப் பிரிவுகள் அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

கால்நடைப் பண்ணைகளை களப்பணி தொடர்புடையதாகவும், அவற்றை விரிவாக்கப் பணியில் ஈடுபடுத்தும் நோக்குடனும், ஒவ்வொரு பண்ணையும் அதன் அருகாமையில் உள்ள 5 கிராமங்களைத் தத்து எடுத்து, அங்குள்ள விவசாயிகளுக்கு பசுந்தீவனம் சாகுபடி பற்றிய விவரங்கள் மற்றும் உள்ளீடுகளை அளித்து அவர்களை பசுந்தீவனம் சாகுபடி செய்ய ஊக்குவிக்கிறது.

**2.9 செம்மறியாடு மற்றும் வெள்ளாடு இனப்பெருக்கம்:**

செம்மறியாடு வளர்ப்பு பெரும்பாலான நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முக்கிய ஆதாரமாகவும், அவர்களின் வருவாயினைக் கூடுதலாக்கவும் உதவுகிறது. இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர

நிலத்தினைப் பலப்படுத்துவதற்காக செம்மறியாட்டினங்களை வயல்வெளிகளில் விட்டு பராமரிப்பதால் சிறிது வருமானம் கிடைக்கிறது. செயல்படுத்தப்படும் அனைத்து கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களில், செம்மறியாடு வளர்ப்பு நல்ல பலனை அளிக்கிறது. செம்மறியாடுகள், மாநிலத்தில் உள்ள மூன்று ஆட்டுப் பண்ணைகளைத் தவிர, தனியாக செம்மறியாட்டுப் பிரிவுகள் ஓசூர், புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கீழக்கரிசல் செம்மறியாடு, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாட்டிலும், இராமநாதபுரம்-வெள்ளை செம்மறியாடு புதுக்கோட்டையிலும் இனவிருத்தி செய்யப்படுகிறது. சாத்தூர், சின்னசேலம் மற்றும் முகுந்தராயபுரம் ஆகிய ஆட்டுப் பண்ணைகளில் முறையே வேம்பார், மேச்சேரி மற்றும் சென்னை சிகப்பு இனங்கள் பராமரித்து வரப்படுகின்றன. மண்டியா மற்றும் கலப்பின செம்மறியாடு, ஓசூர் கால்நடைப் பண்ணையில் இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் இனப்பெருக்கம் செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகளை விவசாயிகள் வளர்க்கும் உள்ளூர் ஆடுகளின் தரத்தினை உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இத்துறை ஜமுனாபாரி வெள்ளாடுகளை ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் மற்றும் சாத்தூர், மாவட்ட கால்நடைப் பண்ணைகள் செட்டிநாடு, கொருக்கை, ஓசூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இனப்பெருக்கத்திற்காகப் பராமரித்து வருகின்றது. புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த வெள்ளாடுகளின் வம்சாவழிகள் உள்ளூர் விவசாயிகளின் ஆட்டுத் தரத்தை அதிகரிக்க வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், உள்நாட்டு இனங்களான கொடி ஆடு மற்றும் கன்னி ஆடுகளைப் பாதுகாபபதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையே மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் ஆட்டுப்பண்ணை, சாத்தூரில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆடுகளுக்கு ஏற்படும் பெரும்பாலான உடல்நலக் குறைவுகளுக்கு அவற்றைத் தாக்கும் குடற்புழுக்களே முக்கிய காரணம் ஆகும். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இத்துறை 1982-1983 முதல் செம்மறியாடுகள் பயன்பெறும் வகையில் தீவிர உடல் நலம் பேணும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம், சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி நீங்கலாக பிற மாவட்டங்களில் விவசாயிகள் வளர்க்கும் செம்மறியாடுகளுக்கு காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2001-2002-ல் செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.



கிராமப்புற ஏழை மக்களை செம்மறியாடு வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்ய இத்துறை திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர், மதுரை, பெரம்பலூர், கடலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 150 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 750 பயனாளிகளுக்கு செம்மறியாடு அலகுகள், ரூ.45.00 இலட்சம் மொத்தச் செலவிலும், மானியத்திலும் 2001-2002-ல் ஒரு பயனாளிக்கு 1 கிடா மற்றும் 4 செம்மறி ஆடுகள் ரூ. 6,000 செலவில் கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

### 2.10 இதர கால்நடை அபிவிருத்தி செயல்பாடுகள்:

லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் பன்றியினங்கள் சென்னை, சைதாப்பேட்டை பன்முக கால்நடை மருத்துவமனை வளாகத்திலும், மாவட்ட கால்நடைப் பண்ணை ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இனப்பெருக்கத்திற்காகப் பராமரிக்கப்படுகின்றன. உள்ளினச் சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக வெளிநாட்டிலிருந்து புதிய பன்றிகளை வாங்கி மேற்கண்ட இடங்களிலுள்ள பன்றிப் பிரிவுகளுக்கு வழங்கப்பட உள்ளன.

குதிரையினத்தை இனப்பெருக்கம் செய்து பாதுகாக்க ஒரு குதிரை வளர்ப்புப் பிரிவு ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. தற்பொழுது 11 பெண் குதிரைகளும் 3 ஆண் குதிரைகளும் 13 குதிரைக் குட்டிகளும் இப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் உள்ள குதிரைகளை பொதுமக்களுக்கு விற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை, சைதாப்பேட்டையில் ஒரு நாய் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவில் நாட்டின நாய்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை மட்டுமே வளர்க்கப்பட்டு வந்தன. மற்ற அயல் நாட்டு இனங்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, லாப்ரடார் மற்றும் டாபர்மேன் ஆகிய இனங்கள், இப்பிரிவில் சேர்க்கப்பட்டன. இதன் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை

செய்யப்பட்டு வருகின்றன. தற்சமயம் இப்பிரிவில் 14 ஆண் நாய்களும் 27 பெண் நாய்களும் 12 குட்டிகளும் உள்ளன.

**2.11 கோழியினப் பெருக்கம்:**

புறக்கடையில் மட்டுமே வளர்க்கக்கூடியதாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது சுறுசுறுப்பான வர்த்தகரீதியான தொழிலாக மாறி விட்டது. 1960 ஆம் ஆண்டின் பின்பகுதியில் ஆழ்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கோழி வளர்ப்பில் மிகப் பெரிய முன்னேற்றம் காண வழிவகுக்கப்பட்டது. புதுவித அறிவியல் தொழில்நுட்பங்கள், புதிய இன கோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டுமுறை கோழிவளர்ப்பு போன்றவற்றின் வருகையினால் கோழி வளர்ப்புத் தொழிலில் புரட்சி ஏற்பட்டுள்ளது.

கிராமப்புற வீடுகளில் புறக்கடையில் வளர்க்கப்படும் 5 முதல் 10 கோழிகள் சிறிய முதலீட்டில் வளர்க்கப்படுகின்றன. இதன் காரணமாக இறைச்சி மற்றும் முட்டைகள் அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன. புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகள் பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டையாகவும் இறைச்சியாகவும் பயன்படுகின்றன. இந்தக் கோழிகளை வெள்ளைக் கழிச்சல் என்ற நோய் தாக்க அதிக வாய்ப்புள்ளது. இத்துறையின் மூலம் கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் அனைத்து கால்நடை நிலையங்களிலும் ஒவ்வொரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளிலும் மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இருமுறையும் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நோய் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நோயிலிருந்து கோழிகளைக் காக்கும்பொருட்டும் இத்துறையால் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாநிலத்தில் 25 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் காட்டுப்பாக்கத்திலும், மற்றொன்று தருமபுரி மாவட்டத்தில் ஓசூரிலும் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்கு செயல்பட்டு வருகின்றன. கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை அறிந்து கொண்டு அவற்றை காலத்தே கட்டுப்படுத்துவதற்கு இரண்டு கோழி நோய்



கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று ஈரோட்டிலும், மற்றொன்று நாமக்கல் மாவட்டம், ஆண்டகலூர் கேட்டிலும் செயலாற்றி வருகின்றன. விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்பு பற்றி பிரபலப்படுத்த வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களிடம் புறக்கடை கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தி அவர்களின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் வருமானத்தை அதிகரிக்க, இத்துறை 38.5 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 5,775 பயனாளிகளுக்கு, 1 சேவல் மற்றும் 9 கோழிகள் வழங்கும் திட்டம் மானியத்துடன் ரூ.600 மதிப்பில் மொத்தம் ரூ.34.65 இலட்சம் செலவில் 2001-20002-ல் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.12 சிறப்புத் திட்டங்கள்:**

கால்நடை வளர்ப்பு தொன்றுதொட்டு இலட்சக்கணக்கான கிராமப்புற வீடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்பவும் விவசாய நிலங்களின் விலை ஏற்றத்தினாலும் குறைந்து வரும் நீர் ஆதாரங்களினாலும் விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவது ஒரு கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துகின்றனர். ஆகையால் இப்பிரிவினருக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும் ஏழை மக்களை கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்தி அவர்களின் துயர்துடைக்கவும், இத்துறை பயனாளிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

**(அ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் 1981 முதல் கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையிலுள்ள உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன், ஒரு பயிற்சி மையமும் கட்டப்பட்டுள்ளது. மேலும் கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் மற்றும் தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவும், திண்டுக்கல்லில் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டன. 2001-2002-ல் இரண்டு நடமாடும் கால்நடை

மருத்துவப் பிரிவுகளுக்கும் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுக்கும் ஆகும் பணியாளர், பராமரிப்புச் செலவு மற்றும் 300 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க ரூ.15.00 இலட்சம், திட்டப் பகுதியில் கலப்பின கிடேரி கன்றுகளைத் தத்தெடுக்க ரூ.15.75 இலட்சம், இத்திட்டத்தில் வாங்கப்பட்ட வாகனங்களைப் பராமரிப்பதற்காக ரூ.0.79 இலட்சம், ஆக கூடுதல் தொகையான ரூ.31.54 இலட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

**(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1975 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஓர் உறைவிந்து உற்பத்தி நிலையம், ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு மற்றும் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கோத்தகிரி மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 2001-2002-ல் ரூ.10.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றுள், ரூ.4.80 இலட்சம் செலவில் உதகமண்டலம், கால்நடைப் பண்ணையில் உள்ள உறைவிந்து வங்கியை வலுப்படுத்தவும், ரூ.2.50 இலட்சம் செலவில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவின் நிர்வாகச் செலவினங்களுக்காகவும் மற்றும் தங்காடு, கால்நடை கிளை நிலையக் கட்டடம் கட்டுவதற்கும் ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**(இ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளபோதிலும், அத்தொழில் அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிப்பதில்லை. ஆகையால் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க செம்மறியாடு, வெள்ளாடு, கோழி அல்லது மாட்டின வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். எனவே கால்நடைகளை வாங்க அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களின் வாயிலாக மானியம் அல்லது கடன் உதவி அளிக்கப்படுகிறது.

1999-2000-ல் 3,537 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு அலகுகளை மானியத்துடன் ரூ.399.54 இலட்சம் மொத்தச் செலவில் வழங்க திட்டம் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் வரும்



ஆண்டுகளிலும் தொடரப்படும். இதுவரை 2,274 அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. 2001-2002-ல் மத்திய அரசு உதவியுடன் 1,500 தீவன விதைகள் அடங்கிய சிறு பைகள் வழங்கப்பட்டுள்ளன. 2001-2002-ல், 7,325 பயனாளிகள் பயன்பெறும் வகையில் இசைவளிக்கப்பட்ட மூன்று திட்டங்களில், 50 சதவீத பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள்.

**இத்திட்டங்கள்:**

| வரிசை எண் | திட்ட விவரம் | குறியீடு | மொத்த மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 12 மாவட்டங்களில் தரமுயர்த்தப்பட்ட எருமை கிடேரிகளை வழங்குதல் | 800 | 28.00 |
| 2. | 12 மாவட்டங்களில் செம்மறியாடு அலகுகள் வழங்குதல் | 750 | 45.00 |
| 3. | 29 மாவட்டங்களில் புறக்கடை கோழி வழங்குதல் | 5,775 | 34.65 |

இவை தவிர, தொடர் திட்டங்களின் மூலமாகவும் இவ்வினத்தவர் வளர்க்கும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. இத்துறையின் 2001-2002 ஆம் ஆண்டின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.12,763.05 இலட்சத்தில், சிறப்பு உள்ளடக்குத் திட்டத்தின் பங்கு ரூ.299.60 இலட்சம் ஆகும். சிறப்பு உள்ளடக்குத் திட்டத்தின்கீழ் 10 கால்நடை மருந்தகங்கள், ஒரு கால்நடை மருத்துவமனை, 34 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் 7 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 9 கால்நடை மருந்தகங்கள், 9 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் 3 கிளை நிலையங்கள் பழங்குடியின பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் 4.85 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் 12,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

**(ச) கால்நடை பாதுகாப்புத் திட்டம்:**

இத்திட்டம் 1999-2000 முதல் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதிகளைப் பெற பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களிலும் அவ்வசதி அளிக்கும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் சிறப்பு முகாம்களில் உடல்நலம் பேணுதல், நோய் தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறைக் கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலட்டுத்தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு வகையான கால்நடை நோய்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் நோய் வருமுன் காத்தல் போன்ற நடவடிக்கைகள் குறித்தும் விளக்கக் கண்காட்சிகளுக்கு இம்முகாம்களில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. 2001-2002-ல் 4,620 முகாம்கள் கிராம ஊராட்சிகளில் ரூ.231 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. 2002-2003-ல், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.231 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.13 மாதிரி வரைவுத் திட்டம்:**

1977-78 முதல் கால்நடை பொருள்களான பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவற்றைப் பற்றி நம்பத் தகுந்த மற்றும் குறிப்பிட்ட கால அளவில் பெறப்படும் புள்ளிவிவரங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பருவ வாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து, ஒருங்கிணைந்த கணக்கெடுப்புத் திட்டம் மூலம் அறியப்படுகின்றன. இவ்வாறு களத்திலிருந்து பெறப்படும் புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக பால் மற்றும் கால்நடைப் பொருட்கள்பற்றி மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. இது இத்துறையினால் தொடங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கால்நடை வளர்ச்சி செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அதன் தாக்கத்தை அறியவும் உதவுகின்றன. மேலும் இந்த ஆய்வு, அடிப்படை புள்ளிவிவரங்களை வழங்குவதால், இது பிற்காலத் திட்டங்களைத் திட்டமிட மிகவும் உதவுகின்றது.



**2001-2002 ஆம் ஆண்டில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு பின்வருமாறு:**

| | கோடைக் காலம் | மழைக் காலம் | குளிர் காலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பால் (000' டன்கள்) | 1,625 | 1,681 | 1,684 | 4,990 |
| முட்டை (மில்லியன் எண்ணிக்கை) | 1,371 | 1,437 | 1,415 | 4,223 |
| இறைச்சி (மில்லியன் கிலோ) (பதிவு செய்யப்பட்ட இறைச்சிக்கூடங்கள் மட்டும்) | 12.50 | 12.66 | 13.96 | 39.12 |

கால்நடை கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இரு கால்நடைக் கணக்கெடுப்புக்குட்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் 1981 முதல் இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

**2.14 கூட்டுறவுச் சங்கங்கள்:**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராக கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர் செயல்படுகிறார். நலிவுற்ற பகுதியினரை உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இத்துறையில் மொத்தம் 951 சங்கங்கள் உள்ளன. அதில் 258 சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன. மற்ற சங்கங்களும் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**2.15 பன்னாட்டு நிதியுதவியுடன்கூடிய திட்டம்:**

**(அ) டானிடா உதவியுடன்கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டானிடா உதவியுடன்கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில், அன்னவாசல், குன்றாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.6.42 கோடி ஒதுக்கீட்டில் முதல் கட்டமாக 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட

[2002 மே 2

கால்நடை வளர்ப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதனால் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியம் வாரியாக தொடர்புப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பலவகைப்பட்ட கால்நடைப் பராமரிப்பு, தீவன அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விரிவாக்க தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இலக்கு விவசாயிகள், விவசாயச் சங்கங்கள் மூலமாகவும், அரசு சாரா சங்கங்கள் மூலமாகவும், மாதர் சங்கங்கள் மூலமாகவும், கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். பயிற்சி பெற்ற தொடர்புப் பணியாளர் தம்பதியினர் இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவிக்கிறார்கள்.

இத்திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டதால், இரண்டாவது கட்ட திட்டமானது 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 1997 முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 தென் மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடி செலவில், 20 இலட்சம் வேளாண்குடி மக்கள் பயன்பெறும் பொருட்டு விரிவுபடுத்தி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்ட செயலாக்கத்தின் பயனாக நிறைவேறியவை:

* செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினைப் பராமரிப்போரில் 90 சதவீதம், கோழி வளர்ப்போரில் 70 சதவீதம், இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்.
* காலத்தே கோழிக் கழிச்சல் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், கோழிகளின் இறப்பு சதவீதம் வெகுவாகக் குறைந்துள்ளது.
* குஞ்சு பொரிப்பதற்கு வைக்கப்படும் முட்டைகளில் கரு அறியும் முறை பின்பற்றப்படுவதால் கருத்தரிக்காமல் இருக்கும் முட்டைகள் வெகு விரைவில் கண்டறியப்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு இழப்பு குறைக்கப்படுகின்றது.
* அதிக அளவில் முட்டைகளை உட்கொள்வதன் மூலம் ஊட்டமான உணவு ஏழைகளுக்கும் கிடைக்கிறது.



2002 மே 2]

* குறைந்த செலவுடைய கால்நடைப் பராமரிப்பு யுக்திகளைக் கையாண்டதனால் வளர்ச்சி விகிதம் உயர்ந்ததுடன், தொடர்ந்து செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளை இனப்பெருக்கம் செய்ய வழிவகுத்தது.

இதுவரையில் 643 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, பின்பு இத்தொடர்புப் பணியாளர்கள் 19,476 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு அடுத்த ஐந்தாண்டுகளில் மாநிலத்தில் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இத்திட்டம் போன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2001-2002-ல் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 67 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### (ஆ) வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்:

இத்துறை உலக வங்கி நிதியுதவியுடன் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.445.84 இலட்சம் மதிப்பில் 1995-96 முதல் ஆறு ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தியது. இத்திட்டத்தின் மூலமாக மேம்படுத்தப்பட்ட பயிற்சிக்கு வெளிநாடுகளுக்கு 20 அலுவலர்களும் உள்நாட்டில் 705 அலுவலர்களும் அனுப்பப்பட்டனர். இத்திட்டம் 31-12-2001-உடன் முடிவடைந்தது.

### 3. கால்நடை மருத்துவப் பணிகள்:

கால்நடைப் பராமரிப்புத் துறை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ உதவி மற்றும் உடல் நலம் பேணும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இத்துறையின் தொழில்நுட்ப அறிஞர்கள், மாநிலம் முழுமையும் பரவியுள்ள கால்நடை நிலையங்கள் மூலமாக இப்பணியினை வழங்குகிறார்கள். உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய்த் தடுப்பு, நோய் அறவே ஒழித்தல், இனப் பெருக்கப் பணிக்கு உதவிடல், வேளாண்குடி மக்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

[2002 மே 2

***3.1 கால்நடை உடல் நலம் பேணுதல்:***

***(அ) கால்நடை நிலையங்கள்:***

கால்நடைகளுக்கு உடல் நலப் பாதுகாப்புப் பணியானது, களப்பணி கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேசிய வேளாண்மைக் குழு 2000 ஆண்டில், 5,000 கால்நடை அலகுகளுக்கு 1 கால்நடை நிலையம் என்ற வீதத்தில் இருந்தால்தான் முழுமையான கால்நடை நலப் பணிகளைத் தரமுடியும் எனப் பரிந்துரை செய்துள்ளது. தமிழ்நாட்டில் 137 இலட்சம் கால்நடை அலகுகள் உள்ளன. இதற்கு 2,739 கால்நடை நிலையங்கள் செயல்பட்டால்தான் தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையைப் பூர்த்தி செய்ய இயலும். மேற்கூறிய இடைவெளியைப் போக்க 2001-2002-ல் 10 புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்கெனவே உள்ள 1,006 கால்நடை நிலையங்களுடன் சேர்க்கப்பட்டன. தற்சமயம் 1,016 கால்நடை நிலையங்கள் பின்வருமாறு உள்ளன:

| | | | |
|---|---|---|---|
| 1. | பன்முக மருத்துவமனைகள் | : | 3 |
| 2. | பிரதம மருத்துவமனைகள் | : | 25 |
| 3. | கால்நடை மருத்துவமனைகள் | : | 139 |
| 4. | கால்நடை மருந்தகங்கள் | : | 849 |
| | மொத்தம் | : | 1,016 |

கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், கால்நடை மருத்துவ சேவைகளை கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களிலேயே வழங்கவும், தேசிய வேளாண்மைக்குழுவின் பரிந்துரைப்படி கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு சுயவேலைவாய்ப்பினை அளிக்கவும், ஆண்டுதோறும் 100 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பணியாற்றும் வகையில் அவர்களை அமர்த்தி, அவர்களுக்குத் தேவைப்படும் நிதியைத் தேசிய வங்கிகள் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் துறையின் மூலமாக இவர்களுக்கு அன்றாடப் பணிகளுக்குத் தேவையான திரவ நைட்ரஜன்



2002 மே 2]

குடுவை, தேவையான சாதனங்கள், மற்ற உபகரணங்கள் நியமிக்கப்பட்ட கால்நடை பட்டதாரிகளிடம் உரிய பிணை முறி பெற்றுக்கொண்டு கடன் அடிப்படையில் வழங்கப்படும்.

2001-2002-ல் 149.59 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணியும், 6.85 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 258.87 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசிப் பணியும், 154.13 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கப் பணியும், 32.35 இலட்சம் கால் நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

**(ஆ) நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள்:**

மாநிலமெங்கிலும், குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்கள் கால்நடைகளை சிகிச்சைக்காகவும், இனவிருத்திக்காகவும் அழைத்துச் செல்ல முடியாமல் போவதைத் தடுக்கும் நோக்குடன் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலமெங்கிலும் 54 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர் பொறுப்பிலும், தேவையான பணியாளர்களுடனும் ஊர்தியுடனும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றனர். இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்கள் இருப்பிடத்திலேயே கிடைப்பதால் பொதுமக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளன. 382 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் அந்தந்த கால்நடை விரிவாக்க அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. அவர்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(இ) கிளை நிலையங்கள்:**

2,123 கிளை நிலையங்கள் மாநிலத்தில் கால்நடை ஆய்வாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்நிலையங்களில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவி, பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை மற்றும் கிளை நிலைய எல்லையில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திர கணக்கெடுப்புப் பணி ஆகியவை நடைபெறுகின்றன. கால்நடை உதவி மருத்துவர் மற்றும் உதவி இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு)

ஆகியோரின் தொழில்நுட்ப ஆலோசனைப்படி தடுப்பூசிப் பணிக்கும், குடற்புழு நீக்கப் பணிக்கும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். 1997-98-ல் பார்வைக் கிளை நிலையங்கள், கிளை நிலையத்துக்கு ஒன்று வீதம் தோற்றுவிக்கப்பட்டன. இப்பார்வைக் கிளை நிலையங்களின் செயல்பாடுகளில் திருப்தி இல்லாமையால் அரசு இந்நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு நலப் பணிகளில் பயன்படுத்திக் கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### 3.2 நோய்த் தடுப்பு, ஆய்வு, கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்:

முன்கூட்டியே தடுப்பூசிகள் போடுவது மற்றும் குறிப்பிட்ட நோய் கண்டறிவதன் மூலமாக பல்வேறு நோய்களிலிருந்து கால்நடைகளைக் காத்திட இயலும். பொதுவாக விவசாயிகள், தடுப்பூசி போடுதலில் ஆர்வம் காட்டாமல், நோய் கண்டபின், சிகிச்சை மூலம் நோய் குணப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ஆகையால் தேவையான நோய்த் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் அறவே ஒழித்தல் ஆகிய பணிகளை இத்துறை மட்டுமே மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் முறையான நோய்க் கட்டுப்பாடுகளின் மூலம் நோய்கள் உண்டாவது குறைக்கப்பட்டு பின் நோய் முற்றிலுமாக ஒழிக்கப்படும் நிலை உண்டாக வழி வகுக்கிறது.

#### (அ) நோய்த் தடுப்பு:

கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில் உள்ள இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 8 வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளும் 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

#### (ஆ) நோய்க் கடுங்கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் கண்டறிவது:

பலவகையான நோய் நிகழ்வுகள் மற்றும் நோயின் தன்மைகளை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், அதனை காலத்தே கட்டுப்படுத்த முடியும். இதன்பொருட்டு 15 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மாநிலத்தில் செயல்படுகின்றன. ஏற்கெனவே நிகழ்ந்த நோய் கிளர்ச்சிகள் மற்றும் புள்ளிவிவரங்களைக் கொண்டு நோய் ஏற்படக்கூடிய இடங்கள் வரையறுக்கப்படுகின்றன. இவை களப்பணி அலுவலர்களுக்கு நோய் பற்றி முன்கூட்டியே அறிவிக்கவும், தகுந்த முறையில் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன.





தலைமையகத்தில் கால்நடை நோய் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கால்நடை மற்றும் கோழியின நோய்கள் மற்றும் நோய் கிளர்ச்சி குறித்து பல வகையான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை, மத்திய அரசின் தேசிய தகவல் அறியும் துறை மூலமாக ஏற்படுத்தப்பட்டு, இதன்மூலம் நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினைக் கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது. இதில் கிடைக்கும் தகவல்கள் அருகில் உள்ள மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

#### (இ) நோய் ஆய்வு:

விவசாயிகள் நலன் கருதி இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலமாக நோய் விரைவில் ஆய்வு செய்யப்படுவது மட்டுமின்றி, தீவன ஆய்வு, நீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, காலத்தே விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. 2001-2002-ல் 1,268 கோழிப் பண்ணைகள், 984 கிராமங்கள் பார்வையிடப்பட்டன. மேலும் 6,839 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் நோய் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. நடமாடும் ஆய்வகங்கள் அனைத்திலும் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் நோய் ஆய்வுப் பணி மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன. அவை நோய் பாதிப்புள்ள இடங்களுக்குச் சென்று உடனுக்குடன் அந்த இடங்களிலேயே நோயைக் கண்டறிந்து, தீவிர நோய் ஆய்வுப் பணிக்குத் தேவையான மாதிரிப் பொருட்களை சேகரிக்கின்றன. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்ய உதவிடவும், களப் பணியாளர்களின் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது. மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் பலவகையான நுண்ணுயிரியல் சோதனை, நீர் பரிசோதனை மற்றும் தசைநோய் குறியியல் பணியினை மேற்கொண்டு, நோயின் தன்மையை உறுதிப்படுத்துகின்றது.

**(ச) நோய் கட்டுப்படுத்துதல்:**

இந்தியாவில் உள்ள கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்கள் உலகச் சந்தையில் எளிதாக நுழைந்து ஏற்றுமதியைப் பெருக்க வேண்டுமாயின் "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டினை எட்ட வேண்டும். அதாவது கோமாரி, வெக்கைநோய் மற்றும் மாட்டினத்தைத் தாக்கக்கூடிய "ப்ளுரோ நிம்மோனியா" நோய்களிலிருந்து இப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டவை என சான்று அளிப்பதே இதன் பொருளாகும்.

**i) கோமாரி நோய்:**

கோமாரி நோய், வைரஸ் கிருமிகளினால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். அது மாட்டினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்குகின்றது. அதிக நோய் பாதிப்புத் தன்மை பால் உற்பத்தி குறைப்பு, மலட்டுத் தன்மை மற்றும் இளங்கன்றுகள் இறப்பு போன்றவற்றை ஏற்படுத்துகிறது. நோய் பாதிக்கப்பட்ட பயனற்ற கால்நடைகள் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றன. இந்தக் கால்நடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இத்துறை மூலம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி இலவசமாகப் போடுவதற்கு ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002-ல் இத்திட்டத்திற்காக ரூ.26.00 இலட்சம் ஒதுக்கீடு செயயப்பட்டு, 1,96,660 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இந்நோயினைக் கட்டுப்படுத்த மாநிலத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ii) நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம்:**

மூன்று மாவட்டங்களைக் கொண்ட தென் பகுதியில் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரள மாநிலத்தில் கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும் கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்கள் ஏற்றுமதியை வலுப்படுத்தவும், அதிகரிக்கவும், நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி திட்டப் பகுதிகளிலும் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதிகளிலும் முறையான பெருமளவிலான தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருநெல்வேலி மாவட்டத்தை



ஒட்டிய எல்லையோரப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு திட்டப் பகுதிக்கு உள்ளே வரும் கால்நடைகளைக் கண்காணித்து தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோமாரி நோயினைத் தடுக்கும்பொருட்டு 2001-2002-ல் 1,29,716 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**iii) நோய் ஒழிப்பு:**

தேசிய வெக்கைநோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1996-97 வரை 100 சதவீதம் தடுப்பூசிப் பணி அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. தடுப்பூசிப் பணியானது 31-12-1997-ல் முடிக்கப்பட்டது. இத்துறையின் கடும் முயற்சியின் பயனாக செப்டம்பர் 1995 முதல் இம்மாநிலத்தில் வெக்கைநோய் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. இச்சீரிய முயற்சியின் பயனாக மார்ச் 1998-க்குப் பிறகு தமிழ்நாடு தற்காலிகமாக வெக்கை நோயில்லா மாநிலமாக அறிவிக்கப்பட வழிவகுத்துள்ளது. தற்சமயம் மாநிலத்தில் 16 வெக்கைநோய் குழுக்கள், 10 வெக்கைநோய் கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 10 வெக்கைநோய் சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் நடமாட்டங்களினால் வெக்கைநோய் ஏதேனும் உள்ளதா என்பதனைக் கண்டறிய, இத்துறையால் 1998-99 முதல் கிராமங்களில், வழித்தடங்களில் மற்றும் கால்நடை நிலையங்களில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனோடு கடுங்கண்காணிப்பின்கீழ், ஊநீரில் வெக்கைநோய் எதிர்ப்புத் திறன் உள்ளதா என்பதைக் கண்டறிய எதேச்சையான முறையில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள கால்நடைகளில் சோதனை செய்யப்படுகின்றது. இப்பணி 31-3-2002 வரை நடைபெற்றது.

**iv) வெறிநாய்க் கடி நோய் தடுப்புத் திட்டம்:**

விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களுள் வெறிநாய்க்கடி ஒரு அபாயகரமான நோயாகும். மனிதர்களுக்கு இந்நோய் வெறிகண்ட நாய்களின் மூலமாகப் பரவுகின்றது. ஆகையால் இந்நோய் நாய்களுக்கும், நாய்களிலிருந்து மனிதனுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் பரவுவதைத் தடுக்க வெறிநாய்க்கடி நோய் தடுப்புப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

[2002 மே 2

இத்திட்டப் பிரிவுகளின் முக்கிய நோக்கங்கள்:

1) முறையான மற்றும் காலமுறைப்படி நோய்த் தடுப்பினைக் கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

2) நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

3) பொதுமக்களிடையே இந்நோய்பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல், நாய்க் கண்காட்சி நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டம் மக்களிடையே வெகுவாக வரவேற்பினைப் பெற்றுள்ளது. மனிதர்கள் மற்றும் நாய்களைத் தாக்கக்கூடிய வெறிநாய்க் கடி நோய் இந்நிலையங்களின் அருகில் உள்ள இடங்களில் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2001-2002-ல் 16,063 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**4. விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்**

"காண்போம் கற்போம்" என்ற கொள்கையின்படி இத்துறையானது உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சியிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு கால்நடை பராமரிப்பினை தற்கால நவீன தொழில் நுட்பங்களையும் கால்நடை பொது சுகாதாரம் குறித்த அணுகு முறைகளையும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னை அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி மற்றும் கூட்டுறவு வார விழாவில் இத்துறை கலந்துகொள்கிறது. பலவகையான தகவல் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ் மூலமாகவும் பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை விவரங்கள் சென்றடைகின்றன. மாநிலமெங்கும் நடைபெறும் மக்கள் தொடர்பு முகாம்கள், விழாக்கள், கண்காட்சிகள், உள்ளூர் சந்தைகளில் கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய நோய்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, அவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. இத்துறைக்குத்



2002 மே 2]

தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்க அச்சடிப்புப் பணிகளுக்கு சென்னை சைதாப்பேட்டையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது. மக்கள் தொடர்பு சாதனங்களான அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியை இத்துறை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றது. கால்நடை பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பை வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம் மூலமாக மேற்கொள்கிறது. 2001-2002-ல் 79 கால்நடை பராமரிப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

**கால்நடைகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல்:**

கால்நடைகளை மனிதாபிமான முறையில் நடத்தவும், கொடூரமான முறையில் அண்டை மாநிலங்களுக்கு ஏற்றிச் செல்வது மற்றும் அதனால் ஏற்படும் அநீதிகளைத் தவிர்க்கவும், இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லும்போது காணப்படும் இரக்கமற்ற செயல்களைத் தடுக்க இவ்வரசு மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடைகள் வதைக்கப்படுவதைத் தடுக்கவும், கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை வளர்ப்புபற்றி பயிற்சி அளிக்கவும், முக்கிய சந்தைகளில் கால்நடை முதலுதவி நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**1. முன்னுரை**

நாட்டில் உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதில் கால்நடை மற்றும் மீன் பொருட்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கால்நடை வளர்ப்பில் விழிப்புணர்வு என்பது கிராமப்புற வேளாண் மகளிரைச் சார்ந்துள்ளது. மேலும் சிறு, குறு மற்றும் நிலமற்ற விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு இக்கால்நடை வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கால்நடை வளர்ப்பின் மூலம் வேலைவாய்ப்பு அதிகரிக்கின்றது. மேலும் கால்நடைகளிலிருந்து பெறப்படும் உப பொருட்களான பால், முட்டை, இறைச்சி, தோல், கம்பளி ஆகியவற்றைக் கொண்டு விவசாயிகளின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் என்று அறியப்பட்டுள்ளது. வேளாண் தொழில் மூலம் ஈட்டப்படும் வருவாயில்

25 சதவிகிதத்திற்கு மேல் கால்நடை வளர்ப்பின் மூலம் ஈட்டலாம். தற்போது கால்நடைகளின் மூலம் ஈட்டப்படும் வருவாய் மேலே குறிப்பிட்டுள்ள அளவிற்கு இல்லை. அதற்குக் காரணம் கால்நடைகளில் மரபியல் தரக்குறைவு, போதிய பசுந்தீவன பற்றாக்குறை, திட்டமிடப்படாத உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்பாராத நோய்கள் ஆகியவை ஆகும். மேற்கூறிய பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அதனைத் தீர்க்கும்பொருட்டு தக்க நடவடிக்கை எடுத்து நாட்டின் வறுமையைப் போக்கி, கால்நடை மற்றும் மீன்வளத்தின்மூலம் சுய வேலைவாய்ப்பைப் பெருக்கி கிராமப்புற வேளாண் மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேவையான அனைத்து ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஏற்றுமதி மானியக் குறைப்பினால் வளர்ந்துவரும் நாடுகளுக்கு வணிக அளவில் பாதிப்பு இருந்தாலும், உலக வர்த்தக நிறுவன வழிமுறைகளுக்கு ஈடு கொடுக்க, நாம் முதலில் கால்நடைப் பொருட்கள் தயாரிப்பில் தர மேம்பாடு மற்றும் வர்த்தக முறை, உலக வர்த்தகத்திற்கு ஈடாக உள்நாட்டு வணிக முறையில் சீர்திருத்தம், உலகத் தேவைக்கு ஏற்ப ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும். மேற்கூறியவற்றைச் செயலாக்கத்திற்குக் கொண்டுவர, தற்போதுள்ள கால்நடை உற்பத்தி, லாபம் ஈட்ட வேண்டிய முறைகள் மற்றும் கால்நடைகளின் இருப்பு ஆகியவற்றை இரு மடங்காக உயர்த்துவதற்கான புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ளத் தேவையான ஆராய்ச்சிகளை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 20-9-1989-ல் தொடங்கப்பட்டது. அதன் முக்கிய கொள்கைகளாவன:

* இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கறிவியல் மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்.
* கால்நடை மற்றும் மீன் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் அதன் உப பொருட்கள் பற்றிய அடிப்படை ஆராய்ச்சி மற்றும் பண்ணையாளர்களின் தேவை அறிந்து அதற்கு ஏற்ப ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.



* நவீன மருத்துவ முறைகள், உயிர்த் தொழில் நுட்பங்கள் பற்றிய தொழில் நுட்பக் கல்வியை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புற பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்வி மூலம் அளித்தல்.

கடந்த பத்தாண்டுகளில் இப்பல்கலைக்கழகம் வளாக வசதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்திக் கொண்டுள்ளது. மூன்று கல்லூரிகள், ஆறு ஆராய்ச்சி நிலையங்கள், ஒரு கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், ஒரு பால்வளம் மற்றும் உணவு நுட்பவியல் மையம், நோய்த் தீர்ப்பில் மற்றும் கோழிப் பிரிவில் முதன்னிலை மையங்கள் இரண்டு, 16 கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், 3 உழவர் பயிற்சி மையங்கள், 2 வேளாண் அறிவியல் மையங்கள், ஒரு பல்கலைக்கழக மைய ஆய்வகம், ஒரு கோழியின நோய் ஆய்வுக்கூடம், ஒரு பாக்டீரியா மற்றும் வைரஸ் நோய்த் தடுப்பு மருந்து ஆராய்ச்சி மையம், ஒரு லெப்டோஸ்பைரா நோயாய்வுக் கூடம், ஒரு மீன்குஞ்சு நோயறி ஆய்வுக் கூடம் மற்றும் ஒரு கால்நடை தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம், ஒரு கால்நடை நலக் கண்காணிப்புப் பிரிவு, ஆகியவற்றை தமிழகம் முழுவதும் பரவலாக அமைத்து பண்ணையாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் இதர அரசு முகமைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இப்பல்கலைக்கழகம் செயலாற்றி வருகிறது.

## 2. மனிதவள மேம்பாடு

இப்பல்கலைக்கழகத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டமானது, 1995-96 ஆம் ஆண்டு முதல் 31-12-2001 வரை ரூ.4,110 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.3,951.10 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கல்வியின் தரத்தை உயர்த்தி வேளாண் மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகும். அவ்வாறு மேம்படுத்தப்பட்ட மனிதவளம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் துறைகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

டிசம்பர் 2001 வரை ரூ.679.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூபாய் 562.61 இலட்சம் செலவில், இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு சிறப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றங்களைச் செய்துகொள்ளவும், உயர்நிலைப் பயிற்சிகளைப் பெறவும் பல்கலைக்கழகத்தின் 13 அலுவலக அதிகாரிகள் மற்றும் 85 ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கு

அனுப்பப்பட்டனர். இதைத் தவிர 158 பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, ஆசிரியரியல் (போதனை முறை), கல்வி நிர்வாகம் மற்றும் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட்டது. 47 ஆசிரியர்களுக்கு புதிய தொழில்நுட்பக் கருவிகளை இயக்குதலில் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு உபயோகப்படும் வகையில் 12 சிறப்பு விரிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் 12 அயல்நாட்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கால்நடை வர்த்தக மேலாண்மை, புள்ளியியல் மற்றும் கணினி பயன்பாடு, புறநகர் விரிவாக்கம், விரிவாக்கக் கல்வி மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மை ஆகிய பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன.

இத்திட்டத்தின் வாயிலாக இப்பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் முகமாக, கட்டடங்கள், உபகரணங்கள், கல்விக்குத் தேவையான சாதனங்கள், ஒலி ஒளிப் பேழைகள், மாணவர்களின் இதர தேவைகள் ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.1,857.19 இலட்சத்தில், டிசம்பர் 2001 வரை ரூ.1,853.70 இலட்சம் செலவில் தகவல் மையம், உள் விளையாட்டு அரங்கம், மாணவர் விடுதி, பேராசிரியர் குடியிருப்பு, நூலகம், உணவு மற்றும் வகுப்பறை ஆகிய கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இப்பல்கலைக்கழகத்தின் சென்னை, நாமக்கல் மற்றும் தூத்துக்குடியிலுள்ள கல்லூரிகளில் உள்ள நூலகங்களை நவீனமயமாக்க இத்திட்டத்தின்கீழ் ரூ.549.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.538 இலட்சங்கள் செலவு செய்து புதிய புத்தகங்கள், புதிய அறிவியல் பத்திரிகைகள் மற்றும் இருக்கை வசதிகள் ஆகியவை மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டன. தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியிலுள்ள நூலகம் விரிவாக்கப்பட்டதுடன் நூலக அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் நூலகம் கணினி மயமாக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள ஆய்வகங்களை மேம்படுத்துவதற்காக ரூ.679.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.663.03 இலட்சம் செலவில் உயர் மின்சக்தி கொண்ட நுண்ணோக்கி, முப்பரிமாண நுண்ணோக்கி மூன்று, அனலைசர், மைக்ரோபிளேட்ரீடிங் சிஸ்டம், மைக்ராஸ்கோபி பேஸ்ட் சிஸ்டம், ஒளி ஊடுருவும் நுண்ணோக்கி மூன்று, தொடர் நிகழ்வுப் பெட்டிகள், ஆர்தராஸ்கோப் மற்றும் எண்டாஸ்கோபி வித் மானிடர், மின்னணு நுண்ணோக்கி, திரவ நைட்ரஜன் ஆலை, நீர் ஆராய்ச்சி சாதனம் மற்றும் நவீன உயர்வகை நுண்ணோக்கிகள் ஆகியவை வாங்கப்பட்டன.



இத்திட்டத்தின்கீழ் ரூ.347.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.333.76 இலட்சம் செலவு செய்யப்பட்டு இப்பல்கலைக்கழகத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மூன்று கிளைக் கல்லூரிகள் ஆகியவை அனைத்திற்கும் கணினி மற்றும் அச்சு இயந்திர வசதிகள் செய்து தரப்பட்டன. மேலும் மூன்று கிளைக் கல்லூரிகளிலும் இணைய தள வசதி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 592 பல்கலைக்கழகப் பணியாளர்கள் (347 ஆசிரியர்கள் மற்றும் 245 ஆசிரியரல்லாதவர்கள்) கணினி பயிற்சி பெற்றனர். மேலும் 229 ஆசிரியர்கள் இணைய தள பயன்பாட்டுப் பயிற்சி பெற்றனர்.

### 3. கல்வி

இப்பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் மூன்று கிளைக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர் சேர்க்கை பாடப் பிரிவு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| பாடப் பிரிவு | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்.சி. | 102 | 74 | - | 176 |
| பி.எஃப்.எஸ்.சி., | - | - | 23 | 23 |
| எம்.வி.எஸ்.சி. | 93 | - | - | 93 |
| எம்.எஃப்.எஸ்.சி., | - | - | 8 | 8 |
| பி.எச்.டி. (கால்நடை) | 8 | - | - | 8 |
| பி.எச்.டி. (மீன்புலம்) | - | - | 2 | 2 |
| வர்த்தக மேலாண்மையில் பட்டயப் படிப்பு | 8 | - | - | 8 |
| மொத்தம் | 211 | 74 | 33 | 318 |

4. ஆராய்ச்சி

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ், வளாக வசதியை மேம்படுத்தவும், உயர்கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்த மற்றும் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 137 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஐந்து திட்டங்கள் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இயக்கத்திற்காகவும், 56 திட்டங்கள் துறை மேம்பாடு மற்றும் புதிய துறைகள் உருவாக்குவதற்காகவும், பண்ணையாளர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முகமாக 52 ஆராய்ச்சித் திட்டங்களும், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளிக்கும் வகையில் 20 ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்கள், தமிழகத்திலுள்ள வேளாண் மண்டலங்களை மேம்படுத்த 4 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, மத்திய, மாநில நிதி வழங்கு முகமைகளின் நிதியுதவியுடன் ரூ.1,507.72 இலட்சத்தில் 72 ஆராய்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

முக்கிய சாதனைகள்

* பாக்டீரியா மற்றும் வைரஸ் நுண்கிருமிகளால் கோழி மற்றும் சிறுபிராணிகளுக்கு வரும் நோய்களைத் தடுக்கும் பொருட்டு, அந்நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. கோழியினங்களைத் தாக்கும் வெள்ளைக் கழிச்சல் நோய், லீச்சி மற்றும் மேல்குத சுரப்பி நோய்களுக்கு எதிர் மருந்தும், ஆட்டினத்தைத் தாக்கும் பி.பி.ஆர். என்ற ஆட்டுக்கொள்ளை நோய் மற்றும் நீலநாக்கு நோய்களுக்கான எதிர் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

* வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோய் மற்றும் பி.பி.ஆர். என்ற ஆட்டுக்கொள்ளை நோய்களைக் கண்டறிய நவீன உயிர்த் தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்டு கையடக்க ஆய்வு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் பி.பி.ஆர். என்ற ஆட்டுக்கொள்ளை நோயைக் கண்டறிய கள ஆய்வுப் பெட்டிகள் உருவாக்கப்பட்டு, ஐதராபாத்தில் உள்ள இந்தியன் இம்யூனலாஜிகல்ஸ் என்ற தனியார் நிறுவனத்திடம் தொழில்நுட்பப் பரிமாற்றம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.



* தரிசு நிலத்தை மேம்படுத்தி பல்வேறு வேளாண் காடு வளர்ப்பு உத்திகளைப் புகுத்தி அனைத்து கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவன உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,113 ஹெக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட்டு 5,235 வேளாண் மக்கள் ஊக்குவிக்கப்பட்டு பயனடைந்துள்ளார்கள்.

இந்தியாவிலேயே முதன் முறையாக நெருப்புக் கோழிகள் தருவிக்கப்பட்டு தமிழக சீதோஷ்ண நிலையில், அவற்றின் வளர்ச்சி மற்றும் வாழும் தன்மை பற்றி ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, வரும் ஆண்டுகளில் நெருப்புக் கோழிகளின் எண்ணிக்கை பெருக்கப்பட்டு அரசுப் பண்ணைகளில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டைச் சார்ந்த முக்கிய நாட்டு கால்நடை இனங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் நீலகிரியைச் சார்ந்த தோடா எருமையினம், மேச்சேரி மற்றும் நீலகிரி செம்மறியாட்டினம், கன்னியாடு ஆகியவற்றின் கணக்கெடுப்பு மற்றும் மரபு குணாதிசயங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் காங்கேயம், தோடா எருமையினம் மற்றும் நீலகிரி செம்மறியாடுகளைப் பாதுகாப்பதற்கான திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. அவற்றைத் தவிர, பிற இனங்களான புல்லிகுளம் (ஜல்லிக்கட்டு), ஆலம்பாடி, பர்கூர் மாட்டினங்கள், சேலம் கருப்பு ஆடு மற்றும் கொடி ஆடு குறித்து கணக்கெடுப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கால்நடை வளர்ப்போரின் பங்கேற்போடு நாட்டு செம்மறியாடுகளில் சிறப்பினம் தெரிவு செய்யப்பட்டு இவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டு வெள்ளாடுகளின் திறனை மரபியல் ரீதியாக மேம்படுத்தும் முகமாக நாட்டு ஆடுகளை, ஆப்பிரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட போயர் இன ஆடுகளுடன் கலப்பினம் செய்து புதிய வீரியம் மிக்க ஆடுகளை உருவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓரணு உண்ணிகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. விரிவாக்கக் கல்வித் திட்டம்

* மைய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிலையம் தொடங்கப்பட்டு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

* கால்நடைப் பொருட்கள் ஒற்றைச் சாளர விற்பனை மூலம் விநியோகிப்பதுடன் இலவச தொழில்நுட்ப தகவல் மற்றும் சேவைகள் செய்ய பல்கலைக்கழக வேளாண் தொழில்நுட்ப மையம் தொடங்கப்பட்டுள்ளது.

* கனடாவில் உள்ள சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் கால்நடை பராமரிப்பில் நவீன தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக மூன்று தொழில்நுட்ப மையங்கள் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த குழுமணியிலும், வேலூர் மாவட்டத்தில் உள்ள சித்தேரியிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள புதுத்தாமரைப்பட்டியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

* தஞ்சாவூரில் மீன்வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

* கால்நடை வளர்ப்போருக்குத் தேவையான நவீன தொழில்நுட்பம் பற்றிய தகவல் குறித்த 30 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. மேலும் பண்ணையாளர்களின் கால்நடைத் தொழில்நுட்பம் பற்றிய தகவல் தேவைகள் வானொலி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் உடனுக்குடன் அளித்து கால்நடை வளர்ப்போரின் தேவையை நிவர்த்தி செய்து வருகிறது.

6. திட்டம்

இப்பல்கலைக்கழகத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களான வளாக வசதி மேம்பாடு, தரமான உயர் கல்வி அளித்தல், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதோடு, கால்நடை உற்பத்தியை உயர்த்தி கால்நடை வளர்ப்போர், கோழி வளர்ப்போர் மற்றும் மீன் வளர்ப்போருக்கு நவீன தொழில் நுட்பங்களை உடனுக்குடன் வழங்குதல் போன்றவை ஆகும். ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் இப்பல்கலைக்கழகத்தின் வரவு-செலவு ரூ.11,056 இலட்சம் ஆகும்.



## இணைப்பு IV

(609 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 7—மீன்வளத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

*முன்னுரை*

தமிழ்நாட்டின் கடற்கரை 1,076 கி.மீ. நீளமாகும். இந்திய கடற்கரையின் மொத்த நீளத்தில் இது ஏறத்தாழ 15 விழுக்காடு ஆகும். தமிழக கடற்கரையில் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் வரை உள்ள 13 கடலோர மாவட்டங்களில் 591 மீனவ கிராமங்கள் உள்ளன. இவற்றில் 3.48 இலட்சம் ஆண்களும், 3.31 இலட்சம் பெண்களும் ஆக மொத்தம் 6.79 இலட்சம் மீனவ மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 66 விழுக்காட்டினர் எழுத்தறிவு பெற்றவர்கள். இதில் தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள கடல் மீனவர்களின் எண்ணிக்கை 2.70 இலட்சம். இக்கடல் மீனவர்கள் 8,500 விசைப்படகுகள், 41,000 பாரம்பரிய படகுகள் மற்றும் கட்டுமரங்களில் தமிழக கடற்கரையினை உள்ளடக்கிய 41,412 ச.கி.மீ. பரப்பளவுடைய கடல் நில தொடர் பகுதியில் மீன் பிடித்து வாழ்ந்து வருகின்றனர். ஆண்டு முழுவதும் 3.70 இலட்சம் மெட்ரிக் டன் அளவு மீன்களை தமிழக கடற்கரைப் பகுதிகளான சோழ மண்டலக் கடற்கரை, பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் பிடித்து வருகின்றனர்.

தமிழகத்தில் சென்ற ஆண்டில் 55,160 மெட்ரிக் டன் அளவு கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ.2015.48 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று தமிழகத்தின் உள்நாட்டு நீர்நிலைகளான நீர்த்தேக்கங்கள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் ஆகியவற்றில் 3.70 இலட்சம் எக்டேர் நீர்ப்பரப்பில் 60,000 மீனவர்கள் 2001-2002-ஆம் ஆண்டில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவு மீன்பிடித்து வருகின்றனர்.

கடற்கரைப் பகுதி மற்றும் உள்நாட்டுப் பகுதிகளில் மீன்வளத்தைப் பெருக்கவும், அதனைச் சார்ந்துள்ள மீனவ சமுதாய மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தவும், சமுதாய நலத் திட்டங்களும்,

மீனவர் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மற்றும் கரையோர மீன் இறங்கு தளங்கள், மீன்பிடித் துறைமுகங்கள் போன்ற மீன் பிடிப்பதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களும், மீனவ நலவாழ்வுத் திட்டங்களும் தமிழ்நாடு அரசின் மீன்வளத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

*மீன் வளத் துறையின் கொள்கை-நோக்கங்கள்*

மீன் உற்பத்தியினை அதிகரிப்பதையும், மீனவர் நலனைப் பாதுகாப்பதையும் முக்கிய கோட்பாடாகக் கொண்டு மீன்வளத் துறையின் கொள்கைகள் கீழ்க்கண்டவாறு வடிவமைக்கப்படுகின்றன:—

1) கடற்பகுதிகளில் மீன்வளத்தைப் பாதுகாத்து, நிலைத்த மீன்பிடித்தலை மேற்கொள்ளுதல் மற்றும் தூரக் கடல் பகுதியில் உள்ள மீன்வளத்தை அறுவடை செய்யும் வகையில் மீனவர்களை ஊக்குவித்தல்.

2) கடற்கரைப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள், மீன் இருப்பு அதிகரிக்கச் செய்தல் மற்றும் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் போன்றவை மூலமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன்வள ஆதாரங்களைக் கூட்டுதல்.

3) மீனவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில் நலத் திட்டங்களை அமல்படுத்துதல்.

4) மீனவ மற்றும் கிராமப்புற மக்களுக்கு நேரிடை மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.

5) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.

6) புதிய மாற்று வழிகளில் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

7) பயன்படுத்தப்படாமல் உள்ள நீர்நிலைகளிலும் உள்நாட்டு மீன் வளர்ப்பை மேற்கொள்ள ஊக்குவித்தல்.





*1. மீனள மேம்பாட்டு இயக்கம்*

நீண்ட கடற்கரையை உடைய தமிழகம், அண்மைக் கடற்பகுதிகளில் ஆண்டுக்கு 3.7 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு மீன் உற்பத்தி செய்யும் வளமை உடையது. தொலைதூரக் கடல் பகுதிகளில் 1.2 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு மீன் பிடிக்க வாய்ப்புள்ளது. சுற்றுச்சூழலுக்கு ஏற்ற முறையிலும், வளம் குன்றா மீன் உற்பத்தியை உறுதி செய்யும் வகையிலும், கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடிக்கும் பகுதிகளை அதிகரித்து, மீன் உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன், மீனள மேம்பாட்டு இயக்கம் ஒன்றை அமைக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. கடல் சார் சிறு மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக கரையோர மீன்வளத்தை அதிகரிக்க தனிக் கவனம் செலுத்தப்படும். பயன்படுத்தாது உள்ள சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் உள்ள நீர்ப்பரப்பில் மீன் வளர்த்தல், நெல் வயல்களில் ஒருங்கிணைந்த மீன் பண்ணைகள் நிறுவுதல், மாதிரி மீன்பிடிக் கிராமங்கள் ஏற்படுத்துதல் போன்ற புதிய அணுகுமுறையின் மூலம் மீன்வளர்ப்புத் திட்டங்களை உருவாக்கி, உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை இவ்வியக்கம் ஆராயும். இந்த மீனள மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் ஓர் உயர்மட்டக் குழுவையும், அதன்கீழ் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு செயலாக்கக் குழுவும் அமைக்கப்படும். இக்குழுக்கள் கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்தல், கலப்பின மீன்களை அறிமுகப்படுத்துதல், மீன் வளத்தினைப் பாதுகாத்தல், உள்கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், ஏற்றுமதி வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களை எய்துவதற்கு உரிய வழிகளை வகுத்து அரசுக்குத் தனது பரிந்துரைகளை அளிக்கும்.

*2. கடல் மீன்வளம்*

*2.1. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்*

கடலில் மீனவர்கள் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களான கட்டுமரம் மற்றும் வள்ளங்கள் நீண்டதூரம் கடலில் சென்று மீன் பிடிக்கவும், விரைந்து கரைக்கு திரும்பி வரவும் ஏதுவாக அம்மீன்பிடிக் கலன்களை நவீன இயந்திரமயமாக்கும் திட்டத்தில், உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டச் செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்களின் விலையில் 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக, உட்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு ரூ.12,000 வரையிலும் அல்லது வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு ரூ.10,000 வரையிலும் வழங்கப்படுகிறது. இயந்திரத்தின் விலையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை பயனடையும் மீனவர்கள் தமது பங்காகச் செலுத்த வேண்டும். மேலும் இத்திட்டத்தின்கீழ் பாரம்பரிய மீனவர்கள் மீன்பிடி வலை வாங்கிக்கொள்ள நபர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.6,000 மானியமாக வழங்கப்படுகிறது. 1987-88 முதல் 2000-2001 வரை 13,925 இயந்திரங்களும், 2,886 மீன்பிடி வலைகளும் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2001-2002-ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இயந்திர மானியம் 1,500 மீனவர்களுக்கும், வலை மானியம் 908 மீனவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

**2.2. உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வையை திரும்ப அளித்தல்**

மாநில அரசு, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப்படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு, அவர்கள் வாங்கும் உயர்வேக டீசல் எண்ணெயின் மீதான மத்திய ஆயத்தீர்வையில் 80 விழுக்காடு மைய அரசும், 20 விழுக்காடு மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கு மைய அரசு ரூ.1.171 கோடியும், மாநில அரசு ரூ.50.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.671 கோடி அரசு விடுவித்துள்ளது. சுமார் 2,500 விசைப்படகுதாரர்கள் இதனால் பயனடைவார்கள்.

**2.3. அண்மைக்கடல் மீன்பிடிப்பு**

நாவாய்ப்படகு இழுவலைகள் மற்றும் சுருக்குமடி வலைகள் மூலமாக மீன்பிடித்தல், அண்மைக்கடலில் கடலுக்கு அடியில் உள்ள தாவர மற்றும் மீன்வளத்தை முழுமையாக அழித்துவிடுகின்றன. ஆகையால் அண்மைக்கடல் பகுதியில் மீன்பிடிப்பு நெருக்கத்தைக் குறைத்து 10 கடல் மைல்களுக்கு அப்பால் மீன்பிடிப்பதற்கு ஏற்ற வகையில் இடைநிலை மீன்பிடி கலன்கள் அறிமுகப்படுத்தப்படும்.



**3. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**3.1. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தள வசதிகள்**

மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், டி. ஜெட்டி, தூண்டில் வளைவு ஆகியவற்றை தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளில் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை அறிவதற்காக நடப்பு ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டத்தில் ரூ.6.84 கோடி மதிப்பீட்டில் ஒரு மீன்பிடி துறைமுகம் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இராமேஸ்வரத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்று கட்டுவதற்காக ரூ.55.25 கோடி மதிப்பீட்டில் திருத்திய மதிப்பீடு மைய அரசின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் ரூ.10.60 கோடி மதிப்பில் பழையாறு மீன்பிடித் துறைமுகம்-2 நிலை கட்டும் திட்டத்திற்கான கருத்துரு மைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மைய அரசு சுற்றச்சூழல் துறையின் அனுமதி பெற்றவுடன் தற்போதைய வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் ரூ.40 கோடி திட்ட மதிப்பீட்டில் மைய மாநில அரசுகள் நிதி உதவியுடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க திட்ட அறிக்கை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாதிரி திட்ட அறிக்கை பெறப்பட்டு பெங்களூரிலுள்ள மைய அரசின் நிறுவனத்தால் விரிவான மதிப்பீடு மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**3.2. மீன் இறங்கு தளங்கள்**

தமிழ்நாட்டில் ரூ.13.232 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் உள்ளமைப்பு வசதிகளுடன் மீன் இறங்கு தளங்கள் அமைக்க மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரை ரூ.7.623 கோடிக்கு செலவின ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொகை முழுவதும் மைய, மாநில அரசுகளால் சரிசமமாக பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

[2002 மே 2

## 4. கடலில் மீனவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள்

### 4.1. கடல் மீனவர்களுக்கு நிவாரணம்

புயல் மற்றும் கடலின் நீரோட்டம் போன்ற இயற்கைச் சூழல் மற்றும் படகின் இயந்திரக் கோளாறு காரணமாக விசைப்படகுகளும், மற்றும் அதனை இயக்குபவர்களும் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து இலங்கை கடற்பகுதியில் செல்லும் சமயங்களில் இலங்கை அரசால் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். இதுபோன்ற சமயங்களில் அம்மீனவர்களின் குடும்பங்கள், குடும்பத் தலைவர் இல்லாமையால் குடும்பத்தை நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். இவர்கள் சிரமப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, 1998-99-ல் அம்மீனவர் குடும்பங்களுக்கு உதவுவதற்காக ஒரு திட்டத்தினை அரசு துவக்கியது. மீனவ குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும், நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மீனவர்கள் வீடு திரும்பும் வரையில் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. இந்நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட ஆட்சியர்கள் ஒவ்வொருவருக்கும் தேவையான நிதி விடுவிக்கப்படும். 2001-2002 ஆம் ஆண்டில் 109 மீனவ குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து உள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும் மீன்பிடிக்கும் சமயங்களில் இலங்கையைத் தவிர மற்ற அயல்நாடுகளால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கும் இத்திட்டம் இந்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

### 4.2. பாக் ஜலசந்தி

நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம், (இராமேஸ்வரம் பகுதி உட்பட) மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பாக் ஜலசந்தி கடல்பகுதியில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் மீன்பிடி தொழில் செய்யும்போது சில தருணங்களில் படகின் இயந்திரக் கோளாறு மற்றும் புயல் காலங்களில் கடலில் திசை மாறி சர்வதேச கடல் எல்லையைக் கடந்து, இலங்கை கடல் பகுதிக்குச் செல்ல நேரிடும்போது, இலங்கை கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் அனைத்தும் இலங்கை அரசின் கவனத்திற்கும், மைய அரசுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி இறக்க நேரிடும் தமிழக மீனவர்கள்



2002 மே 2]

குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. இவ்வாறான நிதியுதவி 2001-2002-ல் 3 மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.3. உயிர்காக்கும் கவச மேலாடைகள்

கடல் மீன்பிடி தொழிலில் விபத்தினால் ஏற்படும் உயிர்ச்சேதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இத்துடன் இலங்கை கடற்படை மூலம் ஏற்படும் அச்சுறுத்தல் இப்பிரச்சினையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. எனவே கடல் மீனவர்களுக்கு உயிர் காக்கும் கவச மேலாடைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.4. கடலில் படகின் இருப்பிடம் மற்றும் மீன்களைக் கண்டறியும் கருவி வழங்குதல்

மீன் கண்டுபிடிப்பு சாதனங்களின் மூலம் மீன் கூட்டங்களின் நடமாட்டத்தினைக் கண்டறியவும், இலங்கையில் பாதுகாப்பு எல்லைப் பகுதிக்குள் செல்லாமல் தவிர்ப்பதற்கும், கடலின் இருப்பிடம் காட்டும் கருவி மற்றும் மீன் கண்டுபிடிப்பு சாதனங்களை இயந்திரப் படகுகளில் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்துடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு இவ்வாணையம் ரூ.50,000 வரை மானியம் வழங்கும். மீதமுள்ள தொகையை கடனாகப் பெற மீனவர்களை அரசு ஊக்குவிக்கும்.

### 4.5. ரோந்துப் படகுகள்

1076 கி.மீ. நீளமுள்ள தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபடுவதற்காக 5 ரோந்துப் படகுகள் மைய அரசு அளித்த 100 விழுக்காடு மானியத்துடன் ரூ.4.5 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடலோர காவல் படையினருடன் இப்படகுகளை இயக்குவதற்கான ஒப்பந்தம் நிறைவேறியவுடன், இவ்வாண்டு இப்படகுகளை ரோந்துப் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 4.6. வழிகாட்டும் விளக்குடன் கூடிய மிதவைகளை நிறுவுதல்

கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது கண்ணுக்குத் தெரியாதிருக்கும் சர்வதேச கடல் எல்லையை தெரியாமல் கடந்துவிடும் நம் மீனவர்கள்,

53-161—25a

இலங்கை கடற்படையால் சுடப்படும் நிகழ்வுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி மாவட்டம் வரை உள்ள 240 கடல் மைல் நீளத்திற்கு சர்வதேச கடல் எல்லைக் கோட்டில், ஒளிரும் மிதவைகள் இவ்வாண்டு நிறுவப்படும்.

### 5. உள்நாட்டு மீன்வளம்

அறிவியல் ரீதியில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறுபாசன குளங்கள், கிராம குளங்கள், குட்டைகள் ஆகிய உள்நாட்டு நீர்நிலைகளைப் பயன்படுத்தி அறிவியல்முறை நீர்த்தேக்க மீன்வள பராமரிப்பு மற்றும் தரமான மீன் குஞ்சு உற்பத்தி செய்வது உள்நாட்டு மீன்வள கொள்கையின் முக்கிய நோக்கமாகும். நீர்த்தேக்க மீன்பிடிப்பில் 45 நீர்த்தேக்கங்களை தமிழ்நாடு மீன் துறையும், 8 நீர்த்தேக்கங்களை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமும் நிர்வகித்து வருகின்றன. துறை மூலம் 32,000 எக்டேர் நீர்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசன குளங்களில் பெருங்கெண்டை மீன் குஞ்சுகளை இருப்பு செய்து உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடித்து வருகின்றனர். மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் கூட்டு இன மீன் வளர்ப்புத் தொழில் நுட்பத்தைக் கொண்டு ஊரக குளம், குட்டைகளில் சுமார் 5000 எக்டேரில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.1. உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குதல்

அதிகப்படியான நீர்ப்பரப்புகளை மீன்பிடிப்பதற்குக் கொண்டு வருவதன் மூலம் தற்போது 1.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் உள்ள ஆண்டு உற்பத்தியை ஆண்டுக்கு 10 விழுக்காடு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நீர்ப்பரப்புப் பகுதிகளில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு தேவைப்படும் அளவிற்கு தற்போதுள்ள மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் மேம்படுத்தப்படும். ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் மற்றும் வெம்பக்கோட்டை, கரூர் மாவட்டத்தில் குளித்தலை மற்றும் திருக்காம்புலியூர், திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி, கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பாலார்-பொறந்தலார் ஆகிய இடங்களில் கட்லா, மிர்கால், ரோகு போன்ற பெரிய மீன் இனங்களுடன் நன்னீர் இறால் வளர்க்கப்படும்.



### 5.2. மீன் குஞ்சுகள் உற்பத்தி, சேகரணம் மற்றும் இருப்பு செய்தல்

துறை நீர்நிலைகளில் இருப்பு செய்ய தேவைப்படும் கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாகெண்டை மீன் குஞ்சுகள் துறையின் மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேசமயம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்குத் தேவைப்படும் மீன் குஞ்சுகள் அனைத்தும் அவர்களது மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்குச் சொந்தமான மீன் பண்ணைகளில் ஆண்டுக்கு 5 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு இருப்பு செய்ய தகுந்த அளவிற்கு வளர்க்கப்படுகின்றன. இவை தவிர, தமிழ்நாட்டில் உள்ள 84 தனியார் மீன் பண்ணைகளின் மூலம் ஆண்டுக்கு 6 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தரமான மீன் குஞ்சுகளை தனியார் மூலம் உற்பத்தி செய்வதற்கு மீன்வளத் துறை தனியார் மீன் வளர்ப்போர்களை ஊக்குவித்து வருகிறது.

### 5.3. தமிழ்நாடு ஊராட்சி குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம் வழங்கும் விதிகள், 1999.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வருவாயை அதிகரித்திடவும், அறிவியல் ரீதியில் மீன் வளர்ப்பதை ஊக்குவிக்கவும் 1999-ல் அரசு மீன்பிடி குத்தகையை 5 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மூலம் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் குளங்களுக்கு, அடிப்படை குத்தகை விலையை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சம்பந்தப்பட்ட மீன் துறை ஆய்வாளரைக் கலந்தாலோசித்து நிர்ணயிக்கவும் ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் மீன் துறை, குத்தகைதாரர் கூடுதல் வருவாய் ஈட்டிட மீன் வளர்ப்பில் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி உதவி செய்கிறது.

### 5.4. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறில் உள்ள 4 சினை மீன் குளங்களை சிமெண்ட் குளங்களாக மாற்றுவதற்கு ரூ.23.46 இலட்சமும், இங்கு உருவாக்கப்பட்டுள்ள துறை சொத்துக்களைப் பராமரிக்க ரூ.4.00 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

### 5.5. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாட்டில் 56,000 எக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் வளமான இறால் பண்ணைகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இறால் வளர்ப்பிற்காக மாநிலத்தில் மொத்தம் 4,455 எக்டேர் மேம்படுத்தப்பட்டிருந்தாலும், 2,879 எக்டேர் பரப்புள்ள இறால் பண்ணைகள் மட்டுமே இறால் வளர்ப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 5 உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. உவர் நீர் மீன் வளர்ப்பு, கடல் நீர் மீன் வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விரும்பும் மீன் வளர்ப்போருக்கு அவற்றை கற்பித்தல் மற்றும் பயிற்சி அளிக்கும் பொறுப்புகள் இம்முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் கலவா, கொடுவா ஆகிய கடல் மீன் வகைகளை வளர்க்க மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடலோரப் பகுதிகளில் சிங்கி இறால், கடல் நண்டு ஆகியவற்றை ஊட்டமளித்து பெருக்கம் செய்தல், கடல் மீன் வளர்த்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீர்வாழ் உயிரின குழுமத்தின் உத்தரவின்படி அரசு மாவட்டக் குழுக்கள் மற்றும் ஒரு மாநிலக் குழுவை அமைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர் மாவட்டக் குழுவிற்கு தலைவராக உள்ளார். தலைமை நிர்வாக அலுவலர்கள் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, உரிய பரிந்துரைகளுடன் மாநிலக் குழுவிற்கு அனுப்பி வைப்பர். அரசு செயலர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையைத் தலைவராகக் கொண்ட மாநிலக் குழு விண்ணப்பங்களை ஆய்வு செய்து நீர்வாழ் உயிரினக் குழுமத்திற்கு பரிந்துரை செய்கிறது. அந்த பரிந்துரையின் பேரில் இறால் பண்ணைகளுக்கு நீர்வாழ் உயிரினக் குழுமம் அனுமதி வழங்குகிறது. சுமார் 1,013 விண்ணப்பங்கள் உவர் நீர் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்பட்டு, அவை மாவட்டக் குழு மற்றும் மாநிலக் குழுவின் பரிசீலனையில் உள்ளன. மாநிலக் குழுவானது 193 இறால் பண்ணைகளுக்கு அனுமதி அளிக்க பரிந்துரை செய்துள்ளது. 2001-2002-ல், 140 இறால் வளர்ப்போருக்கு நீர்வாழ் உயிரினக் குழுமம் அனுமதி வழங்கியுள்ளது.



### 6. ஆராய்ச்சி

தமிழ்நாட்டில் இரண்டு ஆராய்ச்சி நிலையங்கள் ஒன்று சென்னையிலும் மற்றொன்று தூத்துக்குடியிலும் உள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுமத்தால் ஜுன் 1998-ல் அனுமதிக்கப்பட்ட 16 ஆராய்ச்சித் திட்டங்களில், மொத்தம் 34 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம், செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி மூலம் மீன்வளம் பெருக உதவுவதாகும். மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் மீன் துறை ஒருங்கிணைந்து செயல்படும்.

அரசு 2001-ல் மாநில மீனள ஆராய்ச்சிக் குழுமத்தை மாற்றி அமைத்துள்ளது. அடுத்த ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆராய்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் முடிவு செய்யப்படும்.

### 7. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

நவீன மீன்பிடி கலன்களை இயக்குவதற்கும், மீன்பிடி விசைப்படகுகளை பராமரிப்பதற்கும் போதிய பயிற்சி அளிக்கப்பட்ட நபர்களை உருவாக்குவதற்கு தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவ இளைஞர்களுக்கு 10 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர இப்பயிற்சி நிலையங்களில் இளநிலை கம்மியர் சான்றிதழ் படிப்பும் நடத்தப்படுகிறது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.200 மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மைய அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், விழிப்புணர்வு நிலையம் ஒன்று அமைக்கவும், 2001-2002-ம் ஆண்டில் ரூ.70.55 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உவர் நீர் மற்றும் உள்நாட்டு மீன் வளர்ப்பில் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்க மூன்று பயிற்சி நிலையங்களும், விழிப்புணர்வு நிலையம் ஒன்றும் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8. மீன்வளத்தில் கூட்டுறவு

2001-2002 வரை 3,37,598 உறுப்பினர்கள் அடங்கிய 705 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 59,486 உறுப்பினர்களைக் கொண்ட 289 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 655 உறுப்பினர்கள் கொண்ட 10 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் செயல்பட்டு வருகின்றன. 679 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு மாநில மீனவ கூட்டுறவு இணையமும், 2,848 உறுப்பினர்கள் அடங்கிய 17 இதர வகை மீனவ கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

### 9. மீனவர் நலன்

தமிழ்நாட்டில் மீனவர் நலம் மீன் வளத் துறையின் முதன்மையான கோட்பாடாகக் கொண்டு நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் மீனவர் நல மேம்பாட்டுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகிறது.

1. மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம்
2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் அங்காடி அமைத்தல்
4. மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்
5. மீனவர் தனி நபர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

### 9.1. மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1975-76 முதல் 2001-2002 வரை 43,280 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் 4,000 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 500 வீடுகள் நிலமற்ற ஏழை கடல் மீனவர்களுக்கும், 500 வீடுகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



### 9.2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல இயலாத காலங்களில் அவர்களின் துயர்களைத் துடைப்பதற்காக தேசிய மீனவர் மற்றும் நிவாரணத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்திற்கு மைய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி, 2002-2003-ம் ஆண்டிற்கு ஒவ்வொரு மீனவரும் ஒரு மாதத்திற்கு ரூ.75 செலுத்த வேண்டும். நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் ரூ.75 வசூலிக்கப்பட்டு, அத்துடன் மாநில அரசின் பங்காக மாதம் ஒன்றுக்கு ரூ.37.50-ம், மைய அரசின் பங்காக ரூ.37.50-ம் ஆக மொத்தம் ரூ.150 வீதம் 8 மாதங்களுக்கான தொகை ரூ.1200-ஐ மாதம் ரூ.300 வீதம் கடலில் மீன் பிடிக்கச் செல்லாத நான்கு மாதங்களுக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும். இதனால் தமிழகத்தில் 1,97,000 மீனவர்கள் பயனடைவார்கள்.

### 9.3. மீனவர் அங்காடி அமைத்தல்

மீனவர்கள் மீன்களை விற்பதில் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 10 மீனவ அங்காடிகள் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. அதில் 2 இடங்களில் அங்காடிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 3 அங்காடிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட தயார் நிலையில் உள்ளன. மீதமுள்ள அங்காடிகள் இவ்வாண்டு கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 9.4. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்

மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தாத் தொகையான ரூ.14-ஐ மாநில மற்றும் மைய அரசுகள் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. எவ்வித சந்தாத் தொகையும் மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் இறக்க நேரிடும்/நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ.50,000-மும் பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.25,000-மும் வழங்கப்படுகிறது.

[2002 மே 2

### 9.5 மீனவர் தனி நபர் விபத்து காப்புறுதித் திட்டம்

மைய மற்றும் மாநில அரசால் சந்தாத் தொகை சரிசமமாக செலுத்தி செயல்படுத்தப்படும் காப்புறுதித் திட்டத்தினைத் தவிர, கீழ்க்காணும் காப்புறுதித் திட்டங்களும் தமிழக அரசால் மீனவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான சந்தாத் தொகையை (பிரிமியம்) மீனவர்/மீனவ மகளிரே செலுத்த வேண்டும்.

| வ. எண் | மீனவர்/மீனவ மகளிர் செலுத்த வேண்டிய ஆண்டு சந்தாத் தொகை | | இறந்தால்/முழு ஊனமடைந்தால் வழங்கப்படும் நிவாரணம் |
|---|---|---|---|
| (1) | மீனவர் | ரூ.24 | ரூ.1 இலட்சம் |
| | மீனவ மகளிர் | ரூ.20 | |
| (2) | மீனவர் | ரூ.60 | ரூ.2.5 இலட்சம் |
| | மீனவ மகளிர் | ரூ.50 | |

இவ்விரு திட்டங்களிலும் மீனவர்/மீனவ மகளிர் சேர்ந்து பயன்பெறலாம்.

### 10. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு அரசு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.4.455 கோடியாகும்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

அ. கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு இரண்டு ஆழ்கடல் மீன்பிடிப்பு நாவாய்களை இயக்குதல்.

ஆ. தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன் உற்பத்தியை வணிக அடிப்படையில் பெருக்கி நீர்த்தேக்கங்களை நிர்வகித்தல்.

இ. நீர்த்தேக்கங்களில் தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்தல், மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.



2002 மே 2]

ஈ. மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களைப் பராமரித்தல்.

உ. மீன்பிடித் துறைமுகங்கள்/இறங்கு தளங்களில் மீனவர்களுக்கு டீசல் சில்லறை விற்பனை செய்தல்.

ஊ. சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொது மக்களுக்கு மீன் விற்பனை செய்தல்.

எ. இராயபுரத்தில் உள்ள மீன்வலை தயாரிப்பு நிலையத்தை நிர்வகித்தல் மற்றும் மீனவர்களுக்கு தரமான மீன் வலைகளைத் தயாரித்து விற்பனை செய்தல்.

ஏ. இறால் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து வளர்ப்போருக்கு விற்பனை செய்வதற்காக சென்னை நீலாங்கரையில் உள்ள இறால் மீன் குஞ்சு பொரிப்பகத்தை நிர்வகித்தல்.

ஐ. வளர்ப்பு முத்து மற்றும் முத்துச் சிப்பி தயாரிக்கும் பண்ணைகளை நிர்வகித்தல்.

ஒ. காரங்காட்டில் உள்ள மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி நிலையத்தை நிர்வகித்தல்.

ஓ. அலங்கார மீன் உற்பத்தி செய்து விற்பனை செய்தல்.

### 10.1. கடல் மீன்வளம் - நாவாய் இயக்குதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு 'தஞ்சை' 'மெக்ஸிகானா' என்ற இரண்டு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. இந்த மீன்பிடி நாவாய்கள் மூலம் 2001-2002 ஆம் ஆண்டு 28 டன் இறால்களும் 88 டன் மீன்களும் பிடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் ரூ.85.31 இலட்சம் ஆகும்.

### 10.2. உள்நாட்டு மீன்வளம் - நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 (மூன்றில் ஒரு பங்கு) என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி தினசரி மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது.

1. சாத்தனூர் அணை
2. பவானிசாகர்
3. அமராவதி
4. ஆழியார்
5. திருமூர்த்தி
6. உப்பாறு
7. பாலாறு-பொறந்தலாறு
8. பெரும்பள்ளம்

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 2001-2002-ஆம் ஆண்டு 257 டன்
மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.1.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
மேற்கண்ட நீர்த்தேக்கங்களில் பவானிசாகர், உப்பாறு மற்றும் பாலார்-
பொறந்தலாறு நீர்த்தேக்கங்கள் தனியாருக்கு குத்தகைக்கு
விடப்பட்டுள்ளன. இதர 5 நீர்த்தேக்கங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்
கழகம் மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன்பிடித்து வருகிறது.

### 10.3. மீன் குஞ்சு உற்பத்தி

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சாத்தனூர் அணையில் ஒரு
மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையத்துடன் அமராவதி,
ஆழியார், திருமூர்த்தி, பாலாறு-பொறந்தலாறு மற்றும் உப்பாறு ஆகிய
இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்புப் பணிகளையும் செயல்படுத்தி
வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளில்
பெரும்பகுதி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில்
இருப்பு செய்யப்படுகிறது. மேலும், மீன் துறைக்கும், மீன் வளர்ப்போர்
மேம்பாட்டு முகமைகளுக்கும் மற்றும் தனியார் மீன் வளர்ப்போருக்கும்
மீன் குஞ்சுகளை விற்பனை செய்கிறது. 2001-2002-ஆம் ஆண்டில் 1.49
கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போருக்கு
விநியோகிக்கப்பட்டுள்ளது.

### 10.4. மீன் பதனிடுதல்

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் நான்கு பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும்
நிலையங்கள் உள்ளன. அவற்றில் அடையாறு, மண்டபம் மற்றும்
தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள பனிக்கட்டி நிலையங்கள்
தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.



### 10.5. டீசல் விற்பனை நிலையங்கள்

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம்,, தூத்துக்குடி மற்றும்
பழையாறு போன்ற மீன்பிடி துறைமுகங்களில் 19 டீசல் விற்பனை
நிலையங்களை மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு
இயக்குபவர்களின் நலன் கருதி இயக்கி வருகிறது. 2001-2002-ஆம்
ஆண்டில் மொத்தம் 26,753 கிலோ லிட்டர் டீசல் மற்றும் மசகு
எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூ.77.76 இலட்சம் தரகுத்
தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

### 10.6. மீன் விற்பனை

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் ஈரோடு
மாவட்டங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக
மீன்களையும், பொரித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது.
2001-2002 ஆம் ஆண்டில் 526 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு,
ரூ.2.29 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 10.7. மீன் வலை தயாரிப்பு நிலையம்

சென்னை இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை தயாரிப்பு
நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன் வலை தயாரிக்கும் திறன்
கொண்டதாகும். 2001-2002-ஆம் ஆண்டில் 34.32 டன் நைலான் மற்றும்
எச்.டி.பி.இ. வலைகள் தயாரிக்கப்பட்டு ரூ.80.50 இலட்சத்திற்கு விற்பனை
செய்யப்பட்டுள்ளது.

### 10.8. இறால் மீன் குஞ்சு பொரிப்பகம்

ஆண்டுதோறும் 16 கோடி உற்பத்தித் திறன் உடைய இறால் மீன்
குஞ்சு பொரிப்பகம் ஒன்று சென்னைக்கு அருகிலுள்ள நீலாங்கரையில்
இயங்கி வருகிறது. இப்பொரிப்பகத்தை மயிலாடுதுறையில் உள்ள ராஜீவ்
காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்திற்கு குத்தகைக்கு விட
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 10.9. செயற்கை முத்து மற்றும் முத்துச் சிப்பி உற்பத்தி செய்தல்

மண்டபத்தில் உள்ள முத்து வளர்ப்புப் பணி மற்றும் முத்துச்
சிப்பி பொரிப்பகம் தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு
விடப்பட்டுள்ளது.

## 10.10. மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம்

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. இறால் பண்ணையை தனியாருக்கு குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.11. அலங்கார மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவியின் கீழ் மீன் வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் அலங்கார மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும் ஆழியாரில் அலங்கார மீன் விற்பனையுடன் கூடிய அருங்காட்சியகம் ஒன்றினை நிறுவி பராமரித்து வருகிறது. சென்னையில் தேனாம்பேட்டையில் அலங்கார மீன் விற்பனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும் சென்னை அடையாறில் ஒரு கூடுதல் அலங்கார மீன் விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2001-2002-ஆம் ஆண்டு வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்த வகையில் ரூ.14.18 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்

### 11.1. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் - முதல் கட்டம்

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் 6-11-1991-ல் பதிவு செய்யப்பட்டு, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தற்போது 670 தொடக்க கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட கூட்டுறவு இணையங்களும் உறுப்பினர்களாக உள்ளன. பாரம்பரிய மீனவர்களின் சமூக மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் முதல் கட்ட திட்டம் ரூ.16.99 கோடியில் காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 கடலோர மாவட்டங்களில் 78 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.13.61 கோடி மதிப்புள்ள 2,108 மீன்பிடி இடுபொருட்களான கட்டுமரம்,



வள்ளம், வலை மற்றும் 4,234 உள்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள்
மீனவர்களுக்கு 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக
வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனைக்காக இத்திட்டத்தின் மூலம்
இதுவரை 13 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 98 இரு சக்கர
வாகனங்கள் வாங்கிட 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன்
வழங்கப்பட்டுள்ளது. இந்த முதல் கட்ட திட்டத்தில் 4,148 மீனவ
குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மேலே உள்ள ஆறு மாவட்டங்களில் உள்ள கிராமங்களில்
மீனவர்களுக்கு, கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி மற்றும் உள்/வெளிப்
பொருத்தும் இயந்திரங்கள் பராமரிப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் மீனவர்களுக்கு இணையத்தின் செயல்பாடுகளில் தீவிர
ஈடுபாடு ஏற்படுத்திடவும், திட்டம் குறித்து அறிந்திடவும், மீனவ
கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களும், கலை நிகழ்ச்சிகளும்
நடத்தப்பட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடைந்திட,
தாங்களாகவே மீன் விற்பனை போன்ற சுய தொழில் செய்திட,
இதுவரை ரூ.19.5 இலட்சம் வட்டியில்லா மூலதனக் கடன் 24 மீனவர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 11.2. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் - இரண்டாம் கட்டம்

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்
தொடர்ச்சியாக இரண்டாம் கட்டத் திட்டம் 1-4-1998 முதல்
தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 100 மீனவ
கிராமங்களில் ரூ.45.062 கோடி மதிப்பில் 3,565 மீன்பிடி இடுபொருட்கள்
வழங்கிட அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முதலாம்
ஆண்டில் ரூ.8.006 கோடி அரசு அனுமதித்ததன் பேரில் இதுவரை 59
கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 1,208 மீனவர்களுக்கு
ரூ.5.628 கோடி மதிப்பில் 522 மீன்பிடி இடுபொருட்கள் 25 விழுக்காடு
மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுக்கும், பயனாளிகளுக்கும்
கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி மற்றும் பிற மாநிலங்களில் மீன்வளம்,
கூட்டுறவுச் சங்க செயல்பாடு குறித்த களப் பயிற்சியும், மீனவர்
கூட்டுறவுச் சங்க இணையத்தின் வாயிலாக அவ்வப்போது

[2002 மே 2

அளிக்கப்பட்டு வருகிறது. கடல் மீனவ கூட்டுறவுச் சங்க மேலாளர்களுக்கும் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டில் ரூ.9.54 கோடியில் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்தில் இரண்டாம் ஆண்டில் மீனவர்களுக்கு 25 விழுக்காடு மானியத்துடன் இடுபொருட்கள் வழங்குவதற்கு ரூ.5 கோடி விடுவிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*11.3.* குளிர்பதனப் பெட்டிகள்

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இவ்விணையத்தின் மூலமாக ரூ.59.69 இலட்சம் மதிப்பில், ஒவ்வொன்றும் ரூ.3,000/- மதிப்புள்ள 100 லிட்டர் கொள்ளளவுள்ள 1,233 குளிர்பதனப் பெட்டிகளும், ஒவ்வொன்றும் ரூ.2,000/- மதிப்புள்ள 60 லிட்டர் கொள்ளளவுள்ள 765 குளிர்பதனப் பெட்டிகளும், ஆக மொத்தம் 1,998 குளிர்பதனப் பெட்டிகள் 75 விழுக்காடு மானியத்துடன் மைய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஐஐ

V2 (3) 82

P02. 28.2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225163
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.